# சமுத்திரக் கதைகள்



சு. சமுத்திரம்

# சமுத்திரக் கதைகள்

சு. சமுத்திரம்

ஏகலைவன் பதிப்பகம்
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.
☎ : 4917594

நூல் : சமுத்திரக் கதைகள்
முதற் பதிப்பு : டிசம்பர், 2001
வடிவம் : "டெமி"
பக்கங்கள் : 185+15=200
விலை : ரூ.60/-
உரிமை : ஆசிரியருக்கு

வெளியீடு :
ஏகலைவன் பதிப்பகம்
9, இரண்டாவது குறுக்குத் தெரு,
டாக்டர். இராதாகிருஷ்ணன் நகர்,
சென்னை - 600 041.

ஒளி அச்சு :
ஏகலைவன், சென்னை - 41.

அச்சிட்டோர் :
மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ்,
சென்னை-600 021,
தொலைபேசி : 5954528

# பன்முகக் க/வி/தை

பேராசிரியர் ச. ராஜநாயகம்
லொயோலா கல்லூரி, சென்னை.

**01.**

திருவாங்கூர் சமஸ்தானத்து முகவரியில்லாக் குக்கிராமக் குடிசைமண்டி ஒன்றில் தொடங்கி, முகவரி தேவையில்லாத நம் பக்கத்துத் தெரு வரை பதிமூன்று கதை - அலைகளை வீசும் இலக்கியப் படைப்பாக மலர்ந்துள்ளது சமுத்திரக் கதைகள் எனும் தொகுப்பு. இன்றில் நிலைகொண்டு, நேற்றில் அழுந்தி மீண்டு, நாளையை நோக்கிப் பாயக் காத்திருக்கும் அம்புகளாய்க் கதைகள். முதுகில் பாயாதவை - நெஞ்சில் பாய்கின்றன / பாய்ச்சுகின்றன - ஈரமும் வீரமும். எனவே இத் தொகுப்பை ஒரு க/வி/தை எனலாம் - கதை. கவிதை. விதை. சில இடங்களில் கதை கவிதையாகிறது; சில இடங்களில் கவிதை கதையாகிறது. ஆனால் எல்லாக் கதைகளும் விளிம்புநிலைகளில் மையம் கொண்டுள்ள விதைகள்.

**02.**

முகம் தெரியாத மனுஷி ஒடுக்கப்பட்ட இனம் ஒன்றின் மீட்சிக்கான போராட்டத்தில் முகமிழந்த பெண் போராளிகளின் முகங்களை மீளுருவாக்கும் முயற்சி - ராசம்மா வடிவில். ராசம்மா ஒரு கலகக்காரரல்ல. தன்னுடைய உடம்பை மூடிக்கொள்ளும் உரிமையுள்ள, மனுஷியாக வாழத் துடிக்கும், தன்மானமிக்க ஒரு சாதாரணப் பெண். ஆனால் அதுவே ஒரு ‘கலகத்துக்கான’ காரணமாக அமைந்திருந்தது. நவீனத் தமிழகத்தில் பெண்ணுரிமைக்கான முதல் குரல் ராசம்மாவைப் போன்ற முகம் தெரியாத ஒடுக்கப்பட்ட நம் அன்னையரின் குரல். அதுவும்கூட ஒரு கட்டத்தில் வெறும் கூக்குரலாய், அவலமாய், ஓலமாய் இருந்ததுதான். ஆனால் கூக்குரல் கூட்டுக்குரலாய் ஆகும்போது, சில-பல உடல்கள் விழ நேர்ந்தாலும்

அவை வாழ்வின் வித்துக்களாய் எழும் என்ற வரலாற்று உண்மையை அழுத்தமாக முன்வைக்கிறது ராசம்மாவின் கதை.

ராசம்மா, பூமாரி போன்ற வீர மகளிர் வாழ்ந்த கிராமத்துப் பெயரில்லை. ஏனென்றால், அது திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஏதோ ஒரு மூலையில் இருந்த "குடிசைமண்டி" மட்டுமல்ல, இன்றைக்குக்கூட தமிழகத்தின் விளிம்புகளில் அடையாளமற்றுக் கிடக்கும் எந்தக் கிராமமாகவும் அது இருக்கலாம்.

அடையாளமற்ற அனைத்துலக ஆண்சந்தைகளில் நடக்கும் அழகிப் போட்டிகளில் தங்களை அவி(ழ்)த்துக்கொள்ளும் இந்தத் தலைமுறையில் ராசம்மாக்களும் ஏராளமாக இருக்கிறார்கள். உதிரிகளாகச் சிதறிக் கிடக்கும் இவர்கள் ஒருங்கிணைந்து எழுப்பும் கூட்டுக்குரலில்தான் சந்தைகளின் கூச்சல்கள் கரையேறும் - முகமுள்ள மனுஷிகளாய் - மனிதர்களாய்.

●

பொருள்மிக்க பூஜ்யம் உருவகமாய்ப் பேசுகிறது. இது ஒரு காட்டு மாட்டுக் கன்று பூஜ்யமாய்ப் போவதைப் பற்றிய கதை. காட்டுநாய்களின் வெறியாட்டத்துக்குத் தன் தாய் பலியாவதைப் பார்க்கின்றது கன்று. அந்நாய்களைத் தற்போதைக்குத் தன்னால் எதிர்த்துத் தாக்க முடியாது என்பதைக் கன்று உணர்கிறது. அவற்றிடமிருந்து தப்பியோடுவதே ஒரே வழி. தப்பி வெகுதூரம் செல்ல முடியாதபடி, சுற்றி வளைத்திருக்கும் நாய்கள். அங்குச் சோர்ந்து கிடக்கும் புலிக்கு வலியச்சென்று தன்னை இரையாக்கிக் கொள்ள முடிவுசெய்கிறது. அந்தப் புலியின் கதையும், சோகமானதுதான். தன் குட்டியை அந்த நாய்களிடம் பறிகொடுத்த புலி அது. துக்கத்தின் அழுத்தத்தில் துவண்டு கிடந்த புலி, வலிய வந்து உணவான கன்றைத் தின்றபின் தெளிச்சி பெறுகிறது, எழுச்சி கொள்கிறது, சினந்து தாக்குகிறது. தன் குட்டியைச் சூறையாடிய நாய்களைப் பழிதீர்த்துக் கொள்கிறது. அதன் வழியாக அந்தக் காட்டு மாட்டுக் கன்றும் தன் இறப்புக்குப் பொருள்தேடிக் கொள்கிறது. இது கதை.

சில மனிதர்களை, சில வர்க்கங்களின் பிரதிநிதிகளை உருவகப்படுத்தியுள்ள இக் கதை, பன்முக வாசிப்புக்கு வழிவகுக்கிறது. தாயான காட்டு மாடு, அதன் கன்று, எண்ணிக்கையில் பலவான காட்டு நாய்கள், தாயான புலி, அதன் குட்டி என ஐந்து கதை மாந்தர்களுடன் கதைசொல்பவரும். இரண்டு தலைமுறைகள். தாயை இழந்த கன்று, வாரிசான குட்டியை இழந்த புலி என இருவேறு இழப்புக்கள். தாயும் கன்றும் (இரண்டு தலைமுறைகள்) விழுங்கப்படுகின்றன. ஆனால் புலி தன்னை மீட்டுக்கொள்கிறது. இழப்புகளுக்குக் காரணமான நாய்கள் அழிக்கப்படுகின்றன. யாருடைய பார்வையில் கதையை வாசிப்பது? எந்த இருப்பியல் சூழலுடன் இக்கதை நிகழ்வுகளைப் பொருத்திப் பார்ப்பது?... கேள்விகள் மூலமாகத் தொடர் விவாதத்துக்கு வழிவகுக்கும் கதை. பன்முக வாசிப்புக்குரிய இத்தகைய படைப்புக்களால்தான் சிந்திக்கும் வாசகரை உருவாக்க முடியும்.

●

நீருபூத்த நெருப்பு மிகச் சாவகாசமாக நகர்ந்து, ஒரு பெரும் பாய்ச்சலுடன் முடிகிறது. மூன்றாவது நபர் கண்களுக்கு எடுத்துக்காட்டான தம்பதியர். ஆண்டவன் - அகிலா. மிகப் பொருத்தமான பெயர்கள். ஆள்வதால் ஆண்டவன்; (அவனுக்கு) அனைத்துமாகி, அனைத்தையும் தாங்குவதால் அகிலா. கணவன் தேவையறிந்து நடந்துகொள்ளும் மனைவி. மனைவியின் சேவையைப் புரிந்துகொள்ளும் கணவன். ஆனால் புறத்தோற்றம் அகத்தின் வெளிப்பாடாய் இருக்கவேண்டிய அவசியமில்லை.

"ஆண்டவன் சாருக்கு இருக்கிற ஜாதகம் மாதிரியே அவரோட பையனுக்கு இருக்கு. அகிலாம்மாவுக்கு இருக்கிற ஜாதகம் மாதிரியே இந்தப் பெண்ணுக்கு இருக்கு... உங்க ரெண்டு பேரையும் போலவே, இவாள் ரெண்டு பேரும் பிரமாதமாய் வாழ்வாள். ஒங்களோட மறு பதிப்புத்தான் இவாள். உடனே முடிச்சிடுங்கோ." என்கிறார் சாஸ்திரி. ஆனாலும் - ஆண்டவனை 'நேருக்கு நேராய்ப்' பார்த்து, 'திட்டவட்டமாக, தீர்ப்பளிப்பதுபோல்' அகிலா சொல்கிறார்: "இது பொருத்தமில்லாத ஜாதகம். விட்டுத் தள்ளுவோம்."

இந்த ஒற்றைவரி அணுகுண்டு அந்தத் தம்பதியரை நிர்வாணமாக்கி விடுகிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக ஆண்-மையப் பண்பாடு போர்த்தியுள்ள அடுக்கடுக்கான (அழகழகான) தாம்பத்தியத் துகில்கள் ஒற்றை வரியில் இற்றுவிழுகின்றன - விரசமில்லாத விரசம். சமுத்திரத்தால் மட்டுமே இது சாத்தியம்.

●

நீருபூத்த நெருப்பின் மற்றொரு பரிமாணம் முதிர்கன்னி, கொஞ்சம் பிரச்சாரத் தொனி தூக்கலாக இருந்தாலும் அறிவியல்பூர்வான அணுகுறை. பொதுவாகவே, தன் படைப்புகளின் கருவோடு தொடர்புடைய அனைத்து அறிவியல் - உளவில் நுணுக்கங்களையும் அறிந்து கொண்டு படைக்கும் வழக்கம் உள்ளவர் சமுத்திரம் - அது எய்ட்ஸ் - ஆக இருக்கட்டும் அல்லது ஓரினக் கவர்ச்சியாகட்டும். இதனால்தான் 'முதிர்கன்னி' என அழைக்கப்படும் கீதா என்ற விஞ்ஞானியின் கதையை சமூகவியல் நோக்கிலும் (மகள்-தாய்க்காரி உறவு) ஃப்ராய்டிய உளவாய்வியல் நோக்கிலும் (மகள்-அப்பாக்காரர் உறவு) அணுகத்தக்கதாகக் கட்டமைத்துள்ளார்.

●

முரண்பாடுகளையும் பலவீனங்களையும் கடந்த மனிதர்கள் இல்லை என்பதை மூலம் முன்வைக்கிறது. சாதாரண மனிதர்களின் இருண்ட பக்கங்களைவிட, வெளிச்சத்திலுள்ள உயர்ந்த மனிதர்களின் இருண்ட பக்கங்கள் மிக மோசமானவையாக உள்ளன. சிலர் இந்த இருண்ட பக்கங்களைக் கடந்து வருகிறார்கள். சிலர் தனக்குள்ளே புதைத்து மறைத்துக் கொள்கிறார்கள். இப்படிப் புதைந்த அழுக்குகள் அப்படியே மக்கிப் போகலாம், அல்லது ஆளுமையில் புரையோடியும் போகலாம். "டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ராமாமிர்தம் அம்மையார், அன்னை தெரசா ஆகியோரின் முப்பெரும் உருவமாகத் திகழும்" அம்மையாருக்கும், "அவரைப் பேசவிட்டு ரசிக்கும் பெண்ணியச் சிந்தனையாளரான" கணவருக்கும் பின்னால் 'ஓடிப்போன' கதை. சமூகசேவகர்கள் என்ற பிம்பம் கட்டுடைக்கப்படுகிறது. வாசகராகிய நமது கைகள் 'திரும்பிப் பாராமல் நடக்கும்' அந்தப் 'பழைய முகக்காரி'யையும் 'கோராதிகோரச்' சிறுவனையும் தடுத்து நிறுத்த நீளுகின்றன.

●

பாமர மேதை என்ற கதையிலும் மூலம் போன்றதொரு கட்டுடைப்பு - கொஞ்சம் கிண்டலும் வேதனையும் கலந்ததாக. ஒரு விஞ்ஞானியின் மனைவியின் ஏக்கம் தோய்ந்த கரிசனை, ஆராய்ச்சியில் தன் நிலை மறந்த விஞ்ஞானியின் நிபுணத்துவ மிக்க கையாலாகாத்தனம் ('Potent' impotency), மூத்தாரின் அதிகாரத்தோரணைக்குள் மறைந்து கிடக்கும் 'டூப்ளிகேட்' தன்மை என அறிவியலையும் குடும்பவியலையும் இணைத்து ஆடும் விளையாட்டாகக் கதை அமைந்துள்ளது.

●

சிலந்திவலை துணிச்சலாகத் தொடங்குகிறது. "இரத்தத்தால் 'சிவப்பு' அடிக்கப்பட்டது போன்ற காவல் நிலையம்" அது. அதற்குள் நடக்கும் 'போலீஸ் தர்மத்தை' நிர்த்தாட்சண்யமாக விவரிக்கிறது கதை. "மாமூலும் தொடர்ந்து கொடுக்கணும், மாமா வேலையும் செய்யணும், மெமோவுக்கு மேல மெமோவும் வாங்கணும்..." இதுதான் சிலந்தி வலைக்குள் சிக்கிய சப்-இன்ஸ்பெக்டர்களின் நிலை. பாவம், இப்படி 'அசோகச் சக்கர அதிகாரி'களால் அலைக்கழிக்கப்படும் சப்-இன்ஸ்பெக்டர்களின் கோபம் இயல்பாகவே தம்மிடம் அகப்படும் அப்பாவிக் 'குற்றவாளிகள்' மீது திரும்புகிறது என்பதையும் நாசூக்காகக் கதை சொல்லி முடிக்கிறது.

●

அகலிகைக் கல் நகர்ப்புற ஆயா ஒருவரின் வாழ்க்கையில் நிகழும் ஒரு சாம்பிள் நிகழ்வு. அடுக்குமாடிக் குடியிருப்பு ஒன்றின் ஓரத்தில் ஓசியாய் வசித்துக்கொண்டு, அங்குள்ள அறுபது வீடுகளுக்குப் பால்வாங்கித் தந்து பிழைப்புநடத்துபவர். அவருக்கென்று ஒரு வாழ்க்கை இருந்தது. குடும்பம் இருந்தது. வீடும் இருந்தது. அத்தனையும் தொலைந்த நிலையில், தன்னைத் தொலைத்து விடாதவர் ஆயா. இதனால்தான், மனிதர்களின் மெல்லிய உணர்வுகளையும் அவரால் புரிந்துகொள்ள முடிகிறது. நேரங்கெட்ட நேரத்தில் கதவைத் தட்ட மனசு கேட்கமாட்டேன் என்கிறது.

அகலிகைக் கற்களாய் நிற்கும் இந்த ஆயாக்களை அவர்களின் அனுதின வாழ்க்கைப் போராட்டமே மனிதர்களாக ஆக்குகிறது.

●

கடைசியர்கள் மையமாகும்போது, தனிப்பட்ட இழப்புக்களே ஒருவரை மனிதநேயமிக்க போராளியாக மாற்றும் என்பதை விரிவாகச் சொல்லும் கதை கடைசியர்கள். இளைஞரைப் புரிந்துகொள்ளும் மனப் பக்குவம் இருந்தால், தலைமுறை இடைவெளிகள் தோன்றுவதில்லை என்பதைத் 'சித்தப்பா' மூலமாகத் தெளிவுபடுத்துகிறது இந்தக் கதை. சுயநலமில்லாத் தலைவர்களுக்கும் நல்ல வழிகாட்டிகளுக்கும் தமிழக அரசியல்-பண்பாட்டுக் களத்தில் பெரும் வெற்றிடமுள்ள இக் காலக்கட்டத்தில் தேவை. சித்தப்பாக்கள் (மாமாக்கள் அல்ல).

●

சரியான 'சித்தப்பாக்கள்' இல்லாதபோது ஒரு சமுதாயத்தில் என்ன நடக்கும் என்பதைச் சித்திரிக்கிறது கலவரப்போதை. சாதி-மதம்-வர்க்கம் எனப் பல்வேறு பிரிவினைகளால் கூறுபட்டுக் கிடக்கும் நமது சமுதாயம் மனப்பிறழ்வுக்கும் மனச்சிதைவுக்கும் ஆளாகியுள்ளது என்பதன் குறியீடாகப் பன்னீர் என்ற மனநோயாளி காட்டப்படுகிறார். "மின்சாரக் குப்பியால சூடுபோடும்" அதிர்ச்சி வைத்தியம் ஒருவேளை பன்னீரைக் குணமாக்கலாம். தன்னைக் கட்டிப்பிடித்த "அம்மாவின் தோளில் முகம் போட்டு அவர் உடல் வழியாய் தரையில் சரிந்தும்" அவர் குணமாகலாம். பன்னீர் கிடக்கட்டும். நாமெல்லாருமே ஒருவிதத்தில் மனநோயாளிகளாக ஆக்கப்படுகிறோம் என்பதையும் சொல்லாமல் சொல்கிறார் கதாசிரியர். இன்று கலவரங்கள் திட்டமிட்டு FúRfû NVôL' "LrjR1TÓ ¡u \] . B Vp× (spontaneity) என்பது அரங்கேற்றப்படும் ஒரு thriller.

●

"எந்தக் குடியிலும் பெண் என்கிறவள் கீழ் குடிதான்" என்ற மையக்கருத்தை வலியுறுத்தும் கதை பெண்குடி. இது முகம் தெரியாத

மனுஷியின் மற்றொரு வரலாற்று முகம். ஒரு பெண் அடிமை அல்லது தெய்வம் ஆகலாமேயன்றி, ஒருபோதும் சகமனிதராக ஆண்களால் கருதப்படுவதில்லை. ஒரு அடிமை தொட்ட மாத்திரத்தின் எஜமானியான ஒரு பெண்கூட அடிமையாகிவிடுகிறார் பெண்களைப் பொருத்தமட்டில் சாதிச் சுவர்கள் எவ்வளவு சன்னமானவையாக உள்ளன!

பாருக்குட்டிகளும் இசக்கிமாடத்திகளும் 'அல்லாடி, தள்ளாடி' நடந்துகொண்டிருக்கிறார்கள். ஒப்பாரிகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. என்றாலும் - முகம் தெரியாத மனுஷியை வாசிக்கவும்.

●

'மக்கள் பத்திரிகையில்' வந்த கிண்டி ரேஸ் பற்றிய செய்தி ஏழை மாடசாமிக்கு வண்ணக் கனவுகளை உருவாக்க, குதிரையாட்டத்தில் ஈடுபட்ட அவர் தனது குடும்பத்தையும் எதிர்காலத்தையும் தொலைத்துவிட்டதாக மாடசாமியின் ஊர்வலம் சொல்கிறது. **1976**-இல் தொடங்கிய மாடசாமிகளின் ஊர்வலம் இன்றைக்கும் தொடர்கிறது, வெவ்வேறு வடிவங்களில் மக்கள் பத்திரிக்கைகளுக்குப் பதிலாக மக்கள் தொலைக்காட்சிகள்; பிரபல பத்திரிக்கைகளைவிட, சில இலக்கியப் பிதாமகர்களின் சிறு (இலக்கிய) பத்திரிக்கைகள்; அரசு நடத்தும் லாட்டரி திட்டங்கள்; சினிமாக் கனவுகள்; உலகவங்கிக் கடன்கள்...

●

சற்று எக்குத்தப்பான உரையாடல்கள் விரவிய மனிதநேயக் கதை முதுகில் பாயாத அம்புகள். சீனியம்மாவும் சக்கரையம்மாவும் பப்பாளிக் கொப்பை முன்னிட்டுச் சண்டையில் இறங்குகிறார்கள். இவர்களுக்கிடையில் ராசகுமாரி - புதிதாக வந்த சீனியம்மாவின் மருமகள். ராசகுமாரி திருமணத்துக்கு முன்பே கருச்சிதைவு செய்துகொண்ட விஷயம் எதிராளி சக்கரையம்மாவுக்குத் தெரியும், சீனியம்மாவுக்குத் தெரியாது. சண்டை உச்சத்தை நெருங்குகிறது. ராசகுமாரிக்குத் தன் குட்டு வெளிப்பட்டு விடுமோ என்ற பயம். "நாங்கல்லாம் பட்டுப்போன வாழைய வெட்டுவோம்; குலைபோட்டு முடிஞ்ச வாழைமரத்தை சாய்ப்போம்... ஆனால், துளிர்த்துவார

வாழக்குருத்த வெட்டமாட்டோம்..." என்ற சக்கரையம்மாவின் பன்மைப் பேச்சோடு சண்டை முடிந்துவிடுகிறது. சமுத்திரக் கதைகள் தொகுப்பும்தான்.

**03.**

சமுத்திரத்தின் பல முகங்கள் இந்தத் தொகுப்பில் வெளிப்படுகின்றன - அமைதி விரும்பும் கோபக்காரர், பெண்ணியவாதத்தை முன்வைக்கும் ஆண், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களை அனுபவபூர்வமாக அலசும் சமூக அறிவியல் விஞ்ஞானி, புதிய தலைமுறையின் குறைநிறைகளைப் புரிந்துகொண்டுள்ள உளவியல் அறிஞர், கல்மிஷமில்லா மனசுக்காரர், கிண்டல்காரரும்கூட - இப்படிப் பன்முகங்கள் இருப்பதாலேயே இவரின் கதைகளும் பன்முக வாசிப்புக்கும் விவாதத்துக்கும் இடமளிக்கின்றன.

●

இவரிடம் வார்த்தை ஜாலமில்லை, விரயமுமில்லை. வார்த்தைகள் ஆற்றொழுக்குப்போல் மனித மாண்பு என்னும் ஒற்றைத் திசைநோக்கிப் பயணிக்கின்றன. இவர் மனிதத்தை நேசிக்கும் எழுத்தாளர். உணர்ச்சிப்பூர்வமாய் இதயத்தில் சிந்திக்கும் எழுத்தாளர். வாழ்க்கையின் மேல் அபரிமிதமான பற்றுக் கொண்டுள்ள நம்பிக்கை எழுத்தாளர். இலக்கிய விசாரப் போதையில் மிதக்காமல், ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கங்களோடு தன்னை இணைத்துக் கொண்டுள்ள செயல்படும் எழுத்தாளர்.

**04.**

சமுத்திரத்திற்கு எந்த முன்னுரையும் அணிந்துரையும் தேவையில்லை. இந்த உரையும் சேர்த்து. ஆனால் சமுத்திரக் கதைகளுக்கு முன்னுரை எழுத அவர் என்னைத் தேர்ந்தெடுத்தது எனக்குக் கிடைத்த பெருமை.

**05.**

சமுத்திரம் வற்றாது. கொஞ்சம் ஏற்றம் இறக்கம் இருக்கலாம் என்றாலும். எனவே அடுத்தடுத்த தொகுப்புகள் வரவேண்டும். வரும்.

# என்னுரை

இந்தத் தொகுப்பு தவிர்த்து, இதுவரை வெளியான எனது சிறுகதைத் தொகுப்புகள் அனைத்தும், எனக்கு முழுமையான மனநிறைவைக் கொடுத்ததில்லை. பத்திரிகைகள் 'எடிட்' செய்து வெளியிட்ட கதைகளையே தொகுப்புகளாக கொண்டு வந்தேன். இந்த கதைகளுக்கு மூலங்களை கைவசம் வைத்திருக்காததால் ஏற்பட்ட கோளாறே காரணம். ஆனால், இந்தத் தொகுப்பில் உள்ள அத்தனை கதைகளும் கணிப்பொறியில் தக்க வைக்கப்பட்டவை.

எனவே, இந்தத் தொகுப்பில் நான் முழுமையான எழுதிய கதைகளை அப்படியே கொண்டு வந்திருக்கிறேன். இதுவே, இந்தத் தொகுப்பின் பலம், பலவீனமும். ஒரு சில கதைகள், பத்திரிகைகளில் கத்தரித்து வந்ததைவிட, சிறப்புக் குறைவாய் உள்ளதாக எனக்குப் படுகிறது. ஆனாலும், முன்னைய தொகுப்புகளைப் போல் அல்லாமல் பெரும்பாலான கதைகள், எலும்பு கூடாக காட்சி காட்டாமல், ரத்தமும், சதையுமான உள்ளடக்கத்தோடு, எலும்பு, தோல் போர்த்த உருவமாகவும் தோன்றுகின்றன என்று நினைக்கிறேன்.

இந்தத் தொகுப்பில், இன்னொரு முக்கிய சிறப்பு அல்லது அந்த சொல்லுக்கு மாறானது, இவை அத்தனையும் கடந்த இரண்டாண்டு காலத்தில் எழுதப்பட்டவை. எழுத்தைப் பொறுத்த அளவில், என் நோக்கும், போக்கும், அன்று முதல் இன்றுவரை அப்படியேதான் உள்ளது. ஆனாலும், கதை சொல்லித்தனமும், மொழி நடையும், காலத்திற்கேற்ப, என்னை அறியாமலே மாறியிருப்பதாகவே கருதுகிறேன். இதற்கு, இந்தத் தொகுப்பு ஒரு எடுத்துக்காட்டு.

முகம் தெரியா மனுசியும், பெண் குடியும், அந்தக் காலத்து திருவாங்கூர் சமஸ்தானத்தின் சாமானியர் வரலாற்றை கண்டுபிடித்து எழுதப்பட்ட மெய்யான கதைகள். இத்தகைய கதைகளை எழுதுவதற்கு தமிழாலய நிறுவனர் பச்சையம்மாள் அவர்களே, முழுமுதற் காரணம். இதரக் கதைகளில் பெரும்பாலானவை நான் கண்டதும், கேட்டதுமான நிகழ்வுகள் அல்லது அமங்கலங்கள். இவற்றை நடந்தது நடந்தபடி இயல்பாக எழுதாமல், அதற்கு யதார்த்த முத்திரை மட்டுமே நான் கொடுத்திருக்கிறேன். மற்றபடி, இந்த கதைகளின் உரிமையாளர்கள் இன்றைய நமது மக்களே.

இந்தத் தொகுப்பிற்கு விரிவான முன்னுரை கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். ஆனால், பேராசிரியர். ராஜநாயகம் அவர்களின்

முன்னுரையைப் படித்த பிறகு, என்னுரைகூட தேவையற்றதாகவே எனக்குப் படுகிறது. பேராசிரியர் ராஜநாயகம் நவீனத்துவ எழுத்தாளர். எளிமையும், இனிமையும் - அதே சமயத்தில் ஆழமும் ஒருங்கே பெற்ற படைப்பாளி. இவருடைய சிறுகதைத் தொகுப்புப்பான **கடைசிப் பொய்**, புதினங்களான **சில முடிவுகளும் சில தொடக்கங்களும், சாமிக்கண்ணுனைச் சில மனிதரின் கதைகள்**, நவீன தமிழ் இலக்கியத்திற்கு அணி சேர்ப்பவை. பிற படைப்பாளிகளால், நவீனத்துவம் எதிர்மறையில் செலுத்தப்படும்போது, அதை இழுத்துப்பிடித்து நெறிப்படுத்துபவை.

சமூகப் போராளியான பேராசிரியர் எழுதிய இந்த முன்னுரையின் வாசிப்பு, என்னை ஆங்கில இலக்கிய அறிஞர் பாஸ்வெல்லை நினைவுப் படுத்துகிறது.

ஆங்கில இலக்கிய மேதை டாக்டர். ஜான்சனை, பாஸ்வெல்லின் தயாரிப்பு என்று கூறுவார்கள். டாக்டர்.ஜான்சனின் வரலாற்றை எழுதியவர் பாஸ்வெல். 'சரக்கு முடுக்கு' அதிகமாக இல்லாத டாக்டர். ஜான்சனுக்கு,'செட்டியார்' முடுக்கை கொடுத்தவர் பாஸ்வெல் என்பார்கள். இது உண்மையோ, பொய்யோ, என்வரைக்கும் இது நிகழ்ந்திருக்கிறது. பேராசிரியர். ராஜநாயகம் இந்தத் தொகுப்பை சுட்டிக்காட்டியவிதம், என்னை இன்ப அதிர்ச்சியில் ஆழ்த்தியது. கதாயாசிரியரான என்னை, உரையாசிரியரான அவர், நான் என்னை கண்டுபிடித்ததைவிட, அதிகமாக கண்டுபிடித்திருக்கிறார். இது பிற இலக்கிய முன்னுரைகளிலும் நிகழ்ந்துள்ளன. என்றாலும், என் தொகுப்பு இந்த கருப்பொருளுக்கு, உரிப்பொருளாகி இருப்பதில் பெருமிதம் கொள்கிறேன். இப்போது முக்கியமான ஒரு ஆய்வில் ஈடுப்பட்டிருக்கும் பேராசிரியர் ராஜநாயகம் அவர்கள், இந்தத் தொகுப்பிற்கு, நாட்களை ஒதுக்கி ஒவ்வொரு கதைக்கும் ஒரு திருக்குறளைபோல் தெளிவுரை எழுதி இருப்பது எனக்குக் கிடைத்த இலக்கியக் கௌரவம்.

வழக்கம்போல், இந்த நூலை அச்சடித்துக் கொடுக்கும் பொறுப்பை மேற்கொண்ட **மணிவாசக நூலகத்திற்கு** நன்றியுடையேன். எனது சிறுகதைகளை இன்முகத்தோடு வெளியிட்ட **ஆனந்த விகடன்** ஆசிரியர், பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், பொறுப்பாசிரியர் வி.யெஸ்வீ. அவர்களுக்கும், ஓம் சக்தி பொறுப்பாசிரியர் கவிஞர் பெ. சிதம்பரநாதன் அவர்களுக்கும் மற்றும் பல முகமரியா உதவி ஆசிரியத் தோழர்களுக்கும், இந்தத் தொகுப்பிற்கு ஒலியச்சு தந்த என் உதவியாளர் விஜயகுமார் அவர்களுக்கும் நன்றி மறக்காத நன்றி. இந்தப் பட்டியலில் குமுதம், புதிய பார்வை, தாமரை ஆகிய பத்திரிகைகளையும் இணைத்துக் கொள்கிறேன்.

**- சு. சமுத்திரம்**

# உள்ளடக்கம்


1. முகம் தெரியா மனுசி ........ 1
2. பொருள் மிக்க பூஜ்யம் ........ 19
3. நீரு பூத்த நெருப்பு ........ 29
4. முதிர் கன்னி ........ 40
5. மூலம் ........ 57
6. பாமர மேதை ........ 67
7. சிலந்தி வலை ........ 81
8. அகலிகைக் கல் ........ 94
9. கடைசியர்கள் ........ 109
10. கலவரப் போதை ........ 126
11. பெண் குடி ........ 139
12. மாடசாமியின் ஊர்வலம் ........ 158
13. முதுகில் பாயாத அம்புகள் ........ 173

# முகம் தெரியா மனுசி

தண்டோராக்காரன், தான் செல்வதற்கு, அந்த குக்கிராம குடிசை மண்டிக்கு தகுதியில்லை என்று கருதியதுபோல், ஊருக்கு புறம்பாக உள்ள மயானத்தில் நின்று நெளித்தபடி, டும் டும் ஒலிகளோடு, திருவாங்கூர் சமஸ்தான அரச அறிவிப்பை வெளியிட்டான்.

"ஸ்ரீ உத்திரம் திருநாள் மகாராஜா திருமனஸ் அவர்கள், ஸ்ரீ பத்மநாபதாச வஞ்சிபால மார்த்தாண்ட வர்மா குலசேகர கிரீடபதி, மன்னை சுல்தான் மகாராஜா, ராஜ்ய பாக்கியோதைய ராமராஜா பகதூர்ஷம் ஷெர்ஜங் மகராஜா, சுசீந்திரம் தாணுமாலயன் ஆலயத் தேர்விழாவை தரிசிக்க நாளை மறுநாள் வந்து, ரெண்டு நாள் தாமசிக்கிறார்".

இதை முன்னிட்டு சகலருக்கும் அறிவிப்பது என்னவென்றால், ஊழியக்கார இளப்ப சாதிகள், விருத்திக்காரர்கள், அத்தனைபேரும் காணிக்கை, கைப்பொருளோடு வந்து சுசீந்திரம் கச்சேரிக்கு 96அடி தள்ளி நிற்கும்படி ஆக்ஞை இடப்படுகிறார்கள். மகாராஜாவின் வருகைக்கு முன்னதாக நிலவரியான புருசங்தாரம், வாரிசு வரியான அடியறா, வீட்டு வரியான குப்பகாழ்ச்சா மற்றும் பனைவரி, பனையேறும் ஏணிக்கான ஏணிக்காணம், பனை நாருக்கான தலைக்காணம், தலைவரி, முலைவரி, மீசைவரி, தாலிவரி, தாவரவரிகள் போன்ற அத்தனை வரிகளையும் செலுத்திவிட வேண்டும். அதோடு சாதிய அனுஷ்டானங்களை கடைபிடிக்காத தாழ்ந்த சாதியினரைப் பற்றி மேல் அதிகாரிகளுக்கு, பார்த்தவர்கள், கேட்டவர்கள், விசாரிப்பு மூலம் தெரிந்தவர்கள் உடனடியாக தகவல் கொடுக்க வேண்டும். இவற்றை மீறும் பட்சத்தில், இந்த தகவல்களை சொல்லாதவர்களுக்கும் சிரச்சேதம் உட்பட எந்தவிதமான தண்டனையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது."

திருவாங்கூர் சமஸ்தான மன்னரைப் பற்றிய அலங்கார வார்த்தைகளுக்கு உச்ச சத்தமாய் முரசொலித்தும், ஒவ்வொரு அறிவிப்புக்கும் மூன்று தடவை டும் போட்டும், இறுதியில் டமர... டகர்... டக்கா என்று பீதியை ஏற்படுத்தும் அதிகார தாளத்தோடு அடிக்கப்பட்ட தமுக்குச் சத்தம் அந்த குக்கிராமத்திற்குள் அசரீரி குரலாய் ஒக்கலித்தது.

ஆறடி உயரமுள்ள அய்ம்பது, அறுபது பனையோலை குடிசைகள் எதிர் எதிராய், வரிசை வரிசையாய் இருந்தன. இந்த வரிசைகளுக்குப் பின்னால் மேலும் அடுக்கடுக்கான குடிசை வரிசைகள், ஊராய்க் காட்டின. ஒவ்வொரு குடிசையின் மண் சுவரும், இன்னொரு குடிசையின் சுவராயிற்று. இந்த இருபக்க குடிசை வரிசைக்கும் இடையே சுயம்பாக ஒரு குறுகிய தெரு ஏற்பட்டது.

இந்தக் குடிசை வரிசைகளுக்கு மேல்பக்கம் உள்ள திட்டில் முக்கோண வடிவத்தில் சுண்ணாம்பு பூச்சு இற்றுப் போய் செம்மண் சுவராக நின்ற கள்ளிமாடன் பீடத்திற்கு முன்னால் வம்படி, வழக்கடியாய் பேசிக்கொண்டிருந்த அத்தனை ஆண்களும், பீதியோடு குரல் வந்த திக்கை எட்டிப் பார்த்தார்கள். அவர்கள் தத்தம் வரிபாக்கியை நினைத்தும், ஊழியம் செய்ய வேண்டிய கட்டாயம் குறித்தும், கலங்கிப்போய் ஒருவர் முகத்தை ஒருவர் ஆறுதலாக பார்த்துக் கொண்டார்கள். அப்போது தோள்வரை நீண்ட காதுகளில் அவர்கள் போட்டிருந்த ஈயக்குண்டலங்கள், அவர்களது பீதியை வெளிகாட்டுவதுபோல் மேலும், கீழுமாய் ஆடின. காதுகளை ஆட்டுவித்தன.

ஊழியம் என்றால் கூலி இல்லாத ஓசி வேலைகள். முகாமிடும் மன்னரின் யானைகளுக்கு தென்னை ஓலைகளை வெட்டி, கட்டுக் கட்டாக சுமந்து செல்ல வேண்டும். குதிரைகளுக்கு, கொள்ளு கொண்டு போக வேண்டும். ஆங்காங்கே உள்ள நதி சுருங்கிய காயல்கள் எனப்படும் குளங்களை தூர்வார வேண்டும். மன்னரின் பரிவாரங்களுக்கு தேங்காய்கள், நுங்குகள், பனங்கிழங்குகள், பயிர் வகைகள் முதலியவற்றை காணிக்கையாக்க வேண்டும். உப்பளங்களில் இருந்து உப்பு மூட்டைகளை சுமந்துபோக வேண்டும்.

ஊட்டுப்புரை எனப்படும் சத்திரங்களுக்கு விறகு வெட்டிக் கொடுக்க வேண்டும். குடியான்கள், வண்டி வாகனங்களையும், உழவு மாடுகளையும் அதிகார கச்சேரியில் ஒப்படைக்க வேண்டும்.

இப்படி இளப்ப சாதிகளுக்காக விதிக்கப்பட்ட 120 ஊழியங்களில் பாதியையாவது மகாராஜாவின் வருகையின்போது செய்தாக வேண்டும். இல்லையென்றால் சிரச்சேதம்தான். ஆனாலும் இவர்களுக்கு கூலி கிடையாது. கூலி கிடக்கட்டும். குடிப்பதற்கு கூழ் கூட கிடைக்காது. ஊட்டுப் புரைகளில் வீசியெறியப்படுகிற எச்சில் சோறு கூட கிட்டாது. காரணம், அந்தப்பக்கம் இவர்கள் போகமுடியாது. ஆனாலும், ஊழியம் செய்ய சுணங்கினால் சவுக்கடி... வரிகட்ட தாமதித்தால் குனித்து வைக்கப்பட்டு முதுகுமேல் கல்லேற்றப்படும். இந்த ஊழியத்திலிருந்து நோயாளிகளும், வயோதிகர்களும் கூட தப்பிக்க முடியாது.

எனவே, தோள்வரை தொங்கிய செவ்வக வடிவமான காதுகளில், மாட்டப்பட்ட ஈயக்குண்டலங்களோடும், முட்டிக்கால்களுக்கு கீழே போகாத முண்டுகளோடும், பிடரியை மறைக்கும் குடுமிகளோடும் தோன்றிய ஆடவர்கள், சொல்லாமல் கொள்ளாமல் ஓடினார்கள். "சுடலமாடா காப்பாத்து, கள்ளிமாடா காப்பாத்து" என்று அலறியடித்து ஓடினார்கள். மனைவி, மக்கள் இல்லாதவர்கள் ஒளிந்து கொள்ளவும், குடும்பஸ்தர்கள் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தப்பித்துக் கொள்வதற்காகவும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த ஓட்டத்தினால் அந்த பனையோலை குடிசைப்பகுதி, காலடி தழுக்காக ஓலமிட்டபோது

அந்தத் தெருவில் ஆங்காங்கே பேசிக்கொண்டும், திருவுரலில் கேழ்வரகு அரைத்துக் கொண்டும், உரலில் சோளத்தை உலக்கையால் இடித்துக் கொண்டும், ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே வேலையாற்றிய பெண்கள், பணிக்கருவிகளை கைவிட்டு விட்டு, ஒன்று திரண்டார்கள். இந்தப் பெண்களின் இடுப்புக்கு கீழே, முழங்கால்களுக்கு சிறிது இரக்கமாய் ஒற்றைச் சேலை முண்டுகள்... இடுப்புக்கு மேலேயோ முழு நிர்வாணம்.

தொள்ளைக் காதுகளில் மட்டும் ஆண்களைப் போல் ஈயக் குண்டலங்கள். மற்றபடி திறந்தவெளி மார்புக்காரிகள்... மார்பகங்கள், வயதுக்கேற்ப மாங்கனியாய் பெருத்தும், பாவக்காயாய் சிறுத்தும், சுரைக்கூடாய் சுண்டியும் கிடந்தன.

நேற்றுவரை, இந்த மார்பகங்களை, கை, கால்களைப் போல் வெறுமனே ஒரு உறுப்பாக பார்த்துப் பழகிய இந்தப் பெண்கள், அந்த தெற்குப்பக்க குடிசை வரிசையில் மேற்கோர எல்லையாய் நிற்கும் பனையோலை வீட்டின் முன்னால், அவ்வப்போது வெளிப்பட்ட ரவிக்கைகாரியைப் பார்த்து லேசாய் சிறுமைப்பட்டார்கள். ஓரளவு, பொறாமைப் பட்டார்கள். அவள் ரவிக்கையை மானசீகமாக கழட்டி இடுப்புக்கு மேல் மாட்டிப் பார்த்தார்கள். மேல்சாதி பெண்கள் கூட, இவளை மாதிரி ரவிக்கை போடாமல் மார்பகங்களில் கச்சை கட்டியிருப்பார்கள். சிலசமயம் தோள்சீலையை (மாராப்பு) முதுகுமுழுக்கக இறுகச் சுற்றி, இடுப்பில் இன்னொரு சுற்றாய் சுற்றி சொருகிக் கொள்வார்கள். ஆனால், இவளோ தோள்களின் இருபக்கமும் டக்கு, டக்கான துணிப் பூக்களோடு மார்பகத்திற்கும் கீழே போன அந்த சட்டைக்கு மேலே, வரிவரியாய் சுற்றிய கண்டாங்கி சேலையோடு நிற்கிறாள். கேட்டால், ரவிக்கை என்கிறாள். 'எங்கள் ஊர் பழக்கம்' என்கிறாள். 'நீங்களும் போட்டுக்கணும்' என்கிறாள். ஒருத்திக்கு தாலியை விட இதுதான் முக்கியம் என்கிறாள். இவளோடு சேருவது எலியும், தவளையும் கூட்டுச் சேர்ந்த கதைதான்...

அந்த தண்டோராவிற்கு முன்பு வரை, அந்த ரவிக்கைக்கார இளம்பெண்ணை சுபதேவதையாய் அதிசயத்துப் பார்த்த பெண்கள் இப்போது கோபம், கோபமாய் பார்த்தார்கள். பயத்தால் ஏற்பட்ட கோபம். 'சரியான சிமிட்டாக்காரி, இவள் இப்படி போட்டு இருக்கிறத ஏமான்க கிட்ட சொல்லாட்டா, நம்மபாடு கிறிச்சானுக்கு மறிச்சானாயிடும். அவள்கிட்ட இப்பவே போயி, மேல்சட்டையை கழட்டி, தோள்சீலையை தூக்கி எறியச் செய்யணும். இல்லாட்டா, நம்ம தலைமுடிக்குள்ள உலக்கைய உட்டு அதுல தல முடிய சுத்தோ சுத்துன்னு சுத்தி, குனிய வச்சி முதுகுல பாறாங்கல்ல ஏத்துவாங்க.

சாதிப்பழக்கத்துக்கு தகாதபடி உடுப்புப் போட்ட இவளும் ஒரு பொம்பளையா? இந்த ஊருக்கே பெரிய அவமானம். இவள விடப்படாது.

அந்த முண்டுச் சேலைப் பெண்கள், ரவிக்கைப் பெண்ணை நெருங்கியபோது, அவள் ஒரு சிறட்டையில் கரிக்கட்டைகளைப் போட்டு, கண்ணாடி சீசாவில் இருந்து சிமை எண்ணெயை லேசாய் ஊற்றி தீப்பற்ற வைத்து, தீமுட்டிக் குழலால் ஊதினாள். துளைகள் இல்லாத புல்லாங்குழல் போன்ற அந்த பித்தளை குழலில், அவளது ஊதோசையின் ஏற்ற இறக்கத்திற்கு ஏற்ப கரிக்கட்டைகள், நீரு பூத்த நெருப்பாகி, செந்தணலாகி, தீயாகி பின்னர் ஜோதியாய் நர்த்தனமிட்டது.

அந்தப் பெண்கள் அவள் ஊதி முடிக்கட்டும் என்று காத்திருந்தார்கள். அவள் நிமிர்ந்தபோது, ஏனோ பேசமுடியவில்லை. அவள் கண்களின் அழுத்தமும், தொய்வில்லாத பட்டறைச் சட்டம் போன்ற உடம்பும், அழகுக்கு அழகு சேர்க்கும் ரவிக்கையும், கம்பீரப்படுத்தும் முந்தானையும், சிவப்பழகிற்கு அறைகூவல் விடுக்கும் கருப்பழகும், அவர்கள் நாக்குகளை கட்டிப் போட்டன.

இதற்குள் குடிசை வீட்டுக்குள் இருந்து பதநீர் பானையை தூக்கிக் கொண்டு வந்த மாமியார் பூமாரி, வீட்டு முற்றத்தில் முக்கோணமாய் பதிக்கப்பட்ட கல்லடுப்பிற்கு மேல், பானையை வைத்தாள். அந்த அடுப்பின் அடிவாரத்திற்குள் ஏற்கெனவே திணிக்கப்பட்ட கீறிப்போட்ட பனைமட்டைகளையும், சுள்ளி விறகுகளையும், சேர்த்துப் பிடித்து அடுப்புக்குள்ளயே ஒரு தட்டு தட்டினாள், பிறகு ரவிக்கைகார மருமகளிடமிருந்து, பாதிக்கருகிப்போன சிறட்டையோடு நெருப்பு துண்டங்களை வாங்கி அடுப்புக்குள் போட்டு, தீமூட்டிக் குழலால் ஊதினாள். நெருப்புப் பற்றியதும், தொடைகளில் கை, கால்களை ஊன்றி எழுந்து, அந்தப் பெண்களை ஏறிட்டுப் பார்த்தாள். மருமகள் அருகேயுள்ள மாட்டுத் தொழுவத்தில் கட்டப்பட்ட மூன்று மாடுகளுக்கும், ஒரு கன்று குட்டிக்கும் வைக்கோலை சமச்சீராய் வைத்தாள். பிறகு கருஞ்சிவப்பான கன்றுக் குட்டியின் முதுகை தடவிவிட்டாள். அந்த

குட்டி முதுகை பம்மவைத்து, அவள் முகத்தை முகர்ந்தபோது, இடம்தெரியா ஊரில் இடறிவிழுந்த துக்கத்தை மறந்தாள்.

அந்தப் பெண்களுக்கு, எடுத்த எடுப்பிலேயே ரவிக்கைகாரியை விமர்சிக்க மனமில்லை. "நீ கேளு... நீயே கேளு..." என்பது மாதிரி ஒவ்வொருத்தியும் மற்றவள்களின் முகத்தைப் பார்த்தபோது, ஒரு நடுத்தர வயதுப் பெண், பூமாரிக் கிழவியிடம் பீடிகை போட்டாள்.

"பனவிள... விடிலில பயனி காய்க்காம, இங்க எதுக்காவ காய்க்க சித்தி?"

"ஒன் காது செவிடா? தமுக்குச் சத்தம் கேக்கல? விளயில பயினி காய்ச்சா, சிறட்ட கூட மிஞ்சாது. யான போன கரும்புத் தோட்டமாவது கொஞ்சம் நஞ்சம் ஒப்பேரும், ஆனா, மவராசா பரிவாரப் பயலுக போன இடத்தல புல்லு கூட முளைக்காதே."

கன்றுக்குட்டியின் முதுகை தடவிவிட்டபடியே மாமியார் சொல்வதை அதிசயமாய் கேட்பதுபோல் முகத்தை அண்ணாந்து வைத்த ரவிக்கைக்காரி, அந்தப் பெண்களின் அம்மண மார்பகங்களை, அறுவெறுப்பாகவும், பின்னர் அனுதாபமாகவும் பார்த்து, முகஞ் சுழித்தபோது, ஒரு முன்கோபிப்பெண் முரட்டுத்தனமாக கிழவியைச் சீண்டினாள்.

"தண்டோராச் சத்தம் வயசான ஒனக்கு கேக்கும்போது, எங்களுக்கு கேக்காதா? சாதி அனுஷ்டானத்த விட்டோமுன்னா மாறு கால் மாறு கை வாங்கிடுவாவ... பேசாம உன் மருமவள எங்கள மாதிரி மேல்துளி இல்லாம நிக்கச் சொல்லு. கச்சேரியில போயி நாங்களே சொல்லும்படியா வச்சிப்புடாத.."

ரவிக்கைக்காரி, அவர்களை சுட்டெரித்துப் பார்த்தபொழுது, பூமாரி கிழவி மன்றாடினாள்.

"காலங்காலமா இந்துமாதிரி சட்ட போட்டிருக்காளாம்... இப்படி போடுறது அவ ஊரு பழக்கமாம். உங்கச் சீலைய களைஞ்சா எப்படி ஒங்களுக்கு இருக்குமோ, அப்படி மேல்சட்டைய கழட்டுனா, அவளுக்கு இருக்குமாம். அத கழட்டுறதுக்கு கூச்சப்படுறா. இந்த சட்டம்பி பய... அதான் என் மவன்... இவளை எப்படியோ மசக்கி கூட்டி

வந்துட்டான். ரெண்டு நாளிக்கு விட்டுப் புடிச்சா சரியாயிடும். என்ன செய்யுறது... ரோஷக்காரியா இருக்கா"

"நம்ம சாதி பொம்பளயளுக்கு ரோஷம் கூடாது. ஆச்சி"

"ஏன் கூடாது? அப்படின்னா சிலையையும் அவுத்து போடுங்கழா"

"இதுபாரு ஆச்சி வயசானவன்னு பாவம் பாக்கோம். இல்லாட்டா கச்சேரிக்குப் போக அதிக நேரம் ஆகாது. வேணுமுன்னா ஒண்ணு செய். மவராசா வரும்போது, மேல்சாதி பொண்ணுங்கள சீவி சிங்காரிச்சு கொப்பு, சரடு, தலைசுத்தி, தண்டை, சதங்கை, வளையல், காப்பு, காசுமாலை, கண்டிமாலை போட்டு மாடத்துல நிறுத்தி, மவராசா பார்வையில படவச்சி... அவரு, அவளுவள கூடாரத்துல அனுபவச்சிட்டு இருபது கோட்ட விதபாட்ட அம்மச்சி கோணமா கொடுக்கிறது மாதிரி, மேல்சாதிக்காரி மாதிரியே தெரியுற ஒன் மருமவள அலங்காரம் பண்ணி, மவராசா வர வழிப்பக்கம் நிறுத்து. இவளையும் தூக்கிட்டுப் போவாரு... இருபத்தோருக் கோட்ட விதபாட்டையும் தருவாரு. பேசுறா பாரு பேச்சு."

பூமாரி, பத்ரகாளியானாள். இப்படி அவள் கோவப்பட்டு அந்தப் பெண்கள் பார்த்தது இல்லை.

"நாக்க அறுத்துப்புடுவேன்... என்ன பேச்சுடி பேசுற..? எந்த சாதியையும் ஒன்ன மாதிரி மட்டமா நினையாத. நான் சின்னப்புள்ளையா இருக்கும்போது, இவருக்கு முந்துன மவராசா இந்தப் பக்கம் வந்தாரு. ஒரு பொண்ணோட ஆறடி நீள தலமுடிய பாத்துட்டு மயங்கிப் போனாரு. சேவகர்கள கூப்பிட்டு அந்தப் பொண்ண கண்டுபிடிக்கச் சொன்னாரு. அவங்களும் கண்டுபுடிச்சு அந்தப் பெண்ணுக்கு பல்லக்கு, நகை, நட்டு கொண்டுவந்து மகராசாகிட்ட வரச் சொன்னாங்க. ஆனால் அந்த மவராசி... அவள் செத்தும் தெய்வமா நிக்க... துங்கரளிக் கொட்டைய அரச்சிக் குடிச்சி தன்னையே கொன்னுகிட்டா. இதுமாதிரிதான் என் மருமவளும்... வந்த வழிய பாத்து போங்கடி. இப்பல்லாம் பல இடத்துல நம்மோட பெண்டுக மேல்சட்டைப் போட்டு லாந்துறாளுவ. இவளும் இப்படி

செய்யறதுல என்ன தப்பு..? நீங்க இவள மாதிரி செய்யாம இருக்கதுதான் தப்பு."

"சரி எங்களயும் ஒரு வழி பண்ண பாக்கே. ஒன்பாடு... ஒன் மருமவ பாடு... சர்க்கார் பாடு..."

"அப்படி நாம விடமுடியுமா? காரியக்கார ஆளுக வந்தா நம்ம முதுகுலயும் கல்லேறுமே... கண்ணால கண்டத சொல்லணுமுன்னு தமுக்குக்காரன் சொல்லிட்டுப் போயிருக்கானே"

ரவிக்கைக்காரி, அந்தப் பெண்களைச் சீறிப் பார்த்தபோது, ஒருத்தி, இன்னொருத்தியின் இடுப்பில் கிள்ள, அவள் மற்றவளின் தோளைக் கிள்ள அது தொடர்கிள்ளல்களாக, அத்தனை பெண்களும் கிழக்கு பக்கமாய் எக்கிப் பார்த்துவிட்டு, அங்குமிங்குமாய் சிதறி ஓடினார்கள்.

அங்கிருந்து, பத்து, பதினைந்து ஏவலாட்கள் புடைசூழ வந்த வலிய கணக்கெழுத்து வேலப்பனும், மணியம் கச்சேரி தாணுலிங்கமும் தங்கள் பக்கமாய் ஓடிவந்த பெண்களை சவுக்காலும், பிரம்பாலும் 'விளையாட்டாக' விளாசினார்கள். உடம்பை புடைக்கவைக்கும் வினையான விளையாட்டு. அந்தப் பெண்களும் வலியைப் பொறுத்துக் கொண்டு, ஏதோ மகத்தான பட்டம் ஒன்றை பெற்றதுபோல் வலியச் சிரித்துக் கொண்டே ஓடினார்கள்.

இதற்குள் பூமாரி உஷாரானாள். ரவிக்கைக்கார மருமகளை ஆறடி உயர வீட்டின் மூன்றடி வாசலுக்குள் கூனிக்குறுக்கி திணித்துவிட்டு, பனைமட்டக் கதவைச் சாத்தினாள். பதநீர் பானையைப் பதம் பார்ப்பதுபோல், பாசாங்கு போட்டாள். நிறைபானை பதநீர், கொதித்து கொதித்து, சுண்டிச் சுண்டி கூப்பனியாகி பானையின் கால்பகுதி வரை சுருங்கியது.

திடீரென்று 'ஏய்' என்ற சொல்லோடு காலில் பிரம்படியும், முதுகில் சவுக்கடியும் பெற்ற பூமாரி ஏறிட்டு பார்த்தாள். உடனடியாய் எழுந்தாள். இடது கைகைய மார்பில் குறுக்காய் மடித்து, வலது கையை கொண்டு வாயில் பாதியை மூடியபடியே 'ஏமானே ஏமானே' அடியேன் என்ன செய்யணும்" என்று அரற்றினாள்.

வலிய கணக்கெழுத்தும், மணியக்காரரும், பட்டு வேட்டியும், ஜரிகை தலைப்பாகையும், வைரக்கடுக்கனும், பச்சைக்கல் டோலக்கும், மார்பில் வைரப் பதக்கமும், வலது கையில் தங்கத்தாலான வீர காண்டாமணியும், தோளில் பட்டு நேரியலுமாய், மீசைகளை முறுக்கியபடியே, கிழவியிடம் பேசுவது தங்கள் தகுதிக்கு குறைவு என்பதுபோல் சிறிது விலகி நின்றார்கள். வெப்பமற்ற, இதமான காற்று அடித்த அந்த வேளையிலும், அவர்களுக்கு இரண்டுபேர் குடைபிடித்துக் கொண்டிருந்தார்கள். பூமாரி நெடுஞ்சாண் கிடையாக அவர்கள் கால்களில் விழுந்தாள். 'எந்தத் தப்பு செய்திருந்தாலும் என்னை காலால இடறி கையால உதறிப்போடுங்க சாமிகளா' என்று ஓலமிட்டாள்.

இதற்குள் வலிய கணக்கெழுத்து, பனையோலைச் சுவடிகளில் ஒன்றை எடுத்து, ஏவலாள் ஒருவனிடம் கிசுகிசுத்தார். அந்த ஏவலாளி, பூமாரியிடம் எதிர்ப்பாளியாய் கேட்டான்.

"ஏய் கிழவி! நீ குப்பாச்சா கட்டல. பனையிறை கட்டல, ஏணிப்பாணம் கொடுக்கல. ஒன் மனசுல என்னழா நினைச்சுகிட்டே?"

"ஏமானே! இன்னைக்கு கருப்பெட்டி வித்துட்டா வரிக்காசு முழுசும் சேர்ந்துரும். நாளிக்கு அதிகார கச்சேரியில வந்து கட்டிடுவேன் ஏமானே"

"ஒன் புருஷன் இசக்கிமாடன ஊழியம் செய்ய வரச்சொல்லு. கிழட்டுப்பய எங்கழா போயிட்டான்?"

"வந்துருவாவு. ஏமானே... திங்கள் சந்தையில ஒரு கன்னிப்பேய ஒட்டுறதுக்கு போயிருக்காவ'... வந்தவுடனே ஊழியத்துக்கு அனுப்பி வைக்கேன். சர்க்காருக்கு ஊழியமுன்னா சந்தோஷமா செய்யற மனுஷன்."

வலிய கணக்கெழுத்தும், மணியம் கச்சேரியும் திருப்தியாக தலையாட்டியபடியே புறப்பட்டபோது, ஏவலாளிகளின் வலுவான ஒருவன் அருகேயுள்ள மாட்டுத் தொழுவத்திற்கு சென்று பூவரசு

முளைகளில் கட்டப்பட்ட மூன்று மாடுகளின் வால்களை தூக்கிப் பிடித்து கீழே பார்த்துவிட்டு, அங்கிருந்தபடியே, தனது கண்டுபிடிப்பை பிரகடனப்படுத்தி, ஏமான்களின் கால்களுக்கு நங்கூரம் பாய்ச்சினான்.

“எசமானரே! இந்த கள்ளச்செறுக்கி... பசுமாடு வச்சிருக்கா. ஈனசாதிக, பசுமாடு வளக்கப்படாதுன்னு தெரிஞ்சும், இந்த கிழட்டு முண்ட நல்ல பசுவா... காராமணி பசுவா வச்சிருக்கா பாருங்க.”

மணியம் கச்சேரிக்கும், வலிய கணக்கிற்கும் கண்கள் சிவந்தன. பற்கள் கடித்தன. கிழவி பசுமாடு வளர்க்கிறாள் என்பதைவிட, அவள், தங்களை முட்டாளாக்கி விட்டாள் என்கிற கோபம். போதாக்குறைக்கு தங்களை இவர்கள் புத்திசாலிகளாய் நினைத்துக் கொண்டதால் அவர்களின் கோபம் முட்டாள் தனமாகவும், முரட்டுத் தனமாகவும் வெளிப்பட்டது.

மணியம் கச்சேரியின் கண்ணசைப்பில், வலிய கணக்கெழுத்தின் கையசைப்பில், நான்கு ஏவலாட்கள் அந்த பசுமாட்டையும், அதை வளர்த்ததற்கு பிராயச்சித்தமாக (அபராதமாக) இரண்டு மாடுகளையும், ஒரு கன்றுக்குட்டியையும் இழுத்துக் கொண்டு வெளியே வந்தார்கள். முட்டப்போன மாடுகளை சவுக்கால் வழிப்படுத்தினார்கள். பின்னர் அதே சவுக்கை வைத்துக் கொண்டு, வலியக் கணக்கெழுத்தின் கண்சிமிட்டலில், ஒரு ஏவலாளி, பூமாரி கிழவியின் உடம்பிற்கு ரத்தக்கோடுகளைப் போட்டான் இன்னொருத்தன் கணுக்கணுவாய் புடைத்திருந்த பிரம்பால் அவள் தலையை குத்தினான். இடுப்பை இடித்தான். பூமாரி சுருண்டு வீழ்ந்தாள். அம்மா என்று அழப்போனவளின் வாயில் ஒரு குத்துக் குத்திய பிரம்பு, ரத்தச் சிதறல்களோடு வெளிப்பட்டது. பூமாரி, உருண்டு சுருண்டு கிடந்தபோது-

எதிர்ப்பக்க குடிசையின் பனம்பலகை கதவு வாசலை பிய்த்துக் கொண்டு மல்லாக்க விழுந்தது. ரவிக்கைக்காரி ஆங்காரியாய் வெளிப்பட்டாள். வேகவேகமாய் நடந்து, கீழே கிடந்த மாமியார் பக்கமாய் குனிந்தபோது, ஒரு ஏவலாளியின் பிரம்பு அவள் கழுத்தை நிமிட்டி நிற்க வைத்தது. மாமியார் முக்கி முனங்கி, எழுந்திருக்க

முற்பட்டதால், அவளுக்கு ஆபத்தில்லை என்று மருமகளுக்கு துக்கக்குறைவு ஏற்பட்டது.

அந்த அதிகார ஆசாமிகள் அத்தனைபேரும், அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டபோது, வலியக்கணக்கெழுத்து, தன் தகுதியை உதறிவிட்டு அவளிடம் நேரிடையாக கேட்டார். ஒருவேளை மேல்சாதிப் பெண், என்ன காராணத்தாலோ அங்கு வந்திருக்கலாமோ என்ற சந்தேகம். கேட்டார்.

"நீ என்ன சாதியிழா?"

"கீழ கிடக்காவளே எங்க மாமியார்... அவங்க சாதிதான்."

"அப்படியா சேதி... ரவிக்கை, தோள்சீலை போடுற அளவுக்கு ஈனச்சாதியான உனக்கு அவ்வளவு திமிரு உண்டாயிட்டா? நீ இந்தப் பக்கத்துக்காரி மாதிரி தெரியல... உன் பூர்வோத்திரத்த ஒண்ணு பாக்கியில்லாமச் சொல்லணும். அப்போதான் நீ உயிரோட இருக்க முடியுமா, முடியாதான்னு நாங்க யோசிக்க முடியும்.."

ரவிக்கைக்காரி, தலைக்குமேல் வெள்ளம்போன விரக்தியில் உயிருக்குமேல் ஒன்றும்இல்லை என்ற உறுதியில் நிதானமாக, அழுத்தமாக ஏமானே என்று எந்த இடத்திலும் சொல்லாமல் அவர்களுக்கு இணையாகப் பேசுவதுபோல் பேசப் போனாள். அதற்குள், எழுந்து எழுந்து விழுந்த மாமியாரை கைத் தாங்கலாய், தூக்கி நிறுத்திவிட்டு, மணியத்தையும், வலியக்கணக்கையும், மாறி மாறிப் பார்த்தபடியே, தண்ணீர் கொட்டுவதுபோல் ஒப்பித்தாள்.

"எனக்கு திருநெல்வேலி சீமங்க. என்னோட அத்தமகன் அசல் வல்லரக்கன். குடிகாரன்... சூதாடி... பொம்பளக் கள்ளன், சண்டியன். இப்படிப்பட்டவன் முறைமாப்பிளையா இருந்தாலும், அவன கட்டிக்க எனக்கு இஷ்டமில்ல. எங்க அய்யாவும் முடியாதுன்னு சொல்லிட்டாரு. ஆனா போனவாரம், நான் வயக்காட்டுல கத்தரிச் செடிக்கு களை எடுக்கையில, அவன் என் பின்புறமா வந்து, கழுத்த நிமித்தி, மஞ்சத்துண்டு கட்டுன கயித்த வலுகட்டாயமா என் கழுத்துல கள்ளத்தாலியா கட்டுனான். நான் அவனை ஒரே தள்ளா தள்ளிப் போட்டுட்டு, கழுத்துல விழுந்த

கயிற கழட்டி மூணுதடவ தலயச்சுத்தி, காறித்துப்பி, அவன் மூஞ்சில எறிஞ்சுட்டு வீட்டுக்கு ஓடியாந்தேன். ஆனா, ஊரும், உலகமும் கள்ளத்தாலியோ, நல்லதாலியோ, அத கட்டுனவனுக்குத்தான், நான் வாக்கப்படணுமுன்னு சொன்னாவ. அய்யாவும் ஊருக்கு பயந்து சம்மதிச்சுட்டாரு. இதனால, தாம்பரபரணி கரையில ஒரு புளியமரத்துல தூக்குப்போடப் போனேன். அப்போ என்னை தற்செயலாய் பார்த்த இவியளோட மவன், தடுத்தாரு. எங்கப்பக்கத்து பிள்ளவாள் வக்கீல் அய்யாவுக்கு குதிரை வண்டி ஓட்டுனவரு. ஏற்கெனவே அவருக்கும் எனக்கும் தொடாத, கெடாத பழக்கம். என் கதைய கேட்டுட்டு.... நெல்லையப்பர் கோயிலுக்கு முன்னால, கழுத்துல தாலிய போட்டு, இங்கு கூட்டிக் கிட்டு வந்துட்டாரு."

அவள் சொல்வதை ஏனோதானோவாய் கேட்டுக் கொண்டிருந்த, ஏவளாளிகளின் ஒருவன், தனது ஏமானர்களை உசுப்பி விட்டான்.

"இந்த கிழவி சரியான மஞ்ச கடஞ்சா மகனப் பத்தியோ, மருமவள பத்தியோ மூச்சு வுடல. இவள கச்சேரிக்கு தூக்கிட்டுப் போகணும். அப்பதான் அந்தப் பய வந்து தலவரி கட்டுவான். பனையோலையில, அவன் செத்துட்டான்னு கிழவி பொய்சொல்லி யிருக்கா. அவன நோகடிக்கணும். இவள சாகடிக்கணும். சரி அது அப்புறம் சங்கதி. உன் புருசன எங்கழா"

"வடக்கன்குளம் வரைக்கும் போயிருக்காவ"

வலிய கணக்கப்பிள்ளை பற்களை கடித்தபோது, மணியம் கச்சேரி அவளை மயக்கமாக ரசித்து மானசிகமாகப் பார்த்தார். கட்டான கட்டழகு... பேசமா அடிமையா வச்சுக்கலாம். இப்போதைய சந்தை நிலவரப்படி ஒரு அடிமையோட விலை ஒன்பது ரூபா. பூமாரி கிழவிக்கு மூணு ரூபா கொடுத்தா போதும். அவளுக்கும், வரிபாக்கிய தீத்தாப்போல இருக்கும். நமக்கும் ஒரு வப்பாட்டி அடிமை கிடைச்சாப் போல இருக்கும். இதமாக கேட்டார்.

"உன் பேரு என்னழா?"

"ராசம்மா"

"நீ பேருக்கு ஏத்தபடிதான் இருக்கே. ஆனாலும், இளப்பசாதிக இந்த மாதிரி பேரெல்லாம் வெக்கப்படாது. பேசாம நீசம்மான்னு வச்சுக்க"

மணியக்காரர் பல்லிளித்துப் பேசுவது, வலிய கணக்கிற்குப் பிடிக்கவில்லை. ஏவலாளிகளுக்கு உத்தரவிட்டார்.

"இவளோட மேல்சட்டையையும், தோள் சீலையையும் அவுத்துப் போடுங்கடா... சேலையில பாதியை கிழிச்சி எறியுங்கடா.."

அந்த ஏவலாளிகள், கரங்களை கூர்கத்திகள் ஆக்கியதுபோல் கைகளை நீட்டி, கம்புகள் போல் விறைக்க வைத்து, அவளை கண்போட்டுப் பார்த்தபடியே நெருங்க நெருங்க, அவள், ஒதுங்கி ஒதுங்கி பின்புறமாய் நடந்து ஏமான்களைப் பார்த்து, குரல் உயர்த்தி முறையிட்டாள்.

'வேண்டாங்கய்யா... ஒங்களுக்கு கோடிப்புண்ணியம் அய்யா. ஒருநாள் ஒரு பொழுது கொடுங்கய்யா... நான் அவிய வந்ததும் சொல்லிட்டு, கண்காணாத இடமா பார்த்து ஓடிப்போறேய்யா"

"ஏல திவட்டி தடியன்களா, நான் சொன்னது உங்க காதுல ஏறல. அவள அம்மணமாக்குங்கடா"

"வேண்டாங்கய்யா... ஆடுகளுக்கும், மாடுகளுக்கும் கூட, 'அது' மறவாத்தான் இருக்குது. மனுசங்களுக்கு அப்படித்தானய்யா இருக்கணும்? ஒங்க பெண்டு பிள்ளைகள இப்படி செய்தா நீங்க பொறுப்பியளா?"

'படுகளத்துள ஒப்பாரிய கேட்கப்படாதுடா... இவா... இந்த பக்கத்த நாற வக்க வந்தவ. எளப்ப சாதிகள தூண்டி விடுறவ... இவள... முளையிலேயே கிள்ளி எறியணும். அவள அம்மணமாக்குங்கடா'

ஏவலாளிகள், துச்சாதனர்களாய் ஆனார்கள். ஒருவன் ராசம்மாவின் கரங்களை பின்புறமாக வளைத்து பிடித்துக் கொள்ள, இன்னொருத்தன் அவள் தலையை பக்கவாட்டில் சாய்த்துப் பிடித்தான். மூன்றாமவன், அவள் முந்தானையை இறக்கினான். நான்காவது ஆசாமி அவள் ரவிக்கையின் முன்பக்கம்

ஆணிபோன்ற விரல்களை உள்ளேவிட்டு இழுத்து கிழித்தான். மற்றொருவன் பின்பக்கமாக கையை விட்டு ரவிக்கையை இரண்டாக்கினான்.

இதற்கிடையே கீழே சுருண்டு கிடந்த பூமாரி, தரையில் நெஞ்சாண்கிடையாய் குப்புறப்படுத்து ஒவ்வொருவர் காலாய், பிடித்து பிடித்துக் கெஞ்சினாள். இதை வன்முறையாக நினைத்தோ என்னமோ ஏவலாளிகளில் இருவர், அவள் கழுத்தை செருப்புக் கால்களால் மிதிமிதியென்று மிதித்தார்கள். அவள் விறைத்துப் போவது வரைக்கும் கழுத்திலிருந்து கால்களை எடுக்கவில்லை. இதற்குள் ஒற்றைத் துணி பெண்கள் அருகே ஓடிவந்தும், ஓடிய வேகத்திலேயே திரும்பி ஓடியும் 'எய்யரோ... எம்மோ...' என்று மாரடித்தார்கள். வலிய கணக்கு, எதுவுமே நடக்காததுபோல், தொலைநோக்காய் பார்த்தார்.

ராசம்மா, விறைத்துக் கிடந்த மாமியாரைப் பார்த்தாள். வெறித்துப் பார்த்தாள், வெறியோடுப் பார்த்தாள், அப்படிப் பார்க்கப் பார்க்க, அவளுக்கு அழுகை வரவில்லை. மாறாக கண்ணீர் சிந்தவேண்டிய கண்கள் வீரியப்பட்டன. கந்தல்கோலமான ரவிக்கை, அவள் உடம்பை இரும்புச் சுருள் கம்பியாய் முறுக்கேற்றின. அத்தை மகனை எப்படி உலுக்கிப் போட்டாளோ, அப்படி தன்னைப் பற்றியவர்களை ஒரு உலுக்கு உலுக்கி நிலைகுலைய வைத்தாள். அந்த இடைவேளையில், கீழே குனிந்து கொதித்துக் கொண்டிருந்த கூப்பனிப் பானையை கைச் சூட்டோடு எடுத்தபடியே, மேலே நிமிர்ந்து நிமிர்ந்து ஆவேசியானாள்.

அந்தப் பானைக் கழுத்தை லேசாய் சாய்த்து, ஒவ்வொரு ஏவலாளியின் முகத்திலும் பானையை குலுக்கிக் குலுக்கி ஊத்தினாள். அத்தனை ஏவலாளிகளும், அரண்டு மிரண்டு கூக்குரலிட்டு அங்கும் இங்குமாய் ஓடியபோது, கூப்பனி மண்டிக் கிடந்த பானையை, தலைக்கு மேல் கொண்டுபோய் இரட்டைத்தலை உருவங்களாய் நின்ற வலியக்கணக்கின் மீதும், மணியக் கச்சேரியின் மீதும் குறிபார்த்து ஊற்றிவிட்டு, அந்தப் பானையை அவர்கள் முகங்களில் வீசி அடித்தாள். அவர்கள் தலையில் கூப்பனி திரண்டு கண்களுக்குள்

நீர்வீழ்ச்சியாக விழுந்து கொண்டிருந்தது. அந்த அதிகாரிகளும், ஏவல் பூதங்களாக வந்தவர்களும், வெட்கத்தைவிட்டு "அய்யோ.. அம்மா...." என்று கதறினார்கள். வலிபொறுக்க முடியாமல் அங்குமிங்குமாய் துள்ளினார்கள். அதே சமயம் 'அவளைப் பிடிங்க பிடிங்க' என்று ஓலமிட்டார்கள். ஓலமிட்ட வாய்க்குள் கூப்பனி கூழ் ஊடுருவி, நாக்குகளை சுட்டெரித்ததுதான் மிச்சம்.

ராசம்மா, மேற்கோர தொழுவத்தை ஊடுருவி, இன்னொரு குடிசை வரிசையின் இடுக்கு வழியாக ஓடி, ஒரு எருக்குழியைத் தாண்டி, ஒரு வீட்டின் செறுவையைத் தாண்டினாள். அப்போது 'பிடிங்க பிடிங்க' என்ற சத்தம், அடுத்த பக்கத்து அடுக்கு குடிசை வரிசையிலும் எதிரொலித்தது. நடந்ததை நேரில் பார்த்த பெண்கள் ராசாத்தியை பிடிப்பதுபோல் பாவலா செய்து, சீக்கிரமாக போகும்படி கண்ணசைத்தார்கள்.

ஊருக்கு வெளியே வந்து குதிகால் பாய்ச்சலில் ஓடி, காலங்காலமாய் ஓடிக்கொண்டிருக்கும் பழையாற்றுக்குள் ராசம்மா இறங்கினாள். வடக்கு மலையில் உற்பத்தியாகி, நாஞ்சில் நாடு முழுக்க, கிழக்கு கடல்நோக்கி நெடுநீளமாக பாயும் அந்த ஆறு, அவள் முட்டிக்கால்கள் வரை வியாபித்து அவளைச் சில்லிடச் செய்தது. ராசாத்தி சிறிது நிதானித்தாள். கரிகாலனின் காவிரி கல்லணையைப் போல் எந்தக் காலத்திலோ வலுவாக கட்டப்பட்ட அந்த ஆற்றின் கல்பாலத்தின் அடிவாரத் தூண்கள் ஒன்றில் அப்படியே சாய்ந்து, ஆசுவாசப் படுத்திக் கொண்டாள். சாலைப்பக்கம், ஈட்டியும், வேல்கம்புமாய் ஆட்கள் ஓடிவருவது கண்ணுக்கு தெரியவில்லை என்றாலும், காதுக்குக் கேட்டது.

ராசம்மா, நதியோர தாழை மடல்களுக்குள் தவழ்ந்து, தவழ்ந்து, நாணற்செடிகளின் நடுவே பாய்ந்து, ஓணான் செடி குவியல்களுக்குள் உட்புகுந்து, பூணிக்குருவிகளும், வால்குருவிகளும் பயந்து பறக்க, காட்டுப்பூனைகள் மரங்களுக்குள் தாவ, பத்து, பன்னிரெண்டு மைல் தூரம் ஆமையாகவும், முயலாகவும், அணில் பாய்ச்சலாகவும், நகர்ந்தும், தவழ்ந்தும், தாவியும் போய்க் கொண்டிருந்தவள், களைப்பு மேலிட்டு மூச்சு முட்டியபோது ஓரிடத்தில் கரையேறினாள்.

எங்கே போவது என்று புரியாமல், அவள் மலங்க மலங்க விழித்தாள். இயல்பான உயிர்ப் பயம், அவளை நான்கு பக்கமும் திரும்ப வைத்தது. தற்செயலாக, அந்த பக்கமாக வந்தவர்களைப் பார்த்து, பயத்தை பயமுறுத்தலாக்குவதுபோல், கைகளையே ஆயுதங்களாய் வளைத்து, பற்களை வெளிப்படுத்தி, முள் மரமாய் நின்றாள்.

காரணமும் புரியவில்லை, காரியமும் தெரியவில்லை, மயக்கமா, கிறக்கமா, மரணமா, அப்போதைய பிறப்பா... ஆடி அடங்கிய வாழ்வா, அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை. உயிர் நிற்க, உடல் போன நிலைமை... உடல் இயங்க உயிர் போன கொடூரம்.

அவள், சிறிது சிறிதாக ஓரளவு சுயத்திற்கு வந்தாள்.

எல்லாம் பொய்யாய் பழங்கதையாய் போய்விட்ட ஆத்திரம். இந்த நிலைக்கு காரணமான அத்தை மகனை, ராத்திரியோடு ராத்திரியாய் போய் ஒரே வெட்டாய் வெட்ட வேண்டும் என்ற வேகம். அதே சமயம், திசை அறியாத சோகம்.

எந்த திசையும் விளங்காமல், எதிர் திசையில், அவள் நடந்தாள். திக்கற்ற நடை... கால்களே மூளையை ஆட்டி வைக்கும் கட்டாயம். இதயம், வேகவேகமாய் அடித்தடித்தே நிற்கப்போவது போன்ற தோரணை.

ராசம்மாவை, அவள் கால்கள், கோட்டாறு சந்தைப் பக்கமாக இழுத்துக் கொண்டு வந்தன. அந்த சந்தைக்குள் நடந்த அடிதடிகள் அவளை நின்ற இடத்திலேயே நிற்க வைத்தன. அந்த குடிசைப் பக்கம், கிறிஸ்தவ பெண்கள் தோள்சீலைப் போட உரிமைக் கேட்டு போராடிவருவதாக புராணக் கதைபோல் கேள்விப்பட்டது, அவள் நினைவுக்கு வந்து, அவளை பாதி உயிர்ப்பித்தது. அந்தச் சண்டைச் சந்தையைப் பார்க்க வைத்தது.

வெள்ளையும், சொள்ளையுமான மனிதர்கள் ஒரு பக்கமும், தோள்சீலை பெண்களோடு நின்ற அழுக்குத் துணிக்காரர்கள் இன்னொருப் பக்கமுமாய் அணிவகுத்து ஒருவரையொருவர் அடித்துக் கொள்கிறார்கள். கல்லெறியும், சொல்லெறியும் ஒருங்கே

நடைபெறுகின்றன. அதே சமயம், அழுக்கு வேட்டிகளுக்கு பக்கபலமாக, தலையின் வலது பக்க முன்பகுதியில் குடுமி முடிந்த நம்பூதிரிகளும், இன்னும் சில வெள்ளைச் சொள்ளை மனிதர்களும், கிறிஸ்துவ பாதிரியார்களும் எதிர்த்தரப்பிடம் கோபங்கோபமாய் பேசுகிறார்கள். அவர்களை பின்னால் தள்ளி விடுகிறார்கள். ஆனாலும் -

சந்தைக்குள் இருந்த கட்டைவண்டிகள் உடைக்கப் படுகின்றன. கட்டிடங்கள் எரிக்கப்படுகின்றன. தானியங்கள் புகைகின்றன. ஆடுகள் அலறுகின்றன. மாடுகள் அலைமோது கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக -

கரங்களின் மணிக்கட்டுகள் வரை நீண்டு, கழுத்து வரை உயர்ந்து, இடுப்பு வரை வியாபித்த குப்பாயச் சட்டையையும், தோளில் ஒரு துண்டு சேலையுமாய் உரிமையை நிலைநாட்டும் வகையில் அணிந்துக் கொண்டு திரண்டிருந்த கீழ்சாதி பெண்களில் பலர் மல்லாந்தும், குப்புறவும் தள்ளப்படுகிறார்கள். குப்பாயங்கள் கிழிக்கப்படுகின்றன. தோள்சீலை உறியப்படுகிறது. இடுப்பில் கட்டிய சேலைகள் அவிழ்க்கப்படுகின்றன. நிர்வாணமாய் ஆக்கப்பட்ட பெண்கள், இடுப்புக்கு கீழே இரண்டு கைகளையும் வைத்து பொத்திக் கொண்டு குய்யோ, முறையோ என்று கூப்பாடு போடுகிறார்கள். "ஏசுவே.. ஏசுவே" என்ற ஏகப்பட்ட அலறல்கள். "முத்தாரம்மா, முத்தாரம்மா" என்ற சின்னச் சின்ன முனங்கல்கள். வண்டுகள் போல் ரீங்கரிக்கும் அவர்களின் வழக்கமான சத்தம், குண்டுகளின் கோரச்சத்தமாய் குரலிடுகிறது.

இந்தப் பின்னணியில் வெள்ளையும், சொள்ளையுமான ஒரு தடியன், குப்பாயம் போட்ட ஒரு இளம் பெண்ணை இருபக்கமும் கைகளை விரித்துப்போட்டு துரத்துகிறான். அவள் அலறியடித்து அவனை திரும்பித் திரும்பி பார்த்தபடியே ஓடிஓடி, ஒரு திருப்பத்தில் இடறி விழுகிறாள். ராசம்மா நிற்கும் இடத்திலிருந்து பத்தடி தொலைவில் அப்படியே கிடக்கிறாள். துரத்திவந்தவன் அவள் வயிற்றில் உட்கார்ந்து கொண்டு, மார்புக்கும் குப்பாய இடைவெளிக்கும் இடையில் இரண்டு கைகளையும் ஊடுருவ

விடுகிறான். அந்தப் பெண் ஓலமிட சக்தியற்று முடங்கிக் கிடக்கிறாள். நடக்கப்போவதை எதிர்பார்த்து, கண்களை, கைகளால் மூடிக் கொள்கிறாள்.

யந்திரமயமாய் நின்ற ராசம்மா மனிதமயமாகிறாள். கீழே குனிகிறாள். அவளுக்கென்றே தரையில் ஒரு கூர்மையான பாறாங்கல் காத்துக்கிடக்கிறது. அதைத் தூக்கிக் கொண்டு குப்பாய துச்சாதனனை நோக்கி "ஏலேய்.. "என்று கத்தியபடியே, ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து, அவனை அந்தப் பெண்ணின் காலடிக்கு பின்புறமாய், தலையில் ரத்தம் சொட்டச் சொட்ட வீழ்த்துகிறாள். தோளில் சாய்ந்த குப்பாயப் பெண்ணை தூக்கி நிறுத்தி அணைத்தபடியே அடிதடிச் சந்தையை நோக்கி அடிமேல் அடிபோட்டு நடக்கிறாள். அந்தப் பெண்ணை நடத்தி நடத்தி -

அங்கே நடைபெற்ற எளிய பெண்களின் தோள்சீலை உரிமைப் போரில், முகம்தெரியா மனுசியாய் ராசம்மா சங்கமிக்கிறாள்.

பி.கு : அந்தக் காலத்தில், திருவாங்கூர் சமஸ்தானத்தில் பெண்களின் மேலாடை தோள்சீலை என்று அழைக்கப்பட்டது.

ஆனந்த விகடன்,

○

# பொருள் மிக்க பூஜ்யம்

அந்த கன்றுக்குட்டி, புலிப்பாய்ச்சலில் காட்டைக் கிழித்தும், காற்றைப் பிடித்தும், பறப்பதுபோல் பாய்ந்து கொண்டிருந்தது.

ஒரே மலையை, இரு மலையாய்க் காட்டும் மடிப்பு வெளி; மரித்ததுபோல் இறங்குமுகமும், மறுபிறவி எடுத்ததுபோல் ஏறுமுகமும் கொண்ட மலைப்பூமி; இந்த இரு முகங்களுக்கு இடையேயான மலைத்தொட்டில். பூமிப்பெண்ணின் மார்பகமாய் விம்மிப்புடைத்த அந்த மலைப்பகுதியின் ரூபத்தையும், அதற்குத் தாவணி போட்டது போன்ற மேகத்தையும், முக்காடான ஆகாய அரூபத்தையும், எவரும் தத்தம் கற்பனைக்கேற்ப வேறு வேறு வடிவங்களாகவும் உருவகப்படுத்திக் கொள்ளலாம். அப்படிக் கற்பித்துக் கொண்டால், மலைகளே தூளியான அந்தத் தொட்டிலில், ஒரு அசுரக் குழந்தை படுத்திருப்பதாகப் பார்க்கலாம். அப்படிப் பாவித்தால், மண்டிக் கிடக்கும் மரங்களே அந்தக் குழந்தையின் தலைமுடி. நெற்றியே, அதன் சமவெளி. புருவங்களே அதன் புல்வெளி. அருவிகளே அதன் கசியும் கண். வாயே அதன் நீர்ச்சுனை. அதன் மூச்சே பெருங்காற்று.

கனைக்கின்ற அந்த வனத்திற்குள், அந்தக் காட்டு மாட்டுக் கன்று 'ம்மா... ம்மா' என்று கத்தியபடியே, காதுகளை சிலிர்க்கவிட்டு, கால் போட்டுத் தாவியது. அதற்கு ஏற்ப தாளலயமான ஒலிகளும், சுருதிபேத கூக்குரல்களும் கூடவே எழுந்தன. குயில்களின் செல்லச் சத்தம்; வானம்பாடியின் கானச் சத்தம்... பருந்துகளின் பயமுறுத்தும் சத்தம்... ஆந்தைகளின் அலறல்... அத்தனை சத்தங்களும் 'சுயத்தை' இழக்காத கலவைச் சத்தங்களாகவும், சுயம்கலந்த கூட்டுச் சத்தங்களாகவும், இறுதியில் அத்வைத அசரீரி குரலாகவும் ஒலித்தன. அந்த சப்தா சத்தம் காதில் ஏறாமலும், சந்தன வாடையும், ஜவ்வாது வாடையும் மூக்கில் நுழையாமலும், அந்த கன்று அலறி அடித்து ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு தாவர மண்டியின் அடிவாரத்திலுள்ள மந்தையிலிருந்து, தன்னந் தனியாய் பிரிந்து தாவித்தாவி பாய்ந்து, பதினாறு வயது மனிதக் குட்டிகளாலும் ஓட முடியாத பாய்ச்சல் போட்ட அந்த மாட்டுக்குட்டியை, எங்கே போகிறாய் என்பதுபோல் மூங்கில்கள் வலிந்தும் வளைந்தும் கேட்டன. 'போகாதே' என்பதுபோல் கற்றாழை வழிமறித்துக் கேட்டது. ஆனாலும் அந்தக் கன்று, மூங்கில்களிலிருந்து விலகி, கற்றாழைகளைத் தாண்டி, காட்டுக் கொடிகளை அறுத்து கவணாய் நின்ற இரட்டை மர இடைவெளிகளில் புகுந்த முகத்தை விலக்கி, காட்டுப் பூக்களை மிதித்து, மரக் குவியலுக்குள் புகுந்து, தேக்குமரத் தொகுப்பிற்குள் திசைமாறி, செவ்வாழைகளின் அணிவகுப்பில் ஊடுருவி, குழம்படி இல்லாத அந்த அடர்காட்டிற்குள் தன்க்குத்தானே ஒரு பாதையை ஏற்படுத்திக் கொண்டு பேய்த்தனமாய் ஓடியது. இதன் அவலத்தை புரிந்ததுபோல், மரங்களில் சிறுத்தைகள் ஏறுகின்றனவா என்று கண்காணித்த குரங்குகள், இதை எச்சரித்துக் குரலிட்டன. தொலைவில் தெரியும் காட்டெருமைகள் மேலுதடுகளை விலக்கி தீப்பிழம்பு வாயில் வெள்ளொளியாய் பற்கள் தெரிய பார்க்கின்றன. ஆனால் இந்தக் கன்றோ...

ஒவ்வொரு மரமும் ஒரு முட்டுக்கட்டையாக, ஒவ்வொரு கொடியும் ஒரு மூக்கணாங்கயிராக, அத்தனை தடைகளையும் தாண்டித் தாண்டி ஓடியது. 'சிலம்பாடிய மரங்களையும், கிளை பின்னி, இலைவேய்ந்து அந்தக் பகுதியையே ஒரு வீடாக காட்டும் காட்டுச் சங்கமத்தில், மஞ்சள் வெயில் சிந்திய ஒளியையே வழியாக்கியபடி, பாசம், பயத்தைத் துரத்த, வேகம் கால்களைத் துரத்த விரைந்தது. அந்தச் சமயத்திலும், அதன் காலடி அதிர்வுகளால் வெளிக்கிளம்பும் பூச்சிப் புழுக்களைப் பிடிப்பதற்காக, இரண்டு காட்டுக் குருவிகள் அதன் முதுகில் அமர்ந்தன. வேறொரு சமயமாக இருந்தால், அந்துப் பறவைகளின் கால் உராய்வை, முதுகுச் சொறியலாக ரசிக்கக்கூடிய அந்தக் கன்று, இப்போது உடனடியாக நின்று, முகத்தைப் பின்திருப்பி, வாலை முன்திருப்பி அந்தக் குருவிகளைத் துரத்திவிட்டு, முன்கால்களும் பின்கால்களும் ஒரே காலானது போல் மீண்டும் தாவியது.

இந்தக் கன்று வழக்கம்போல், ஆல விழுதுகளே திரைச்சீலையான மலைப்பாறைக்கு அருகே ஒவ்வொரு மரமும் ஒரு தோப்பானது போன்ற பெருமரக் கூடாரத்தில், இதர கன்றுகளோடு கன்றாய் துள்ளித்தான் திரிந்தது. அவற்றைப் போலவே அம்மா வரும் திசையையே 'ம்..மா...ம்மா...' போட்டு பார்த்தது. கன்று சகாக்களின் கூட்டுக்குரலில் தன் குரலை சங்கமிக்கவிட்டது. ஆனாலும், மாலை வேளையில் அத்தனை மாடுகளும் திரும்பிவிட்டன. இதன் அம்மாவைத்தான் காணோம். கூடிநின்ற கன்றுகளும், அவற்றின் அம்மாக்களும், ஒன்றை ஒன்று தேடிப்பிடித்து ஒருமைப்பட்டபோது, இந்தக் கன்றுக்குட்டி அங்குமிங்குமாய் பார்த்தது. அத்தனை பசுக்களும், அகலக் கால் விரித்து தத்தம் கன்றுகளை, பால் பொங்கிய மடிகளை பற்றவிட்டன. ஆயிரங்கால் மண்டபம் போன்ற அவற்றின் காலடி வழியாக இந்தக் கன்று குனிந்து பார்த்தது. 'என் அம்மா எங்கே' என்பதுபோல் கத்திக் கேட்டது.

அந்த மாட்டுக்கூட்டமோ பாசப்பெருக்கை பால் பெருக்காய் காட்டி, 'குடும்பப்பாங்காய்' நின்றனவே தவிர, சமூகப் பாங்காய் நிற்கவில்லை. இப்படி இந்த சின்னம்மாக்களும், பெரியம்மாக்களும், 'பொதுவான' அப்பாக்களும் இதைக் கண்டுகொள்ளாதபோது, இந்தக் கன்று துள்ளிப் பாய்ந்தது. உச்சந்தலையில் ஒரு முத்தமிட்டு இளங்கொம்புகளின் இடைவெளியில் முகம் சாய்த்து 'எச்சரிக்கையாய் இரு' என்று எச்சரித்து சென்ற தாயைக் காணவில்லை. அம்மாவைப் பார்த்தாக வேண்டும். எங்கே நின்றாலும் சரி...

அந்தக் கன்றின் முகத்தில் மூங்கில் செதில்கள் ரத்தக் கசிவை ஏற்படுத்தின. நெறிஞ்சி முட்கள் காலைக் கவ்வின. ஆனாலும், இந்த நரகவேதனையை, பாசவேதனை விழுங்க, ஒவ்வொரு இடையூறிலும் ஒவ்வொரு விதமாய் வேகப்பட்டு, எப்படியோ அந்தக் காரிருள் காட்டில் இருந்து வெட்டவெளிக்கு வந்துவிட்டது. களையான புல்லே பயிரான வெளி... ஜோதிப் பாளங்கள் மாதிரியான காளான்கள். அசுர விசிறியான பனைமரங்கள். அவற்றைத் தழுவிய ஈச்சம்பனைகள். இவற்றின் இடுப்பில் வேரெடுத்து தோளைச்சுற்றிய ஓணான் செடிகள். தாவர மயிலான கல்வாழைகள். மற்றபடி பெருவெளி.

அந்தக் கன்று நின்றது. நிமிர்ந்தது. ஒரு கரிச்சான்குருவி ஒரு காகத்தை நெத்தியடி போல் "இறக்கை அடி" கொடுத்துக் கொண்டிருந்தது. மூங்கில் சிதறல்களும், பன்னாடைகளும் நிறைந்த கூட்டிலிருந்து ஒரு காகத்தை ஒரு ஆண்குயில் வம்புக்கு இழுத்து, ஆகாய வெளியில் போராடப் போவது போலவும், பயந்தது போலவும் பாசாங்காய் பறந்தபோது, அந்த மூடப் பறவை அதை நம்பி அதைத் துரத்தியபோது, பெண்குயில் ஒன்று அதன் கூட்டிற்குள் சென்று முட்டையிட்டது. ஆனாலும்

அந்தக் கன்று, இந்த அருகாமைக் காட்சிகளை பார்க்காமல் தொலைநோக்காய் பார்த்தது. பார்க்கப் பார்க்க அதன் பரபரப்பு பரவசமானது. அதோ அம்மா வருகிறாள். ஓடி வருகிறாள். ம்மா... ம்மா... இங்கே நிக்கேம்மா..

அந்தக் காட்டுக் கன்றுக்குட்டி, அம்மாவை நோக்கிப் பாய்ந்தது. இரண்டும், ஒன்றையொன்று அந்த வினாடியே பார்க்கவேண்டும் என்பதுபோல் துடியாய் துடித்து கால்கள் தரையில் பாவாமல் தாவ, எதிர் எதிராய் சந்தித்தன. புதிர் புதிராய் பார்த்தன. இரண்டுக்கும் ஏமாற்றம். தாய்க்கு அது பிள்ளையில்லை. பிள்ளைக்கு அது தாயில்லை.

அந்தக் காட்டுப் பசு, தூக்கி வைத்த முன்கால்களை தரையில் போட்டபடியே மீண்டும் ஓடியது. இந்த இடைவெளியில் அந்தக் கன்றுக்குட்டியும் யோசித்துப் பார்த்தது. அம்மா வருவாளோ மட்டாளோ... இந்த இரவை இந்த "சித்தியோடு" போக்கலாம். நாளைக் காலையில் அம்மாவை தேடலாம். ஒருவேளை இவளே, அம்மா இருக்கும் இடத்தைக் காட்டலாம்.

அந்த இளங்கன்று, மூச்சைப் பிடித்து, தத்தலும் தாவலுமாய் அந்த பசுவின் பின்னால் ஓடியது. வேகவேகமாய் ஓடி, பிறகு அதற்கு இணையாய் ஓடி, அதன் கழுத்தில் முகம் போடப் போனபோது -

அந்தப் பசுவோ, உடனடியாக நின்றது. இதை எரிச்சலோடு பார்த்தது. 'உன்னைக் கூட்டிப் போனால் என் குட்டி என்னாவது' சரியான மூதேவி... என் நம்பிக்கையை நாசமாக்கிட்டே....

அந்தக் காட்டுப் பசு, தன் கால்களுக்குள் அடைக்கலம் தேடிய அந்த கன்றை முட்டப்போனது. ஆனாலும் மனம் கேட்கவில்லை. தலைகீழாய் கவிழ்த்த முகத்தை நிமிர்த்தி, மீண்டும் ஓடியது. அந்தக் கன்றும் விடவில்லை. அதன் பின்னால் ஓடியது. இதுவும், பசுபோன திசையில் பாய்ந்தபோது, அது திசையை மாற்றியது. இது நெடுக்காய் ஓடும்போது அது குறுக்காகவும், குறுக்காய் ஓடும்போது, நெடுக்காகவும், "போக்குக்காட்டி" ஓடியது. நிற்கும்போது ஓடியும் ஓடும்போது நின்றும், அந்தக் கன்றிடம் கண்ணாமூச்சி காட்டியது. பயணிகள் கைகாட்டும்போது நிற்பதுபோல் பாவலா காட்டி அவர்கள் நிதானப்படும்போது 'காலன்' வேகத்தில் பாயுமே பல்லவன் பேருந்துகள்- அதைப் போலவே -

இந்தக் காட்டுப்பசுவும், இந்த அந்நியக் கன்றை பார்த்த ஏமாற்றமும், ஈன்றெடுத்தக் குட்டியைப் பார்க்கப் போகும் எதிர்பார்ப்பும், இரட்டை வேகமாக எங்கோ ஓடி, எங்கேயோ மறைந்தது,

இந்தக் கன்றுக்குட்டிக்கும் புரிந்துவிட்டது. அது புரியப் புரிய அதன் கால்கள் நடுங்கின. கண்கள் நனைந்தன. மூச்சு ஒலி எழுப்பி ஓலமிட்டது. அதன் உடம்பின் ஒவ்வொரு அணுவும் சக்தி விரயத்தால் துடித்தது. கொம்புகள் தலையை அழுத்தும் முட்கம்பிகளாயின. கால்களுக்கு உடம்பே பாரமானது.

குதிரையின் முன்பக்கச் சாயலும், கோதுமை நிறமும் செஞ்சிவப்புக் கால்களும் கொண்ட அந்த சின்னஞ்சிறு கன்று, பொன்வண்டு ஒன்று இறக்கைகளை கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாய் பெருவடிவம் பெற்றது போன்ற நேர்த்தி கொண்ட அந்தப் பொன்குட்டி, இப்போது தன்னைத்தானே வீழ்த்திக் கொண்டு தரையில் சாய்ந்தது. பூஜ்யம் போல் பொருள்மிக்க அந்தக் காட்டுச் சூன்யத்தில் கண்களை மூடிக் கொண்டு, திக்கிழந்து, திசையிழந்து செயலிழந்து கிடந்தது. என்ன ஆனாலும் ஆகட்டும் என்ற விரக்தி. ஏகாந்தத்தின் எதிர்உணர்வு. எது வந்தும் அடித்துத் தின்னலாம் என்று விடுத்த மரண அழைப்பு; அறைகூவல்; வாழ்வு கசந்த கசப்பில், மரணம் இனித்தே தீரும் என்ற எண்ணமோ

என்னமோ... உடம்பில் மொய்த்த கொசுக்களை வாலால் அடித்துத் துரத்தவில்லை. எறும்பு மொய்த்த விலாவை இம்மிகூட நகர்த்தவில்லை. வாழ்வு-சாவு எல்லைக்கோடுகள் அழிந்து போன மரணப் பரப்பில் முடங்கியது.

திடீரென்று ஊனை உருக்கும் சத்தம்... லொள்... லொள்... ஒன்றே பலவாய்.. பலவே ஒன்றாய் ஒலித்த ஆங்கார ஒலித் திரள்...

அந்தக் காட்டுக்கன்று மிரளாமலே தலை புரட்டிப் பார்த்தது. அப்படிப் பார்க்கப் பார்க்க தலையே துண்டிக்கப் பட்டது போன்ற 'முண்டத்தனம்'... சிறிது தொலைவில் கட்டிழந்து ஓடிய காட்டாற்றின் அருகே, பெருத்த உடம்பும் சிறுத்த இலைகளும் கொண்ட வாகைமரத்தின் அடிவாரத்தில், அதன் அம்மாவின் தலையை மட்டும் அடையாளம் காணமுடிகிறது. அதன் எஞ்சிய உடம்பு ரத்தம் விரவப்பட்ட சதைக்கூழாய் தெரிந்தது. பதினைந்து, இருபது காட்டு நாய்கள்-அம்மாவின் இடுப்பளவு உயரம் கூட இல்லா அற்ப ஜீவிகள்-அவளை சதைசதையாய் எலும்பு எலும்பாய் தின்று கொண்டிருக்கின்றன. அங்கே ஒரு பெரிய போராட்டமே நடந்திருக்க வேண்டும். இரண்டு நாய்கள் கீழே விழுந்து குடல் சரியக் கிடக்கின்றன. கழுகுகளும், நாரைகளும், எச்சில் மாமிசத்திற்காக பயபக்தியோடு காத்து நிற்கின்றன.

அந்தக் கன்றுக்குட்டியால் தாளமுடியவில்லை. புருவ மத்தியில் குங்குமம் வைத்தது போன்ற வட்டப் பொட்டும், பச்சை குத்தியது போல் பிடரிப் பசுமையும், மரகதக் கல் மாதிரியான மோவாயும் கொண்ட அம்மாவைப் பார்க்கப் பார்க்க அதன் பார்வை நீரில் மிதந்தது. காட்டுப் புலிகள் வரும்போதுகூட, இதர மாட்டுக் கூட்டத்தோடு நின்று, தன்னையும் வயிற்றுக்குள் அடைக்கலமாக்கிக் கொண்டு, அந்தப் புலிப் பகைக்கு எதிர்ப்பகையாய் கொம்பு சாய்த்து சவாலிட்ட தாய், இப்போது குப்புறக் கிடக்கிறாள். என்ன செய்யலாம் இந்த ரவுடிகளை?

அந்தக் கன்று நாய்க் கூட்டத்தை முட்டப் போவது போல் போகப் பார்த்தது. முடியவில்லை. பிஞ்சுக் கொம்புகளால் தரையைத் துழாவியது. கீழே போன தலையை மேலே நிமிர்த்த முடியாத

தளர்ச்சி. அதே சமயம் அம்மாவை சித்ரவதை செய்து கொன்ற அந்தக் கொடியவர்களை கொல்ல வேண்டுமென்ற வேகம். பழிக்குப் பழி வாங்க நினைக்கும் பார்வை. அப்போது

அந்தக் காட்டுக்கே மதம் பிடித்தது போன்ற சத்தம் அருகிலேயே போர்ப்பரணி மாதிரியான பெருஞ்சத்தம். யானைகளின் பிளிறல்... அந்த கஜராஜாக்களின் குட்டி ஒன்றை ஏதாவது ஒரு புலியோ அல்லது சிறுத்தையோ திருட்டுத்தனமாக கொன்றிருக்க வேண்டும் அல்லது குற்றுயிரும் கொலையுயிருமாய் ஆக்கியிருக்க வேண்டும். குட்டியை பறிகொடுத்த தாய் யானையுடன், இப்போது அத்தனை யானைக்கூட்டமும் சேர்ந்து போர்ப் பிரகடனம் செய்தன. 'எங்கே இருக்கிறாய் பகையே? இங்கே வா பேடியே...";

அந்த பிளிறலால் காட்டுநாய்க் கூட்டம் நெல்லிக்காய் குவியலாய் சிதறுகின்றன. உயிர் பிழைத்தால் போதும் என்பதுபோல் ஓடின. அதே சமயம் -

இரண்டு நாய்கள் இந்தக் குட்டியின் பக்கம் எதேச்சையாய் வருகின்றன. எதிர்பாராத உணவைப் பார்த்த மகிழ்ச்சியில் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்கின்றன. பிறகு இரண்டும் சேர்ந்து இந்தக் குட்டியை ருசியோடு பார்க்கின்றன. எந்தக் குறைப்பும் இல்லாமல் அழுத்தம் திருத்தமாய் கால்களை நகர்த்துகின்றன.

அந்தக் கன்றுக்குட்டி வீறாப்பாய் நிற்கிறது. அதே சமயம், ஒரு சிந்தனை மாற்றம். இந்தக் கொடுங்கோலர்களிடம் சிக்கினால் ஒரேயடியாய் கொல்லாமல், சிறுகச் சிறுகச் கொன்று சித்திரவதை செய்வார்கள். அம்மாவைக் கொன்ற இவற்றின் வாயில் விழக்கூடாது. இவற்றிற்கு இரையாகி அவற்றை மேலும் சந்தோஷமாக்கக் கூடாது. கடவுளா... கடவுளே... இந்த உயிர்க் கொல்லிகளுக்கு என்னால் எமனாக முடியலியே... முடியலியே.

அந்தக் கன்று, உடல்வாதையும், உயிர்வாதையும் ஒருசேர, அவற்றையே வேகமாக்கி, ஒரே துள்ளாய் துள்ளி, சிறிது தொலைவில் உள்ள பாறைக்குவியல் பக்கம் விழுகிறது. இப்போது

கொலையாய் குறைக்கும் நாய்களை சினந்து பார்க்கிறது. அப்புறம் அந்தப் பாறைக் குவியல்களின் எல்லை விளிம்பில் மெல்ல நடந்து ஒரு புதர்ப் பக்கம் போகிறது. சத்தம் கேட்டு நிமிர்கிறது. மேலே புன்னை மரங்களில் அமர்ந்த மயில்கள் அந்தப் பக்கம் போகாதே என்பதுபோல் குரலிடுகின்றன. 'ஓடிப்போ ஓடிப்போ' என்பது போல் சிறகடித்து மாரடிக்கின்றன. பிறகு, சில காட்டுப் பூனைகள் தங்களுக்கே உலை வைக்க மரமேறுவதைப் பார்த்துவிட்டு, ஒரே பாய்ச்சலாய் பறந்து பாறைக் குவியலின் மேல் அமர்ந்து, அந்தக் குட்டியை மீண்டும் எச்சரிக்கின்றன.

அந்தக் கன்றுக்குட்டிக்கும் ஏதோ புரிந்துவிட்டது. அதைக் காட்டுவது போல் மோவாயை முன்னும் பின்னும் ஆட்டியது. ஆனாலும், உயிர்ப் பயம் அற்றுப் போய், தட்டுத் தடுமாறி அந்தப் புதர்ப்பக்கம் போய் விட்டது. குகைச் சுவரான மரக்கிளைகள். பின்னப்பட்டது போன்ற மூங்கில் இடுக்குகள். வேலி போன்ற காட்டுச் செடி. அவற்றின் இடையே உள்ள இடைவெளியை நிரப்பும் வரிக்கோடுகள்... அங்குமிங்குமாய் அசையும் கோடுகள். முள்போல் காட்டும் நகங்கள்.

அந்தக் கன்றுக்குட்டி நிர்ப்பயமாய், நிர்க்குணமாய், அந்தப் புலியின் அருகே போய் விழுகிறது. பதுங்காமல், படுத்துக் கிடக்கும் அந்தப் புலியோ அந்தக் குட்டியைப் பார்த்ததும் பார்க்காதது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டது. ஐந்தாறு நாட்களுக்கு முன்பு உருமிய புலிதான் இது. தன்னை விட பலமடங்கு பெரிய காட்டெருமை கூட்டங்களில் ஊடுருவி அவற்றில் ஒன்றே ஒன்றை நேருக்கு நேராய் சாய்க்கும் பழக்கம் கொண்ட புலிதான்... ஒரு கஜராஜாவைக் கூட சேதப்படுத்திய காட்டுராஜாதான். ஆனாலும், இப்போது அது பசிப்பிணியாலும் பாசப்பிணியாலும் தவித்தது. ஒரு வாரத்திற்கு முன்பு, இந்தப் புலி தனது குட்டியோடு திரிந்தபோது, காட்டு நாய்க்கூட்டம், இதை வளைத்துக் கொண்டன. வட்ட வியூகத்திற்குள் இதை ஒரு மையப் புள்ளியாக்கி, இரண்டு நாள் பட்டினி போட்டன. பிறகு அந்த நாய் வட்டம், வியூகத்தை நெருக்கி நெருக்கி, தளர்ச்சியான இந்தப் புலியை தாக்கப் போனது.

ஆனால் இந்தப் புலி நான்கைந்து நாய்களைக் கொன்றுவிட்டு, அந்த வட்டத்தில் இருந்து மீண்டது. குட்டியை அணைத்துக் கொண்டுதான் பாய்ந்தது. என்றாலும் அம்மாவைப்போல் வெளியேறும் அர்ஜுன வியூகம் தெரியாத, அந்த அபிமன்யு புலி அந்த நாய்களின் வாய்களுக்கு மாமிசமானது.

அந்தப் புலியால் இப்போது நினைக்கவும் முடியவில்லை. நினைக்காமலும் இருக்க முடியவில்லை. கேவலம், ஒரு உருமலுக்கு பொறுக்காத காட்டுப் பொறுக்கிகளிடம் மானமிழந்ததை அதனால் தாங்கமுடியவில்லை. குட்டியைக் காக்க முடியாமல் பேடியாய் ஓடிவந்த அவமானம். ஆகையால் இரைதேடப் போகாமல், அல்லாடிக் கிடந்தது. தன்னம்பிக்கை அற்று தவித்துக் கிடந்தது.

சும்மாவே கிடக்கும் அந்தப் புலியை, அந்தக் கன்றுகுட்டி ஆச்சரியமாய் பார்த்தது. 'இந்தப் புலியைப் பாருங்கள்' என்பது மாதிரி கண்ணில் படும் சைவ மிருகங்களிடம் சுட்டிக்காட்டப் போவது போல் அது எதிர் திசையைப் பார்த்த ஒரு நிமிடத்தில் மிரண்டது. பிறகு அந்தத் திசையை கனன்று பார்த்தது. எதிர்த் திசையில் அதே இரண்டு காட்டு நாய்கள் குத்துக்காலிட்டு உட்கார்ந்துள்ளன நாக்குகள் வாய்களுக்கும் காலிருப்பதுபோல் தொங்குகின்றன.

அந்தக் கன்றுகுட்டிக்கு மீண்டும் ஆத்திரம்.

அந்தப் புலியைக் கேள்வியோடு பார்த்தது. ஆனாலும் அந்த கிழட்டு ராஜா சும்மா இருப்பதைப் பார்த்து விட்டு, யதேச்சையாகவோ அல்லது ஏதோ ஒரு தற்கொலை அல்லது தாக்குதல் உணர்விலோ, அந்தப் புலியின் அருகே நெருக்கியடித்து சென்றது. அதன் வாயில் முகம்படும்படி புரண்டது. இழப்புக் குள்ளான மனிதருக்கு உணவை வாயில் ஊட்டினால், அவர் இறுதியில் எப்படி அதை உண்பாரோ, அப்படி அந்தப் புலியும் மாறியது. அந்தக் கன்றுக்குட்டியின் ரத்தக்கசிவு வாயில் பட்டதால் பசிப்பிணி, பாசப் பிணியை துரத்திவிட்டது. உடனே, அந்தக் கன்றின் கழுத்தை கவ்வி அதற்கு உயிர் விடுதலை கொடுத்தது. பின்னர், அதை அவசர அவசரமாக தின்று கொண்டிருந்தது.

அந்த நாய்கள் இப்போது எச்சில் சதைக்காக காத்து நின்றன. இரை தின்னும் புலி, தங்களைத் தாக்காது என்ற அனுமானத்துடன் நெருங்கி வந்தன. அந்தப் புலியும் அவற்றைப் பார்த்து விடுகிறது. பெற்று வளர்த்த குட்டியைக் கொன்ற அந்தக் காட்டுநாய் பிரதிநிதிகளை காணக் காண, அதன் கண்கள் கொதித்தன. கன்றுக்குட்டியின் ரத்தம் வேறு அதற்கு ஒருவித சாராய போதையைக் கொடுத்து பாச உணர்வையும், பழி உணர்வையும், கொலை உணர்வாய் ஆக்கியது. ஏற்கனவே அந்த நாய்களின் வயிறுகளை, தனதுச் செல்லக் குட்டியின் சுடுகாடாய் பார்த்த அந்த தாய்ப்புலிக்கு கூடுதல் ஆவேசம்...

அவ்வளவுதான்.

அந்தப் புலி, ஒரே தாவாய் தாவி ஒரு நாயின் வயிற்றைக் கால்களால் கிழிக்கிறது. இன்னொன்றை வாயால் கவ்வி கழுத்தைத் துண்டிக்கிறது. பின்னர், அந்த மாமிசப் பிண்டங்களின் மீது ஏறி நிற்கிறது. தக்காரும், மிக்காரும் இல்லாதது போலவும், தானே தானாய், தான் ஒரு தானாய், அந்தக் காட்டையே ஆளுவது போல கர்வப்படுகிறது.

அந்தக் கர்வத்தைக் காட்டுவதுபோல், உருமிக் காட்டுகிறது. ஆனாலும் அந்த உருமல் சத்தம் அதன் வயிற்றுக்குள் பூஜ்ஜியமாய் போன அந்தக் கன்றுக்குட்டி சிரிப்பது போல் ஒலிக்கிறது.

இந்தியா டுடே

இலக்கிய ஆண்டு மலர் 1995

○

# நீரு பூத்த நெருப்பு

ராமநாதன் சாஸ்திரிக்காக, பால்கனியிலும் படியோரத்திலும், மொட்டை மாடியிலும் ஒவ்வொருவராகவும், இருவருமாகவும் காத்துக் காத்து கண்கள் பூத்ததுபோல், ஆண்டவனும், அகிலாவும் சலிப்போடு வீட்டிற்குள் வந்து, கதவைச் சாத்தினார்கள்.

கால்மணி நேரத்தில் காலிங் பெல்லிற்குப் பதிலாக கதவு தட்டப்பட்டது. திறந்து பார்த்தால், ராமநாத சாஸ்திரியே... நடன நிகழ்ச்சிக்குத் தயாரானவர்போல், பின்புறம் வேட்டியைத் தார்பாய்த்து, முன்புறம் விசிறிபோல் சுங்கு விட்டு - அதாவது மடிப்பிட்டு, பூணூலைப் பாதி மறைத்து, மீதியைக் காட்டும் துண்டும், முன்வழுக்கையும், பின்குடுமியுமாய் காட்சியளித்தார். அவரைப் பார்த்ததும், தம்பதியர் பரவசப்பட்டார்கள். பக்கத்து மெயின்ரோட்டில் உள்ள ஏழைப் பிள்ளையாரின் அர்ச்சகர். 'சுபிட்சமாய் இருப்பீங்கோ... ஓஹோன்னு வாழ்வீங்கோ...' என்று பக்தர்களை உற்சாகப்படுத்துகிறவர். அதேசமயம், யாராவது இடக்கு மடக்காகக் கேட்டால், 'இந்த வேலையெல்லாம் நம்மகிட்ட வச்சுக்காதீங்கோ... எனக்கு குஸ்தியும் தெரியும்...' என்று சவால் பாணியில் சொல்கிற மனிதர். தட்டில் விழும் ஒரு பைசாவைக்கூட வீட்டிற்குக் கொண்டு போகாதவர். எவர் வீட்டிற்கும் போகாத அப்பேர்பட்டவர், வாக்களித்ததுபோல் வந்ததில், கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் மகிழ்ச்சியோடு பார்த்துக்கொண்டு, பிறகு சாஸ்திரியை போட்டி போட்டு உபசரித்தனர்.

“வாங்க சாமி!, நீங்க எங்கே வரமாட்டீங்களோன்னு பயந்து போயிட்டோம்.”

“ஆமாம் சாஸ்திரி ஸார். நீங்க வரமாட்டீங்கன்னு நினைத்து ஆபீஸ் போறதுக்கு ஆயத்தம் ஆனேன். அதுக்குள்ள வந்துட்டீங்க...”

ராமநாத சாஸ்திரி, ஒரு கணம் துர்வாசரானார். மறு கணம் விசுவாமித்திரர்போல், அவர்களை, வயிறு எக்கிப் பார்த்தார். அடுத்த கணம் வசிட்டரானார். பின்னர், இந்த மும்முனிகளாலும் ஆட்கொண்டவர்போல், ஆண்டவ-அகிலா தம்பதியை ஆட்டிப்படைத்து பேசுவதுபோல் பேசினார்.

"இதுக்குத்தான் நான் எவர் வீட்டுக்கும் வரமாட்டேங்கிறது. ஒரு சொல்லு சொன்னால், அந்த சொல்லுலயே நிற்கிறவன் நான். இல்லாட்டி சொல்லமாட்டேன். நீங்க சொல்றதைப் பார்த்து, அழுவுறதா, சிரிக்கிறதான்னு நேக்கு புரியல..."

ஆண்டவனும் அகிலாவும், மீண்டும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். சாஸ்திரியை யார் சிரிக்க வைப்பது, என்று அந்தக் கண்கள் பேசிக்கொண்டன. அகிலா, முந்திக் கொண்டாள்.

"உட்காருங்க சாமி... மோரா... ரசனாவா...."

"ரெண்டும் வேண்டாம். மொதல்ல வந்த காரியத்தைப் பார்ப்போம்."

"அதுல உட்காருங்க சாஸ்திரி ஸார்."

ராமநாத சாஸ்திரி, ஆண்டவன், சுட்டிக்காட்டிய ஒற்றைச் சோபா இருக்கையில் உட்காராமல், அந்த வீட்டின் பளிங்குத் தரையில், இரண்டுக் கால்களையும் விரித்துப்போட்டு, இரண்டு கரங்களையும் முதுகிற்குப் பின்னால் முட்டுக்கொடுத்து, உட்கார்ந்தார். மேலே எகிறிய மின்விசிறியில், அவரது நடுத்தலை முடி, முன்தலை பொட்டல் மேட்டில், கதிரடிப்பதுபோல், சாய்ந்து சாய்ந்து மோதியது. அந்தம்மா, பதறிப் போனாள்.

"என்ன சாமி நீங்க... சோபாவுல... உட்காருங்கோ.."

"என் வசதிப்படி, என்னை விட்டுடுங்கோ... நேக்கு இதுதான் வசதி. இந்த வேனா வெயிலுல நடந்த களைப்புல, இப்படி காலு கைய விரித்துப்போட்டு, ஒடம்பை நனைத்த வேர்வைய மின்விசிறி, துளித்துளியாய் ஆவியாக்கிறதுல இருக்கிற சுகமே தனி. உங்க

வீடு என்கிறதுனால, இப்படி உரிமையோடு எசகு பிசகாய் உட்காருறேன். பிறத்தியார் வீட்டுல, அது பிராமணாள் வீடா இருந்தாலும், ஆசாரமாத்தான் உட்காருவேன். ஏன் நிக்கிறேள்? நீங்க பாட்டுக்கு சோபாவுல உட்காருங்கோ. மரியாதையும் அன்பும் மனசுலதான் இருக்கணும். இந்த ஏழைப் பிராமணன் மேல, அந்த ரெண்டும் உங்ககிட்ட இருக்குன்னு நேக்குத் தெரியும்"

உச்சி குளிர்ந்த ஆண்டவன், சாஸ்திரி சாருக்கு முன்னால் தரையிலேயே உட்கார்ந்தார். இதற்கு மரியாதை மட்டும் காரணமில்லை. அந்த வேனலில், சோபா இருக்கையின் இலவம் பஞ்சு சூட்டைவிட, அந்தப் பளிங்குத்தரை கிளுகிளுப்பாக இருக்கும் என்பது அவருக்கு தெரியும். இந்தச் சமயத்தில், அந்தம்மா ஒரு வெள்ளி டம்ளரில் மோர் கொண்டு வந்தாள். அதை, சாஸ்திரி கைநீட்டி, வாங்கப் போனபோது, அதைக் கொடுக்க மறந்தவளாய், கணவனைப் பார்த்து செல்லக் கத்தினாள்.

"ஏங்க! உங்களுக்கு 'சென்ஸ் ஆப் டிசிபிலின்' இருக்குதா? பாருங்க சாமி... அரைமணி நேரத்துக்கு முன்னால 'டயனால்' போட்டுட்டு, இந்நேரம் கேப்பைக்கூழ் குடிச்சிருக்கணும். நீரழிவு நோய் இருக்கிறதே இவருக்கு மறந்து போகுது. சாமீ"

"இந்தம்மா மட்டும் என்னவாம்... 'பிளட் பிரஷருக்கு' இந்நேரம் மாத்திரை சாப்பிட்டிருக்கணும். என்னை கவனிக்கிறதுலயயே, தன்னை கவனிக்க மாட்டக்காள்... காந்தாரி கண்ணை கட்டிக்கிட்டது மாதிரி, நான் மருந்து சாப்பிட்டால்தான், இந்தம்மா சாப்பிடுவாளாம். ஆபீஸுக்குப் போன்போட்டு, என்னோட உதவியாளர்கிட்ட, நான், சாப்பிட்டேனான்னு கன்பார்ம் செய்த பிறகுதான், இந்தம்மா சாப்பிடுவாங்க."

"இவர் மட்டும் என்னவாம் சாமி... காபி கொண்டு வந்து, முகத்துக்கு 'ஆவி' பிடிக்கிறது மாதிரி, எதிரே நீட்டிக்கிட்டே என்னை எழுப்புவார்."

அறுபத்தைந்தைத் தாண்டிய சாஸ்திரி, ஐம்பதைத் தாண்டாத அந்தத் தம்பதியரை நோக்கி, ஆசீர்வாதப் பார்வையில் பேசினார்.

'ஸ்ரீராமனுக்குச் சீதை, நளனுக்குத் தமயந்தி, சிவனுக்கு சக்தி, இந்த மானுட ஆண்டவனுக்கு, இந்த அகிலாம்மா.'

உடல் நேர்த்தியாலும், 'புது' நிறத்தாலும், உயரத்தாலும், அகலத்தாலும் ஒன்றுபட்டுத் தோன்றும், அந்த ஜோடியை, ஒரு தந்தைக்குரிய நிலையில், கண்களால் அள்ளிப் பருகிய சாஸ்திரி, அப்படிப் பருகியதை, வாய் வழியாய் அன்புப் பிரவாகமாய் வெளிப்படுத்தினார்.

"நான் உங்களுக்கு எப்பவும் சொல்றதை, இப்பவும் சொல்றேன். நீங்க தீர்க்காயுசா இருப்பேள். ரத்தக் கொதிப்போ... நீரழிவோ... இஸ்கிமாவோ... அல்சரோ... உங்களை ஒன்றும் செய்யாது. எல்லாம் நம்ம பிள்ளையார் பார்த்துக்குவார். சரி... ஜாதகங்களை எடுத்துட்டு வாரேளா?..."

"ஒரு சிறு விண்ணப்பம் சாமி. பிள்ளையார் பார்த்துக்குவார்தான். அப்படி அவர் பார்த்துக்கிறதுக்கு, நாமும் தகுதியாய் இருக்கணுமே. இவருக்கு கேழ்வரகு கஞ்சி காய்ச்சி,, நல்லா ஆறிட்டுது. ஒரு மூணு கிளாஸ் போட்டுட்டு வந்துட்டார்னா... அப்புறம் ஆற அமரப் பார்க்கலாம். தயவுசெய்து, கொஞ்சம் நேரம்... நீரழிவு நோய்க்கு நாம ஒத்துழைப்பு கொடுத்தால்தான், அது நமக்கு ஒத்துழைப்பு கொடுக்குமுன்னு, டாக்டர் சொல்றார்."

ராமநாத சாஸ்திரிக்கு, கோபமான கோபம். அந்தம்மா, பிள்ளையாரை விட, டாக்டரை உசத்தியாய் நினைக்கிற கோபம். தன் வீட்டிலும் காத்திருக்கும் கேப்பைக்கூழ், இந்நேரம் கட்டியாகி இருக்குமே என்ற பசிக்கோபம். விசுவாமித்திரர்போல் கட்டாகவும், துர்வாசர்போல் ரைட்டாகவும் பேசப்போனார். அதற்குள், அந்தம்மா ஓடிப்போய், கணவருக்கு கேழ்வரகுக் கஞ்சி கொண்டு வந்த கையோடு, இன்னொரு கையில் ஒரு தட்டு நிறைய நாகப்பழங்களைக் கொண்டுவந்து, சாமியின் வயிற்றுக்கு எதிர்ப்பக்கம் வைத்தபடியே, 'சாப்பிடுங்க சாமி... பசியும் அடங்கும். நீரழிவுக்கும் நல்லது.' என்று ஆகார ஆற்றுப்படுத்தல் செய்தாள்.

சாஸ்திரியின் கடுகடுப்பு, புன்னகையானது. அந்தச் சமயத்தில், வேண்டாவெறுப்பாய் கேழ்வரகுக் கஞ்சியை குடித்தபடியே, அதன் துகள்கள் உடம்பெங்கும் சிந்தும்படி, ஆண்டவன், சாஸ்திரி சாரிடம் முறையிட்டார்.

"எப்போ பார்த்தாலும், விரதம்... விரதமுன்னு உடம்பை நோகடிக்காள் சாஸ்திரி ஸார். இவள் விரதத்தால, எனக்கு சாப்பிட மனசே போகமாட்டேக்கு. நீங்களாவது புத்தி சொல்லுங்க.."

"இந்தா பாருங்கம்மா! 'உடலார் அழிந்தால்... உயிரார் அழிவர். ஊனுடம்பு ஆலயம்... உள்ளம் திருக்கோயில்.' இப்படி நான் சொல்லல. திருமூலர் சொல்லியிருக்கார். உங்களுக்கோ ரத்தக் கொதிப்போடு, அல்சரும் இருக்கு. அதுக்கு விரதம் ஒத்துக்காது. காலையிலும் மாலையிலும் பிள்ளையாரை மானசீகமாய் நினைத்து, தலையில மூணு குட்டு குட்டிக்கங்கோ. அது எல்லா விரதங்களையும்விட மேலானது."

"ஒங்க உத்தரவு சாமி."

கேழ்வரகுக்கூழ், பாத்திரத்தின் அடிவாரத்தைக் காட்டியபோது, நாகப்பழங்களை சாஸ்திரி, கொட்டைகளாக்கிய போது, சமையலறைக்குச் சென்று, ஒரு குலை திராட்சைப் பழங்களைத் தின்றுவிட்டு, உள்ளறையில் போய் ஒரு காகிதக் கத்தைகளை எடுத்துக்கொண்டு, சாஸ்திரி முன்னால் உட்கார்ந்த கணவனுக்கு அருகே உட்கார்ந்தபடியே, அகிலா, ஒருபாடு அழாமல் அழுது தீர்த்தாள்.

"எங்கப் பையனுக்கு பெண் 'தேவை'ன்னு, இவரை பத்திரிகையில விளம்பரம் போடச் சொன்னேன். நானே எழுதிக் கொடுத்தேன். ஆனா, இவரு என் எழுத்துல குளறுபடி பண்ணிட்டடார்... சாதிப்பேரை முதல்ல போடாமல், சம்பள வகையறாக்களைப் போட்டார். பொதுவா, பெண்ணோ, பிள்ளையோ வச்சிருக்கவங்க, பத்திரிகை விளம்பரத்துல, முதல்ல சாதிப்பேர் இருக்குதான்னுதான் பார்ப்பாங்களாம். அதுக்குமேல பார்க்க மாட்டாங்களாம். இதனால பத்தே பத்து ஜாதகம் மட்டும்தான் வந்தது சாமி..."

"ஆனா, ஒங்க கையில நிறைய இருக்குதே."

"அதை ஏன் கேட்கிறீங்க சாஸ்திரி ஸார்? இந்தக் கல்யாணப் புரோக்கருங்க, அடிக்கிற கூத்திருக்கே... பெருங்கூத்து... இவங்க ஆபீஸ்ல, ஆயிரம் ரூபாய் கட்டணும். அவங்களே விளம்பரம் போடுவாங்க. அவங்ககிட்ட விளம்பரத்தை நம்பி வருகிற, இருபது பேர்கிட்ட, தலைக்கு ஆயிரம் ஆயிரமாய் கரந்துடுவாங்க. லாரி புரோக்கரை நம்பலாம்... வீட்டு புரோக்கரை நம்பலாம்... ஆனால், இந்த கல்யாண புரோக்கர்களை மட்டும் நம்பக்கூடாது. கல்யாணம் நடத்துறது நாம். இவங்க இடையில புகுந்து, வரதட்சணைக்கு மேல பணம் அடிக்கிறாங்க. விளம்பரத்துல ஜாதகம் குறையா வந்ததுனால, நாங்களும் ஒரு புரோக்கர்கிட்ட ஆயிரம் ரூபாய் அழுது, எங்களுக்கு தேவையான ரெண்டு ஜாதகத்தை எடுத்து வந்தோம்."

"அவங்களும் பிழைக்க வேண்டாமோ? நான்தான் அசடு. ஆனால், அந்த அசட்டுத் தனத்திலயும் ஒரு சுகம். சரி... ஜாதகத்தை நீட்டுங்கோ. வீட்டுக்குள்ள கொண்டுபோன மோர் டம்ளரையும் எடுத்தாங்கோ."

"அய்யய்யோ... நானும் அசடு சாமி. கொண்டு வந்ததை கொண்டு போயிட்டேன் பாருங்க. ஏங்க... உங்களைத்தான், சாப்பிட்ட பிறகு, மாத்திரைங்கள போட்டுக்கணுமே. ஏன் போடல?"

"நீதானே எனக்குத் தருவே."

"இவர் சரியானக் குழந்தை. ஒரே ஒரு நிமிடம் பொறுங்க சாமி..."

சாஸ்திரி, பல்லைக் கடித்தபோது, நிதானமாய் உள்ளறைக்குள் நடந்து, ஒரு பாலித்தீன் பையை உப்பவைத்த மாத்திரைகளை கணவரிடம் நீட்டிவிட்டு, அதே நடைவேகத்தில், சமையலறைக்குப்போய், வெண்ணெய்யாய் திரண்ட மோர் டம்ளரை, சாஸ்திரியிடம் நீட்டினாள். சாஸ்திரியும், அந்த மோரை பார்க்காமலேயே குடித்துவிட்டு, உதட்டில் ஒட்டிய வெண்ணைய் திரட்சியை, துடைத்தபடியே, "சரி. பார்ப்போமா..." என்றார்.

அகிலா, தயாராய் வைத்திருந்த அந்தக் காகிதக் கத்தைகளை, தர வாரியாகப் பிரித்தாள். பெரிய படிப்பும், பெரிய இடமும் முதலிடம்... இதைப்போல், டி.டி.பி.யில் எடுத்த காகிதங்கள், சுமாராக இருந்தாலும் இரண்டாவது இடம்... பெரிய இடமாக இருந்தாலும், பேனாவால் எழுதப்பட்ட காகிதங்களுக்கு கடைசி இடம். 'எழுதுகிறதுக்கே கஞ்சத்தனம் பிடிக்கிறவங்க, மாப்பிள்ளைக்கு என்னத்த செய்யப் போறாங்க'.

கண்ணில் ஒற்றிக் கொள்ளும்படியாக இருந்த ஒரு காகிதத்தை எடுத்த சாஸ்திரி, அதற்குக்குரிய பெண்ணின் ஜாதகத்தை உற்றுப் பார்த்தார். ஆண்டவன்-அகிலா மகனின் ஜாதகம், அவருக்கு அத்துபடி என்பதால், அதை ஒப்புக்குப் பார்த்தார். பிறகு, 'இது ஒத்துவராது' என்றார். ஆண்டவன், மன்றாடுவதுபோல் விவரம் கூறினார்.

"பெரிய இடம் சாஸ்திரி ஸார். கார் இருக்குது, பங்களா இருக்குது... நூறு பவுன் நகை போடுறதா சொல்லியிருக்காங்க... வாரிசு இல்லாத குடும்பம் வேற..."

"இந்தாப் பாருங்கோ மிஸ்டர் ஆண்டவன்! உங்க விருப்பத்துக்கு நான் பார்க்க முடியாது. ஜாதகம் என்ன சொல்லுதோ, அதைத்தான் சொல்ல முடியும். இல்லாட்டி, வேற ஆளை பார்த்துக்கங்கோ."

"இவரு தப்பா பேசிட்டார். ஆர்வக் கோளாறுதான் காரணம். மன்னிச்சிடுங்க சாமி."

"ஆர்வம் இருக்கணும். ஆனால், கோளாறு இருக்கப்படாது. இந்தப் பொண்ணு பெரிய இடமாய் இருக்கலாம். ஆனாலும், இது திருவாதி நட்சத்திரம். இதற்கான மிருகம் நாய். ஒங்க பையனோட நட்சத்திரம் கேட்டை. இதற்கு உரிய மிருகம் மான். நாயும் மானும் பகை மிருகங்கள். அப்புறம் ஒங்க இஷ்டம்."

அகிலாவின் ஏமாற்றம், முகத்தில் வேர்வைத் துளிகளாக வெளிப்பட்டன. ஆனாலும், இந்தப் பிள்ளையார் குருக்கள் சொல்லைத் தட்டமுடியாது. இவர் சொன்னால், சொன்னபடி நடக்கும்.

ராமநாத சாஸ்திரி, அந்தக் காகிதக் கத்தைகளை, ஒவ்வொன்றாகப் பார்த்தார். நான்கைந்து ஜாதங்களை கழித்துக் கட்டிவிட்டு, இன்னொன்றை எடுத்துப் பார்த்தார். அதிக நேரமாய் பார்த்துக்கொண்டே இருந்தார். அகிலா-ஆண்டவன் முகங்களில், 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே...' அதனை நிதானமான வார்த்தைகளாக ஆண்டவன் வெளிப்படுத்தினார்.

"இந்த ஜாதகம் நல்லா இருக்குதோ சாஸ்திரி ஸார். நல்லாத்தான் இருக்கும்."

"நல்ல ஜாதகந்தான். ஒங்க பையனும், இந்தப் பொண்ணும் நகமும் சதையும் மாதிரி நன்னா இருப்பாள். ஆனாலும், ஒங்க வீட்டுக்கு ஆகாது."

"அவங்க நல்லா இருந்தா போதாதா சாமி? அதுக்குமேல என்ன வேணும்?"

"ஏடாகோடமாய் பேசாதம்மா... எழுந்து போய்க்கிட்டே இருப்பேன். இது ஆயில்ய நட்சத்திரம். இந்தப் பொண்ணு ஒங்க வீட்டுக்குள்ள நுழைஞ்ச உடனேயே, நீங்க ரெண்டு பேரோ, அல்லது ரெண்டுல ஒருத்தரோ மண்டைய போட்டுடுவேள். சம்மதமா?"

சம்மதமில்லை என்பதுபோல், தம்பதியர், சிரித்து மழுப்பியபோது, சாஸ்திரி, ஒவ்வொரு காகிதத்தையும் எடுத்து, அதற்கு நேர்முக வர்ணணை கொடுத்தார். ஒன்று நாகதோஷமாம்... இன்னொன்று செவ்வாய் தோஷமாம்... மற்றொன்னு ஏக நட்சத்திரமாம். இப்படி ஒவ்வொன்றையும் நிராகரித்துக்கொண்டே போன சாஸ்திரி, அவர்களது முகத்தில் ஏற்பட்ட கலக்கத்தைப் பார்த்துவிட்டு, ஆறுதலாய்ப் பேசினார்.

"நான் இப்படி வேண்டாமுன்னு சொல்றத தப்பா நினைக்காதேள். ஒங்கமேல இருக்கிற விசுவாசந்தான் அப்படி பேசவைக்குது. உங்க பிள்ளாண்டான், என்னோட பிள்ளாண்டான் மாதிரி. மணமக்களுக்கு தினம், கணம், மகேந்திரம், தீர்க்கம், யோனி, ராசி, ராசி அதிபதி, வசியம், வேதை, நாடி... இப்படி

பத்துப் பொருத்தங்கள் இருக்கணும். எல்லாம் இருக்கிறது கஷ்டம். ஆனால், பத்துக்கு ஏழு இருந்தால், உத்தமம். ஆறு இருந்தால், மத்திமம்... ஐந்தோ அல்லது ஐந்துக்கு கீழேயோ இருந்தால், அதமம்.."

சாஸ்திரி, பேசி முடித்துவிட்டு, இன்னொரு காகிதத்தை எடுத்தார். அந்தச் சமயத்தில், ஒரு இளைஞன் உள்ளே வரலாமா வேண்டாமா என்பதுபோல், நடைவாசலுக்கு உள்ளே ஒரு காலும், வெளியே ஒரு காலுமாக நின்றான். அகிலா கேட்டாள்.

"என்னடா. வேளகெட்ட வேளையில."

"நீங்கதானம்மா வரச்சொன்னீங்க... அயர்ன்பண்ண துணி இருக்குன்னு சொன்னீங்களே."

"ஆமாம் மறந்துட்டேன். இதோ நில்லு."

அகிலா, உள்ளேபோய், ஒரு சந்தனக்கலர் சபாரி பேண்டையும், சட்டையையும் எடுத்து வந்து, அந்த இளைஞனிடம் நீட்டினாள். ஆண்டவன், மனைவியைக் கண்டித்தார்.

"இந்த வெயிலுல எப்படிம்மா சபாரி போட்டுக்க முடியும்?"

"இன்னைக்கு ஈவினிங் ஒரு பார்ட்டியில கலந்துக்கிடுறீங்க... மறந்துட்டீங்களா? சாதாரண சட்டைப் பேண்ட்ல போனால், உங்களை வாட்ச்மேனே வெளியில தள்ளுவான்."

கவனம் கலைந்த கோபத்தில், சாஸ்திரி, அவர்களைக் கடுமையாகப் பார்த்தார். கலகலப்பாய் சிரித்த அகிலாவோ, சாஸ்திரி, தனது மனைவியையே மனதுக்குள் திட்டும்படி விளக்கமளித்தாள்.

"இவர் குழந்தை. இவருக்கு துணிமணி எடுக்கிறதுல இருந்து, எதுக்கு எது 'மேட்சு'ன்னு எடுத்துக் கொடுக்கிறது வரைக்கும் நான்தான்."

"ஆமாம் சாஸ்திரி ஸார். நாங்க ரெண்டு பேரும், ஒரே சமயத்துல சிவலோகம் போக முடியாது. இவள், பூவோட பொட்டோட போகணும் என்கிறாள் நானோ, இவளுக்கு

முன்னால போகணும் என்கிறேன். இவள் இல்லாமல், என்னால வாழ முடியுமுன்னு நினைத்துக்கூட பார்க்க முடியல. எங்க ரெண்டு பேர்ல யாரு சாமி முன்னால போவாங்க?"

"இதோ பாருங்கோ... நான் கல்யாணப் பொருத்தம்தான் பார்க்க வந்தேன். அபசகுனமா பேசாதேள். எல்லாம் பிள்ளையார் பார்த்துக்குவார். சரி... விஷயத்திற்கு வருவோம். இதோ இந்த ஜாதகம் இருக்கே... இது சுத்த ஜாதகம். இந்தப் பெண்ணால, ஒங்க பையன் எங்கேயோ போகப்போறான். அன்னப்பறவை மாதிரி வாழப்போறாள். இதையே முடிச்சிடுங்கோ. இப்படிப்பட்ட ஒரு நல்ல சுத்த ஜாதகத்தை நான் பார்த்ததே இல்லை. இதுல ஒரு வேடிக்கை என்னன்னா... ஆண்டவன் சாருக்கு இருக்கிற ஜாதகம் மாதிரியே, அவரோட பையனுக்கு இருக்கு. அகிலாம்மாவுக்கு இருக்கிற ஜாதகம் மாதிரியே, இந்தப் பொண்ணுக்கு இருக்கு. இப்படி நாலுமே சுத்த ஜாதகமாய் அமையுறது ரொம்ப அபூர்வம். உங்க ரெண்டு பேரையும் போலவே, இவாள் ரெண்டு பேரும், பிரமாதமாய் வாழ்வாள். ஒங்களோட மறுபதிப்புத்தான் இவாள். உடனே முடிச்சுடுங்கோ."

ஆண்டவனும், அகிலாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பின்னர், அந்த ஜாதகத்தை, அகிலாம்மா வாங்கி, தனியாக வைத்துக்கொண்டாள். உள்ளறைக்குப்போய், ஒரு தாம்பளத் தட்டில், வெற்றிலைப் பாக்கையும், ஒரு சீப்பு வாழைப்பழத்தையும், ஒரு நூறு ரூபாய் நோட்டையும் வைத்து, தனக்கு சாமியான சாஸ்திரியிடம், பணிவன்போடு நீட்டினாள். அவரும் எழுந்துநின்று, வாழைப்பழத்தை வேட்டி முந்தியிலும், ரூபாய் நோட்டை பைக்குள்ளும் போட்டபடியே, வெற்றிலை கொண்ட தாம்பளத் தட்டை திருப்பிக் கொடுத்தார். பாக்கை எடுத்து, வாயில் போட்டுக் கொண்டார். அது கடிபடும் முன்பே, 'ஒங்களுக்குன்னு அர்ச்சித்த விபூதி குங்குமத்தை கொடுக்க மறந்துட்டேன் பாருங்கோ... இந்தாங்கோ.' என்றார்.

ஒரு கை மேல் இன்னொரு கையை வைத்தபடி, இருவரும், சாஸ்திரி நீட்டிய விபூதி குங்குமத்தை வாங்கிக் கொண்டார்கள்.

அகிலா, குங்குமத்தை ஆள்காட்டி விரலால் தொட்டு, நெற்றியில் இட்டுக்கொண்டாள். எஞ்சிய குங்குமத்தை, லிங்கம் பொறித்த 'ஆட்டியன்' வில்லையாய் தொங்கும் தாலியின் இரண்டு பக்கமும் வைத்து, தங்கச் செயினோடு அவற்றை மேலே தூக்கி கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

இந்த நிகழ்வை பரவசமாகப் பார்த்த சாஸ்திரி, "நன்னா இருப்பேள்" என்று சொன்னபடியே, படியிறங்கிப் போய்விட்டார்.

ஆண்டவனும் அகிலாவும் அந்தக் கூடத்திற்குள், அங்கும் இங்குமாய் நடைபோட்டார்கள். குறுக்கும் நெடுக்குமாய், ஒருவரை ஒருவர் மோதாக் குறையாய் நடந்தார்கள். கால்மணி நேரத்திற்குப் பிறகு, ஆண்டவன் இழுத்து இழுத்துப் பேசினார்.

"நல்ல இடந்தான். கார் இருக்கு... பங்களா இருக்கு... பதவி இருக்கு. ஆனாலும்..."

அகிலா, அவரை நேருக்கு நேராய் பார்த்தபடியே, திட்டவட்டமாக தீர்ப்பளிப்பதுபோல் பேசினாள்.

"இது பொருத்தமில்லாத ஜாதகம். விட்டுத் தள்ளுவோம்."

- அமுதசுரபி (மே - 2000)

O

# முதிர் கன்னி

"எழுந்திருங்க அப்பா..."

இனிப்பு வகைகளை உள்ளடக்கிய பொன் நிற அட்டைப் பேழையை, அருகேயுள்ள தொலைக்காட்சிப் பெட்டிமேல் வைத்துவிட்டு, கீதா, ஏதோ ஒரு புத்தகத்தை படித்துக் கொண்டிருந்த தந்தை அருணாசலத்தை, அதட்டல் பாவலாவில் கூவி, கையை பிடித்திழுத்தாள். வாசிப்பைக் கலைக்கும் எவரையும் கடுகடுப்பாய் பார்ப்பவர் அப்பாக்காரர். இப்போது, அந்தக் கலைப்பை ஏற்படுத்தியவள், அந்த வாசிப்பைவிடச் சுவையான மகள் என்பதால், முகத்தைச் சுருக்க வைத்து, உதடுகளை துடிக்க விட்ட அந்தக் கடுகடுப்பு, வாய் கொள்ளாச் சிரிப்பாய், மாறியது. அந்தச் சமயம் பார்த்து, கீதாவின் அம்மா பூரணி, யதேச்சையாக உள்ளறையில் இருந்து வெளிப்பட்டாள். கீதா, அம்மாவையும் கையைப் பிடித்திழுத்து, அப்பாவிற்கு இணையாக நிற்க வைத்துவிட்டு -

அவர்கள் முன்னால், நெடுஞ்சாண் கிடையாக விழுந்து, நான்கு பாதங்களையும், இரண்டு கரங்களால் தொட்டபடியே, "என்னை ஆசீர்வதியுங்கள்" என்றாள்.

அருணாசலம், கீதாவை குழந்தைபோல் தூக்கி, சிறுமிபோல் வளைத்து, இளம்பெண்ணாய் நிறுத்தினார். அலுவலகத்தில் நடக்கும் சின்னச்சின்ன பாராட்டுதல்களை, பெற்றவர்கள் இருவரையும், மாறி மாறிப் பார்த்தபடி, ஒப்பிக்கும் மகள், ஏதோ நல்ல செய்தி சொல்லப் போகிறாள் என்ற பூரிப்பில் பூரித்துப் போனார். மகளின் முகம் வழியாய் கண்களை ஊடுருவவிட்டு, கடந்து வந்த காலத்தை, நிகழ்காலத்தில் நிறுத்தி அசைபோட்டார்.

இவள் முப்பாட்டி காதுகள் இரண்டும், ஊஞ்சல் சதைக்கோடுகளாகி, அதில பாம்படங்கள் தொங்கி, அவள் நடைக்கேற்ப ஆடிக் குலுங்க, கணவனோடு கழனிகளிலும்,

கம்மாக்களிலும் விவசாயக் கூலியாக இருந்தவள். இவள் பாட்டி, இதே சென்னை நகரில், ஒரு மாளிகைக்கார முறைமாப்பிள்ளைக்கு வாழ்க்கைப்பட்டு, 'தொள்ளக்காது... தொள்ளக்காது...' என்று வர்ணித்தபடியே, வேடிக்கை பார்த்த கூட்ட மொய்ப்பை தாங்க முடியாமல், கணவனின் சம்மதத்தோடு, தொங்கிய சதைக்கோடுகளை அறுத்து, இருபக்கத்து ஓட்டைகளையும் இணைத்து, கம்மல் போட்டுக் கொண்டவள். ஆனாலும், அந்தக் காதுகள் அறுவைச் சிகிச்சை தடயங்களோடு தோன்றின. இதோ நிற்கிற இவள் அம்மாவோ, காதுகளில் எந்த வில்லங்கமும் இல்லாமல், கம்மல்களை போட்டிருப்பவள். இந்தக் கீதாவோ, வளையங்களை போட்டிருக்கிறாள். மூக்கில் ஓட்டைபோட்டு, அதை தங்கத்தாலோ வைரத்தாலோ அடைக்க வேண்டிய அவசியம் இல்லாதவள். அதுவும், சின்ன வயதிலேயே காது குத்தியதால், இந்த வளையங்கள் உள்ளன. இவள் பள்ளிக்கூடக் காலத்தில் பேசிய பேச்சை வைத்து அனுமானித்தால், அப்போது இணங்கி இருக்கமாட்டாள். இந்தக் காதுகளும் மூக்கைப்போல் இருந்திருக்கும். மாதம் நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினாலும், கைகளில் வளையல்களோ, உதட்டில் செயற்கை செஞ்சிவப்போ இல்லாதவள். அம்மாவின் வற்புறுத்தலால் கழுத்தில் மட்டும், மெல்லிய செயின் அணிந்திருக்கிறாள். இந்த "இழப்புகளுக்கு" ஈடு செய்வதுபோன்ற முக லட்சணம்.

அருணாசலம், ஏறுமுகமான சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, மகளை பெருமிதமாகப் பார்த்தபடியே கேட்டார்.

"ஏதோ நல்ல செய்தி கொண்டு வந்திருக்கேன்னு நினைக்கேன். சீக்கிரமா சொல்லம்மா! நல்லதை உடனடியாகவும், கெட்டதை மெள்ள மெள்ளவும் சொல்லணும்."

கீதா, எழுந்து அந்தப் பேழையைப் பிரித்து, ஒரு லட்டை அப்பாவின் வாயிலும், இன்னொரு மைசூர் பாக்கை அம்மாவின் வாயிலும் திணித்தபடியே சிரித்தாள். அந்தச் சிரிப்பு, அப்பாவை தொற்றிக் கொண்டபோது, அம்மாவை துடிக்க வைத்தது. மனதிற்குள் பேச வைத்தது.

'அடுத்த சாதிக்காரன், எவனையும் காதலித்து, அந்தச் செய்தியை சொல்லப்போகிறாளா... பதிவுக் கல்யாணம் செய்துவிட்டு, மாப்பிள்ளைப் பயலை வீட்டுக்கு வெளியே நிறுத்திவிட்டு, இங்கே ஆழம் பார்ப்பதற்காக, இப்படி காலில் விழுகிறாளோ... எந்துப் சாதிக்காரப் பயலாய் இருப்பான்? இவளோடு காரில் வந்து, வீட்டில் நொறுக்குத் தீனி சாப்பிட்டுவிட்டுப் போகிறானே தேவர் பையன் நரேந்திரன்... அவனா? அல்லது இவளோடு சேர்ந்து லண்டனுக்கு போனானே வன்னியப் பையன் சேகரன்... அவனா? அல்லது டை கட்டிக்கொண்டு வருவானே அய்யரோ அய்யங்காரோ... பாலாஜி... அந்தப் பயலா? ஒருவேளை, இளம் வயதிலேயே எடுத்த எடுப்பிலேயே ஆராய்ச்சி டைரக்டராய் இருக்கானே அரிஜனப் பையன் மனோகரன். அவனா இருக்குமோ? முருகா... விநாயகா... ஆஞ்சநேயா... அம்பாளே... கிருஷ்ணா... இவன்களுல எவனாவும் இருக்கப்படாது. சொந்தச் சாதியை சேர்ந்தவனாய் இருக்கணும். அப்படியே இல்லாட்டியும், இவன்களுல அந்த அரிஜனப் பையனா மட்டும் இருக்கப்படாது.'

அம்மாக்காரி படபடப்பாய், மகளைப் பார்த்துவிட்டு, வெளியே எட்டிப் பார்த்தாள். எவனும் காம்பவுண்டு கேட்டுப் பக்கம் பதுங்கி நிற்பதுபோல் தெரியவில்லை. ஒருவேளை, நட்சத்திர ஹோட்டலுல எதுலயும் ரூம் போட்டு, தங்கியிருப்பாங்களோ? வீட்ல ஒப்புக்கு சொல்லிட்டு, அந்த ஹோட்டலுக்கு திரும்பப் போறாளோ? இந்த துக்கச் சேதியைத்தான், நல்ல சேதியா சொல்லப் போறாளோ...'

கீதாவும், தன்னை அறியாமலே, அம்மாவின் வயிற்றெரிச்சல், வாயெறிச்சல் ஆகும்படி பீடிகையோடு பேசினாள்.

"எங்க கம்பெனி டைரக்டர் மனோகரன் இருக்காரே, அவர் இன்றைக்கு ஒரு நல்ல செய்தி சொன்னார். என் உள்ளுணர்வு எதிர்பார்த்த செய்திதான்."

அருணாசலம், அமைதியான ஆவலுடன் மகளைப் பார்த்தபோது, பூரணி, துள்ளிக் குதிக்காத குறையாக, "என்னடி சொன்னான்... என்னடி சொன்னான்..." என்று மாறி மாறிச் கேட்டாள். அவன், இவளை காதலிப்பதாகச் சொல்லி, இவள் அதை ஏற்றுக் கொண்டிருப்பாள் என்ற அனுமானம்.

எளிமையான அம்மா, இப்படி, காட்டுமிராண்டித் தனமாய் கத்துவதைப் பார்த்ததும், கீதா, அவளை புதிராய் பார்த்தாள். தாய்க்காரி மீண்டும் கத்தினாள்.

"அந்தப் பயல் என்னடி சொன்னான்? என்ன இழவச் சொன்னான்? சொல்லுடி..."

"எவரையும் நாகரீகக் குறைவாய் பேசாதம்மா. அதுலயும் மனோகரன் பத்தரை மாத்துத் தங்கம். சே... பாதி சந்தோஷத்தை கெடுத்திட்டியே..."

"அவள் கிடக்காள். நீ சொல்லம்மா..."

ஆனாலும், அருணாசலத்திற்கு, மனைவி, கேட்பதன் பொருள் புரிந்தது. அதனால் அவரது கம்பீரமான குரல், லேசாய் நடுங்கத்தான் செய்தது. பெற்றெடுத்த மகளையே, தன்னைப் பிறப்பித்த தாயாக்கி, அவளைக் கெஞ்சாக் குறையாய் பார்த்தார். பல திரைப்படக் காட்சிகள், மனத்திரையில் ஒலியும் ஒளியுமாய், அவர் குரலை நடுங்க வைத்து, மனதை பாதி இருளில் மூழ்க வைத்தது.

கீதா விளக்கினாள்.

"எங்க கம்பெனிக்கும், லண்டனில் உள்ள ஒரு சர்வதேச கம்பெனிக்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதை, ஏற்கெனவே உங்ககிட்ட சொல்லி இருக்கேன். ஆண் பெண் ஒவ்வொரு வருக்கும் கருமுட்டையிலயும், விந்திலும் இருக்கக்கூடிய நாற்பத்தாறு குரோமோசோம்களில், நாலு கோடியே பத்து லட்சம் கேரக்டர்கள், அதாவது இயல்புகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கு. இந்த குரோமோசோம்களைப் பிளந்து, உயிர் என்பது என்ன? அதுவும், ஆன்மாவும் ஒன்றா? என்று கண்டறியும் ஆராய்ச்சி ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கு."

கீதா, தான் சொல்வது பெற்றோருக்கு புரிகிறதா என்பதுபோல், பேச்சுக்கு தாற்காலிக இடைவெளி கொடுத்து அவர்களை ஆசிரியதனமாகப் பார்த்தாள். அவர்களுக்கு புரிகிறது என்று அனுமானித்து, அதே குரல் வேகத்தில் பேசினாள்.

"இன்னொரு பக்கம், இந்த குரோமோசோம்களில் எந்த வகையான ஜீன், இன்சுலின் உற்பத்தியை ஒரு கட்டத்தில் நிறுத்தி விடுது... அதுக்கு மாற்று வேறு குரோமோசோம்களில் இருக்குமா? என்பதை கண்டறிவதற்கும் ஒரு முயற்சி நடக்கிறது. செயற்கை இன்சுலின் தயாரிக்கும் எங்க கம்பெனி, அந்த சர்வதேச நிறுவனத்தோட ஒரு கொலாபரஷேன், அதாவது கூட்டுத் தயாரிப்பு செய்வதற்கு ஒரு ஒப்பந்தம் போட்டது. இதுக்காக, எங்க கம்பெனியில் அகில இந்திய அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பேரில் நானும் ஒருத்தி. அதுவும் ஒரே பெண். லண்டனில் மூன்று வருட ஆராய்ச்சி செய்யணும்."

தந்தை பிரமிப்பாயும், தாய், தவிப்பாயும் மகளைப் பார்த்தபோது, கீதா தொடர்ந்தாள்.

"எந்த உயிருமே, ஆரம்பத்தில் ஒரே ஒரு செல்லுலதான் துவங்குது. அப்புறந்தான் படிப்படியாய் கோடிக்கணக்காக மாறுது. ஆனால், அந்த ஒரே செல்லுக்குள்ளே, கம்யூட்டர் புரோக்கிராம் மாதிரி, இன்னின்ன காலத்தில், இன்னின்ன மாறுதல் அல்லது வளர்ச்சி - தளர்ச்சி ஏற்படணுமுன்னு இருக்குது. ஒரே செல்லாய் இருக்கும்போது, பார்க்கிறதுக்கு ஒரே ஜீனாய் தோன்றுகிற ஆலமரம் வேறு விதமாகவும், குழந்தைக்கரு, வேறு விதமாகவும் மாறுது. மானுடத்தைப் பொறுத்த அளவில், ஒவ்வொருத்தர் குரோமோசோம்களில் உள்ள ஜீன்களில், மூன்று கோடி ஆண்டுகால நமது முன்னோர்களின், மனவோட்டங்கள் பதிவாகியுள்ளன. இதை வைத்து, மானுட வரலாற்றையும் கண்டுபிடிக்கலாம். எங்க கம்பெனிய பொறுத்த அளவில், இன்சுலின் சம்பந்தப்பட்ட குரோமோசோமின் ஜீனே முக்கியம். இதன் மூலம் நீரழிவுக்கு, நிரந்தர தீர்வு காணும் குரோமோசோமை கண்டுபிடிப்பதே எங்கள் ஆராய்ச்சி. ஆனாலும், நான் கேட்டுக் கொண்டபடி, எய்ட்ஸ் கிருமிகளை எதிர்த்துப் போராடுற இயல்பு எந்த குரோமோசோமிலாவது இருக்குதா என்கிறதையும் ஆய்வில் சேர்க்கணுமுன்னு, மனோகரன் சார்கிட்ட சொல்லியிருக்கேன். அவரும், கம்பெனி நிர்வாகத்துக்கு எழுதுவதா ஒப்புக்

கொண்டிருக்கிறார். இன்னும் நாலு நாளையில் விசா கிடைச்சுடும். அநேகமாய் அடுத்த வாரம் புறப்படணுமாம்."

அருணாசலம், மகளை அலுங்காமல், குலுங்காமல் அசைவற்றுப் பார்த்தார். அவளை மேல்நோக்காய் பார்த்தபடியே அதிசயித்து நின்றார். ஆனால், அம்மாக்காரிக்கு, உடனடியாய் ஒன்று தட்டுப்பட்டது. மனதிற்குள் பம்பரமாய், வட்ட வட்டமாய் சுற்றிய அந்தச் சுற்று, அவள் நாக்கையும் சுழல வைத்தது. ஒரு அபாய எச்சரிக்கையை கணவருக்கு எடுத்துரைத்தது.

"ஏங்க... அவளுக்குத்தான் அறிவில்லன்னா... உங்களுக்குமா இல்ல? இப்பவே இவளுக்கு இருபத்தொன்பது முடியப்போகுது. திரும்பி வரும்போது முப்பத்திரண்டு முடிஞ்சுடும். எவன் கட்டிக்க வருவான்? இப்பவே வயசாயிட்டுதுன்னு பல பயல்களும், அவன் அப்பன்மாரும், அம்மாமாரும் இங்க வந்து நொறுக்குத்தீனி தின்னுட்டு, அப்புறம் கிணத்துல விழுந்த கல்லா கிடக்காங்க... இவள் சொன்னது நல்ல செய்தியாக்கும்..."

அம்மாவை நெருங்கி, கோபமாக பேசப்போன மகளுக்கும், வாய் துடிக்க நின்ற மனைவிக்கும் இடையே, வலது கையை எல்லைக்கோடாய் நீட்டியபடியே, அருணாசலம், கண்களை மூடினார். மகளின் மகிழ்ச்சியை அதிகப்படியாய் பகிர்ந்து கொண்ட அவருக்கு, இப்போது அது ஒரு துக்கப் பகிர்வாகத் தோன்றியது. மனைவி சொல்வதில், நியாயம் இருப்பதுபோலவும் தோன்றியது.

அருணாசலமும், ஒரு முடிவுக்கு வந்தார். அதைக் காட்டும் வகையில், மகளின் இரண்டு கரங்களையும் தனது இரண்டு கரங்களில் ஏந்தியபடியே, அவளை சோபா செட்டில் உட்கார வைத்தார். எதிர்முனை ஒற்றைச் சோபாவில் அமர்ந்து, அதன் சக்கர நாற்காலிகளை நகர்த்தியபடியே, மகளுக்கு நெருக்கமாக வந்தார். ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு, எப்படி பாடம் நடத்துவாரோ, அப்படி, ஏற்ற இறக்கமாய், அவ்வப்போது தன் பேச்சு எடுபடுகிறதா என்று மாணவர்களைப் பார்த்ததுபோலவே, மகளையும் பார்த்தபடியே, முன்னுரையும், பொருளுரையும், முடிவுரையுமாய் பேசத் துவங்கினார்.

"வட சென்னையில், பிணவாடை கொண்ட கல்லறைச் சாலையில், ஒற்றை அறையில், ஒண்டிக் குடித்தனமாய் வாழ்ந்தோம். வேலைக்காரி வைக்க முடியாத நிலைமையில், உன் அம்மா, முறைவாசல் என்ற பெயரில் வாரம் ஒருமுறை சாக்கடை "காவாயை" கழுவிவிட்டு, கழிவறையையும் சுத்தம் செய்தவள். உள்ளே படுத்தால், மூட்டைப் பூச்சி கடிக்கும். வெளியே படுத்தால் கொசு கடிக்கும். இந்த ரெண்டுக்கும் ரத்தம் கொடுத்து வாழ்ந்தோம்."

"என்னப்பா நீங்க... நானும், அதே இடத்தில் பிறந்து வாழ்ந்தவள்தானே... இப்போ அதுக்கென்ன?"

"நீ அங்கே வளர்ந்தே... ஆனால், வாழல. இப்படி வறுமைக் குப்பை வீட்டுல வாழ்ந்த எங்கள இந்த பங்களாவுல வாழ வைக்கிற... பஸ்ஸுக்கு கால் கடுக்க நின்ற எங்களை, ஏ.சி. கார்ல போக வைக்கிறே... தெருவுல சுக்குக் காபி குடித்த எங்களை, இப்போ பழரசம் குடிக்க வைக்கிறே... வாத்தியார்தானே என்று என்னையும், இவளையும் ஏளனமாய்ப் பார்த்த, உறவுக்காரங்கள பிரமிப்பாய் பார்க்க வைத்திருக்கே.... இதெல்லாம் நீ போட்ட பிச்சை..."

கிதா, இருக்கையை விட்டு எழுந்த வேகத்தில், அருணாசலம் அமர்ந்திருந்த சக்கர நாற்காலி ஒற்றைச்சோபா இருக்கை, பின்னோக்கி நகர்ந்தது. கிட்டத்தட்ட அவர் கீழே விழப்போனார். எப்படியோ சமாளித்து உட்கார்ந்தார். தந்தை தடுமாறியதோடு, குரலும் தழுதழுத்தபோது, கீதா, தனது தோளில் கிடந்த துப்பட்டாவை எடுத்து, தரையில் வீசியபடியே கத்தினாள்.

'என்னை ஏன் அந்நியப்படுத்துறீங்க? நீங்க பெற்ற மகள் நான். பிச்சை கிச்சைன்னு ஏன் பெரிய பெரிய வார்த்தையா பேசுறீங்க... நீங்க ரெண்டு பேரும், என்ன படிக்க வைக்கிறதுக்கு பட்டபாட்டை மறக்கிற பாவி இல்ல நான். அம்மா, என்னை காலையில நாலு மணிக்கே எழுப்பிவிட்டு, காபி கொடுக்கிறதுக்காக, அந்தச் சமயத்துல எங்கே தூங்கி விடுவோமோன்னு... ராத்திரி முழுதும் தூங்காம இருந்தது எனக்குத் தெரியும்பா... அப்படித் தப்பித்தவறி அம்மா தூங்கினால், நீங்க அம்மாவை திட்டுன திட்டும் இன்னும் காதுல

ஒலிக்குது... இப்படி பேசுவீங்கன்னு தெரிந்தால், எம்.எஸ்.சி. பயோ டெக்னாலஜி முடிச்சுட்டு, உயிரியலில் டாக்டர் பட்டமும் வாங்கியிருக்க மாட்டேன்... இப்படிப்பட்ட சம்பளத்தையும், சகல வசதிகளையும் தருகிற இந்த கம்பெனியில சேர்ந்திருக்கவே மாட்டேன். என்னப்பா நீங்க... பெத்த கடன்னு ஒண்ணு உண்டுன்னா, பிறந்த கடன்னு ஒண்ணு கிடையாதா? உங்க மகளைப் போய் பிச்சை போடுறதாய்..."

கீதா, அழுகையை மறைப்பதற்காக, அப்பாவிற்கு முதுகு காட்டியபோது, அம்மா, அவளை, தன்மீது சரித்துக் கொண்டாள். தந்தையும் கீதாவின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே, தனது முன்னுரையையே முத்தாய்ப்பாய் முடித்தார்.

"நீ, இன்னொரு பிச்சையும், எங்களுக்கு போடணும் என்கிறதுக்குத்தான் அப்படிச் சொன்னேன் கீதா..."

கீதா, அம்மாவை கீழே விழ வைக்காத குறையாய், சட்டென நிமிர்ந்து, தந்தையை நேருக்கு நேராய்ப் பார்த்தாள். அவரோ, அவள் அப்படிப் பார்க்கப் பார்க்க, கண்களைத் தாழ்த்தித் தாழ்த்திப் பேசினார்.

"அடுத்தடுத்துப் பிறந்த குழந்தைகள், அதே மாதிரியே செத்தபோது அல்லது கார்ப்பரேஷன் கவனிக்காத சுற்றுப்புறச் சூழலில் கொலை செய்யப்பட்டபோது, கோவில் குளம்போய் தவமிருந்து பெற்றது மாதிரி பிறந்த மகள் நீ. ஒரே மகள். எனக்கோ, இவளுக்கோ, இந்த பங்களா பெரிசில்ல... இந்த காரும் முக்கியமில்ல. நீ ஐவரில் ஒருவராய் தேர்ந்தெடுக்கப்பட்டதும் முக்கியமில்ல."

அருணாசலம், மேற்கொண்டு பேசமுடியாமல் திண்டாடியபோது, கீதா, அடி எடுத்துக் கொடுத்தாள்.

"அப்போ உங்களுக்கு எதுதான் முக்கியம்? சொல்லுங்கப்பா... கொஞ்சம் நேரத்துக்கு முன்னே, நல்ல செய்தியை உடனடியாய் சொல்லணுமுன்னு நீங்கதானே சொன்னீங்க... உங்களவில் எது நல்ல செய்தியோ அதைச் சொல்லுங்க?"

"நீ எதுவும் குறுக்கேகப் பேசாதே பூரணி. கீதா! அம்மா சொன்னதுமாதிரி, நீ இங்கேயே கல்யாணம் செய்து எங்களை தாத்தா பாட்டியாக்கணும். இதுதாம்மா எங்களுக்கு பெரிசு... இதுதாம்மா நான் ஒங்கிட்ட கேட்கிற பிச்சை..."

கீதாவுக்கு, அழுவதா சிரிப்பதா என்று புரியவில்லை. 'தந்தையும் தாயும் ஈன்ற பொழுதிலும் பெரிதும் உவக்கும் பெற்றோர்களாய், மகிழ்ச்சியில் திக்கு முக்காடி திணறிப் போவார்கள் என்ற எதிர்பார்ப்பு, ஒரு உருவமாகி, எதிர்முனையில் தனியாய் நின்று, அவளைப் பார்த்து கைகொட்டிச் சிரிப்பதுபோல். தோன்றியது. அவளுள் இருந்த ஒரு விஞ்ஞானப்பெண், கண் முன்னால், பேயாய், பிசாசாய், பிள்ளைக் குட்டி பெற்ற எலும்புக் கூடாய் உருவம் காட்டியது. முதல் தடவையாக பெற்றோரிடமிருந்து அந்நியப்பட்டது போலவும் ஒரு உணர்வு ஏற்பட்டது. அப்படி ஏற்பட ஏற்பட, ஆத்திரமும் அழுகையும் மாறி மாறியும், ஒரே சமயத்திலும், வரத் துவங்கின.

சிறிது நேரம் வாசல் பக்கம் நடந்தாள். தேக்கு மரக்கதவின் குமிழ்களைப் பிடித்தபடியே, அசைவற்று நின்றாள். ஆராய்ச்சியில், குறிப்பாக மார்க்ஸும், ஏங்கெல்ஸும், தீஸிஸ் - ஆன்டி தீஸிஸ்.. அதாவது வாதம், எதிர்வாதம் என்கிற முறையில், எதிரும் புதிருமாய் வாதித்தார்களே அப்படி, தன் தரப்பிலும், பெற்றோர்கள் தரப்பிலும் திருமண விவகாரத்தை அலசிப் பார்த்தாள். இதனால், ஆத்திரம் அடங்கவில்லை என்றாலும், அது அழுகையை நிறுத்தியது. அதேசமயம், அசைக்க முடியாத ஒரு உறுதியைக் கொடுத்தது. ஆரம்பத்தில் அணையப் போவதுபோல் தோன்றும் தீக்குச்சி நெருப்பை, குவிந்து பிடித்தால் சுடர் விடுவதுபோல், அவள் ஆசாபாசங்கள் கொண்ட மகளாகவும், அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு விஞ்ஞானியாகவும் மாறி மாறிப் பேசினாள். முதல் கட்டமாக, ஒரு கேள்வி கேட்டாள்.

"நீங்க எடுத்துக்கிட்ட கல்யாண முயற்சிக்கு நான் எப்போதாவது தடையாய் இருந்திருக்கேனா அப்பா? உங்களால் முடியாவிட்டால், நான் என்னப்பா செய்ய முடியும்?"

சின்னச் சின்ன மாணவர்களிடம், பிரம்பும் கையுமாய் கேள்வி கேட்டே பழகிய தந்தையின், தலையும் இப்போது தாழ்ந்தது. ஆனால், பூரணி, அவர் தலைக்குமேல், தனது தலையை தூக்கியபடியே, புலம்பினாள். மகளுக்கு தெரிந்த சங்கதிதான்.

"உன் படிப்பே உனக்கு எதிரியாய் போயிட்டுதேடி... ஒரு பொண்ணு படிக்காட்டாலும் தப்பு... படித்தாலும் தப்பு... என்கிற மாதிரி ஆகிப்போன காலமாச்சே. நாங்களும், எத்தனை பத்திரிகை உண்டோ, அத்தனை பத்திரிகையிலும், விஞ்ஞானியாய் இருப்பவள், நாற்பதாயிரம் ரூபாய் சம்பளத்தோடு சகல வசதியோடயும் வாழ்கிறவள்... வயது இருபத்தெட்டுன்னு கொடுத்துத்தான் பார்த்தோம். வயசைப் பார்த்த உடனே, வயசைப் போட்டா வரமாட்டாங்கன்னு ஒரு பத்திரிகை விளம்பர மேனேஜர் சொன்னது சரியாப் போச்சே. இந்தக் காலத்துல - இந்தக் காலத்துல என்ன இந்தக் காலத்துல... எந்தக் காலத்திலயும், பெண்டாட்டி என்கிறவள், தன் படிப்புக்கும், சம்பளத்துக்கும் கீழே இருக்கிறவளாகத்தான் இருக்கணுமுன்னு, எல்லா ஆண்களும் நினைக்கிறாங்க... நீ ஒரு பி.எஸ்ஸி., பையனைக்கூட கட்டிக்கத் தயாருன்னு சொன்னது எங்களுக்கு புரியுதும்மா. ஆனால், அது அந்தப் பயல்களுக்குப் புரியலியே... நாங்க என்னதாம்மா செய்வோம்? வார பயல்களே கொஞ்சம். அப்படி வாராவனும்..."

அம்மாக்காரி, தடுமாறினாள். அவளைப் பெற்றபோது ஏற்பட்ட பிரசவ வலியைவிட, இப்போது அவள் வாயும் வயிறும் அதிகமாய் வலித்தது. கையறு நிலையில், கைகளை விரித்தாள். அவளால் பேசமுடியவில்லை. கீதா தனக்கும், அம்மாவுக்கும் சேர்த்துப் பேசினாள்.

"ஏம்மா... வார்த்தைய விழுங்குறே... நான் நாற்பதாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குறதைப் பார்த்துட்டு, முப்பதாயிரம் ரூபாய் பயல் ஓடுறான்... நான் அஞ்சரை அடி இருக்கிறதைப் பார்த்துட்டு, அதுல ஒரு அங்குலம் குறைஞ்ச பய உதாசினப்படுத்தினான். என்னோடத் தகுதிகளை கவனமாய்க் கேட்ட, ஒரு எம்.எஸ்ஸி., பயலும், அவன் அப்பனும், நான், அடிக்கடி சர்வதேச மகாநாடுகளுல கலந்து கொள்வதற்கு லண்டன், நியூயார்க்,

பிரான்சு, டோக்கியோன்னு ஆகாயத்தில் பறந்து போவதை, அங்குமிங்கும் அலையுற பெண்ணாய் நினைத்து, டிபன் சாப்பிடாமலே, அரண்டு மிரண்டு ஓடுறான். முப்பது வயசுப் பயல்கூட, இருபத்திநாலு வயசுப் பெண்ணைத்தான் கேட்கிறான். எனக்கு இருபத்தெட்டு இருக்கப்படாது என்கிறான். பதினைந்தாயிரம் சம்பளம் வாங்குகிற ஒரு மக்குப் பையன், தான் வாங்குற சம்பளமே குடும்பம் நடத்த போதுமுன்னும், நான், பதவியை ராஜினாமா செய்தால், கட்டிக்கத் தயாராய் இருப்பதாகவும், அம்மா மூலம் தூது விடுறான். நீங்க ரெண்டு பேரும் வாய்மூடி இருந்ததால்... நானே அவங்களை கெட்-அவுட்டுன்னு சொல்ல வேண்டியதாயிட்டுது. என்னம்மா நியாயம் இது? மணமகனைவிட, மணமகள் வயசுல, படிப்புல, சம்பளத்துல, குடும்பத் தகுதியில கீழே இருக்கணுமுன்னு, அந்தப் பயல்களும், அவன் பெற்றோரும் நினைத்தால், அதுக்கு நான் என்னம்மா செய்வேன்?"

தந்தையின் தலை, இன்னும் நிமிரவில்லை. தாய்க்காரி, சிறிது ஆடிப்போனாள். மனதில், திருப்பதி ஆண்டவனை நினைத்துக் கொண்டாள். உடனே, அவளுள் ஒரு ஜோதிடர் சொன்னது நினைவுக்கு வந்தது. திருப்பதி சாமிக்கு மனதுக்குள் நன்றி சொன்னபடியே, மகளுக்கு ஆறுதல் சொன்னாள்.

"உன் ஜாதகத்துல சர்ப்ப தோஷமாம். நானும், ஒரு மாத காலமா பாம்பு புற்றுல முட்டையும் பாலும் வச்சுட்டு வாறேன். திருப்பதி ஆண்டவனுக்கு தலையை மொட்டை அடிக்கிறதாய்...."

"என் தலையையா? உன் தலையையா?"

"ஏடாகோடமாய் பேசாதேடி. சொல்றத கேளுடி. உனக்கு கல்யாணம் ஆகணுமுன்னு திருப்பதியில மொட்டை போடப்போறேன். தாயாருக்கு பட்டுப்புடவை சாத்தப்போறேன். காளஹஸ்தியில நாகதோஷ நிவர்த்திக்காக ரெண்டாயிரம் ரூபாய் செலவில, பரிகாரம் நடத்தப்போறேன். பழனியில அங்கப் பிரதட்சணயம் செய்யப்போறேன். எல்லாம் நல்லபடியா நடக்கும் பாரு..."

"நீ அப்படி செய்யுறதுக்கு, என்னால ஆதரவு கொடுக்க முடியாட்டாலும், ஆட்சேபிக்க மாட்டேம்மா. ஆனால், அத்தனை நேர்த்திக் கடன்களையும், நான் லண்டனிலிருந்து, ஒரு நல்ல விஞ்ஞானியாய், நம்ம நாட்டுக்கு பேர் வாங்கிக் கொடுக்கிற பெண்ணாய் வரணுமுன்னு, உன் நேர்த்திக் கடன் நோக்கத்த மாத்திக்கோ... எனக்கு சர்ப்ப தோஷத்தைப் பற்றி கவலை இல்லை. அது, ஊர்கிற பிராணியாய் மாறுகிறதுக்கு அதன் முட்டையில எந்த குரோமோசோம் காரணமுன்னு கண்டுபிடிக்கிறதுதான் எனக்கு முக்கியம்."

"பார்த்தீங்களா... ஒங்க மகள் பேசுற பேச்சை. கல்யாணம் கட்டிக்க மாட்டாளாம்."

"கட்டிக்க மாட்டேன்னு, நான் எப்பவும் சொல்லல. சாதி தடையில்லைன்னு விளம்பரத்துல சேர்க்கச் சொன்னேன். உங்களால, அந்த வட்டத்தை தாண்ட முடியல. இப்போ டூ-லேட். நான், இப்போதைக்கு மணமேடையில உட்காரப் போற பெண்ணாய் இருக்கப்போறதில்லை. லண்டனில், சோதனைக் கூடத்துல, ஒரு விஞ்ஞானியாய் நிற்கப்போகிற பெண். காலம் கடந்துட்டு. இனிமேல், கல்யாணம் பேச்சை எடுக்காதிங்க... ஒரு வகையில என்னைப் பார்த்து அரண்டு மிரண்ட பயல்களுக்கு நான் நன்றி சொல்லணும். ஏன்னா... அவங்களுடைய உதாசீனத்துலதான், எனக்கு ஒரு உறுதி ஏற்பட்டது. நீங்க, தாத்தா பாட்டி கனவை விட்டுட்டு, புகழ் பெறப்போகிற... புகழ் கிடக்கட்டும் புகழ்... அது இந்த காலத்துல ஒரு தாதாவுக்கு கூட இருக்குது... மனித குலத்தை கொல்லாமல் கொல்லும் நீரழிவு நோய்க்கு, ஒருவேளை எய்ட்சுக்கும் நிரந்தரமான மருந்து கண்டு பிடிக்கப்போகிற மகளோட பெற்றோருன்னு பெருமைப்படுங்க. இதுக்காக வேணுமுன்னா நேர்த்திக் கடன் செய்யுங்க. நான் சொல்றது சரிதானே அப்பா?"

அருணாசலத்தின் தலை, மெள்ள மெள்ள நிமிர்ந்தது. கலங்கிய கண்கள், வறண்டன. துடித்த புருவங்கள், நிலை கொண்டன. உதடுகளை கடித்த பற்கள், உள்ளே போயின.

அவளைப் பொருள்பட பார்த்தார். பிறகு, அவரது கரங்களில் ஒன்று, மகளின் வலது தோளில் தொங்கியது. இடது கரம், அவள் தலையை கோதிவிட்டது. உடனே, சிறிது விலகி நின்று, மகளையே பார்த்தார். பள்ளியிலும், கல்லூரியிலும் பல்கலைக்கழகத்திலும், காகிதச் சான்றிதழ்களையும், வெள்ளி மெடலையும், தங்க மெடலையும் பெற்றவள். பல்கலைக்கழக நேர்காணலிலேயே, பிரபல கம்பெனிக்கு, விஞ்ஞான ஆராய்ச்சியாளராய் தேர்ந்தெடுக்கப்பட்டவள். அவள் சொல்வதும், அவள் வகையில் சரிதான். ஆனாலும்

அப்பா தயங்கிப் பார்த்தபோது, கீதா தயங்காமல் சொன்னாள்.

"எனக்கும், உங்களை சந்தோஷப் படுத்துறதுக்கும், தாய்மை அடைவதற்கும் ஆசைதான். ஆனால், அதுக்கு என் ஆராய்ச்சியை விலையாய் கொடுக்க முடியாது. அத்தனை வறுமையிலும் பிளஸ் டுவிலேயே நிறுத்தாமல், எம்.எஸ்ஸி., படிக்க வைத்து, வேலைக்கு போன்னு ஒரு வார்த்தைகூட சொல்லாமல், ஆராய்ச்சியும் செய்ய வைத்த ஒரு வித்தியாசமான பெற்றோரின் வித்தியாசமான மகள் நான். அந்தக் காலத்துல, கோபியர்கள், கண்ணனை தங்களுடைய மானசீக அகக் கணவனாகவும், கை பிடித்தவனை புறக் கணவனாகவும் நினைப்பார்களாம். இந்தக் காலத்தில்கூட, தன்னல மறுப்பு கிறிஸ்தவக் கன்னிமார்கள், லேசான ஆசா பாசங்கள் குறுக்கிடும்போது, தங்களை ஏசு ஒருவருக்கே வாழ்க்கை பட்டதாக நினைப்பார்களாம். இதுபோல, என்னோட அகக் கணவன், விஞ்ஞான ரீதியான உயிரியல் மருத்துவ ஆராய்ச்சிதான். நான், ஒருத்தனுக்கு பயன்படுவதைவிட, நான் படித்த உயிரியல் பொறியியல் ஆராய்ச்சி... இந்த உலகத்துக்கே பயன்படணும் என்று நினைக்கிறவள். புறக்கணவன் கிடைத்தால் கிடைக்கட்டும்... கிடைக்காவிட்டால் போகட்டும். அப்பா! நான் சொல்றது சரியா?"

தந்தை, புன்னகைக்கப் போனபோது, அவர் ஏடாகோடமாய் மகளுக்கு பச்சைக்கொடி காட்டிவிடுவார் என்று பயந்ததுபோல், அம்மாக்காரி தலையிட்டாள்.

“மெத்த படிச்சா சுத்த பைத்தியமாம். அதிகமாய் படிச்சுட்டமுன்னு அடாவடியாய் பேசாதடி... நாக தோஷம் கழியத்தான் போகுது... நம்ம சாதியிலேயே உனக்கு, உன்னைவிட ஒசத்தியாய் ஒரு பையன் கிடைக்கத்தான் போறான்.”

“பார்த்தியா... பார்த்தியா... உனக்குக்கூட மருமகனா வரப்போகிறவன், மகளைவிட ஒசத்தியாவும், ஒரே சாதியாய் சேர்ந்தவனாய் இருக்கணும் என்கிற ஒரு நினைப்பு, உன்னை விட்டுப் போகலை பாரு... உன்னை சொல்லிக் குற்றமில்லை. எல்லாம் சோசியல் கண்டிஷனிங்... அதாவது, காலங்காலமாய் ஏற்பட்டு வரும் சமூக நிர்ப்பந்தம். நம்ம நாட்டுல... ஒவ்வொரு சாதியும், ஆரம்ப காலத்துல ஒரு செல் உயிரினம்போல, ஒற்றை மனிதனில் இருந்து, அண்ணன்-தம்பியாய், அக்காள்-தங்கையாய், பங்காளியாய், பிறகு ஒரு கூட்டமாய் பரந்து விரிந்து மாறியதுதான் சாதி. ஒரு சாதியில் உள்ளவர்கள் எல்லாரும், ஒரு தாய் மக்கள். அதாவது, அண்ணன்-தங்கைகள் அல்லது அக்காள்-தம்பிகள். ஆக மொத்தத்துல, ஒரு சாதிக்குள்ளேயே கல்யாணம் செய்யுறது, சொந்த சகோதரனை கட்டிக்கிறது மாதிரிதான்.”

“எம்மாடி... எப்படி வாய் பேசுறாள் பாருங்க.. ஏங்க! குத்துக்கல்லு மாதிரி நிற்கிறீங்க.. அவள ரெண்டு அதட்டு அதட்டுங்க...”

கீதா, தந்தையின் தலையை நிமிர்த்தியபடியே, கெஞ்சாக் குறையாய் பேசினாள். தந்தையுடன், தத்துவார்த்தமாக பேசுகிறவள். அன்று அது பொழுதுபோக்கு. இன்றோ, ஒரு அவசர அவசியம்.

“நான் சொல்றதை கேட்டுட்டு, அப்புறமாய் வேணுமுன்னால், அதட்டுங்கப்பா... ‘ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் வலுவுள்ளவைகளே வாழ்கின்றன’ என்பது டார்வின் தத்துவம் என்பது உங்களுக்குத் தெரியும். ‘புறமே அகத்தை தீர்மானிக்கிறது’ என்பது மார்க்சியத் தத்துவம். இதுவும் உங்களுக்குத் தெரியும். இந்த இரண்டிற்கும் முரண்பாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. டார்வின் சொன்ன ‘ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில்’ என்பதை, அப்போதைய

தாவர சங்கமச் சூழல் என்று சரியாக புரிந்து கொள்கிறவர்களுக்கு குழப்பம் வராது."

"வயதுக்கு வந்த ஒரு பெண்ணின் கருமுட்டையிலும், ஆண் விந்திலும் உள்ள, தலா நாற்பத்தாறு குரோமோசோம்களில் கோடிக்கணக்கான கேரக்டர்கள் உள்ளன. இவை முக்கியம் என்றாலும், சுற்றுப்புறச் சூழலும் அதற்கு இணையான முக்கியத்துவம் பெறுகிறது.

'உதாரணமாய், ஒரு ஆல விதையில் அகண்ட மரமும், விரிந்த கிளைகளும், காய்களும், கனிகளும் குறிப்பிட்ட சமயத்தில் வெளிப்படுவதற்கான இயல்புகள் உள்ளன. ஆனால், அந்த ஆல விதையை, நட்டு, செடியாக்கி, ஆடு மாடுகளிடமிருந்து பாதுகாக்க வேலி போட்டு, அடிக்கடி உரம் போட்டு வளர்த்தால்தான் அந்த விதை செடியாகி, நிழல் கொடுக்கும் மரமாகும்.'

'இப்படிப்பட்ட சுற்றுப்புறச்சூழல் இல்லை என்றால், அந்த விதைக்குள் இருக்கும், இயல்புகளுக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும்.'

'இதுபோல், உங்கள் தாயாதிகளின் குரோமோசோம்கள், அம்மாவின் வம்சாவழி குரோமோசோம்கள் வழியாய் வந்த, எனது குரோமோசோம்களில், ஏதோ ஒன்றில், நான், ஆய்வு செய்யும் விஞ்ஞானியாய் ஆகக்கூடிய இயல்புகள் இருக்கின்றன. இவற்றை கருமுட்டையில் விதையாக்கி, குழந்தையாய் பிறப்பெடுக்க வைத்து, உரமிடுவதுபோல் படிப்பளித்தவர்கள் நீங்கள். உங்கள் மூலம் மனிதச் செடியான நான், ஒரு விஞ்ஞான ஆலாய், பல்கிப் படர, நீங்கள் எனக்கு உதவி செய்யவேண்டும். காரணம், உங்களை மீறியோ, அம்மாவை மீறியோ எதையும் செய்ய, என் மனம் இடம் தரவில்லை.'

'நம் முன்னோர்களுடைய பதிவுகளையும், நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்த சுற்றுப்புறச் சூழலையும் வைத்துத்தான், நான், ஒரு மேரி கியூரியாய், ஒரு லேடி லவ்லாக்காய், ஒரு இந்திய கல்பனாவாய் மாறப்போகிறேன். இதில் மகத்தான பங்கு, உங்கள் இருவருக்கும்,

நம் மூதாதையர்களுக்கும் உண்டு. தயவு செய்து இந்தச் செடியானவள், ஆலாய்ப் படருவதற்கு, ஆசீர்வதியுங்கள்.”

இதா, வேகவேகமாய் பேசிவிட்டு, மெள்ள மெள்ள மூச்சு விட்டாள். தாயையும், தந்தையையும் மாறி மாறிப் பார்த்தாள். அன்னையானவள், அசையாச் சிலையாய் நின்றாள். மகள் தரப்பு நியாயத்தை புரிந்துகொண்ட பக்குவம், அவள் முகத்தில், லேசாய் படர்ந்தது. அதேசமயம் -

அருணாசலம், மார் தட்டாக்குறையாய் எழுந்து, மகளின் கரங்களை எடுத்து தனது தோள்களில் போட்டுக் கொண்டார்.

அவரும் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதுபோல், முகம் இறுகியும் இளகியும், போனது - சுயமிழந்த, அதேசமயம், அதைவிட சிறந்தத்தோர் கூட்டுப்பொருளான இயல்பு அந்த முகத்தில் மின்னியது. மகளை நெருங்கினார். அவள் இரண்டு தோள்களிலும், தனது கரங்களை, தொங்கப் போடாமல், மடித்துப் போட்டபடியே அறிவுறுத்தினார்.

“ஒனக்குன்னு, இன்னொருத்தன், இனிமேல் பிறக்கப் போறதில்லை. அப்படி பிறந்தவன், இறந்துட்டாலும், நான் கவலைப்படப் போறதும் இல்லை. உன்னோட ஆராய்ச்சியை எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தொடரும்மா. உன்னைப் பிடித்து, உன் அறிவையும் பிடித்து எவன் வந்தாலும், அவன், உனக்குப் பிடித்தால், எங்களுக்குப் பிடித்தது மாதிரிதான். இந்த நிகழ்வு உன் ஆய்வுக் காலத்துலயே நடக்கணும்முன்னு வாழ்த்துகிறேன். உனக்கு இது சம்பந்தமான கவலை, வரக்கூடாதுன்னு ஆண்டவனை பிரார்த்திக்கிறேன்.”

இதா, மென்மையாக உறுதி அளித்தாள்.

“வேலை வெட்டி இல்லாதவளுக்குத்தான் இந்த மாதிரி கவலைகள் பூதாகரமாய் வரும். எனக்கு, ஒருவேளை அந்தக் கவலை சின்னதாய் வந்தாலும், என் ஆராய்ச்சியே, அதை விழுங்கிடும். உங்களோட ஆசையை நிறைவேற்ற முடியலன்னுதான்...”

கீதாவின், குரல் நெகிழ்ந்தபோது, அப்பாக்காரர், அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

"நான் ஒரு விஞ்ஞானியோட தந்தையம்மா. இந்த மகிழ்ச்சி அந்தக் கவலையை தோற்கடிச்சுட்டுமா. ஆனால், ஒரே ஒரு வேண்டுகோள். இனிமேல் உன்னை எப்போ பார்ப்போமோ.. ஒரு மூன்று நாள் லீவு போட்டுட்டு எங்க கூடயே இரும்மா."

தாய்க்காரி, பிரமித்து நின்றபோது, தந்தை, மகள்மேல் ஒரு குழந்தையாய் சரிந்தார்.

மகளோ, ஒரு தாயாய், அவர் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

ஆனந்த விகடன் - 2001

O

# மூலம்

அபலையர் காப்பகம் என்ற பெயர்ப் பலகை, அந்தப் பெயருக்கு உரியவர்களைப் போலவே, எளிமையாகத் தோற்றம் காட்டியது. ஆனாலும், எளிமையும் ஒரு அழகு என்பதை விட, எளிமைதான் எழில் என்பது போல் - அதே சமயம் 'தான்' என்ற கர்வம் இன்றி காட்சியளித்தது. இந்தப் பலகையை தாங்கும் இரும்பு கம்பிகள், லிங்கங்கள் போலவும் அவை பொருத்தப்பட்ட மதில்சுவர்கள் ஆவுடையாகவும் தோற்றம் காட்டின. இவற்றிக்கு இடையே வாய் மூடிக் கிடக்கும் இரும்புக் கிராதி கதவுகள். இப்போது திருவாய் மலர்ந்தருளின. கண்ணபிரான், திருவாய் திறந்து, அதற்குள் அடங்கிய அண்ட சராசரங்களை, யசோதைக்கு காட்டியது போல, உள்ளே மண்டிக் கிடக்கும், மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் ஆகியவற்றை காட்டியது. கூடவே, கண்ணபிரான், காட்டியிருக்காத தொலைபேசிக் கண்ணாடி அறை, அச்சுக் கூடம், நகலகம் ஆகியவற்றை வீடுபடுத்திய சின்னச் சின்ன கட்டிடங்களையும், தையல் கூடம், செயற்கை வைரத்திற்கு பட்டை தீட்டும் தொழிலகம், தச்சுப் பட்டறை, பள்ளிக் கூடங்கள், சொற்பொழிவு மண்டபம், அப்போதுதான் கட்டப்பட்ட திறந்த வெளிக் கலையரங்கம் முதலியவற்றையும், பனித்துளி பனை போல் காட்டி கொண்டிருந்தது.

தாழ் திறந்த அந்த வாசல் வழியாக, குட்டாம் பட்டியர்கள் உரிமையோடு உள்ளே போய்க் கொண்டிருந்தார்கள். வெளி வாசலில் இருப்பக்கமும் நின்று கொண்டிருந்த காப்பகத் தலைவர் லூதர்மேரியும், இளங்கோவும், வந்தவர்களுக்கு, மனமார தலை தாழ்த்தி, வாயாரச் சிரித்து வரவேற்றார்கள். கூட்டத்தினரும் இளங்கோவை 'வணக்கங்கையா'. என்றும், மேரியை 'வணக்கங்கம்மா' என்றும் சொல்லிக் கொண்டே உள்ளே போனார்கள். சாதாரண வேட்டி சட்டையுடன், கால நேரம் என்பது தன்னைத் தான் பின்பற்ற வேண்டும் என்பது போல்

கையில் ஒரு கடிகாரம் கூட இல்லாமல், சூரியப் பிரகாசமான முகங்கொண்ட இளங்கோவையும், வாயில் புடவையுடன், அடக்கமே கம்பீரமாக தோன்றிய லூர்துமேரியையும், அப்போதுதான் பார்ப்பதுபோல் பார்த்தார்கள். ஒவ்வொரு தடவைக்கும், ஒரு புதுப் பொலிவைக் கொடுக்கும் நாற்பது வயதுக்காரர்கள்.

எதிர்ப்பக்கம் ஒரு சுழல் விளக்கு கார் வருவதைப் பார்த்ததும், இளங்கோவும் மேரியும், தோள் மேல் தோளுரச, இணைந்து முன்னோக்கி நடந்தார்கள். அந்தச் சமயம் பார்த்து வாசல் கூட்டத்தில் கசாமுசா... என்ன காரணத்தாலோ காப்பக மேலாளர் தனசேகரன், கூட்டத்தை உள்ளே போகவிடாமல் தடுத்தான். உடனே ஒரு சண்டியர், கூட்டத்தின் தாற்காலிக தலைவராகி கத்தினார்.

'நாங்க போகக் கூடாதுன்னா... இன்னார் இன்னார்தான் வரணுமுன்னு, போஸ்டர்ல போட்டிருக்கலாமே... எதுக்காக அனைவரும் வருகன்னு போஸ்ட்டர்லயும், வரவேற்பு வளைவுகளிலும் போட்டிங்கப்பா...'

'ஒரு தடவையா வருகன்னு போட்டாங்க? ரெண்டு தடவைல்லா போட்டாங்க...'

அவ்வளவுதான். ஆளுக்காள் பேச்சு. அது முற்றி ஏச்சு. கைக்கு கை வீச்சு. குரல்... கூக்குரல்.

சுழல் விளக்கு காரை நோக்கிச் சென்ற இளங்கோவும் மேரியும், காரிலிருந்து இறங்கிய ஒரு ஐ.பி.எஸ். அதிகாரி கூப்பிய கைக்கு, பதில் வணக்கம் போடாமலே, அவசர அவசரமாய் வாசல் பக்கம் ஓடி வந்தார்கள். எஸ்.பி.யின் கண்ணசைவு கட்டளையை தலை மேல் சூடியது போல், வாசல் பக்கம், லத்தி வீச்சுக்களோடு ஓடி வந்த போலீஸ்காரர்களை காப்பகத் தம்பதி, கையாட்டி, முகமாட்டி, அவர்களை பாதி வழியிலேயே நிற்க வைத்தார்கள்.

கூட்டத்தினர் இளங்கோ-மேரி சோடியை பார்த்தது பெட்டிப் பாம்பானார்கள். ஒவ்வொருவரும், ஏதோ ஒரு வகையில் இந்த காப்பகத்தின் உதவியை பெற்றவர்கள். என்றாலும் உதவி பெறாத, ஒரு வெளியூர் விருந்தாளி மட்டும், சிறிது காட்டமாகக் கேட்டார்.

'எங்கள வரச் சொல்லி இப்படி மட்டம் தட்டபடாது'

'நீ சும்மா இரு மச்சான்... அம்மாம்மா... நீங்க போனத சாக்கா வச்சி, இந்த தனசேகரன் எங்கள தடுக்காரு...'

லூர்துமேரி, கருணையையும், கண்டிப்பையும் வார்த்தைகளாக்கி உதிர்த்தாள்.

'இது உங்க காப்பகம்... உங்களோட உழைப்பால் உருவான அமைப்பு இது... உங்களை தடுக்க எங்களுக்கே உரிமை கிடையாது. தம்பி தனசேகரா! உங்களுக்கு, தனி ஆவர்த்தனம் செய்யணுமுன்னு ஆச வந்துட்டு. பேசாம ஏதாவது ஒரு ஊருல போய் செய்துட்டுப் போங்க... அதுக்காக எங்க சனங்களை தடுத்து... காப்பகத்துக்கு ஏன் கெட்ட பேர் வாங்கி கொடுக்கிங்க?'

'சாப்பாடு போதாதுன்னுதான் மேடம்'

'இப்ப கூட தனி ஆவர்த்தன முயற்சியை நீங்க மறுக்கலியே... சரி போகட்டும்... சாப்பாட்டுக்காக சனங்களா... சனங்களுக்காக சாப்பாடா... பற்றாக்குறை ஏற்பட்டால், தென்காசிக்கு போய் வாங்கிட்டு வந்தா போச்சு... வாங்கம்மா... வாங்கய்யா... நாங்களே உங்கள கூட்டிட்டு போறோம்.'

இதற்குள், அந்த தம்பதியர் நேரில் வந்து வரவேற்பதற்காக சுழல் விளக்கு கார் பக்கம் நின்ற எஸ்.பி., எதையும் காட்டிக் கொள்ளாமல், இளங்கோ-மேரி தம்பதி பக்கம் வந்தார். இளங்கோ, அவரது கையைப் பற்றிக் கொண்டு முன் நடக்க, மேரி பின் நடக்க, கூட்டம் முழுவதும் அவர்கள் பின்னால் நடந்தது. நடந்த விவகாரத்திற்கு காரணமான தனசேகரனை, கண்களால் நிமிட்டிக் கொண்டும், காப்பகத் தம்பதியை, பயமற்ற பக்தியோடு பார்த்துக்கொண்டும், அவர்களுக்கு வாழ்க என்ற முழக்கத்தை முழங்க, வாயைத் திறந்து வைத்துக் கொண்டு பின்னர் அந்த முழக்கங்கள், அவர்களுக்கு பிடிக்காது என்பதை உணர்ந்து, அதே சமயம் திறந்த வாய், பயன்பட வேண்டும் என்பது போல், அக்கம் பக்கம் பேசிக் கொண்டும், சிறிசுகள், இலை மறைவு காய் மறைவாய் சோடி சேர்ந்து கொண்டும், பெரிசுகள், உறவினர்களை தவிர்த்து,

உற்ற நண்பர்களை தேடிப் பிடித்து சேர்ந்து கொண்டும், உள்ளே போனார்கள்.

காப்பகத்தின் உள்வளாகம், மாவிலைத் தோரணங் களாலும், மல்லிகைச் சரங்களாலும், காகித கலர் நட்சத்திரங் களாலும், ஆகாயப் பந்தலாய் மின்னியது. இதன் அடர்த்தி, சூரியக் கதிர்களை கட்டிப்போட்டது. வழக்கமான திரைப் படப் பாடல்களுக்குப் பதிலாக, வைஷ்ணவ ஜனதோவிலிருந்து, ஓராயிரம் சூரியன் உச்சி திலகம் வரை பாடல்களாக ஒலித்தன.

மண மேடையில், பக்க வாட்டில், இரட்டை இருக்கை சோபாவில், மணமகள் ராணியும், மணமகன் ராமுவும், கழுத்து நிறைய மாலையுடன், கண் கொள்ளாப் பார்வையுடன், வாய் கொள்ளாச் சிரிப்போடும், ஒருவருக்கொருவர் பதில் வார்ப்பாய் அமர்ந்திருந்தார்கள். மேடையின் நடுப்பகம், ராஜநாற்காலிகள் தவிர்க்கப்பட்டு, சிற்றரசு நாற்காலிகள் போடப் பட்டிருந்தன. மேடைக்கு எதிரே கண் முட்டும் அளவிற்கு கூட்டம். முதல் பகுதியில் ஒரே மாதிரியான வாயில் புடவையோடு, காப்பகப் பெண்கள் பெஞ்சுகளில் உட்கார்ந்திருந்தார்கள். முன் பக்கத்து முகப்பில் மாவட்ட மற்றும் உள்ளூர் வி.ஐ.பி.கள்... கூட்டம் நெடுக இருப்பக்கங்களிலும் நின்று கொண்டிருந்த காப்பக சேவகிகள்...' என்ன வேண்டும் சொல்லுங்கள், என்று கேட்பது மாதிரி, முகம் குவித்து நின்றார்கள். மணமக்களை, அண்ணாந்து பார்த்த காப்பகப் பெண்களில் சிலர், அவர்களைப் போல் தங்களுக்கு ஆக வில்லையே என்ற விசனம். பலருக்கோ, அப்படி ஆகி விட்டதே என்ற சோகம்.

இதற்குள் அமைச்சர் வந்துவிட்டார். முன்னால் பாதுகாப்பு ஜிப்பும், பின்னால் தொண்டர் வேன்களுமாய் வந்ததும், கூட்டத்தினர், அந்த உள்ளூர் மாட்டை விலையாக்க போவதில்லை என்பது போல் சும்மாவே இருந்தார்கள். அமைச்சர், அந்த மக்களைப் பார்த்து தொண்டர்போல் வணக்கம் போட்டபோது, ஒவ்வொரு குட்டாம் பட்டியாரும், தான்தான் அவரை அமைச்சராய் ஆக்கியதுப்போல் ஆசிர்வாதமாய் கைவிரல்களை அகலப் படுத்தினார்.

மாண்புமிகு அமைச்சர், கட்சி பிரமுகர்கள், மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர், சமூகநல அதிகாரி ஆகியோர் சகிதமாக மேடை ஏறினார். அமைச்சருக்கும், அவரது பரிகாரங்களுக்கும் கிடைக்காதுபோன ஆரவாரம், காப்பகப் பொறுப்பாளர்களான லூர்துமேரியும், இளங்கோவும் மேடை ஏறியபோது, வட்டியும் முதலுமாய் இரண்டு நிமிடம் நீடித்தது.

தமிழ்த் தாயை வாழ்த்தி வரவழைத்த பிறகு, லூர்துமேரி வரவேற்புரை வழங்க வந்தாள். அப்போது வயதுக்கு வராத சிறுமிகள் முதல் வயதில் முதிர்ந்த மூதாட்டிகள் வரை, அவரை தாயாக்கி மகளாக்கி பார்த்தது. கூட்டம் மேரியின் முகத்தையே உன்னிப்பாகப் பார்த்தது. அந்த அம்மாவும், முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட ஜோக்குகள், ஆவேசங்கள், நீட்டல் முழக்கங்கள் ஆகிய மேடை லட்சணங்கள் ஏதுமில்லாமல், இயல்பாகப் பேசினாள். அமைச்சரையோ, அதிகாரிகளையோ பேரிட்டு அழைக்காமல் நேரிடையாகப் பேசினாள்.

'அனைவருக்கும் வணக்கம். மேடையில் இருக்கும் நண்பர்களையும், கூட்டமாய் அமர்ந்திருக்கும் உங்களையும், நான் வரவேற்பது, என்னை நானே வரவேற்ப்பது மாதிரி. ஆனாலும் சில புது முகங்கள் கண்ணில் படுவதால், இந்தக் காப்பகத்தைப் பற்றி சுருக்கமாக கூற விரும்புகிறேன்.

"பத்தாண்டுகளுக்கு முன்பு, தர்மபுரியில் நல்லதோர் அரசு வேலையில் பணியாற்றிய என் கணவர் இளங்கோவும், ஆசிரியையாக பணியாற்றிய நானும் மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் தொண்டாற்ற வேண்டும் என்ற உந்தலில் இந்த குட்டாம் பட்டியின் இதே இடத்தில், ஒரு சேவக குடிசை போட்டோம். அன்று உங்கள் ஆசிர்வாதத்துடன் நடப்பட்ட அருகம் புல், இன்று ஆலமரம் போன்ற பிரதான கட்டிடத்தையும், அதன் விழுதுகள் போன்ற கிளைக் கட்டிடங்களையும் கொண்டுள்ளது. அப்போது ஏன் வந்தோம் என்று நினைத்த நாங்கள், இப்போது முன்கூட்டியே வந்திருக்க கூடாதா என்று நினைக்கிறோம்."

பலத்த கைதட்டல்கள், அவளை மேற்கொண்டு சிறிது நேரம் பேசவிடாமல் கட்டிப்போட்டது. அந்த தட்டல்களுக்கு கைக்கூப்பிவிட்டு, ஓசை அடங்கியதும், லூர்துமேரி மேலும் உற்சாகமாகப் பேசினாள்.

"சரி..... சொந்த புராணத்தை விட்டு, இந்த கல்யாண புராணத்திற்கு வருகிறேன். மணமகள் ராணி, மூன்றாண்டுகளுக்கு முன்பு, அகலிகையாகி, இங்கே கொண்டுவரப்பட்டாள். ஓராண்டுக்கு முன்பு, மணமகன் ராமு, 'அபலையர்களும் - ஆணாதிக்கமும்' என்ற தலைப்பில் பல்கலைக் கழகத்தில் முனைவர்ப் பட்டம் வாங்குவதற்காக இந்த காப்பகம் வந்தார். என் மகள்களிடம் நேர்காணல் செய்தார். உள்ளத்தால் களங்கப் படாத என் மகள் ராணியை அவருக்குப் பிடித்து விட்டது. சொத்து சுகத்தை தூசாக உதறிவிட்டு, மணமுடிக்க வந்துவிட்டார். இப்படி ஊருக்கு பத்து பேர் கூட வேண்டாம்-ஒருவர் முன்வந்தாலே, பாரதம் வாழும் கிராமங்களை புதுமையாக்கி விடலாம். இந்த திருமணத்தின் மூலம், நான் மூன்றாவது தடவையாக மாமியாராகிறேன். இப்படி முந்நூறு தடவை மாமியாராக விரும்புகிறேன்."

கூட்டத்தில் ஒரு சிலரே முதலில் கைதட்டினார்கள். அந்த தட்டல்களை புரியாதவர்கள், பக்கத்தில் இருந்தவர்களிடம் காரணம் கேட்க அவர்கள் 'மூன்றாவது தடவை மாமியார்' என்பதற்கு விளக்கம் கொடுத்திருக்க வேண்டும். இதனால், கூட்டத்தின் சராசரிகள், அவள் பேச்சுக்கு மீண்டும் தடங்கல் ஏற்படும் அளவிற்கு பலமாக தலையட்டி வலுவாக கைதட்டினார்கள். லூர்து, பேச்சை சிறிது நிறுத்திவிட்டு கூட்டத்தை, குறுஞ்சிரிப்பாகப் பார்த்துவிட்டு தொடர்ந்தாள்.

"மணமகள் என் மகள் என்பதால், நான் அதிகமாக குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் மணமகனான என் மருமகனைப் பற்றி சொல்லியாக வேண்டும். என் கணவர் இளங்கோவைப் போல, இவரும் ஆணாதிக்க சிந்தனை இல்லாதவர். இப்படி சொல்வது எதிர்மறைதான். ஆக்க பூர்வமாக சொல்ல வேண்டுமானால் மணமகன் பெண்ணியவாதி. ஒருவனுக்கு ஒருத்திதான் என்ற நமது தாரக மந்திரமாம் தமிழ் பண்பாட்டின் சின்னமாவார்."

"இப்போது நம் கண் முன்னால் வளர்ந்து மேலோங்கிய நமது அமைச்சர் முடிசூடி, இந்த திருமணத்தை இனிதே நடத்தி வைப்பார். டில்லிக்கு ராசாவானாலும், தாய்க்கு பிள்ளை என்பதுபோல் நமக்கு எப்போதும் பிள்ளையான தம்பி முடிசூடி வருகிறார்."

லூர்துமேரி பேசி முடிக்கவும், உள்ளூர் அமைச்சரான முடிசூடி மைக்கருகே போவதற்கும் சரியாக இருந்தது. மேரிக்கு கிடைத்த கைத்தட்டல்களை, அமைச்சர் தனக்குத்தான் என்று மானசீகமாக வழிப்பறி செய்துகொண்டு, பேச்சாற்றலைக் காட்டினார்.

"டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, ராமாமிர்தம் அம்மையார், அன்னை தெரேசா ஆகியோரின் முப்பெரும் உருவகமாகத் திகழும் லூர்துமேரி அம்மையாரும், அவரை பேசவிட்டு ரசிக்கும் பெண்ணியச் சிந்தனையாளர் இளங்கோவும், எனக்கு அம்மையப்பன். என் படிப்பிற்கு உதவியவர்கள். என்னை அரசியல் மேடையில் உலா வரச் செய்தவர்கள். இப்படிப் பட்ட இந்த சேவை இமயங்கள் இன்று, மூன்றாண்டுகளுக்கு முன்பு கொடியோரால் கற்பழிக்கப்பட்டு, ஒரு புதர்ப் பக்கம், குற்றுயிரும் குலையுயிருமாய் வீசப்பட்ட ராணி அவர்களை..."

இந்தச் சமயத்தில், காப்பகச் செயலாளர் இளங்கோ, வேக வேகமாய் எழுந்து, அந்த இளம் அமைச்சரின் காதைக் கடித்தார். உடனே அமைச்சரும் காது வலியில் அவதிப்படுவது போல பேசினார்.

'நான் பேசியது தவறுதான் நண்பர்களே தவறுதான். கற்பழிக்கப்பட்ட ராணியின் கற்பழிப்பைப் பற்றியோ, அவர் புதருக்குள் வீசப்பட்டதைப் பற்றியோ நான் பேசியிருக்கக் கூடாதுதான். இதனால் மணமகளும் என் கண் முன்னால் காட்சிதரும் காப்பகப் பெண்களும் இன்னும் அழுகையை அடக்க முடியாமல் அல்லல் படுவதை அறிவேன். 'இந்தச் சந்தர்ப்பத்தில் இளங்கோ அவர்கள் காதில் சொன்னதை பகிரங்கமாக அறிவிக்க கடமைப்பட்டுள்ளேன். ஒரு பெண்ணை, அவள் எந்த நிலையில் இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்ட

பிறகு, அவளைத் தள்ளி வைப்பதோ அல்லது அவளை உதறிவிட்டு இன்னொரு பெண்ணோடு இணைவதோ, அசல் போக்கிரித் தனம். ஒரு சமூக விரோதியால்தான், தாலி கட்டிய மனைவியை தள்ளி வைக்க முடியும் என்று இளங்கோ அவர்கள் அன்று சொன்னதையும், இன்று சொன்னதையும், இனிமேல் அப்படி சொல்லப் போவதையும் இணைத்து, இளைஞர்களுக்கு அறிவுறுத்த கடமைப் பட்டுள்ளேன்.

'நான் பெரியார் பக்தன் என்றாலும் சகுனங்களில் நம்பிக்கை உள்ளவன். உள்ளத்தால் பொய்யாத, உடலால் ஓயாத இளங்கோ-மேரி தம்பதி நடத்தி வைக்கும் இந்தத் திருமணம் பல்லாண்டு பல்லாண்டு காலம் உள்ள அளவிற்கு நீடிக்கும். சிலர், மதம் மாறி திருமணம் செய்வார்கள். சிலர், சாதி மாறி மணப்பார்கள். ஆனால், எனது ஆசான்களான அய்யா இளங்கோ அவர்களும், அம்மா மேரி அவர்களும் மதங்களையும், சாதிகளையும் புறம்தள்ளி, கலப்புமணம் செய்து கொண்ட வழிகாட்டிகள். இவர்களின் வழியில் எந்த தம்பதியும் நடந்தால், தொல்லை இல்லை... துயரம் இல்லை... மாறாக நன்மை கூடும்... நல்லது அனைத்தும் தேடிவரும்.'

அமைச்சர் முடிசூடியின் குரல் வறண்டு போயிருக்க வேண்டும். குறிப்பறிந்து ஒருவர் நீட்டிய ஒரு தண்ணீர் குவளையை புறந்தள்ளி விட்டு, ஒரு கோலாவை குடித்தார். குடித்த வாயை தோள் துண்டால் துடைத்த படியே வடிகட்டிப் பேசினார்.

'நமது இளங்கோ அவர்களும், லூர்துமேரி அம்மையாரும் சுப சகுனங்கள். இவர்கள் ஏற்பாடு செய்த திருமணமும் சுபமாகவே நீடிக்கும். எனது அம்மையப்பனிடமிருந்து, நான் கற்று கொண்டதை கடைபிடிப்பதை உங்களுக்கு சொல்ல கடமைப்பட்டவன். இளங்கோ அவர்கள், தனது மனைவியான லூர்து அம்மையாரை 'நீங்க நாங்க' என்று பன்மையில்தான் அழைப்பார். இவர்கள் போல் அனைவரும் மனைவியரை இனிமேலாவது 'நீங்க நாங்க என்று அழைக்காது போனாலும் 'நாயே... பேயே... நரியே... மாடே.... முண்டமே... பட்டிக்காடே.... காண்டாமிருகமே... கழுதையே...' என்று திட்டாமலாவது இருக்க வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்'

அமைச்சர், தாம்பளத் தட்டில், மஞ்சள் அரிசி, மங்கலத் தேங்காய், வெற்றிலைப் பாக்கு வகையறாக்களுக்கு மத்தியில் இருந்த மஞ்சள் சரடை எடுத்தார். பின்னர் பின் யோசனை செய்தவர் போல், இளங்கோ - மேரி தம்பதியை கட்டாயமாக வரவழைத்து, அவர்களது கரங்களில் தாலி சரட்டை திணித்து, இருவரையும் சேர்ந்தாற் போல் மணமகன் ராமுவிடம் கொடுக்கச் செய்தார். மேளங்கள் முழங்கின. கை தட்டுகள் வெடி வேட்டுகள் போல் ஒலித்தன... மணமக்களின் பெயர்களைச் சொல்லி ஒரு வாழ்க என்றால், இளங்கோ-லூர்து தம்பதிக்கு பல வாழ்க...

திருமணம் முடிந்ததும், விருந்துக்கு நேரமில்லை என்று உடனடியாய் புறப்பட்ட அமைச்சரையும், எஸ்.பியையும் வழியனுப்பி வைப்பதற்காக, மேரியும் இளங்கோவும் வாசல் வரை வந்தார்கள். வரும்போது வரவேற்க முடியாமல் போனவர்களை, போகும் போதாவது வழியனுப்பி வைப்பதே நயத்தகு நாகரீகம் என்று கருதி அவர்களது வாகனங்கள் கண்மறைவது வரைக்கும் வாசல் வெளிப்பக்கமே காத்து நின்றார்கள். திரும்பி நடக்க போனால், வாசல் பக்கம் இரண்டு பேர்... ஒன்று பழைய முகம்... இன்னொன்று பார்த்தது போன்ற முகம்.

பழைய முகக்காரிக்கு, லூர்துமேரியை விட ஒரு வயது அதிகமாக இருக்கும். அதிகமாக படிக்காத அசல் மண் வாசனை அவள் முகத்தில் துளிகளாகவும் தலையில் தூசி துப்படாக்களாகவும் வெளிப்பட்டன. அவள் முகம் பழுத்துப் போய் இருந்தது. கைகால்கள், சதைக்குச்சிகளாகத் தோற்றம் காட்ட, கண்கள் குழிகளாய், தொண்டை, எலும்பு வளைவாய், நல்லதொரு காட்சிக்கு, எதிர்க் காட்சியாய் நின்றாள். நவீன ராமன் விட்டுப்போன கிராமத்து வனவாசக்காரி. அவள் அருகே நிற்கும் சிறுவன், வேர் ஆடும் செடிபோல் குழைந்து நின்றான். ஒழுங்கற்றுப் போன வலது கால்... இடையில் இருந்து நழுவி கைகளால் பிடித்து நிறுத்தப்படும் அழுக்கு டவுசர். கோராதி கோரம்... உடம்பு எங்கும் சிரங்குத் தடயங்கள்... நேருக்கு நேர் பார்க்காமல் கவிழ்ந்தும், அண்ணாந்தும் பார்க்கும் வறண்டு போன கண்கள்...

இளங்கோ, அந்தப் பெண்ணை நேருக்கு நேராய் பார்க்க முடியாமல் தடுமாறினார். அவள் கழுத்தில் தொங்கிய தாலி தன்னை தூக்கு கயிறாய் பற்றுவது போல நெளிந்தார். இதற்குள் திருமதி லூர்துமேரி இளங்கோ, பழக்கப்பட்டது போல் தோன்றும் அந்த பதிமூன்று வயதுப் பையனை, தடுமாற்றத்தோடு பார்த்தபோது, பழைய முகக்காரி, மேரியை அந்தப் பையனுக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

'இவள்தாண்டா உன் அம்மா... நீ மூணு வயசுக் குழந்தையா இருக்கும் போது, உன்னை விட்டுட்டு, என் கழுத்துல தூக்குக் கயிறு மாட்டுன இந்த மனுசனோட ஓடிப் போனவள்... சரி... சரி... புறப்படு... வேற ஏதாவது ஒரு அனாதை ஆசரமத்தைப் பார்த்து போவோம்...'

நோயும் நொம்பலையுமான அந்த சிறுவனும், தனக்குத் தானே பாடை விரித்தது போல் தலைவரி கோலங் கொண்ட அந்தப் பெண்ணும் திரும்பி பாராமல் நடந்தார்கள்.

ஓம் சக்தி தீபாவளி மலர், 2001

O

# பாமர மேதை

தாமோதரன், சுற்றியிருந்த ஈரத்துண்டு, அவன் இடுப்பில் இருந்து நழுவி, தொடைகள் வழியாக ஊர்ந்து, முழங்கால்களில் ஓடி, தரையில் குதித்து விழுந்தது. அந்த துண்டுக்கு இருந்த நாணம் கூட, அவனுக்கு இல்லை. கீழே விழுந்த அந்த ஈரத்துணி, யாரையும் பார்க்க விரும்பாதது போல் ஒட்டு மொத்தமாய் சுருங்கி சுருண்டு கிடந்தது. ஆனால் அவனோ வாராந்தாவிருந்து வரும் வெளியாட்களின் நேரடிக் கண்பார்வைக்கு உட்படும் அந்த அறையின் கதவை சாத்தாமலே, அங்கும் இங்குமாய் ஓடினான். பீரோவை திறந்து துணிகளை வீசிப்போட்டான். சுவரோடு பொருத்தப்பட்ட ரேக்கில் உள்ள துணிமணிகள் உள்ளிட்ட அத்தனைப் பொருட்களையும் கீழே வீசிப் போட்டான். பிறகு மெத்தைக்கட்டிலின் அடிவாரத்தில் தவளைபோல் தாவி தவழ்ந்து தேடினான். மீண்டும் நிமிர்ந்து டெலிபோனை தூக்கிப்பார்த்தான். சாளரத் திரைச்சிலையை இழுத்துப்பார்த்தான். பின்னர் காலில் மிதிபட்ட அண்டிராயரை அடையாளம் கண்டவன் போல், அதை எடுத்து இடுப்புக்கு சரிசமாமாய கொண்டுவந்து, கால்களில் நுழைக்கப்போனான். இதற்கு பிறகு, ஒருசின்னப் பிள்ளையின் செல்லக் கோபத்தோடு கத்தினான்.

'உன்னத்தான் ... இங்கே வாயேன்'

தன்னைத்தான் என்பது போல், ஒரு ஆறு வயது பெண்குட்டி துள்ளி ஓடிவந்தது. பின்பு அவன் நின்ற கோலத்தை பார்த்துப் பயந்து 'மம்மீ' என்று முச்சு விடாமலே கத்தியபடி, அந்த அறையை விட்டு ஓடி, மூன்று நிமிடங்களில் அம்மாவின் முதுகைத் தள்ளியபடியே உள்ளே நுழைந்தது. கணவனை கண்ட தமயந்தி, மகளை அவசர அவசரமாக வெளியே தள்ளி, அந்தச் சாக்கில், அவனுக்கு முதுகை காட்டிய படியே கத்தினாள்.

'என்ன கண்றாவி இதெல்லாம்'

'கால் நுழையமாட்டேங்குது தமயந்தி'

"தலையணை உறைக்குள்ளே எப்படி கால் நுழையும்? அதோ மேஜையிலதான், பேண்ட், சட்டை, பனியன், அன்டிரயார்னு ஒன்று மேல ஒன்றாய் அடுக்கி வச்சிருக்கேனே... எடுத்துப் போட்டுக்க வேண்டியது தானே?"

"அயம் ஸாரிமா"

'ஸாரிய கட்டாம, பேண்டை போடுங்க'

ஒரு ஐந்து நிமிட அனுமானத்திற்கு பிறகு, தமயந்தி உடலோடு சேர்த்து அவன் பக்கமாய் முகம் திருப்பினாள். அப்போது, அவன், பேண்ட் குழாய்களுக்குள் கால்களை தாறுமாறாக நுழைத்துக் கொண்டிருந்தான். அதன் முன்பக்கத்தை பின்பக்கமாக்கி கால்களை விடப்போனபோது, அவள் சிரித்தாள். பின்னர் அவனது பின்பக்கமாய் போய், தனது முன்பக்கத்தை, அவன் மீது சாய்த்துக்கொண்டே, அவன் பிடித்த பேண்ட்டை திருப்பி பிடித்து 'சரி இப்ப காலை விடுங்க' என்றாள். ஆழம் தெரியாமல் காலை விடுவது போல் அவன் அல்லாடியபோது, அவளுக்கு பொம்மலாட்டமே நினைவுக்கு வந்தது. அதனால் என்னவோ அவள் பொம்மலாட்டக்காரியானாள். அவனுக்கு ஆடை போட்டு அழகு காட்டி உபதேசித்தாள்.

'இதோ பாருங்க... இது பிளட் பிரசர் மருந்து... இது டயாபட்டீஸ் மருந்து, இது சயனசுக்கு... இது இருதயத்துக்கு... அது பல்வலிக்கு... இந்த இரண்டும் காலையில... அந்த இரண்டும் மத்தியானம்... இந்த டியூப் மருந்து ஸ்பான்டிலிட்டிக்கு... கழுத்துலயும், தோளுலயும் மட்டுந்தான் தடவணும். போன தடவ மாதிரி விழுங்கிட்டு கத்தாதீங்க.'

தமோதரன், அவள் காட்டிய விதவிதமான மாத்திரைகளை விதவிதமாய் நெளிந்து பார்த்தான். ஒன்றுமே புரியாமல், அவன் முகமே முட்டையானது. ஆனாலும் அவள் அந்த முட்டையை அடைகாத்து வெளியே கொண்டுவந்தாள்.

"சரி... வேளாவேளைக்கு மருந்த பேப்பரில் மடித்து அதற்கு மேல காலையும் மாலையுமுன்னு எழுதிடுறேன். மாற்றி சாப்பிடாம இருந்தா போதும். இந்த காகிதத்தில எழுதி இருக்கிறது சூட்கேஸ்க்கு நம்பர் பூட்டு... மூன்றுதடவ ஒன்பது... பூட்டை தலைகீழா கவிழ்த்து போட்டிங்கன்னா ஆறா ஆயிடும் ஜாக்கிரதையா திறங்க... நான் சொல்றது புரியுதா ?"

தாமோதரன் புரிகிறமாதிரி தலையை மேலும் கீழுமாகவும், புரியவில்லை என்பது போல் பக்கவாட்டிலும் ஆட்டிக் காட்டினான். அவளுக்குத்தான் புரியவில்லை. கூடவே ஒரு பயம். ஒரு வேளை மருந்து மாத்திரைகளை சாப்பிட மறந்துட்டா?

'ஏங்க நானும் கூட வரட்டுமா?'

'அதான்... எங்க அண்ணா வாராரனே... எங்கிட்ட சொன்னத அவன் கிட்டேயும் சொல்லு.'

தமயந்தி, அதுவும் சரிதான் என்பது போல் வெளியே எட்டிப்பார்த்தவள், உங்களுக்கு நூறு ஆயுசு என்று அத்தானை கண்களால் வரவேற்றபடியே, அறைக்குள் கொண்டு வந்தாள். அண்ணனை, தமோதரன் பிளாங்காக பார்த்தான். தலையை ஆட்டி குழப்பத்தை வெளிப்படுத்தினான். அந்த பார்வையின் பொருள் புரிந்தவராக உள்ளே வந்தவர் தன்னை அவனுக்கு அறிமுகம் செய்து கொண்டார்.

'நான் உன் அண்ணன்டா ... கூட பொறந்த அண்ணன்டா...'

அண்ணனை அப்போது தான் அடையாளம் கண்டு கொண்டவன் போல், தமோதரன் பிசைந்த கைகளை விடுவித்துக் கொண்டபோது, தமயந்தி 'மூத்தாருக்கு' ஆறுதல் சொல்வது போல் பேசினாள்.

'என்னயே இவருக்கு சிலசமயம் அடையாளம் தெரியாமல் போவுது.' இப்படித்தான் ஒருநாள் மார்க்கெட்ல....'

மூத்தார் இடைமறித்தார்

'அது என்ன என்னையே ஏகாரம்...நீ இவனோட எட்டு வருசமா தான் குப்பைக்கொட்டறே... நான் முப்பத்திரண்டு வருசமா.. கூட இருந்தவன்.'

'எனக்கு நாத்தனார் இல்லாத குறையை நல்லாத்தான் போக்குறீங்க.'

தமயந்தி, மூத்தார் பதிலுக்குச் சொன்ன வார்த்தைகள் காதுகளில் ஏற்றியபடியே, தனக்குள்ளேயே தன்னையே ஒரு ஆய்வு பொருளாக்கினாள்... மனைவி, பிற்காலத்தில் வந்தாலும் அவளுக்கும் கணவனுக்கும் இருக்கும் நெருக்கம் பெத்தவங்களுக்கோ உடன் பிறப்புகளுக்கோ இருக்க முடியுமா?

அவளுக்கு, தன்னை ஆய்வு செய்யச் செய்ய, கடைந்ததாக கூறப்பட்ட பாற்கடலில் ஏற்பட்டது போல், துவக்கத்தில் சந்தேகம்... அப்புறம்... பொறாமை... கூடவே... கோபம்... இறுதியில் எல்லா உணர்வுகளையும் மழுங்கடித்தபடி நாணம் வெளிப்பட்டது. மூத்தாரை சிரிப்போடு பார்த்தாள். பிறகு அந்த சிரிப்புக்கான காரணத்தை அவர் கண்டறியாமல் இருப்பதற்கு 'காபி குடிக்கிறிங்களா?' என்றாள். அவரோ அவசரப்படுத்தினார்

'சரி... ரயிலுக்கு நேரமாயிட்டது. இன்னும் இவனை நீ ரெடியாக்கலையா ?'

'இவரா ரெடியாகணும்... நான் என்னத்தை ரெடியாக்குறது? இதோபாருங்க... சட்டப் பொத்தான்களை எப்படிப் போட்டிருக்கிறாருன்னு'

தமயந்தி, கணவனின் தாறுமாறான சட்டை பித்தான்களை அவன் கழுத்துக்கு இன்னொரு கழுத்துப்போல் தலைநீட்டி அந்த பித்தான்களை கழட்டி மீண்டும் தக்கபடி மாட்டப் போன போது, மூத்தார் அதட்டலாகப் பேசினார்.

"அவனையே பட்டன் மாட்டச் சொல்லேன். இவனை இப்படி பொஸ்ஸஸ்சிவா ஆக்கி ஆக்கியே, உருப்படியில்லாம செய்துட்டே... அவனை செயல்பட விடும்மா."

தமயந்தியின் முகம் சுண்டியது. பாதி பட்டன்களை மாட்டாமலே, மூத்தாரை ஏறிட்டுப் பார்த்தாள். ஏறிப்போன கோபத்தை இறங்க வைப்பதுபோல், முகத்தை இறக்கினாள். 'ஒரு கோமாளிக்கு என்ன கட்டி வைச்சிட்டிங்க' என்று கோபம் கோபமாய் கேட்கப் போனாள். கல்லூரிக் காலத்தில், தன்னைச் சுற்றி சுற்றி வந்த சில இளவட்டங்களை கூட நினைத்துப் பார்த்தாள். நினைக்க நினைக்க, தன் மேலே, ஒரு அருவெறுப்பு ஏற்பட்டது. 'இந்த குழந்தையைப் பற்றி தப்பாக நினைப்பதோ இதன் சாக்கில் தப்பான எண்ணங்களை ஊடுருவ விடுவதோ பெற்ற குழந்தையையே கொல்வது மாதிரி, இதை மூத்தார் சொல்லி இருக்கமாட்டார்... இவரோட பெண்டாட்டியும் மாமனார் மாமியாரும் தெரிவித்த கருத்துக்களை சொந்த கருத்தா சொல்கிறார். இதுல, கூட இவர் டுப்ளிக்கேட் தான். ஆனாலும் சூடா ஒன்னு சொல்லி வைக்கணும்.

'எருதுக்கு நோவு... காக்கைக்கு கொண்டாட்டம் என்கிற மாதிரி பேசாதீங்க அத்தான்'

மூத்தார் திடுக்கிட்டுப் போனார். அவளைச் சமாதானம் செய்வதற்கு வார்த்தைகள் கிடைத்தாலும் வாய் ஒத்துழைக்க வில்லை. பேச்சை மாற்றுவதற்காக ஒரு விவரம் சொன்னார்

'ஸாரி. தமயந்தி! என்னால இவனோட போக முடியாது. ரயில் சிநேகிதம் இல்ல... ரயில் வரைக்குந்தான் சிநேகிதம்... ஏன் அப்படி முழிக்கே...?'

'என்னத்தான் நீங்க? இவர கோழிக்கோட்டில் கொண்டுபோய் கூட்டி வருவதற்காகவே அந்த பக்கமாம் டூர் போட்டிருக்கிறதாய் சொன்னீங்க

'இப்பவும் இல்லங்கல... ஆனால் எங்க அமைச்சர் டில்லியில் இருந்து நாளைக்கு வரதா மத்தியானம் தான் டெலக்ஸ் வந்தது. நான் ஆபீஸ் ஹெட் என்கிற முறையில இல்லாட்டால் என் தலை தானே உருளும்.'

'முன்கூட்டிச் சொல்லியிருந்தால் நானாவது கூடப்போய் இருப்பேனே?'

'இப்படித்தான் எதுக்கெடுத்தாலும் அவனை சுயமா விடமாட்டேங்கிற... விட்டுப்பிடிம்மா... தண்ணீர்ல இறங்கினால்தான், நீச்சல் அடிக்க முடியும். 'டேய்! ரயிலுக்கு நேரமாயிட்டு... புறப்படுடா.

தமயந்தி, மௌனியானாள். கணவனை விட்டு, சிறிது விலகி ஒரு சுவரில் போய் சாய்ந்துகொண்டாள்.

அந்த இருவருக்கும் நடந்து முடிந்த விவகாரமோ அல்லது நடந்து கொண்டிருக்கும் மௌனப்போரோ புரியாமல் விழித்த தாமோதரனின் கையை பிடித்து இழுத்தார் அண்ணன். மனைவியைத் திரும்பி திரும்பி பார்த்தபடியே, அவன், துள்ளாத ஆட்டுக்குட்டியாய் நடந்தான். படிக்கட்டுகளில் சகோதர காலணிச் சத்தங்கள், ஆலைச் சங்குபோல் ஓங்கி, பின்னர் சன்னம் சன்னமாய் குறைந்துக் கொண்டிருந்தது. தமயந்திற்கு மனம் கேட்க வில்லை. அவர்கள் காருக்குள் நுழையும்போது, மாடி தாழ்வாரத்தில் ஓடி வந்து நின்றபடியே வார்த்தைகள் ஒன்றை ஒன்று முட்டி மோத மூத்தாரிடம் பேசினாள்,

'அத்தான்... உங்க தம்பிய வேளாவேளைக்கு மாத்திரையை போடச்சொல்லுங்க. யாரவது அப்பர் பெர்த்துக்குப் போகச்சொன்னால் முடியாதுன்னு சொல்லச் சொல்லுங்க. திரும்பி வரும்போது உங்க தம்பிய நீங்கதான் கூட்டி வரணும். அய்யோ கடவுளே... சூட்கேஸயும், பெட்டியையும் எடுக்க மறந்துட்டார் பாருங்க.'

தமயந்தி ஓடிப்போய் இரண்டு கைகளிலும் ஒரு சின்ன பெட்டியையும் ஒரு பெரிய பெட்டியையும் பிடித்துக்கொண்டு, ஒரு தட்டை தாழ்த்திய தாராசு போல் கைகளை ஆக்கிக் கொண்டு கார் அருகே வந்தாள்.

'இந்தாங்க உங்க தம்பியோட பெட்டிங்க... அவர பத்திரமா பார்த்துக்கச் சொல்லுங்க.'

சொல்லுக்குச் சொல் கணவனை அவர் அவர் என்று அடையாளப்படுத்தும் மைத்துனி, இப்போது 'உங்க தம்பி உங்க தம்பி' என்று குத்திக் காட்டுவதை புரிந்து கொண்டவர் போல், அண்ணன்காரர், பதிலுக்கு ஒரு புலி உருமலையே பதிலாக்கிவிட்டு ஆத்திரத்தை காரின் ஆக்ஸிலேட்டரில் காட்டினார். எதுவுமே நடக்காதது போல், இடித்த புளியாய் இருந்த தம்பியைப் பார்த்ததும், மைத்துனியிடம், தான் அப்படி கமென்ட் அடித்திருக்க கூடாது என்றும், ஒரு பின் யோசனை. அவள் மீது ஒரு சின்ன அனுதாபம்.

சென்ட்ரல் ரயில் நிலையத்தில், ஆறாவது பிளாட்பாரத்தில் மங்களூர் மெயில், அந்த இளம் இரவில் மங்கிப்போன வெளிச்சத்தில் கண்ணுக்கெட்டாத தொலைவு வரை நீண்டு நின்றது. அண்ணனும் தம்பியும் வெளியே எதையும் காட்டாமல் பச்சைச் சாளரக் கண்ணாடிகளை முகமுடியாய் கொண்ட ஒரு பெட்டியில் ஏறினார்கள். இப்படிச் சொல்வது கூட தவறு. பெட்டிப் படுக்கைகளை ரயில் தளத்தில் வைத்துவிட்டு ஏறிய அண்ணன், தம்பியின் கையைப்பிடித்து ஏற்றினார். இருவரும் வெள்ளைக் கண்ணாடி தள்ளுக் கதவை தள்ளிக் கொண்டே, ராஜபாட்டை மாதிரியான பாதையில் நடந்தார்கள். இடது பக்கம், வசதியான மருத்துவ மனைகளில் இருக்குமே தீவிர சிகிச்சைப்பிரிவு, அது மாதிரியான குளிர் சாதன படுக்கைகள்... வலது பக்கம் புறநோயாளிகளுக்கு அதே மாதிரியான நீளம் குறைந்த மெத்தைப் படுக்கைகள். இவை இரண்டிற்கும் இடையே சென்றவர்கள், இந்த பெட்டியின் இராணித்தேனீ உறைவிடம் போல் இருந்த, முதலாவது வகுப்பு குளிர் சாதன பகுதிக்கு வந்தார்கள். வெல்வெட் தரை... தொட்டால் சிணுங்கி செடியின் இலை போன்ற மெத்தைப் படுக்கைகள்.

அண்ணன், அந்த ரயில் பெட்டியின் நுழைவாசலுக்கு வெளியே நின்று கொண்டே பெட்டி படுக்கைகளை கீழ்த்தள இருக்கையின் அடிவாரத்தில் திணித்தார், பின்னர், தம்பியை உள்ளே தள்ளிவிட்ட படியே, 'இதுதான் உன் சீட்டுடா... லோயர் பெர்த்' என்றார். சிறிது நேரம் நின்றார். .பிறகு புறப்பட்டார். அவருக்கு அவசரமில்லைதான். மீண்டும் யோசித்தபோது மைத்துனி சொன்னது நிரடலாகப் பட்டது. அவள் இடத்தில்

தன்னை நிறுத்தாமல், தன்னிடத்தில் அவளை நிறுத்தி சிந்தித்தபோது, 'உங்க தம்பி' என்ற மைத்துனியின் சொல், அவருக்கு காதுகளில் கல்லெறியாய் விழுந்தது. அவள் ஒரு ராட்சசியாக மனதிற்குப் பட்டது. ஆகையால், தாமோதரனை, தனது தம்பியாக நினைக்காமல், தமயந்தியின் கணவனாக நினைத்தது போல், 'வாரேண்டா' என்று கூட சொல்லாமல் புறப்பட்டு விட்டார்.

பெண் என்றும் பாராது, அழுத்தமாக உரசிக்கொண்டுபோய் இருக்கையில் உட்கார்ந்த தாமோதரனை, ரயில் தரையில் கால் ஊன்றி, குவியலாய் நின்ற மூன்று பெண்களில் இருவர் முறைத்தார்கள். இவர்களில் சின்னவளான ஒருத்தி, 'போயும் போயும் இவன் தானா கம்பெனியா கிடைச்சான்' என்பது மாதிரி அவனைப் பார்த்தாள் என்பதை விட, பழித்தாள் என்று கூட சொல்லலாம். அவளுக்கு, தனது மானசீகமான மன்மதக் கற்பனை தகர்ந்து போன கோபம். அந்த பெண்களை விட அவர்களை வழியனுப்ப வந்தவன் போல் பிளாட்பாரத்தில் நின்ற நடுத்தர மனிதருக்கு பெரும்கோபம். வெளிச்சத்திலேயே இப்படி உரசுகிறவன், இவள்கள் தூங்கும் போது எப்படியோ?

அந்த நடுத்தரம், அந்த பெண்களை கண்களால் நிமிட்டி, அதே கண்களால் தாமோதரனை சுட்டிக்காட்டி 'ஜாக்கிரதை கேர்புல்' என்றது. உடனே சின்னவள் 'எனக்கு காராத்தே தெரியும் என்கிறது உங்களுக்கு தெரியாதா அத்திம்பேர்?' என்றாள். அப்படி சொன்னபடியே, தாமோதரனை பார்த்தாள். அவனது அலட்சியம், இவளை உலுக்கியது. இவளுக்கு காரத்தே தெரியும் என்பது அசல் கரடி. ஒருவேளை அவனுக்கு காராத்தே தெரியுமோ... அதனால் தான் இந்த அலட்சியமோ... குருவாயூரப்பா என்னப்பா இதெல்லாம்...

அந்த மெயில் நகராமலே திடுதிப்பென்று ஓடியது. தற்செயலாய் எழுந்த தாமோதரன், பிளாட்பாரத்தில் நின்றவருக்கு குவிந்து கைகளை ஆட்டிய அந்த மூன்று பெண்களின் முதுகுகள் மீது முகம் போட்டு சாய்ந்தான். அவர்கள் உதறிய உதறலில் நல்ல வேளையாக இருக்கையில்தான் விழுந்தான். இதற்குள், ரயில், பேசின் பிர்ட்ஜை தாண்டி, வட்டமாய் வளைந்துக் கொண்டிருந்தது. அவன், தன்

பாட்டுக்கு இருந்ததில் அந்த பெண்களுக்கு ஒரு ஆறுதல். அதே சமயம், அவன் தங்களை அலட்சியப்படுத்துகிறனோ என்ற ஆதங்கம். ஆனாலும் தங்களுக்குள் நடந்த அரட்டைகளில், அவர்கள் இவனை மறந்தார்கள். தத்தம் கணவன்மாரையும் மறந்தார்கள்.

இரவு, இருளாகிவிட்டது.

எந்தப் பகுதியில் ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை அனுமானமாக கூட கூறமுடியாத அடர் இருட்டு. இருபக்கமும் மலையும் மரங்களும் அந்த ரயிலுக்கு முக்காடுகளாயின. தாமோதரன் இருக்கையில் இருந்து தூங்கியபடியே கிடந்தான். எந்த நேரத்திலும் அவன் கீழே விழலாம் என்பது மாதிரியான உடலாட்டம். இந்தச் சமயத்தில் அந்த மூவரில் முத்தவள் அவனை 'சார் சார்' என்றாள். ஆசாமி அசையாததால் அவன் இருக்கையின் அருகே கையைத் தட்டினாள். அது தேவையான அளவுக்கு சத்தம் போடாததால், மேலே இடைவெளியாய் உள்ள பலகையை குத்தினாள். அவன் எப்படியோ கண்விழித்தபோது, இவள் கெஞ்சும் குரலில் யாசித்தாள்.

'சார் நாங்க மூணுபேரும் சிஸ்டர்ஸ். இவள் சிங்கப்பூரில் இருக்கிறாள். இன்னும் கல்யாணம் கூடிவரல... இப்பத்தான்... நல்லா படிச்சபொண்ணுக்கு மாப்பிள்ள கிடைக்கிறது கிடையாதே... அதோட செவ்வாய் தோசம் இருந்தா தேறவே முடியாது. அதனால மங்களூர்ல இறங்கி உடுப்பி கிருஷ்ணன் கோயில்... தருமஸ்தலா... சுப்பிரமண்யா கடைசிலே முகாம்பீகைன்னு முறையிடபோறோம்.'

'எனக்கு இதுல நம்பிக்கை கிடையாது'

'நம்பிக்கை இல்லாட்டியும் எங்களுக்கு உதவக்கூடாதுன்னு இருக்குதா?'

'நோ நோ... அப்படி சொல்லலியே'

'நாங்க விடிய விடிய பேசிட்டு இருப்போம். உங்களுக்கு இடைஞ்சலா இருக்கும். அதனால அப்பர் பெர்த்ல போய் படுத்துக்கங்களேன்'

இது என்னோட பெர்த்தாக்கும்.'

'தெரியும் சார்... இல்லாட்டி இப்படி கெஞ்சுவோமா ?'

தாமோதரன், அந்த இருக்கையை தூக்கி பிடிக்கும் ரப்பர் உறையிட்ட இரும்புச் சங்கிலிகளை பிடித்த படியே மேலே எம்பினான். ஏறவும் முடியாத இறங்கவும் முடியாத திரிசங்கு நிலை. மூச்சு முட்டியது. இதய துடிப்புகள் காதுகளுக்கே கேட்டன. உடனே அந்தப் பெண்கள் ஆபத்துக்கு பாவம் இல்லை என்பது போல், அவனது வயிற்றையும் கால்களையும் கைகளால் அணைத்துத் தூக்கி, அவனை மேல் இருக்கையில் கொண்டு போட்டார்கள். பிறகு அவனுக்கு ஏதோ பெரிய சலுகை செய்து விட்டது போல், ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

தாமோதரன், அப்படியே தூங்கிப் போனான். ஆனாலும். இரவு இரண்டு மணியளவில் தலையை இருக்கைக்கு கீழே தொங்கப் போட்ட போது, அவன் தகாத விதமாக தங்களை நோட்டம் பார்ப்பதாக அனுமானித்து, தூங்காமல் சும்மா கிடந்த இளையவள், அச்சத்தால் முந்தானை விலக எழுந்து, அபாயச் சங்கிலியை பிடித்து இழுக்க, வலது கையை நீட்டிய போது, தாமோதரன் தட்டுத் தடுமாறி கேட்டான்.

'ரயில் பனங்காடில... இல்ல இல்ல பறப்பனகாடில அதுவும் தப்பு... பனங்காடிபறப்புல வரப்போ சொல்வீங்களா ?'

'எந்த நேரத்துக்குப் போகுதாம் ?'

'சரியா ஆறுமணிக்குன்னு என்னோட ஒய்ப் சொன்னாள்.'

'சரி அய்ந்தரமணிக்கே உங்கள எழுப்பி விடுறேன். அதுவரைக்கும் அந்த பக்கமா திரும்பி கண்ண மூடிண்டு தூங்குங்கோ'

அந்த மூன்று பெண்களும் சரியாக ஐந்தரைமணிக்கு உசிப்பிவிட்ட உடம்பை, கால் மணி நேரத்தில் சரிசெய்தபடியே, தாமோதரன் பறப்பனங்காடி ரயில் நிலையத்தில் இறங்கினான். நீரில்லாத அகழியில் சக்கர கால் பதித்து நின்ற ரயிலுக்கு வரவேற்பு வளையம் போல் உள்ள தோரண பாலத்தில் நடந்தான். பாலத்தின் முகப்பில் தயாராக நின்ற கோழிக்கோடு பேருந்தில்

ஏறினான். முழுவதும் மலையாள எழுத்து. கோழிக்கோடா என்று கேட்டபோது, அதுதான் என்றான் ஒரு தமிழன். அவசரஅவசரமாக சொல்லிவிட்டு, அவன் போய்விட்டான். இருபது கிலோ மீட்டரில், அது கோழிக்கோட்டுக்கு எதிர் பாதையில் செல்லும் பேருந்து என்பதை ஒரு மலையாளி அனுதாபத்தோடு சொன்னார். இடையில் பேருந்தில் இருந்து இரக்கப்பட்டு, கோழிக்கோடுக்கு எதிர்புற பேருந்தில் போனால், அந்த பேருக்குரிய பல்கலைக்கழகம் கோழிக்கோட்டில் இல்லையாம். அங்கிருந்து நாற்பது கிலோமீட்டர் தொலைவில், தேனிப் பாலம் என்ற இடத்தில் இருக்கிறதாம். நான்கைந்து தமிழ்ப் பையன்கள் தாமோதரனை, சரக்குப்பொதி போல், கோழிகோட்டிலிருந்து தேனிப் பாலம் வழியாக ஏதோ ஒரு இடத்திற்கு செல்லும் ஒரு பேருந்தில் ஏற்றிவிட்டார்கள்.

எப்படியோ கோழிக்கோடு பல்கலைகழக விருந்தினர் மாளிகையில் அவனுக்காகவே காத்திருந்த துறைத்தலைவரும், உடலி யல் பேராசிரியர்களும், ஆய்வாளர்களும் அவனை பார்த்ததும் ஆனந்தமானார்கள். துறைத்தலைவர் படப்படப்பாய் கேட்டார்.

'ரயில் நிலையத்திலேயே காரை நிறுத்தி டிரைவர் கையில ஒரு போர்டையும் கொடுத்தோமே? சரி போகட்டும்... முதல்ல உங்க ஒய்புக்கு டெலிபோன் செய்யுங்க... ஏழெட்டு தடவ டெலிபோன் செய்திட்டாங்க. கடைசியா அழுதுட்டாங்க... வந்த உடனே ஒங்கள, பேசச்சொன்னாங்க. இதோ டெலிபோன்... எதற்காக தலையை சொறியுறிங்க.'

'என் வீட்டு டெலிபோன் நம்பர்ல ஒரு சந்தேகம். 491948 நோ நோ 481871 இதுவும் இல்ல 489... உங்களுக்கு தெரியுமோ? மெட்ராஸ்ல திருவான்மீயூர் முதல் மூணு நம்பர் தெரிந்தா புடிச்சுக்குவேன்.

'சரி... மேடமே பேசுவாங்க. இந்தாப்பா... பிரட் ஆம்லெட் கொண்டுவா.'

தாமோதரன், தலைதாங்கும் சோபா இருக்கையில் பொத்தென்று விழுந்தான். தலையை அங்குமிங்கும் உருட்டினான்.

வயிற்றை கைகளால் பிசைந்தான். கண்கள் சொருகின. வாய் கோணியது ஒரே பதட்டம். அவனுக்கல்ல... அங்கே இருந்தவர்களுக்கு.

'என்ன சார் என்ன சார் ஆச்சு.'

'தலை சுத்துது... வயித்து பக்கம் ஒரே வலி. ஒரு வேளை... பி.பி கூடிட்டோ என்னவோ... சுகர் அதிகமாயிருக்குன்னு நினைக்கிறேன்.'

'அடக்கடவுளே! பிள்ளையார் பிடிக்க குரங்காய் போவுதே. ஓ,கே... யுனிவர்சிட்டி டாக்டர முதலுதவி சிகிச்சைக்கு கூப்பிடுப்பா. காலிக்கட் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக ஆம்புலன்ஸை ரெடிபண்ணுங்கப்பா.'

அந்த விருந்தினர் மாளிகையே பரப்பரப்பானபோது, ஒரு சேவகன் ஒரு தட்டில் வெள்ளைத்துணி உப்ப அந்த அறைக்குள் வந்து, அந்த தட்டின் முக்காட்டை விலக்கினார். ஐந்தாறு பிரட்டுகள்... இடை இடையே ஆம்லெட் துண்டுகளோடு மேல் வாக்கில் இரட்டை இரட்டையாக அடுக்கப்பட்டிருந்தன தாமோதரன் அவசர அவசரமாக அவற்றை பிய்த்து பிய்த்து வாய்க்குள் போட்டான். ஒரு ஜக் தண்ணீரை கண்ணாடி தம்ளரில் ஊற்றாமல் அப்படியே குடித்தான். பிறகு ஒளிவு மறைவு இல்லாமல் சொன்னான்.

'இப்போ மயக்கம் இல்ல. தலை சுத்தல... வயிறும் வலிக்கல... நான் என்ன நினக்கேன்னா பசியிலதான் அப்படி தல சுத்தி இருக்குமோன்னு'

'இருந்தாலும் ரிஸ்க் எடுக்க வேண்டாம் சார். உடலியல விட, உயிரியல் தான் முக்கியம் சார். அப்புறம் மேடம் தமயந்திக்கு எங்களால பதில் சொல்ல முடியாது.'

'அப்படின்னா யாரு ?'

'உங்க ஒய்ப் சார்.'

'ஐ.சி... செமினாருக்கு போலாமா?'

கருத்தரங்க அறையில், துறைத்தலைவரின் நீண்ட நெடிய அறிமுகத்திற்குப் பிறகு, டாக்டர் தாமோதரன். மைக்குகள் பொருத்தப்பட்ட மேடையோர போடியத்தின் அருகே வந்தான். அவனது பேண்டுக்குள் இன் செய்யப்பட்ட சட்டை மடிப்புக்கள் இருபக்கமும் வெளிப்பட்டு ஒரு பக்கம் இடுப்பு சதையையும் மறுபக்கம் டவுசர் துணியையும் காட்டிக்கொண்டிருந்தன. விருந்தினர் மாளிகையில் வாய் கொப்பளித்த தண்ணீர், அவன் மெல்லிய தாடியில் புல் மேல் படிந்த பனித்துளிகளால் காட்சி காட்டின. அவனை பார்த்து லேசாய் மனதுக்குள் சிரித்த நிபுணர் கூட்டம், அவன் பேசப்பேச கண்களை மூடி காதுகளை கூர்மையாக்கியது. டாக்டர் தாமோதரனுக்குள் ஒரு புதிய மனிதன் எழுந்தான். கையோடு, விடாப்பிடியாய் கொண்டு வந்த ஒரு பெட்டியை திறந்து, அதில் உள்ள நீண்ட வால்வுகளைக் கொண்ட ஒரு அதிசயப் பூச்சி போல் தோன்றிய கருவியை எடுத்து, அதன் வால்களை மின்சார பிளக்களில் பொருத்திவிட்டு விளக்கினான். இவன் ஒரு கவசம் போலவும். இந்த கவசத்திற்குள் இருப்பவன்தான் உண்மையான தாமோதரன் என்பது போலவும் பேசினான்.

'இதோ இந்த மெசின் இருக்குதே இதுக்கு எக்ஸ்டர்னல் பல்மினிரி டிவைஸ் என்று பெயர். அதாவது இதய அடைப்புகள ஆப்ரேசன் இல்லாமலே சரிபடுத்தக் கூடிய கருவி. இதை பல ஆண்டு ஆராய்ச்சிக்கு பிறகு கண்டுபிடிச்சேன். இதோ இதுல இருக்குதே மூணு கப்புங்க... இதுங்கள இரண்டு பாதங்களிலும் ஒரு முட்டி கால்முனை ஒன்றிலும் பொருத்தணும். பாதத்துலதான் அறுபது சதவீத ரத்தம் இருக்குதுன்னு நிபுணர்களான உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது இல்ல. இந்த கருவியை, ஒரு இதய நோயாளி மேல், பொருத்தினால், இதயம் விரியும் போது, இந்தக் கருவி சுருங்கும். சுருங்கும் போது, இது விரியும். இதனால் இதயத்திற்கு நிறைய ரத்தம் போகும். எல்லா உறுப்புக்களுக்கும் சமச்சீரா ஓடும். இதனால இதயத்துல இருக்கிற அடைப்புக்கள் கொஞ்சம் கொஞ்சமா நீங்கும்... அந்த இடங்களுல சின்னஞ் சிறு ரத்தக் குழாய்கள் உருவாகும். அதனால, இதய சிகிச்சைக்கு இப்போதைய அஞ்சோகிராமும், அறுவைச்சிகிச்சையோ

தேவையில்லை. இதனால் பிழைப்பு போயிடும் என்கிறதானலேயே இத்ய சிகிச்சை டாக்டர்கள் காது கொடுத்து கேட்க மறுக்கிறாங்க.”

விஞ்ஞானிகளில் ஒருவர், தாமோதரனை இடைமறித்து ஏதோ கேட்கப் போனார். அதற்குள், இளைஞர்கள் அவரை சும்மா இருக்கும்படி உஷ் என்று ஒலி எழுப்பினார்கள். தாமோதரன் தன் பேச்சை மீண்டும் தொடர்ந்தான்.

‘இதனால உடலியல் வல்லுனர்களான நாம், இந்த கருவியைப் பற்றி விவாதித்து மாணவர்கள் இடையே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தணும். இந்த விஞ்ஞானக் கருவி இதய நோயாளிகளை லட்சக்கணக்கான பணம் இல்லாமல் வெறும் இருபதாயிரம் ரூபாயல காப்பாற்றக்கூடியது.’

உங்களுக்கு தெரிந்தது போல், நம்ம உடம்பு ராசாயன, பௌதிக விதிகளால்தான் இயங்குது. இது டாக்டர்களுக்குப் புரியாது. நமக்குப் புரியும்.. இந்தக் கருவி ஹைட்ராலிக் காற்றழுத்த விதிப்படி அமைக்கப்பட்டுள்ளது. இந்த விதியைப் பற்றி பெரும்பாலனோருக்குச் சொல்ல வேண்டியதில்லை, என்றாலும் இங்கே வந்திருக்கிற இளம் மாணவர்களுக்காக சொல்ல விரும்புகிறேன்.

நிபுணர் கூட்டம் அவன் பேச்சை மாலையிலும் தொடர்வது என்று தீர்மானித்தது. விருந்தினர் மாளிகைக்கு கொண்டுவரப்பட்ட தாமோதரனிடம், இரண்டு மாணவர்கள் குளித்துவிட்டு, உடையை மாற்றிக் கொள்ளும் படி சொன்னார்கள். அவன் சூட்கேஸை எடுத்தான். அதையே உற்றுப்பார்த்தான். பின்னர் திக்கித் திணறி பேசினான்.

‘சூட்கேஸ் பூட்டு நம்பர் மறந்துட்டு.’

வாசுகி (பொங்கல் மலர் - 2000)

O

# சிலந்தி வலை

இரத்தத்தால் 'சிவப்பு' அடிக்கப்பட்டது போன்ற காவல் நிலையத்திற்குள், சப்-இன்ஸ்பெக்டர் இளைஞன் சாமிநாதன் நுழைந்ததும், மாமா-மச்சானாய் பேசிக் கொண்டிருந்த ஏட்டு முதல் இரண்டாம் நிலைக் காவலர்கள் வரை, கப்சிப் ஆனார்கள். காரணம், அவர்கள், அவனை அவனாகப் பார்க்கவில்லை. காக்கி யூனிபாரத்தில் மூன்று நட்சத்திரங்களும், அசோகச் சக்கரமும் பொறிக்கப்பட்ட ஒரு பெரிய அதிகாரி, கூரையை பிய்த்துக்கொண்டு அவன் தலைக்கு மேலும், பூமியைக் குடைந்து கொண்டு காலுக்கு கீழும் ஒரு விஸ்வரூப வேதாளமாய் வியாபித்திருப்பதாகவே அவர்களுக்குத் தோன்றியது.

இந்த ஆகாயப் பாதாள உருவத்திற்கு பயந்ததுபோல், புரமோட்டியான 'எல் அண்ட் ஓ' - அதாவது ஏட்டுப் பதவியில் இருந்து சட்டம் ஒழுங்கை பராமரிக்கும் இன்னொரு சப்இன்ஸ்பெக்டராக மாறிய பெருமாளின் முன்னால் மேஜையில் கையை வில் போல் வளைத்தபடி, பேசிக் கொண்டிருந்த ஏட்டய்யா, லாக்கப் அறைப்பக்கம் 'ரோல்கால்' எடுக்கப் போவதுபோல் போனார். நான்கைந்து காவலர்கள், தென்பக்கம், கிட்டங்கிபோல் தோன்றிய அறைக்குள் துப்பாக்கிகளை துடைக்கப் போனார்கள். வெளியே துப்பாக்கி சகிதமாய் நின்றவர்கள், சிறிது தொலைவிலுள்ள புளிய மரத்தடி மாமூல்காரர்களை, கையமர்த்தினார்கள். ரைட்டர் எனப்படுபவர், தனது சித்திரகுப்த நோட்டை விரித்துப் பிடித்தார். நீடித்த கலகலப்பு, நிசப்தமாகி, அந்த காவல் நிலையம் மயான பூமியாய் தோன்றியபோது -

சப்-இன்ஸ்பெக்டர் சாமிநாதன், 'புரமோட்டி' பெருமாளை ஒரு 'கிரைம்' முறைப்பாய் முறைத்தபடியே, மையூரிய மேஜையில் அட்டை கிழிந்த ஊதா நிறப் பொதுநாள் குறிப்பேட்டை எடுத்தான். நேற்று வரை, 'எல் அண்ட் ஓ' பெருமாளே, இந்த 'க்ரைம்' சப்-இன்ஸ்பெக்டரின்

குறிப்பையும் அவன் பெயரிலேயே எழுதி வைப்பார். ஆனால், நேற்றைய வாக்குவாதத்தால், அவர் தனது வேலையை மட்டுமே கவனித்தார்.

வாக்குவாதம் என்பதைவிட, ஒருவேளை பெருமாளின் வாக்கால், அவர் வதம் செய்யப்படக்கூடிய தகராறு. அவ்வப்போது காவல் நிலையத்திற்குள் உடம்பை வெளியே வைத்துக்கொண்டு, தலையை மட்டும் காட்டிவிட்டுப் போகும் சாமிநாதனைப் பார்த்து, அவன் வேலையையும் சேர்த்துப் பார்க்கும் கட்டாயத்திற்குள்ளான வயதான பெருமாள், 'ஏம்ப்பா சாமி... ஒருநாள் ஒரு பொழுதாவது உன் வேலையை பார்க்கக்கூடாதா...?' என்று சிரித்தபடிதான் சொன்னார். அதுவும் கழண்டு கிடந்த அவன் சட்டையில் உள்ள ஈய உருண்டை பொத்தானை மாட்டியபடிதான் பேசினார். உடனே இவன், 'நாளையிலிருந்து என் வேலையை நீங்க பார்க்கக்கூடாது' என்று ஆணைக்குரலில் பேசிவிட்டு, அவர் மாட்டிய பித்தானையும் கழட்டினான். கழட்டிக்கொண்டே, 'என் வேலையை, யாரை வைத்துப் பார்க்க வைக்கிறதுன்னு எனக்குத் தெரியும்' என்றும் சொல்லி வைத்தான். அதிலிருந்த மிரட்டலைப் புரிந்து கொண்டவர்போல், பெருமாள், ஆரம்பத்தில் நடுங்கிப் போனார்.

இந்த சாமிநாதன், அசோகச் சக்கர அதிகாரியிடம் "போட்டுக் கொடுத்து", தன்னை தண்ணியில்லாத காட்டிற்கு மாற்றி, ஒரு தலையாட்டி சப்-இன்ஸ்பெக்டரை கொண்டு வரப்போகிறான் என்பது புரிந்து விட்டது. ஆனாலும், தலைக்கு மேல் வெள்ளம் போன தைரியத்தில் அல்லது தத்தளிப்பில் அவர் மறுபேச்சு பேசவில்லை. இந்த சப்-பயல் சாமிநாதனோடு இருப்பதைவிட தண்ணியில்லாத காடே மேல் என்று தன்னைத்தானே ஆற்றுப்படுத்திக் கொண்டார்.

இப்போது இந்த இருவரும் மூன்றடி இடைவெளியில் இருந்தாலும், முந்நூறு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளவர்கள் போல் முகம் பார்க்க மறுத்தார்கள். பகல் பதினோரு மணிக்கு வந்துவிட்ட சாமிநாதன், 'பொதுநாள்' குறிப்பேட்டில் எழுதத் துவங்கினான். 'இன்று காலைக் கடமை அறிக்கை துவக்கப்படுகிறது' என்ற கோடிட்ட தலைப்புச் செய்திக்குக் கீழே, காலை ஏழு மணிக்கு 'கிரைம்'

காவலர்களை சரிபார்த்து, ரோல்கால் எடுத்தானாம். ஏழரை மணியிலிருந்து எட்டரை மணி வரை காவலர்களுக்கு பாடம் நடத்தினானாம். சாதிக் கலவரங்களை, சட்ட ஒழுங்குப் பிரச்சினையாக அணுக வேண்டுமா அல்லது சமூகக் காரணிகளாகக் கருதி, நீக்குப் போக்காக நடக்க வேண்டுமா என்பது அவன் எடுத்த பாடமாம். பாடத்திற்குப் பிறகு, சில கேள்விகளுக்குப் பதில் சொல்லி காவலர்களை தெளிவடைய வைத்தானாம்.

சாமிநாதன், பொதுநாள் குறிப்பேட்டில், இப்படியாக எழுத வேண்டியவற்றை எழுதி முடித்து விட்டு, வழக்குக் குறிப்பேட்டைத் திறந்தான். பிரேத பரிசோதனை, விபத்து விசாரணை, கோர்ட் வழக்கு, ரிமாண்ட் கைதிகள், காணாமல் போனவர்களின் கண்டுபிடிப்புகள், பிட் பாக்கெட், புலன்விசாரணை போன்ற பணிகளுக்கு நியமித்திருக்கும் காவலர் பெயர்களை எழுதி வைத்துவிட்டு, தனக்கு எந்த டூட்டியை ஒதுக்கலாம் என்று தலையைக் குடைந்தபோது

காக்கிச் சட்டையில் சாம்பல் நிற இரட்டை வெள்ளைப் பட்டைகளைக் கொண்ட ஒரு காவலர், இளைஞன் ஒருவனை அவன் தலைமுடியை முன்பக்க குடுமிக் கைராக்கி, மாடுபோல இழுத்துக்கொண்டு வந்து, சாமிநாதன் பக்கமாய் குப்புறத் தள்ளியபடியே, நேரடி வர்ணனை கொடுத்தார்.

"வேன்களில் பயணிகளை ஏற்றக்கூடாதுன்னு தடை வந்திருக்கு. இவன் என்னடான்னா... ஓவர் லோடா ஏத்திக்கிட்டிருக்கான். 'ஸ்டேஷனுக்கு வாடான்'னு கூப்பிட்டால், 'என்ன விஷயமுன்'னு வேன் சீட்ல இருந்து இறங்காமலே தெனாவட்டாய் கேட்கறான் ஸார்... இந்த நாயை முட்டிக்கி முட்டி வாங்கணும் ஸார்... ஒரு வருடத்துக்கு இவன் வேனை முடக்கிப் போட்டு, காய்லாங் கடைக்கு அனுப்பும்படி செய்யணும் ஸார்..."

சாமிநாதன், அந்தக் காவலரை கையமர்த்தி அமைதிப்படுத்தினான். சைக்கிளில் தலைகீழாய்த் தொங்கும் கறிக்கோழி போல, கூனிக் குறுகியும் சிலிர்த்தும் நின்றான் வேன் டிரைவர். சாமிநாதன்,

இருவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு, எதையோ யோசிப்பதுபோல் ஆள்காட்டி விரலால் நெற்றிப்பொட்டை மூன்றுதடவை தட்டிவிட்டு, வாய் மலர்ந்தான்.

“சரி... நீங்க, ரிமாண்ட் கைதிகளை கூட்டிக்கிட்டு கோர்ட்டுக்குப் போங்க. இவனை நான் கவனிச்சுக்கிறேன்.”

இளைஞனை மாடாக்கிய அந்தக் காவலர், உள்ளங்கையில் நமச்சல் ஏற்பட்டும் பலனில்லாமல் போனதை பற்கடியாய் வெளிப்படுத்திய படியே, லாக்கப் அறைக்குப் போனார். சாமிநாதன், பெருமாளை ஓரக்கண் போட்டுப் பார்த்து முடித்துவிட்டு, வேன் டிரைவரிடம் அமைதியாகக் கேட்டான்.

“எந்த டிராவல்ஸ்டா...?”

“நித்தியா டிராவல்ஸ் ஸார்... நான் முதலாளிகிட்ட எவ்வளவோ சொன்னேன் ஸார். வேன்ல ஷார்ட் டிரிப் அடிக்கக்கூடாதுன்னு பலதடவைச் சொன்னேன் ஸார். அவர்தான் ‘நானிருக்கேன் பயப்படாதே’ன்னு சொன்னார் ஸார்...”

“போகட்டும். உன் கம்பெனியில எத்தனை டூரிஸ்ட் வண்டிங்க இருக்குதுடா....?”

“ஏ.சி. அம்பாசிடர் எட்டு... ஏ.சி. டாடா சுமோ ஒன்பது... மகேந்திரா ஆறு... அப்புறம், ஏ.சி. இல்லாத முப்பது வண்டிகள் இருக்கு ஸார்...”

“சரி... லைசென்சை எடு...”

“முதலாளி, என் லைசென்சை வாங்கி டேங்கர் லாரிக்காரங்கிட்ட கொடுத்துட்டார் ஸார். அவனுக்கு லைசென்சு கிடையாது... சரியா ஓட்டவும் வராது... மூணு பேரைக் கொன்னுட்டான்... அதுக்காக, என் லைசென்சை அவன் லைசென்சா காட்டியிருக்கு...”

“ஒன் போட்டோவை வச்சு கண்டுபிடிச்சிடலாமே...?”

“எங்க முதலாளி இந்திரஜித் ஸார்... சமாளிச்சுக்குவார்...”

"இதுக்கே உங்க ரெண்டு பேரையும் ஆறு வருஷம் உள்ள போடலாம்."

"அய்யா தர்மபிரபு... நீங்கதான் என்னைக் காப்பாத்தணும்... எப்படியோ உண்மையை உளறிட்டேன். நீங்கதான் என்னை, என் முதலாளிகிட்ட இருந்தும் காப்பாத்தணும். உங்க காலுல..."

வேன்காரன், ஏங்கி ஏங்கி அழுதபடியே, சப்-இன்ஸ்பெக்டரின் பூட்ஸ் காலில், மனித வெடிகுண்டுபோல் குனிந்தபோது, சாமிநாதன் அவனை லத்திக் கம்பால் நிமிர்த்தியபடியே, ஒரு யோசனை சொன்னான்.

"உன்னை பார்க்கிறதுக்கு பாவமாய் இருக்குது. இந்தா விசிட்டிங் கார்டு... இந்த விலாசத்திற்கு நாளைக்கு, ஏ.சி. சுமோவோட காலை ஆறுமணிக்கு போய் நிற்கணும். அந்த வீட்ல இருக்கிற ஒருவரை திருப்பதி வரைக்கும் பத்திரமாய் கொண்டு போய், பத்திரமாய் கொண்டு வரணும். சாப்பாட்டில் இருந்து சகல வசதியையும் தடபுடலா கவனிச்சுக்கணும். புரியுதா...?"

"எதுக்கும் எங்க முதலாளிகிட்ட ஒரு வார்த்தை..."

"அடி செருப்பால..."

லாக்கப் கைதிகளை பார்த்துவிட்டு திரும்பிய அதே காவலர், சப்-இன்ஸ்பெக்டரின் வாய், செருப்பானபோது, அவரது கைகளும், சப்-இன்ஸ்பெக்டர் சாமிநாதன் கைகளோடு சேர்ந்து வேன்காரன் மீது விழும் செருப்பானது. 'முடியுமா... முடியாதாடா...' என்று ஒவ்வொரு எழுத்தின் உச்சரிப்பிற்கும் ஒவ்வொரு விதமாய் அடித்தார். உடனே வேன்காரன், 'முடியும் ஸார்... முடியும் ஸார்...' என்று வலியோடு முனங்கினான். அடித்த களைப்பிற்காக, சிறிது நேரம் தன்னை ஆசுவாசபடுத்திக் கொண்ட சாமிநாதன், அந்த அடிதடிக் காவலரை அமைதிப் படுத்திவிட்டு ஆணையிட்டான்.

"இந்துப் பயகிட்ட ஒரு ஸ்டேட்மெண்டை வாங்கிக்கோ... இந்தா பாருப்பா! ஒன் பேரு என்ன...? பழனியா...? அதுதான் லைசென்சு இல்லாம ஓட்டாண்டியாய் வந்திருக்கியோ...? உன் வேன் இங்கேயே

நிற்கட்டும். நாளைக்கு திருப்பதிக்கு போயிட்டு வந்த பிறகு, இங்கே வா... என்னை மட்டும் பாரு... சரியா...?'

"அய்யா அடிக்கக்கூடாது... முதலாளிக்கு மட்டும் ஒரே ஒரு டெலிபோன் போட்டு பேசிடுங்க..."

"நான் டெலிபோன் செய்யுற அளவுக்கு உன் முதலாளி பெரிய மனுஷன் இல்லடா... அவனை, எனக்கு நல்லாவே தெரியும். நான் சொன்னேன்னு சொல்லு... உன்மேல சந்தேகம் வந்தால், அவனை எனக்கு டெலிபோன் செய்யச் சொல்லு... ஏண்டா யோசிக்கே...? ஒண்ணு உள்ளே போ... இல்லன்னா வெளியே போ..."

வெளியே போகப்போன வேன்காரனை, அதே அடிதடிக் காவலர் இழுத்துப் பிடித்தார். இருவரும் பிராணச் சிநேகிதர்களாய் ஒரு மூலைப் பக்கமாகப் போனார்கள். அவர்கள் போவது வரைக்கும் பொறுமை காத்த சாமிநாதன், டெலிபோனை சுழற்றினான்.

"அம்மாவா...! அய்யா வேண்டாம். உங்க கூடத்தான் பேசணும். நம்ம டாக்டர் தம்பி... திருப்பதி போறதுக்கு ஏ.சி. வண்டி வேணுமுன்னு கேட்டதா சொன்னீங்க இல்ல...? தம்பிகிட்ட சொல்லி டுங்க. நாளைக்கு காலையில சரியா ஆறுமணிக்கு ஒரு சுமோ உங்க வீட்டு முன்னால வந்து நிற்கும். ஒரு பைசாகூட கொடுக்கவேண்டாம். என்னதும்மா...? மாசம் பிறந்து நாலு நாளு ஆயிட்டுதேன்னு அய்யா என்னை விசாரிச்சாரா...? இதோ வந்துக்கிட்டே இருக்கேம்மா..."

'எல் அண்ட் ஓ' பெருமாளுக்கு, ஒரு தர்ம சங்கடம். அன்றைக்குப் பார்த்து அந்தப் பகுதியில் ஒரு சாதி ஊர்வலம். இந்த சாமிநாதன் போட்டுக் கொடுத்ததாலோ என்னவோ, அசோகச் சக்கர அதிகாரி, கூடுதல் போலீஸ்காரர்களை அனுப்ப மறுத்துவிட்டார். இந்த 'கிரைம்' சாமிநாதனும், தனது காவலர்களுக்கு குறிப்பிட்ட பணிகளை ஒதுக்கிவிட்டான். தள்ளிப் போடக்கூடிய பணிகள்தான். அவனிடமே வாய்விட்டுக் கேட்டார்.

"சாமி... சாமி... இன்னைய ஊர்வலத்துல குடிகாரங்க நிறைய வருவாங்க. இப்படித்தான் போன ஊர்வலத்துல,

எங்கிருந்தோ வந்த ஒரு குடிகாரன், 'புரட்சிப் புயல்' என்கிறதுக்குப் பதிலாய், 'புரட்சிப் பயல்'ன்னு உளறிக் கொட்டி பெரிய ரகளையே நடந்துட்டு... உன் ஆட்களையும் எனக்கு உதவியாய் போடுப்பா..."

"மனுஷன்னா ரோஷம் இருக்கணும் ஸார். ஒங்க வேலை ஒங்களுக்கு... என் வேலை எனக்கு..."

சாதி ஊர்வலத்தை ஒழுங்குபடுத்த தவறிய குற்றச்சாட்டின் பேரில், அசோகச் சக்கர அதிகாரி, ஒருவேளை இந்த 'எல் அண்ட் ஓ' பெருமாளை இடைக்காலப் பதவி நீக்கம் செய்தாலும் செய்யலாம் என்று நினைத்தபடியே, சாமிநாதன் தலைபோகிற வேலை இருப்பதுபோல், ஜீப்பில் டிரைவர் இருக்கையில் துள்ளிக் குதித்தான். அதற்குள், புளிய மரத்து அடிவாரக்காரர்கள், தலைவிரி கோலமாய் ஓடிவந்து, ஜீப்பை சூழ்ந்து கொண்டார்கள். மனுக்களைக் கொடுக்கிற சாக்கில், அவன் பேண்ட் பைகளையும், சட்டைப் பைகளையும் உப்ப வைத்தார்கள். ஆசாமி, ஏதோ பூச்சி கடித்து வீங்கிப் போனது போலவே காட்சியளித்தான்.

அசோகச் சக்கர அதிகாரியின் வீட்டிற்குள் நுழைந்ததுமே, வராண்டாவைத் தாங்கும் தூண்களில் சாய்ந்தபடியே தூங்கிய இரண்டு காவலர்கள், துப்பாக்கிகளைக் கைமாற்றி, "டக்"கென்று சத்தத்தை எழுப்பி, அவன் வருகையை அங்கீகரித்தார்கள். அவர்களைப் பார்த்து உப்புச் சப்பில்லாமல் தலையாட்டிவிட்டு, வீட்டிற்குள் நுழைந்து ஊஞ்சல் பலகையில் ஆடிக்கொண்டிருந்த அம்மாவுக்கு, சாமிநாதன் ஒரு சல்யூட் அடித்தான். பெரிய அதிகாரியின் காக்கி யூனிபாரம், சுவரில், சோளக்காட்டுப் பொம்மையாய் தொங்குவதைப் பார்த்துவிட்டு, அவன் அம்மாவின் முகத்தைப் பார்க்க, அந்த முகம் பூஜை அறையை நிமிட்டிக் காட்டியது.

சாமிநாதன், பூஜை அறைக்கு வெளியே ஒரு வெறுங்காலும் உள்ளே ஒரு வெறுங்காலுமாய் நின்றபோது, அசோக சக்கர அதிகாரி, தாம்பூலத்தட்டில் கற்பூரம் ஏற்றி, அங்கிருந்த தெய்வப் படங்களுக்கு ஆலவட்டம் சுற்றினார். உடனே சாமிநாதன், அந்தத் தட்டில் கத்தை கத்தைகளாக ரூபாய் நோட்டுக்களை வைத்துவிட்டு, அவர் காலைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, நிமிர்ந்து ஒரு சல்யூட்

அடித்தான். அவரும், அந்த நோட்டுக்கள் எவ்வளவு தேறும் என்பதை குத்துமதிப்பாய் நோட்டமிட்டபோது, இவன் 'என் பங்கைக்கூட எடுக்கலை ஸார்...' என்றான். உடனே அவர், 'நல்லா இரு... லட்சுமி கடாச்சம் கிட்டட்டும்...' என்று ஆசீர்வதித்துவிட்டு, அவனது நெற்றியில் குங்குமம் வைத்தார்.

பூஜை அறையிலிருந்து பக்திப் பரவசமாய் வெளியேறிய சாமிநாதன், 'ஊஞ்சல் பலகை' அம்மாவை கண்களால் கும்பிடுவதுபோல், விழிகளை செங்குத்தாய் நிமிர்த்திவிட்டு, வீட்டுக்கு வெளியே, வந்து பூட்ஸ்களை மாட்டப் போனபோது, உள்ளேயிருந்து ஒரு கைதட்டல். திரும்பிப் பார்த்தால், அசோகச் சக்கரத்தின் அருமை மகன் வசந்த்...

சப்-இன்ஸ்பெக்டர் சாமிநாதன், பூட்ஸ்களை கைகளால் தூக்கிக்கொண்டே, அவன் பக்கம் ஓடினான். இது வாரிசுக் காலம். அவனோ தகப்பன் சாமி. நாயைக் கூப்பிடுவதுபோல் கூப்பிட்டாலும், வாலுக்கு பதிலாக தலையாட்டியாக வேண்டும். அந்த இளைஞன், புன்சிரிப்பாய் பேசினான்.

"திருப்பதிக்கு ஏ.சி. வண்டி ஏற்பாடு செய்ததற்கு ரொம்ப நன்றி பிரதர்..."

"ஒங்களுக்குச் செய்யாமல் யாருக்குச் செய்வேன்...? அப்புறம் ஏழுமலையான்கிட்ட எனக்காகவும் வேண்டிக் கொள்ளுங்க டாக்டர் தம்பி..."

"நான் மலைக்குப் போகல... நண்பர்களோட அடிவாரத்துக்குத்தான் போறேன். ஒங்களுக்குப் புரியுமுன்னு நினைக்கேன். ஒங்ககிட்ட சிக்கி இருக்கிற ஏதாவது ரெண்டு கேஸ்களை தள்ளி விடுங்க..."

"ரொம்ப லேட்டா சொல்றீங்களே..."

"நீங்க நினைத்தா குடும்பப் பெண்ணையே பிராத்தலுல புக் பண்ணலாமே...?"

"பார்க்கலாம்..."

"பார்க்கலாம் இல்ல... பார்க்கணும். ஒங்க ஓர்க்மேட் பெருமாளுக்கு டாடி, நாள் குறிச்சிட்டார். பேஸ்டட்... நான் கும்பிட்டால்தான், அவன் கும்பிடுவான். ஒங்க காலுலயே, அவனை விழ வைக்கிறேன் பாருங்க..."

"அவ்வளவு வேண்டாம்... வயசானவன். என் கையைப் பிடித்துக் கெஞ்சினாப் போதும்."

"அப்புறம் மிஸ்டர். சாமிநாதன்! என்னோட கேர்ல்-பிரண்ட் ரமேகா, நாளைக்கி 'காதலிக்க வாங்க' என்று ஒரு கலை நிகழ்ச்சி வைத்திருக்காளாம். நீங்க இப்பவே போய், அவளைச் சந்தித்து செக்யூரிட்டி ஏற்பாடுகள் பற்றி பேசிடுங்க. நீங்க வருவீங்கன்னு நான் அவளுக்கு வாக்குக் கொடுத்துட்டேன். இன்னைக்கு முடியாட்டால் நாளைக்கி காலைல கூட நீங்கப் போகலாம்..."

"எந்தக் காரியத்தையும் உடனே முடிக்கிறவன் இந்தச் சாமிநாதன். இப்பவே போறேன்..."

சப்-இன்ஸ்பெக்டர் சாமிநாதன், பெரிய திரை - சின்னத்திரை நடிகையான ரமேகாவின் பங்களாவில் முகப்பு புல்தரையின் இருபக்கமும், சிங்கம் போலவும் புலி போலவும், நாட்டிய மங்கை போலவும் கத்தரிக்கப்பட்ட புல் பொம்மைகளை லத்திக் கம்பால் தடவி விட்டபடியே நடந்தான். அவளுக்காக, அதிகாரப் பூர்வமற்ற முறையில் பாதுகாப்பாக போடப்பட்டிருந்த ஒரு முதல் நிலைக் காவலரும், இன்னொரு இரண்டாம் நிலைக் காவலரும், அவனை அதிசயித்துப் பார்த்தார்கள். இந்தச் "சின்னவீடு" இவனுக்கு கைமாறியிருக்குமோ என்று அவர்களுக்கு ஒரு சந்தேகம். கைமாறவில்லை என்று அவர்கள் அனுமானிக்கும்படி, இவன், பூட்ஸ்களை கழட்டி வைத்துவிட்டு, சல்யூட் அடிப்பதற்குத் தயாராக வலது கையை உயரே தூக்கிக்கொண்டே உள்ளே போனான்.

வெல்வெட் சோபா செட்டில், நிர்வாணமான இரண்டு கால்களையும் தூக்கி வைத்துக்கொண்டு, கால்மாட்டில் கிடந்த இரண்டு மூன்று இளைஞர்களின் தலைகளை கோதிவிட்டபடியே, ரமேகா, வாயும் கிளாசுமாய் லூட்டி அடித்துக் கொண்டிருந்தாள்.

அவன், தங்களை கைது செய்யத்தான் வந்திருப்பான் என்ற சந்தேகத்தில், அங்கே ஆடை பாதி அங்கங்கள் பாதியாகக் கிடந்த ஏழேட்டு பேர் அலறியடித்து எழுந்தபோது, சப்-இன்ஸ்பெக்டர் சாமிநாதன், ரமேகாவைப் பார்த்து ஒரு சல்யூட் அடித்தான். அடித்தபடியே கேட்டான்.

"மேடம்! உங்களோட காதலிக்க வாங்க..."

"வாட்...?"

"சாரி மேடம்... அந்த பேர்ல நடக்கிற ஒங்க கலைநிகழ்ச்சிக்கு, நான் செக்யூரிட்டி ஏற்பாடு பற்றி பேச வந்திருக்கிறேன். டாக்டர். தம்பி அனுப்பி வச்சார்."

"நாங்க இப்போ, நீங்க சொன்னதைத்தான் செய்துக்கிட்டு இருக்கிறோம். நாளைக்குக் காலையில வாங்க..."

எல்லோரும் கொல்லென்று சிரித்தபோது, கூனிக்குறுகி நடந்த சாமிநாதனை, ரமேகா சொடக்கு போட்டு திரும்ப வைத்தாள்.

"லுக் மிஸ்டர் சப்-இன்ஸ்பெக்டர்! காலையில ஸார்ப்பா ஏழு மணிக்கு வந்துடணும். நான் தூங்கி எழுந்திரிக்க லேட்டானாலும், காத்திருங்க பிளீஸ்..."

"எஸ் மேடம்..."

சப்-இன்ஸ்பெக்டர் சாமிநாதன் தள்ளாடியது போலவே, அவனது ஜீப்பும் தள்ளாடியது. அந்த வாகனம் மட்டும் போலீஸ் அலங்காரத்தோடு இல்லாதிருந்தால், வண்டியும் நொறுங்கி இருக்கும்; அவனும் நொறுங்கியிருப்பான். எப்படியோ காவல் நிலையத்திற்குள் திரும்பினான். அவன் மனதுக்குள் செல்வி ரமேகாவைப் பற்றி ஆபாச சொற்களை உள்ளடக்கிய ஒரு அகராதியே உருவானது. ஆனாலும், அவள் கலை நிகழ்ச்சிக்கு, எந்தெந்தக் காவலர்களை அனுப்பலாம் என்ற சிந்தனை, அவன் மூளையை ஆக்கிரமித்திருந்தது.

இந்தச் சமயத்தில் 'எல் அண்ட் ஓ' பெருமாள், தனது சகாக்களோடு வெளியேறுவதற்குத் தயாராக இருந்தார். பல

ஊர்வலங்களில் ஒரே முகம் அடிக்கடித் தென்பட்டால், அந்த முகத்தை குளோசப்பில் எடுக்கவேண்டும் என்று போலீஸ் புகைப்படக்காரருக்கு, அறிவுறுத்திக் கொண்டிருந்தார். லத்திக் கம்புகளை குனித்து வைத்திருக்க வேண்டும் என்றும் சகாக்களுக்கு தெளிவாக்கினார்.

சாமிநாதன் உட்காரும் முன்பே, ரைட்டர், அவன் பெயருக்கு வந்திருந்த ஒரு பெரிய கவரை நீட்டினார். அப்பாவித்தனமான கவர். அதைப் பிரித்துப் பார்த்தால், முன்னாலும் பின்னாலும் அரக்கு முத்திரைக்குமேல் அரசாங்க முத்திரை பொறிக்கப்பட்ட சின்ன சிவப்புக் கவர். அதன் மேல்பக்கம் அந்தரங்கம் என்ற வாசகம்... நடுப்பக்கம் சாமிநாதனின் பெயரும் பதவியும் கொண்ட வாசகங்கள்.

சாமிநாதன், அந்தக் கவரை நிதானமாகத்தான் பிரித்துப் பார்த்தான். சிலசமயம் இப்படிப்பட்டக் கவர்களில் பாதுகாப்பு பற்றிய ரகசிய ஆணைகள் வருவதுண்டு. ஏகத்தாளமாக கவருக்குள் இருந்த வெள்ளைக் காகிதத்தை பிரித்தபடியே படித்தான்.

சாமிநாதனின் தலைக்குள் ஒரு பிரளயம்... கண்களுக்குள் ஒரு இருட்டு... அந்த எழுத்துக்களைத் தவிர எதையுமே பார்க்க முடியாத சூன்யம். அந்தக் காகிதம், இப்படி சேதி சொன்னது:

"ஜெட் 2. காவல் நிலைய குற்றயியல் துணை ஆய்வாளரான திரு. சாமிநாதன், வேலையில் விசுவாசமாகவும் அர்ப்பணிப்பு உணர்வோடும் செயல்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது. பல்வேறு குற்றவியல் புலன்விசாரணைகள் நிலுவையில் நிற்கின்றன. இது, திரு. சாமிநாதனின் அக்கறையின்மையையும் அலட்சியத்தையுமே காட்டுகிறது. இன்னும் ஒரு வாரத்திற்குள், அவர், தன்னை திருத்திக் கொள்ளவேண்டும். தவறினால், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இதனால் எச்சரிக்கப்படுகிறார்."

சுவரையே சாய்க்கும் பலம் படைத்த சாமிநாதன், சுவரிலேயே சாய்ந்தான். கண்கள் பொய்யா? காகிதம் பொய்யா?

என்று மூளைக்குள் ஒரு பட்டிமன்றம். ஆனாலும், பொய்யில்லை; மெய்தான் என்று கட்புலன் மூளைக்குச் சொல்கிறது. கீழே அதே அசோகச் சக்கர அதிகாரி கையொப்பமிட்டிருக்கிறார். கோணல் மாணலான கையெழுத்து. அதற்குக் கீழே, அடைப்புக் குறிக்குள் அவரது பெயர் பெரிய எழுத்துக்களில் டைப் அடிக்கப்பட்டுள்ளது. அதற்கும் கீழே, அவரது பதவி முத்திரை. தமிழக அரசின் இன்னொரு தனி முத்திரை.

காதும் காதும் வைத்ததுபோல் வந்திருந்த அந்த மெமோவை, சாமிநாதன் பகிரங்கப் படுத்தினான். ஒரு பைத்தியம் வீறிட்டு படிப்பதுபோல் படித்துவிட்டு, பெருமாளை நோக்கி, "பார்த்திங்களா ஸார்... பார்த்திங்களா..." என்று முதல் தடவையாக 'ஸார்' போட்டுவிட்டு, தொப்பியை எடுத்து தூரே வீசினான். லத்தியை மேஜையில் போட்டான். அவன் கை இடுப்புக்குப் போனபோது, பெருமாள் அவன் கையைத் திருகி, பேண்டின் பக்கவாட்டில் இருந்த துப்பாக்கியை எடுத்துக் கொண்டார். அவனை, அப்படியே நிமிர வைத்துவிட்டு, போலீஸ் தர்மத்தை உபதேசித்தார்.

"இது, எல்லா அதிகாரிகளும், தனக்கு விசுவாசமாய் இருக்கிறவங்களுக்கு திட்டமிட்டே கொடுக்கிற பரிசுப்பா... உனக்கும் அவருக்கும் இருக்கிற உறவு, நாளைக்கு மொட்டை மனுவாலோ அல்லது பத்திரிகை மூலமாகவோ வெளிப்பட்டால், 'அவன் எனக்கு எந்தவிதத்திலும் வேண்டியவன் இல்லை. முன்னாலேயே மெமோ கொடுத்திருக்கிறேன் பாருங்க...' என்று சொல்வதற்கான பாவலாதான் இந்த மெமோ. நீ அவரிடமே கேட்டால், 'சும்மா ஒப்புக்கு கொடுத்தேன். இது ரிக்கார்டுல இருக்காதுன்'னு மழுப்புவார்."

"இனிமேல் அவனுக்கு மாமூல் வசூலிச்சு கொடுக்க மாட்டேன்."

"உன்னால முடியாது தம்பி... நீ மட்டும் சப்ளை அண்டு சர்வீஸ் செய்யலன்னா, உன் கடமையில இருக்கிற ஓட்டைகளை பெரிசாக்கி, உன்னை, அவர் சஸ்பெண்ட் கூட செய்யலாம்."

"அப்போ மாமூலும் தொடர்ந்து கொடுக்கணும்; மாமா வேலையும் செய்யணும்; மெமோவுக்கு மேல மெமோவும் வாங்கணும். என்ன ஸார் நியாயம்...?"

"அநியாயந்தான்... எப்படியோ ஒரு சிலந்தி வலையில சிக்கிக்கிட்டே.... ஒண்ணு, சிலந்தியே வலையே அறுத்தாத்தான் உண்டு. பொதுவாக, பெரிய பூச்சிங்க சிக்கிக்கிட்டால், சிலந்தியே பயந்துபோய், வலையை அறுத்து அதைத் தப்பிக்க வைக்கும். இதனுடைய தாத்பரியத்தை அப்புறமா பேசிக்கலாம். இப்போ, எனக்கு நேரமாவுது. எங்கேயும் போகாதே... இங்கேயே இரு..."

"ஜீப்பை எடுத்துக்குங்க ஸார். என் ஆட்களையும் கூட்டிக்கிட்டு போங்க ஸார்..."

'எல் அண்ட் ஓ' பெருமாள், ஒரு சோகப் புன்னகையோடு, சகாக்களோடு வெளியேறினார். சாமிநாதன், மேஜையை குத்தினான்; சாமியாடுவதுபோல் தலையை ஆட்டினான்.

அந்தப் பகுதி வாசகர்களுக்கு ஒரு வார்த்தை...

"தயவுசெய்து, இப்போது மட்டும் அந்தக் காவல் நிலையத்திற்குப் போகாதீர்கள். உங்களை கொன்றே போட்டுவிடுவான்."

ஆனந்த விகடன் - 2000

O

# அகலிகைக் கல்

எல்லாம் அடங்கிய தாவரசங்கமமே, நித்திரையில் ஒடுங்கிப் போனதுபோல் தோன்றுமே ஒரு நேரம்... இடம், பொருள், ஏவல் என்ற முப்பரிமாண தாக்கங்களைக் கடந்த காலவுதிர் காலம்...

அந்த நேரத்தில், ஆயாவிற்கு வழக்கம்போல் விழிப்புத் தட்டிவிட்டது. ஐந்தாறு நிமிடங்கள் முந்தியும், பிந்தியும் வரும், இந்த இரண்டு மணியளவிலான நேரம், மற்றவர்களுக்கு அன்றைய இரவுக் கணக்கு. ஆனால், ஆயாவிற்கோ, அது, இருள்கவிந்த ஒரு நாளின் துவக்கம்... ஒரு நாளிற்கு பகல்தான் துவக்கம் என்பது ஆயா மறந்துபோன அல்லது மரத்துப்போன நினைவுகளில் ஒன்று. இளையவர்களுக்கு ஒரு மாதிரியாகவும், முதியவர்களுக்கு ஒரு மாதிரியாகவும் தூங்க விடாமல், அதே சமயம் முரண்பட வருமே வயது கோளாறு... அந்தக் கோளாறு ஆயாவை நெருங்க முடியவில்லை.

ஒவ்வொரு இரவும் பத்து மணியளவில் ஆயா தூங்கப் போவாள். அந்த அடுக்கு மாடி வீடுகளின் உள், வெளி விளக்குகளின் கூச்சப்பிரகாசம், ஆயாவின் விழிகளை ஊடுருவி கண்ணுக்குள் புகமுடியாது. தொலைக்காட்சிகளின் விதவிதமான ஒளிபரப்பு கூச்சல்களும் ஆயாவின் தூக்கத்தை அசைத்ததில்லை. இன்னும் சொல்லப் போனால், அவையே தனது தாயின் தாலாட்டுப் போலவே ஆயாவிற்கு கேட்கும். இந்த பின்னணியே அவளை உடனே தூங்க வைத்துவிடும். படுத்த அய்ந்தாவது நிமிடம் தன்னை இழந்த தன்மைக்குப் போய்விடுவாள். உடல் களைப்பும், மனக் களைப்பும் கனவுகளை துரத்திவிடும். ஒரு வினாடி படுத்து மறுவினாடி விழிப்பதுபோல் ஆயாவிற்கு தோன்றும். தூக்கம்-விழிப்பு என்ற, இந்த இரண்டு நிகழ்வுகளின் இடைவெளி எப்போதுமே அவளுக்கு இரண்டு மூன்று நிமிடங்கள் மாதிரிதான்.

அன்றும், ஆயா, ஒரு நிமிடம் நினைவற்றவளாய் கிடந்தாள். மனமற்றுப்போன அருவ நிலை. ஆனால் எங்கயோ விலகி நின்ற அவள் மனம் மறுநிமிடம் தலைக்குள் பால் லாரியாக ஓடியது. நெஞ்சுக்குள் ஆவின் பாலாக பெருக்கெடுத்தது. கசிந்த உறைகளாக பயமுறுத்தியது. முன்னெச்சரிக்கை அவள் உடலைத் தூக்கி 'ட' வடிவில் மடித்து வைத்தது.

பக்கத்திற்கு ஒன்றாக இரண்டடுக்காய் தோன்றும் அந்த அடுக்குமாடி கட்டிடத்தின் தளத்திற்கு இட்டுச் செல்லும் வலது பக்க ஏணிப்படிக்கு கீழ் உள்ள 'பொந்தில்' இருந்து, ஆயா வெளிப்பட்டாள். கீழ் தளத்தில் உள்ள இரண்டு வீட்டுக்காரர்களும் வீசிப் போட்டிருந்த பிய்ந்து போன கார் டயர், சைக்கிள் டியூப், ஒயர் கம்பிகள், அறுந்துபோன கயிறுகள், கிழிந்து போன துணிகள், துருப்பிடித்த ஆணிகள், நைய்ந்து போன சூட்கேஸ்கள், வேலைக்காரப் பெண்கள் விட்டுவிட்டு போகும் துடைப்பங்கள் போன்றவற்றுடன், தட்டு முட்டுச் சாமானாக படுத்தெழுந்த ஆயா, இப்போது தவழ்ந்து தவழ்ந்து அந்தப் பொந்துக்கு வெளியே வந்தாள். குனிந்தபடியே உள்ளே கையை நீட்டி தலையணையாகிப் போன சைக்கிள் டியூப்பை, அந்த இருளில் ஒரு அனுமானத்தோடு தொட்டு, ஒரு ஓரமாக தள்ளிவிட்டாள். பள்ளி கொள்வதற்கு படுக்கையான கோணிப்பையைச் சுருட்டி எதிர்ப்பக்கமாக வைத்தாள். ஒரு திருப்தியோடு தலையை மேலும் கீழுமாக ஆட்டிக் கொண்டே எழுந்தாள்.

பின்னர், எழுந்த வேகத்திலேயே, அந்தத் திண்ணைப் பகுதி போன்ற இடத்திலிருந்து வெளியே வந்து, அந்த வளாகத்தின் ஒரு ஓரமாக உள்ள கைப்பம்பை கத்த விட்டபோது, அது இரும்புத் துகள்களோடு கண்ணீர் சுரந்தது. கிட்டத்தட்ட ஒபாரிப் போன்ற சத்தத்தை எழுப்பியது. அப்போது பார்த்து அண்டை வீட்டு, சேவல் ஒன்று கூவியது... கோழிப்பண்ணை நடத்துகிற ஒருவர் கொண்டுவந்துள்ள விதவிதமான சேவல்களில் இது ஒரு சமயோசித சேவல். பொழுது விடிந்ததென்று கூவுகிறதோ இல்லையோ, ஆயாவின் காலடிச் சத்தமும், பைப் சத்தமும் கேட்டு

விட்டால் போதும். உடனே கூவும்... கூவிக்கொண்டே, இறக்கைகளை, படுக்கைத்துணியை உதறுவதுபோல் உதறும்.

ஆயா, முகத்தைக் கழுவிக் கொண்டு, குறுகிக் கிடந்த உடம்பை ஆசுவாசப் படுத்திய படியே மீண்டும் அந்த ஏணிப் பொந்தருகே வந்தாள். உள்ளே ஒரு மூலையில் வைக்கப்பட்ட அலுமினிய பாத்திரத்தை தரதரவென்று இழுத்து வெளியே கொண்டு வந்தாள். குண்டா மாதிரியான சுமாரான பாத்திரம். அதன் விளிம்புகள் பின்பக்கமாய் வளைந்து பள்ளப்பகுதியை தாராளமாய் காட்டும். ஆயா, அதற்குள் கையை விட்டு சாவகாசமாக துளாவினாள். பிறகு வேகவேகமாக கைகளால் துடவினாள். தூக்குப் பை அகப்படவில்லை. காதறுந்த பையானாலும் அதற்குள் இருந்த பிளாஸ்டிக் உறைக்குள் அறுபது பால்கார்டுகள் வைக்கப்பட்டிருந்தன. பையைக் காணவில்லை. ஒருவேளை தட்டுமுட்டு சாமான்களில் முடங்கி போயிருக்கலாம்... அந்தப் பாத்திரம் கவிழாமல் அதெப்படி முடங்கும்.?

ஆயா, அந்த இருட்டில் வயதான வாத்தாய் நடந்து, வைத்திலி ங்கம் என்று பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட இரண்டாம் நம்பர் வீட்டு கதவிற்கு மேலே உள்ள மின் சுவிட்சை ஆள்காட்டி விரலால் அழுத்தியபோது, மஞ்சள் விளக்கு அவள் தலைக்குமேல் ஒளிவட்டமாக காட்சி காட்டியது. கூடவே அந்த வீட்டு கதவு மெள்ள மெள்ள திறந்தது. சுவரை விட்டு ஓரடி இடைவெளியில் நின்ற அந்த கதவிற்கு பின்பக்கம், ஒரு ஆண் தலையும், பெண் தலையும் வெளியே எட்டிப் பார்த்தன. திருடர்களுக்கு பயந்தது போன்ற திருட்டுத் தலைகள். பின்னர் ஆயாவை மட்டுமே பார்த்துவிட்டு, அந்தக் கதவை உடைப்பதுபோல் பக்கவாட்டில் இழுத்துப் போட்டுவிட்டு, வைத்திலிங்கமும் அவரது மனைவியும் வெளிப்பட்டார்கள். அந்தம்மா நைட்டியை மார்புக்கு மேலே தூக்கிக் கொண்டு, மார்பு கூட்டிற்குள் வாயால் லேசாய் ஊதிக் கொண்டாள். அய்யாவோ, முடிச்சவிழ்ந்த லுங்கியை கட்டிக் கொண்டே, ஆயாவை முறைத்தார். ஆயாவை எப்படி திட்டலாம் என்று யோசிப்பது போல் இருவரும் வாய்களை லேசாக அகலப்படுத்தி 'அழகு' காட்டுவதுபோல்

நின்றார்கள். அந்தம்மா பேசப்போவதாக நினைத்து இவரும், இவர் பேசப்போவதாக நினைத்து அவளும் சிறிது இடைவெளி நேரம் கொடுத்த பொழுது, கடைசியில் வைத்திலிங்கமே வாய்திறந்தார்.

“ஏய் கிழவி... எதுக்காக காலிங்பெல்ல அழுத்துனே?”

அப்போதுதான், ஆயாவிற்கு தனது விரல்களில் ஒன்று செய்த தவறு புரிந்தது. ஆள்காட்டிவிரல், சுவிட்சை அழுத்தியபோது, வெறுமனே உள்ள மோதிர விரல் அழைப்பு மணியை அழுத்தியிருக்கிறது. ஆயா, அத்தனை விரல்களையும் எதிரிகளை உதறுவதுபோல் உதறிய படியே ‘தெரியாம அய்யா, தெரியாம’ என்று இழுத்தபோது, அந்தம்மா விளக்கம் கேட்டாளா அல்லது கொடுத்தாளா என்பதை கண்டுபிடிக்க முடியாதபடி கத்தினாள்.

“என்னது தெரியாமல்? பக்கத்துல வீடு இருக்கது தெரியலையா... நடு ராத்திரி என்கிறது தெரியலையா? நாங்க தூங்குறது தெரியலையா? தெரியாமத்தான் கேட்கிறேன். எதுக்காக காலிங் பெல்லை அடிச்சே?”

“பால்கார்டு இருக்கிற பையை தேடுறதுக்காக லைட்ட போட்டேன். தெரியாத்தனமா அது பெல்லையும் அடிச்சிட்டாப்போல... மன்னிச்சிடு மவராசி”

“என்னத்த மன்னிக்கிறது?”

அந்தம்மா, அவளை மன்னிக்கப்போவதில்லை என்பதுபோல் முறைத்தபோது, அந்த வீட்டுக்கு எதிர்வீட்டு கதவும் தானாய் திறப்பதுபோல் திறந்து கொண்டது. உயர்தர பதிப்புகள் போல் இன்னொரு ஜோடி... எதிர் வீட்டுப் பெண், தூக்கக் கலக்கத்தில் கண்களை இடுக்கியபடியே ஆயாவைப் பார்த்தாள். அவள் வீட்டுக்காரர், வைத்திலிங்கத்தை கேள்விப் பாவனையில் நோக்கினார். இதற்குள் வெளியே ஊத வேண்டிய விசிலை உள்ளே ஊதிக்கொண்டே காக்கி யூனிபார காவலாளி ஓடிவந்தார். அப்போதுதான் காக்கி உடைகளை களைந்துவிட்டு லுங்கி கட்டி படுத்தவர். மீண்டும் காக்கியை போட பத்து நிமிடம் ஆகிவிட்டது. ஒண்ணாம் நம்பர்க்காரர் கத்தினார்.

"சார் கத்துறாங்க. அது உனக்கு கேக்கலியா? கொல நடந்தாக்கூட பத்து நிமிசம் கழிச்சுதான் வருவியா?"

ஒண்ணாம் நம்பர்க்காரி குறுக்கிட்டாள்.

"வாட்சுமேன் போறாரு பாவம். முதல்ல இந்த கிழவிக்கு ஒரு வழி பண்ணுங்க. ஏணிபொந்துக்குள்ள அபசகுனமா படுத்துக்குறாள். காலங்காத்தால இது முகத்துலதான் முழிக்க வேண்டியிருக்கு. இதுக்கு எதாவது ஒரு வழி பண்ணனும். இது, நாளைக்கே மண்டையப் போட்டா யாரு பொறுப்பு? அசோசியஷன் கிட்ட கேட்கணும். சந்தா பிடிக்க மட்டும் மாதாமாதம் வராங்க. எல்லாம் எட்டாம் நம்பர் பொண்ணு கொடுக்கிற இளக்காரம்."

இரண்டாம் நம்பர்க்காரியும் வாய்விட்டாள்.

"தேவைன்னா அந்த கவிதாவே, ஆயாவை அவள் வீட்டுக்குள்ள வச்சுக்கலாமே. இந்த கிழவியை ஏவி, ஏன் நம்ம கழுத்த அறுக்காள்?"

"சரி..சரி... போய் தூங்கலாம். சின்ன விஷயம் இது. காலையில் பேசி தீர்த்துக்கலாம்"

ஒண்ணாம் நம்பர்க்காரி, அதே நம்பர் கணவனை சாடினாள்.

"என்ன நீங்க... இந்த ஆயாவ ஒரு பிளாட்காரி மாதிரி நினைச்சு பேசறீங்க. தீர்க்கறது என்ன தீர்க்கறது தீர்த்துக்கட்டணும். முரளி சார்! உங்களத்தான்... இவரு எப்பவுமே எடக்கு மடக்கானவரு. நாளைக்கு நீங்க அசோசியேசன் தலைவர்கிட்ட பேசி, இந்த அம்மாவை வெளியேத்தணும்."

இரண்டாம் நம்பர் காரனை தன்னைவிட பெரிதாக நினைக்கும் மனைவியிடம் பொறுமை காக்க முடியாத ஒண்ணாம் நம்பர், வீட்டுக்குள் போய் மனைவியை ஒருபிடி பிடிக்க வேண்டும் என்ற கோபவேசத்தில் அவளை வலுக்கட்டாயமாக இழுத்துக்கொண்டே போய்விட்டார். அப்போதும் அந்தம்மா 'எல்லாம் அந்த எட்டாம் நம்பர்காரியால... காலையில் இருக்கு சேதி. அவள

கீழ இறக்கி கேக்கதான் போறோம்" என்று ஆயாவை பார்த்து ஒரு முறைப்போடு சொல்லிவிட்டு, கணவன் இழுத்த இழுப்புக்கு பின்வாங்கிப் போனாள். காவலாளியும், ஆயாவை ஒரு முறைப்பு முறைத்துவிட்டு ஓடினார். கேட்டில் சந்தேகத்துக்கு உரியவர்கள் வருகிறார்களா என்பதை பார்ப்பதற்காக அல்ல... காக்கி யூனிபாரத்தை கழட்டிப் போடவேண்டும். ஒரே அரிப்பு.

ஆயாவிற்கு, எட்டாம் நம்பர் என்ற சொல்லைக் கேட்டதும் அந்த நம்பர்க்குரிய கவிதா நினைவுக்கு வந்தாள். கூடவே, மகிழ்ச்சியும் குதிபோட்டது. நேற்று மழை பலமாக பெய்தது. அந்த அடுக்குமாடி கட்டப்பட்ட லட்சணத்தில் ஏணிப்படி பொந்துக்குள்ளும் தண்ணீர் பெருக்கெடுக்கும் நிலைமை. உடனே ஆயா, அந்த தூக்குப்பையை எடுத்து எட்டாம் நம்பர் கவிதாவிடம், கொடுத்தது, இப்போதுதான் நினைவுக்கு வந்தது. அவளிடம் தான் ஆயா, பால்கார்டு விநியோகிப்பில் செலவு போக மிச்சம் பிடித்த ஓராண்டுகால உழைப்பான ஆயிரம் ரூபாயை கொடுத்து வைத்திருக்கிறாள்.

ஆயா, அந்த ஏணிப்படிகளை இரண்டிரண்டாக தாண்டினாள். பல்புகள் அலங்கார வளைவுகளுக்குள் வைக்கப்பட்டிருந்தாலும் அவை மூளிகளாகவே கிடந்தன. முன்பு ஓரிரு சமயங்களில் சில்லரை திருடர்களுக்கு இந்த விளக்குகளே வழிகாட்டியதாக பழிபோடப்பட்டு, அவை நிரந்தரமாக குருடாக்கப்பட்டன.

ஆயாவிற்கு, படியேற ஏற மூச்சிளைத்தது. மூக்குப்புயல் நுரையீரலை, வாய்வழியாக வெளியே இழுத்துப் போடுவது போன்ற வாதை. சிறிது நேரத்தில், அதே மூக்கு, தொண்டைக்குள் சிக்கிக் கொள்வது போன்ற திணறல். ஆனாலும், இளைப்பாறவோ, களைப்பாறவோ நேரமில்லை. ஏடாகூடம் நடக்கும்முன்பே, ஆவினுக்குப் போய்விட வேண்டும்.

ஆனாலும், ஆயாவின் மனோ வேகத்திற்கு, உடல் வேகம் ஈடுகொடுக்க முடியவில்லை. முதல் தளத்திற்கு வந்தவள், மேலும்

இரண்டு மாடிகளை எப்படி கடப்பது என்று அண்ணாந்து பார்த்தாள். யோசித்தபோது, பழைய நினைவுகள் மலர்ந்தன.

அந்த மாடிப் படிக்கட்டு போய், திருக்கழுக்குன்ற மலைப் படிக்கட்டுகள் தரிசனம் தந்தன. அந்த மலைக்கோயிலுக்கு, அவள் போனபோது பிள்ளைத்தாச்சி. பத்தாண்டுகாலமாக உருவாகாத பிள்ளை, வேண்டுதலின் பேரில் கருவானதாய் நினைத்தவள். அந்த வேண்டுதலை நிறைவேற்றுவதற்காக அப்போதைய இளம்பெண்ணான இந்த ஆயாவும், அவள் கணவனும், திருக்கழுக்குன்ற மலைப்படிகளில் ஏறியபோது, இவளால் வயிற்றுச் சுமையோடு எளிதாக ஏறமுடியவில்லை. உடனே, இவள் ஆம்படையான், அந்த படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருந்த குருக்களைச் சுட்டிக் காட்டினார். இவளைப் போலவே வயிறு துருத்திய குருக்கள், ஒவ்வொரு படிக்கட்டிலும் நேராக நடந்து அதன் ஓரத்தில் மறுபடிக்கு ஏறி, பின்னர் எதிர்பக்கமாக நடந்தார்கள்... இப்படி அவர்கள் ஏறுவது தெரியாமல் 'எஸ்' வடிவத்தில் நடந்ததை சுட்டிக் காட்டினார். இவளும் அப்படியே நடந்தாள். கணவனின் தோளில் கை போட்டிருந்ததால் களைப்பு வந்தாலும், இளைப்பு வரவில்லை.

ஆயா, இந்த மல்லிகை வாசனை நினைவுகளோடு இரண்டாவது மாடி தளத்திற்கு வந்து விட்டாள். சிறிது நின்று மூச்சு விட்டாள். உடனயே அவளுள் எழுந்த அந்த மல்லிகை வாசனை, துர்வாசனை ஆயிற்று.

அவளை கோயிலுக்கு கூட்டிக்கொண்டு போனவன் அதற்குபிறகு ஏழெட்டு ஆண்டுகளில் ஆயாவிற்கு கோவிலாகிவிட்டான். அவனைப் போலவே முகத்தோற்றம் கொண்டவளும், குல தெய்வமான கடல் தெய்வத்தின் பெயர் வைக்கப்பட்டவளுமான, மகள் மச்சகாந்தியை ஒரு தூசுபடாமல் வளர்ப்பதற்காக, கடலோர ஏலத்தில் மீன் வாங்கி, சாலையில் கூறுபோட்டு விற்றது, மீன் வாடிக்கையாளரான ஒரு அதிகாரி மூலம், குடிசை மாற்று வாரியத்தில் ஒரு வீடு கிடைத்தது, அதே வீட்டில் ஒரு படித்த பையனுக்கு தன் மகளை கட்டிவைத்து வீட்டோடு

மாப்பிள்ளையாக்கியது, அந்த மாப்பிளைக்காரன், ஏதோ தொழில் துவங்குவதற்கு வங்கி கடனுக்காக ஆயாவிடம் வீட்டை தன் பெயருக்கு எழுதி வாங்கியது, பிறகு அதை ஒரு போக்கிரிக்கு விற்றது, தட்டிக் கேட்ட ஆயாவை, மகள், கணவனுக்கு ஒத்தாசையாக பிடித்துக் கொள்ள, மருமகன் பல்லை உடைத்து விட்டு, வெளியேறியது, வீட்டை வாங்கிய அந்த போக்கிரி, தன்னை தட்டுமுட்டுச் சமான்களோடு வெளியே தூக்கிப் போட்டது, அங்கிருந்து இடறி இடறி இந்த இடத்திற்கு வந்தது, இப்போது மகள் பூக்காரியாக, மாமல்லபுரம் பக்கம் உடலை விற்று திரிவது, வெள்ளையும் சொள்ளையுமான அந்த மருமகப் பயல் இன்னொருத்தியோடு குடித்தனம் நடத்துவது - இவை அத்தனையும் ஆயாவிற்கு மெய்யாய், கொடுங்கனவாய் கண்கொத்திப் பாம்பாய் பிராண்டின.

ஆயாவிற்கு, மீண்டும் கடமை கண்ணாகியது. கால்களில் கைகளை ஊன்றி ஊன்றி நான்காவது மாடிக்கு எப்படியோ வந்துவிட்டாள். எட்டாம் நம்பர் கதவின் பக்கவாட்டுச் சுவரில் தனக்கு அத்துபடியான அழைப்புமணியின் சுவிட்சை நான்கு விரல்களை மடக்கிக் கொண்டு ஒற்றையாய் நீட்டி வைத்த ஆள்காட்டி விரலால் தொடப்போனாள். அதை அழுத்த வேண்டியதுதான் பாக்கி. ஆனாலும், சாக்கடிப்பதுபோல் அந்த விரலை மடக்கிக் கொண்டாள்.

இந்த எட்டாம் நம்பர் பொண்ணு 'அறியாதவள்.' கல்யாணம் ஆகி நாலைந்து மாசமே இருக்கும். தன் கணவன் திரும்பிப் படுத்துக் கொள்வதாக ஆயாவிடம் ஒருதடவை கையறு நிலையில், யாரிடமாவது சுமையை இறக்கி வைக்க வேண்டும் என்கிற முனைப்பிலோ என்னமோ சொல்லிவிட்டாள். முதல் மாதம் அவன் அப்படி இல்லை என்றும் அவள் பின்னுரையாகச் சொன்னாள். உடனே ஆயா ஒரு கைவைத்தியம் சொன்னாள். அதுவும் போனவாரந்தான் சொல்லிக் கொடுத்தாள். அதாவது கொதிக்கிற பாலில் இரண்டு பச்சை முட்டைகளை உடைத்து அப்படியே பாலுக்குள் கொட்டி, அதை இரு டம்ளர்களில் மேலும் கீழுமாக ஆற்ற வேண்டுமாம்... முட்டை, கூழாகி பாலுக்குள் இரண்டற

கலந்தவுடன், அதை அவனுக்கு கொடுக்கவேண்டுமாம். ஒருமணி நேரத்திற்கு, அவனை நோண்டக் கூடாதாம்.

மறுநாளுக்கு மறுநாள் ஆயாவை பார்த்த அந்தப்பெண் கவிதா நாணிச் கோணிச் சிரித்தாள். ஆயா அவளை கண்ணால் கேட்டபோது "இப்ப எல்லாம் அவரு என்னை திரும்பி படுக்க விடமாட்டேங்காரு" என்றாள் சிரிப்பும் கும்மாளமுமாய்.

ஆயா, மீண்டும் அந்த சுவிட்சை தொடப்போனாள். ஆனாலும் ஒரு தடங்கல். யோசித்துப் பார்த்தாள். நேற்று பெய்த மழையில் இளம்பனி வீசும் நேரமிது. அவளுக்கு தெரிந்து அதுதான் 'அதற்கு' இதமான வேளை. இந்தச் சமயத்தில் அந்த சின்னஞ்சிறிசுகளின் தூக்கத்தைக் கலைப்பது, கருவை கலைப்பது மாதிரி. ஆனாலும், நேரம் கரைஞ்சிகிட்டே போகுதே. அந்தப் பாழாப் போற லாரி ரெண்டரையிலிருந்து காலை அஞ்சு மணிக்குள்ள எப்ப வேணுமுன்னாலும் வரலாமே... இதே மாதிரி பகல் பன்னிரெண்டு மணியிலிருந்து மூணு மணி வரைக்கும் எந்த நிமிசத்துலயும் வரலாம். வரும்போது இல்லாட்டி ஏடாகூடமா நடந்துரும். இந்நேரம் ஒருவேளை, அது வந்துட்டுப் போயிருக்கலாமே. என்ன பண்ணலாம்...

ஆயா பதைபதைத்தாள். படபடத்தாள். வலது கையை சுவரை நோக்கி நீட்டுவதும், நீட்டிய கையை மடக்குவதுமாக அல்லாடினாள். அதற்குள் அண்டைவீட்டின் இன்னொரு சேவல் கூவிவிட்டது. அது புதிய வரவான வெள்ளைச் சேவல். நீட்டி முழக்கி கூவாமல். கட்டு அண்ட் ரைட்டாக கூவக் கூடியது. அடக் கடவுளே! இந்நேரம் பால் வந்திருக்க வேண்டுமே. இல்லாட்டி, அந்த சேவல் இப்போ கூவாதே.

ஆயா, ஆபத்துக்கு பாவமில்லை என்று மனதை திடப்படுத்திக் கொண்டு, அழைப்புமணி படம் போட்ட நீண்ட சுவிட்சை விரலால் தொட்டுவிட்டாள். அதற்குள் உள்ளே இருந்து செல்லமான சிணுங்கல்கள் கேட்டன. விடாப்பிடியும், கொடாப்பிடியுமான உறவுப் பிடிகளின் உரசல் சத்தங்கள் சன்னசன்னமாய் கூடி ஒருமையாய்-கலவையான வலுத்துப் போன முக்கல் முனங்கல்கள். ஆயாவிற்கே வெட்கம் பிடுங்கித் தின்றது. ஒரு கணம்தான்...

மறுகணம், கடமை நினைவுக்கு வந்தது. ஆனாலும், அழைப்பு மணியை அழுத்தவில்லை. அந்த சின்னஞ் சிறிசுகளுக்கு இடையேபோய் அவள் கரடியாய் நுழைந்துக் கொள்ள விரும்பவில்லை.

என்றாலும் ஆயாவுக்கு ஒரு ஆறுதல். எப்படியும் வழக்கம்போல் டெப்போ பையன் வந்திருக்க மாட்டான். முழு மாசத்துக்கு சம்பளம் வாங்குனாலும் மாதத்துல ஒரேஒரு தடவ பதினாறாம் தேதி மட்டுமே வருவான். அன்றைக்குத்தான் பணம் வாங்கிட்டு புதுகார்டுகளை எல்லாருக்கும் கொடுப்பான். பழைய கார்டுகளை வாங்கி, அவனே அத்தனை துளைகளிலும் குத்திக் கொள்வான். இன்றைக்கு பதினாறாம் தேதிஇல்ல. பால் லாரியில வருகிற ஆயிரம் டிரேய் தட்டுக்கள்ல, முன்னூற ராக்கப்பனோ, அல்லது குப்பனோ கீழே எடுத்து வைப்பாங்க. வாடிக்கை ஆட்களுக்கு டிரைகள ஒதுக்கி வைப்பாங்க. எல்லாருடைய கார்டுகளும், அவங்களுக்கு அத்துபடி. சம்பந்தப்பட்ட பால்கார பட்டுவாடா ஆளுக, அதுல இருக்கற உறைகளை எடுத்துக்கணும். சில சமயம் அனுப்பற இடத்துலேயே, பேஜாரு நடக்கும். நாலைஞ்சு பாக்கெட்டுங்க காணாம போயிடும். அப்பல்லாம் கடைசியா போற ஆளோட தலைச்சுமை குறையும்... தல சும குறைஞ்சி மனச் சும கூடும்.

ஆயா, அழைப்பு மணியை அழுத்தாமலே, அந்தத் தளத்தில் இருந்து அவசரஅவசரமாக கீழ்நோக்கி நடந்தாள். ஏணிப்படிகளை இடது கையால் பற்றிக் கொண்டு அவற்றில் கையை வளையம் போல் வைத்துக் கொண்டு, படிகளில் தாவித் தாவி, கைவளையம் அந்த கம்பிகளில் உருள, உருள, கால்கள் அதற்கு இணையாக நடக்க நடக்க, கீழ்தளத்திற்கு வந்து, கேட்டு வாசல் வரைக்கும் ஓடினாள். பிறகு தனது தலையிலே மென்மையாக அடித்துக் கொண்டு, மீண்டும் அந்த ஏணிப்பொந்திற்கு வந்து அதன் ஓரத்தில் இருந்த குண்டா பாத்திரத்தை எடுத்து இடுப்பில் வைத்துக் கொண்டாள். ஒரு கொழுத்த பிள்ளையை அணைப்பதுபோல், பக்கவாட்டில் கைகளை நீட்டி அணைத்தபடியே, ஓடாக்குறையாக நடந்தாள். நடக்காத குறையாக ஓடினாள்.

டிப்போ சாலைக்கு ஆயா வந்தபோது, வழிப் போக்கர்களும், வாக்கிங் ஆசாமிகளும் ஆயாவை பொழுதுபோக்காய் பார்த்தார்கள். கவிழ்ந்து நடக்கும் ஆமையை நிமிர்த்தி வைத்தது போன்ற கூன் போட்ட உடம்பு. அந்த ஆமையிலும் நட்சத்திர ஆமைபோல், காய்ப்புகளும், தேமல்களுமான உடம்பு... பறட்டைத்தலை... ஒடுங்கிபோன வயிற்றை துருத்திக் காட்டுவது போன்ற முரட்டுச் சேலையின் இரட்டை மடிப்புகள்.

ஆயாவுக்கு, டிப்போவில் ஒருத்தன் இருப்பதை பார்த்ததும் மகிழ்ச்சிதான். ராக்கப்பனா, குப்பனா என்று தொலைநோக்காய் கண்விலக்கி பார்த்தாள். வயதாகிப்போன கண்கள் பின்வாங்கின. இரண்டுபேருல எவன் இருந்தாலும் சரிதான். ராக்கப்பன் 'சவுக்கியமா ஆயான்னு' கூட கேக்காமல் அவளோடு பங்கை எடுத்துக் கொடுப்பான். குப்பன் அவளுடைய நேற்றைய ராத்திரியை விலாவாரியா விசாரிச்சுட்டு அனுதாபமா 'உம்' கொட்டுவான். பாத்திரத்தை ஒரே மூச்சுல தூக்கி, அவள் தலையில வைப்பான். சிலசமயம் வேடிக்கையா அவளோட இரண்டு கையையும் பிடிச்சு அந்தப் பாத்திரத்தின் ரெண்டு பக்கமும் ஒப்புக்கு வைத்துக் கொண்டே உயரத் தூக்கி வைப்பான். அந்த சைக்கிள்காரி நின்னா "உனக்கு இப்படி உதவட்டுமான்னு கேப்பான்." உடனே அவள் "கரிமூஞ்சி ஆசையைப்பாரு" என்று செல்லமாக சிணுங்குவாள். எல்லாருக்கும் சிரிப்பு வரும். கசிவுகளால் மெலிந்து போன பாலுறைகளின் ஆதங்கம் கூட காணாமல் போய்விடும்.

ஆயா ஓடோடினாள். டிப்போ பக்கத்தில் போனதும் அவளுக்கு மூச்சு வாங்கியது. அது நிலைப்பட்டதும் ஏறிட்டுப் பார்த்தாள். அவளுக்கு ஒரு ஏமாற்றம். ஆனாலும் அது அதிர்ச்சியாக வில்லை. டிப்போக்காரன் அத்தி பூத்தது போல் நின்றான். ஒரு சினிமா நடிகர் படம் போட்ட பனியன் சட்டை போட்டிருந்தான். காக்கா மாதிரியான சாய்வுப் பார்வை. அவன் கால்மாட்டில் மூன்று டிரேய்கள். வழக்கம்போல் மேல்நோக்கி தோன்றாமல் உள்ளடங்கிக் கிடந்தன. ஆயாவை பார்த்ததும் அவன் கத்தினான்.

"எவ்வளவு நேரமா உனக்காக காத்திருக்கது? ஏன் லேட்டு? இப்படித்தான் தினமும் வர்றியா?"

"இல்ல சாரே! ரெண்டரை மணிக்கே பர்ஸ்ட்ல வந்து பர்ஸ்டுல போறது நான்தான். இன்னிக்குப் பார்த்து, நான் கார்டுங்கள கொடுத்து வச்ச வீட்டுக்கதவு மூடிக் கிடக்கு. உன்ன காக்க வைக்கக் கூடாதுன்னுதான் ஓடி வந்தேன்."

"சரி சரி டிரேய காலி பண்ணி சீக்கிரமா கொடு. லாரி வருகிற நேரம்."

"இதோ ஆச்சுப்பா."

ஆயா, அந்த மூன்று டிரேய்களில் உள்ள உறைகளை ஒவ்வொன்றாக எடுத்து, எண்ணி எண்ணி பாத்திரத்திற்குள் போட்டாள். அறுபது உறைகளுக்கு பதிலாக ஐம்பத்திநாலுதான் கணக்கிற்கு வந்தன. ஆயா, மீண்டும் அந்த பாத்திரத்தில் இருப்பதை ஒவ்வொன்றாக எடுத்து எண்ணி எண்ணி கீழே வைத்தாள். அப்போதும் ஐம்பத்துநாலுதான். பதப்படுத்தப்பட்ட பால் உறையில் மூணக் காணோம். ஒருலிட்டர் கொண்ட கொழுப்பு சத்து பாலுலயும் ரெண்டக் காணோம். ரெண்டுக்கும் மத்தியா இருக்கிற நிலப்படுத்தப்பட்ட பால் உறையில ஒண்ணக் காணோம். ஆகமொத்தத்துல ஆறக் காணேம்.

ஆயா, அருகே டிப்போ கிளார்க் நிற்பதாக அனுமானித்து ஏறிட்டுப் பார்த்தாள். அவனைக் காணாதபோது, அக்கம்பக்கம் பார்த்தாள். அவனோ, தெருவில் ராக்கப்பனை வழிமறித்து பேசிக்கொண்டிருந்தான். ஆயாவிற்கு சிறிது தெம்பு. ராக்கப்பனை வைத்தே நியாயம் கேட்கலாம்.

ஆயா இடறிய ஒரு காலை இழுத்துப் போட்டுக் கொண்டே அவர்கள் பக்கம் போனாள். எதையோ பேசிக் கொண்டிருந்த அவர்கள் பேசி முடியட்டும் என்பது போல் காத்திருந்தாள். அவர்கள் பேச்சை நிறுத்துவதாக இல்லை. இவளுக்கு அப்போதே கேட்கவில்லை என்றால் தலை வெடித்து மூளை சிதறிவிடும் போல் இருந்தது. இடைமறித்தாள்.

"ஏம்பா டிப்போ சாரே! மொத்தம் ஆறு உறைங்க குறையுது. மூணு உறையில பால் கசிந்து பாதிதான் இருக்குது. இன்னாப்பா இதெல்லாம்?"

"இதுக்குத்தான் நீ முன்னாலேயே வந்திருக்கணும். யாரோ வாடிக்கைக்காரங்க உன் டிரேயில இருந்து எடுத்துட்டுப் போயிருப்பாங்க."

"எங்க ஆளுங்க அப்படிப்பட்ட ஆளுங்க இல்ல நயினா. அடுத்தவங்க உறையில கைவச்சுக் கூட பார்க்க மாட்டாங்க. அப்படிப்பட்ட சனங்க. நீ தெனமும் வந்தால்தானே உனக்கு இது தெரிஞ்சிருக்கும்? ஆடிக்கும் அமாசைக்குமா வந்தா..."

"ஓகோ.. சட்டம் பேசறியா? சரி. ஒன் கார்டுங்கள எடு."

"அதான் சொன்னேனே. அங்க வெச்சுட்டேன்னு. போய் எடுத்துக்கினு வரட்டுமா"

"ஒனக்காக நான் காத்திருக்க முடியாது. நீ என்னை நம்பாட்டா நான் உன்னை நம்பணுமா?"

"அப்ப என்னதான் செய்யணுங்கிற?"

"என்ன செய்வியோ தெரியாது. இன்னும் அஞ்சு நிமிசத்துல நீ கார்டுங்கள காட்டணும். அதோ தொலைவுல லாரி தெரியுது பாரு. அது வருமுன்னால காட்டணும். இல்லாட்டா இதுங்கள எல்லாம் எடுத்து லாரியில ஏத்திடுவேன்."

ஆயா, ராக்கப்பனிடம் முறையிடுவதற்காக ஏறிட்டுப் பார்த்தாள். அவன், எப்போதோ நழுவிவிட்டான் என்பது அப்போதுதான் அவளுக்கு உறைத்தது. அவளுக்கு, கை, கால்கள் ஆடின. காதுகள் குடைந்தன. கண்கள் எரிந்தன. ஆறுபேருக்கு எப்படி ஜவாப் சொல்வது? அத்தன கார்டுகளும் அடுக்கு மாடி கார்டுங்க. அந்த கார்டுங்க சாக்குலதான், அவள், அங்கே தங்கியிருக்காள். இன்னைக்கு வேற கசமுசா. ஒருத்தருக்கு கொடுத்துட்டு இன்னொருத்தருக்கு கொடுக்காட்டால், அந்த எலி வளையில இருக்க முடியாது. அதோட, அது நியாயமும் இல்லை. ரெண்டுவாட்டி, அரையரை லிட்டரா கொடுக்கறதுக்கு வீட்டுக்கு முப்பது ரூபா கொடுக்காங்க. எல்லாருமே பாலுக்கு காத்திருப்பாங்க. ஏன் இன்னிக்குப் பார்த்து எல்லாமே என் தலையில வியுது...

ஆயா, தனக்குள்ளே புலம்பிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் நடந்தாள். மனதுக்குள் கோவிலாகிப் போன கணவனை நினைத்தாள். மகளாகப் பிறந்த மசச்காந்தியை திட்டினாள். மாப்பிளையாகிப் போன அடாவடி பயலை சபித்தாள் 'முட்டைப்பால்' கவிதாவையும் திட்டப்போனாள். ஆனால் நாக்கைக் கடித்துக் கொண்டாள். இந்தச் சமயத்துல ஏற்படுற வயித்தெறிச்சல் அந்த சின்னஞ்சிறிசை ஏதாவது செய்துடக்கூடாது.

டிப்போக்காரனுக்கு, ஒருவேளை இறக்கம் வந்ததோ என்னமோ... ஒரு வேளை அதோ வருகிற அந்த லாரி டிரைவரிடம் அவள் போட்டுக் கொடுத்துடக்கூடாது என்று நினைத்தானோ என்னமோ... கருணைப் பரவசமாய் ஆயாவுக்கு அறிவுரை சொன்னாள்.

"சரி ஒன் கார்டுங்கள நான் கேக்கல. போய்த் தொலை. சும்மா பினாத்திட்டு நிக்காதே. அதோ பால் லாரி வருது. டிரைவர் வீட்டுக்கு இன்னைக்கு விருந்தாளிங்க வராங்களாம். ஒன் பாலுல இன்னும் ரெண்டு லிட்டர் போயிடும். சீக்கிரமா காலிபண்ணு."

ஆயா, அந்த பாத்திரத்தை இழுத்து தலையில் தூக்கப்போன போது, லாரி நெருங்கி விட்டது. எதிர்ப்பக்கம் போனாலும் வம்பு... லாரிப் பக்கம் போனாலும் வம்பு... என்ன செய்யலாம் என்று யோசித்தவளின் தலைக்குகையில் மங்கியதோர் வெளிச்சம்... உடனே அவள் சாலையில் இருந்து ஒரு பொந்தை காட்டியபடியே சிறிது தூக்கலாக உள்ள பிளாட்பாரத்தில் அந்த பாத்திரத்தை எடுத்து வைத்து அதை தரதரவென்று இழுத்து இழுத்து டிப்போவுக்கு பின்னால் வைத்து விட்டு அவளும் அங்கே ஒளிந்து கொண்டாள்.

எதிர்ப்புறம் உள்ள பச்சை இலைமயப் பின்னணியில் மஞ்சள் பூ கொத்துகளை சரவிளக்குகளாய் காட்டிக் கொண்டிருந் வாகை மரத்தில் ஆயாவிற்காக காத்திருந்த காகங்களுக்கு அவளை காணாததில் ஏமாற்றம். அந்த இளைத்த கிழவியிடம் மட்டுமே தலைக்கு மேல் பறந்து, பாத்திர விளிம்புகளில் தைரியமாக

உட்கார்ந்து, பாலுறைகளை லாகவமாக கொத்திக் குடிப்பவை. காத்திருந்த காகங்கள் அங்குமிங்குமாக பறந்துவிட்டு, இவளை மாதிரி ஒரு மீன்கார, கிழவி எவளாவது கிடைக்காமலா போவாள் என்ற அனுமானத்தில் பறந்து போயின.

இதற்குள் பால் லாரி வந்துவிட்டது. இருபக்கமும் சாலைகளை அடைத்து தக்காரும் மிக்காரும் இல்லாமல் அனைத்து வாகனங்களையும் ஓரங்கட்டச் செய்து, உருமியபடியே வந்து நின்றது. அந்த உருமலின் பின்னணியில் லாரிக்காரனும், டிப்போக்காரனும் பேசுவது ஆயாவுக்கு சத்தமாகவே கேட்டது.

"டிரைவரண்ணே! போனவாரம் எங்க தாத்தா செத்தாரே. அவருக்கு இன்னிக்கு பாலு. நீங்க சடங்குக்கு வராட்டாலும் குடும்பத்தோட சாப்பாட்டுக்காவுது இன்னிக்கு வந்துடணும். உங்கள கூப்பிடறதுக்குதான் இன்னிக்கு வந்தேன்."

"பால் பாயாசத்தோட சோறு போடுவியா?"

"பின்ன என்ன அது இல்லாமலா"

"அப்புறம்பா, எனக்கும் சாயங்காலம் மாமனார், மாமியார் வராங்க. நீ என்ன செய்வியோ எனக்கு தெரியாது, இப்போவே எனக்கு ரெண்டு லிட்டர் பால் வேணும்."

டிப்போக்காரன், பரமசிவன் கழுத்து பாம்பான லாரி டிரைவரை திருப்திப்படுத்துவதர்காக ஆயா பதுங்கி இருக்கும் இடத்தை நோட்டமிட்டான். அப்போது -

ஆயா, தனக்கு யாரோ பால் ஊற்றுவது போல அசைவற்று அகலிகைக் கல்லாய் கிடந்தாள்.

தமிழரசு பொங்கல் மலர் - 2001

○

# கடைசியர்கள்

முத்துக்குமார், தேனுக்குள் விழுந்து, இறக்கை நனைந்து தவிக்கும் வண்டு போலவே கிடந்தான்.

சுருட்டி வைக்கப்பட்ட போர்வைத் துணி போல், உடம்பு முழுவதையும் சுற்றிக்கொண்டு உருளை வடிவமாக கட்டிலில் கிடந்தான். இவ்வளவுக்கும் கொட்டும் பனிக்காலத்தில் கூட, மின் விசிறியின் சுழற்சிக்கு கீழே, முடிச்சவிழ்ந்த லுங்கியோடு திறந்தவெளி மார்போடு, கைகால்களை விரித்துப் போட்டு மல்லாக்க கிடப்பவன். மின்காற்று வீச்சில், நாற்றங்கால் போன்ற தலைமுடிக் கற்றைகளும், மார்பில் பதியமான மென்முடிகளும் பனித்திவலைகளோடு அசைந்தாடுவதில் சுகம் காண்பவன். சொந்த அம்மாவை விட, அந்த மின்னம்மா, தலையைக் கோதிவிட்டு, கன்னத்தை வருடிவிட்டு, கழுத்தை நீவிவிட்டு, மார்பை தடவிவிடுவது போன்ற அனுமான சுகவாசி...

இப்போதோ, முட்டிக்கால்களை வயிற்றுக்குள் வைத்துக் கொண்டு அந்தப் போர்வையில் நடுப்பகுதியை மத்தளம் போல் காட்ட வைத்து சர்வம் மாயா மயமாக படுத்திருந்தான்.

அப்படியும், எண்ண அலைகளை, உடம்பை போல் முடக்க முடியவில்லை. அவை சுருண்டு போவதற்கு பதிலாக சுழன்றன. நினைவுகள் வரிசைப்படி வராமல், முன்னும் பின்னுமாய் தாறுமாறாய் ஆட்டிப் படைத்தன. அத்தனையும் மாயா நினைவுகளே. பெற்றெடுத்த அம்மாவோ, பிறப்பித்த தந்தையோ, உடன் பிறந்த தங்கையோ, அவன் மனதிற்குள் மூச்சுக்கூட விடவில்லை. மாயா... மாயா... மாயா மட்டுமே. அவள், அவன் உருவத்திற்குள் உச்சி முதல் பாதம் வரை அருவமாக படருகிறாள். பின்னர், இவனை அருவமாக்கி, அவன் உடல் முழுவதும் உருவமாகி, அவனை உட்கொள்கிறாள். இப்படி ஒட்டு மொத்தமாக

வந்தவள், துண்டு துண்டாகவும், துக்கடாகவும் வந்து, அவனைத் துண்டாடுகிறாள். அவன் முகத்திற்கு மூடியாகிறாள். பின்னர் எதிர் முகம் போட்டு, அவன் முகத்தை செல்லமாக முட்டுகிறாள். நெற்றிப் பொட்டில் கிச் கிச் சுகம். உதடுகளில் ஈரம். அப்புறம், இவன் அவளோடு மானசிகமாகப் பேசப்போகிறான். அதற்குள் அவள் முந்திக் கொள்கிறாள். என்னவெல்லாமோ பேசுகிறாள். முன்பு சுகப்படுத்திய அவளது பேச்சு இப்போதோ சோகப் படுத்துகிறது.

அந்தப் போர்வை, தானாகவே, அவனை உருட்டி விட்டதுபோல் கட்டிலின் விளிம்பு வரை அவனை கொண்டுவந்து போட்டுவிட்டு, கீழே அவனைப் போலவே சுருண்டு விழுந்தது. அப்படியும், அவன் பிரக்ஞை அற்றவனாய் அசைவற்றுக் கிடந்தான். அந்தப் போர்வையை உருவித் தள்ளிய கரங்கள், அவனை, கழுத்தை பிடித்து தூக்கி கட்டில் சட்டத்தில் உட்கார வைக்கிறது. குப்புற சாயப் போனவனை, உச்சி முடியை விடாப்பிடியாய் பிடித்து, நிமிர்த்திய நிலையில் வைக்கிறது. ஆனாலும், அவன் கண்களோ, அருகே நிற்பவரை உள்வாங்காமல் திறந்தவெளியாகிறது. அதே சமயம் சிறிது நேரத்தில் உச்சி முடி வலியில், கண்களில் சித்தப்பா பதிவாகிறார். இடுப்பில் கை வைத்தபடியே, அவனை ஏகத்தாளமாக பார்க்கிறார். முழங்கால் வரை நீண்ட கால் சட்டையோடும், தொளதொளப்பான பனியன் ஜிப்பாவுடனும் நிற்கிறார். எதனையும் என்ன என்று கேட்பது போன்ற மேலெழுந்த பார்வை. ஆசையில் பாதி நரைத்துப் போனதுபோன்ற மீசை. கையில் ஒரு டென்னிஸ் மட்டையை கொடுக்கலாம் போன்ற உடல்வாகு.

'எப்போ வந்தீங்க சித்தப்பா' என்று தட்டுத்தடுமாறி கேட்கப்போன முத்துக்குமார், கடைசி வார்த்தையான சித்தப்பாவை, மாயாவாக்குகிறான். ஆனாலும், அவர் அதை பொருட்படுத்தாமல், அண்ணன் மகனை ஆய்வாகப் பார்க்கிறார். ஊருக்குத்தான் அவன் அண்ணன் மகன். அவரை பொறுத்த அளவில் அண்ணி மகன்தான். அண்ணனோடு வந்த உறவானாலும், அந்த அண்ணியோடு ஒப்பிடும்போது, இவருக்கு

கூடப்பிறந்த அண்ணன் தூரத்து உறவு மாதிரி. கர்ணண் மாதிரி, அந்த அண்ணியின் வயிற்றில் அவள் திருமணத்திற்கு முன்பே வயிற்றுக்குள்தான் கருப்பட்டது போன்ற பாசப்பிணைப்பு. இதனால்தான், அண்ணி, நேற்று மாலை டெலிபோனில் பேசிய உடனேயே பணத்தைப் பற்றி, பொருட்படுத்தாமல், டில்லியில் இருந்து பறந்து வந்து விட்டார்.

'என்னடா இதெல்லாம்.? சித்தியும் பசங்களும் எப்படி இருக்காங்கன்னு கூட உனக்கு விசாரிக்க தோணல. ஒருவேள யாரோ மாயாவோ, ஓயாவோ... அவள் எப்படி இருக்கான்னு, நான் உன்கிட்ட கேக்கலைன்னு கோபமா?'

முத்துக்குமார், மவுனமாய் தலைதாழ்த்தியபோது, சித்தப்பா அதிர்ச்சி வைத்தியரானார்.

'சரி... எப்போ... அவள் உன் மனசில இருந்து இந்த சித்தப்பாவ துரத்திட்டாளோ... அப்போ... எனக்கு உன்கிட்ட வேல இல்ல. வாரேன்'

சித்தப்பா, ஒரு காலை தரையில் அழுத்தி, மறுகாலை தூக்கி வைத்து ஆடலரசனாய் நின்றார். அவருக்கும் கலக்கந்தான். 'போனால் போகட்டும்' என்று பயல் கண்டுக்காமல் இருப்பானோ என்ற கவலை. கூடவே காலும் வலித்தது. வலித்த காலை ஒரடி முன் வைத்து, அவனை ஒரக்கண்ணால் உள்வாங்கியபோது

முத்துக்குமார் தள்ளாடி தள்ளாடி, எழுந்து தத்தித் தத்தி நடந்து, அவர் மார்பில் கால்கள் குடைசாய சாய்ந்தான். சித்தப்பாவின் முதுகின் இருபக்கமும் கைகளை போட்டுக் கொண்டு கேவிக் கேவி அழுதான். சோகத்தின் முளைகள் போலான குறுந்தாடி, அவர் கழுத்தை ஊசி முனைகளாய் குத்தின. முன்பெல்லாம் காற்றடைத்த டயர் போல், விம்மி புடைத்த, அவன் தோள்கள், இப்போது பஞ்சராகிக் கிடந்தன. சித்தப்பா, அவனைத் தட்டிக் கொடுத்தார். உடனே அவன் புலம்பினான். தாயிடம் சொல்லாத புலம்பல். தனக்குதானே வெளிப்படுத்திய சமிக்ஞைகளின் வார்த்தை வடிவங்கள்.

'என்னை அறியாமலே இப்படி ஆயிட்டினே சித்தப்பா... ஆக்கிட்டாளே சித்தப்பா... எல்லார் கண்ணுக்கும் கேவலமா போயிட்டேனே...'

சித்தப்பா, அவனை தூக்கி நிறுத்தி, சொந்தக் காலில் நிற்க வைத்தார். பிறகு அவனை பழைய பதினைந்து வயது சிறுவனாக்கி; தன்னை இருபதைந்து வயது இளைஞனாக்கி அதே பழைய குரலில் அதட்டலும், அன்பும் கலக்க பேசினார்.

'இந்தா பாருடா முத்து.! நீ கேவலமா ஆகிடவும் இல்ல... காதலும் கேவலம் இல்ல... அது நம்ம சங்கப் பாடல் சொல்வது மாதிரி வானை விட பெரியது. கொடுக்கத் தெரிந்தது. எடுக்க தெரியாதது. நடப்பதை நம்பாமல், நம்புவதை நடப்பதாக நினைத்து முட்டாளின் சொர்க்கத்தில் அல்லது நரகத்தில் ஒருவரை கொண்டுபோய் போடுவது இந்தக் காதல். அதனால இப்படி ஆனதுக்கு, நீ இப்போதைக்கு வெட்கப்பட வேண்டிய அவசியம் இல்லை. புறப்படுடா! காலாற நடந்துட்டு வருவோம். நடக்கும்போதே உன் காதல் கதையை சொல்லு... யார் கண்டா? அந்த கதைக்குள்ளேயே ஒரு தீர்வு இருக்கலாம்.'

'நான் நடக்கிற நிலையில இல்லையே சித்தப்பா. '

'உன்னை நான் நடக்க வைக்கிறேன்.'

என்றாலும், முத்துக்குமார் சித்தப்பாவின் பேச்சை பொருட்படுத்தாதது போல் நின்ற இடத்திலேயே நெடுமரமாய் நின்றபோது,சித்தப்பா அவன் தோளில் கை போட்டபடியே அறிவுரையாய் பேசினார்.

'நீ இப்படி முடங்கியாதலேயே நம்ம குடும்பமும் முடங்கிக் கிடக்கிறது தெரியுமாடா? அம்மா துடிக்கிற துடிப்பு, உன் துடிப்பு ஆகாட்டால்... அப்பாவோட தவிப்பு, உன் தவிப்பு ஆகாட்டால்... அண்ணன் பழைய நிலைக்கு வந்த பிறகுதான் தனக்கு கல்யாணம் நடக்கணுமுன்னு நிச்சயித்த திருமண தேதியை தள்ளி வைக்கச் சொல்லும் உன் தங்கை திலகாவின் பாசம், உன் மனசுல தைக்காட்டால், நீ என்னடா மனுஷன்? சரி... நானாவது வாக்கிங் போயிட்டு வரேன்.'

'நானும் வாரேன் சித்தப்பா'

சித்தப்பாவும் முத்துக்குமாரும் அந்த மேல்தள ஒற்றை அறையிலிருந்து விடுபட்டு, கீழ்த்தள வீட்டிற்கு வந்தார்கள். காலடிச் சத்தம் கேட்டு அதற்கென்றே காத்திருந்தது போல் கதவை திறந்த அண்ணி, விளக்கைப் போட்டுவிட்டு, கைகளை நெறித்தாள். கோதி முடியாத கொண்டையோடு, தாறுமாறாக தலையை கவிழ்த்த படி நின்றாள். கண்கள் நீர் மேகங்களாயின. இதை தாள முடியாத மகள் திலகா, அம்மாவை தன் மார்போடு சாத்திக் கொண்டாள். பின்னர், அம்மாவை விட்டுவிட்டு, சித்தப்பாவின் முன்னால் வந்து அவர் கைகளை பிடித்துக் கொண்டு கேவினாள்.

சித்தப்பா, ஆறுதலாக பேசுவதற்கு முன்பே, முத்துக்குமாரின் அம்மா, மைத்துனரிடம் தொலைபேசியில் சொன்னதையே சொன்னாள்.

'மூணு மாசமா இப்படியே கிடக்கான். ஒவ்வொரு மாத கடைசிலேயும் எப்படியோ பாதி அளவுக்கு தேறி, முதல் தேதி ஆபீசு போறான். ஆனா மத்தியானமே லீவு போட்டுட்டு திரும்பிடுறான். பேசாம அந்த வேலையிலிருந்து அவனை நின்னுடச் சொல்லுப்பா. இவனை எங்களால காப்பாத்த முடியும்.'

அம்மாக்காரி, வெறுமையாக தன்னையும் மகனையும் மாறிமாறி பார்த்துவிட்டு, மைத்துனரை, தான் கட்டிய புடவை போல் கசிந்து நின்று பார்த்தாள். திலகா பின்னோக்கி நடந்து அம்மாவோடு ஒட்டிக் கொண்டாள். இரட்டைத்தலைகளைக் கொண்ட ஒற்றை உடம்பான தோற்றம்.

சித்தப்பா, தன்னம்பிக்கை எதிரொலிக்கும் குரலில், நன்னம்பிக்கையை காட்டும் முகபாவத்தோடு பேசினார்.

'அதான் நான் வந்துட்டேனே. என் பொறுப்புல விடுங்க. டேய் முத்து! உள்ளே போய் ஜாக்கிங்கா வா. அதாண்டா... உன் குழாய் டவுசர போட்டு கேன்வாஸ் பூட்ஸோட வாடா.'

'நான் கெட்ட கேட்டுக்கு இதுவே போதும் சித்தப்பா.'

'இப்படி வந்தியானால், இந்த இருட்டுல போலீஸ்காரன் உன்னோடு என்னையும் சேர்த்து கூட்டிட்டுப் போயிடுவான். சரி... வேட்டிய கட்டிக்கிட்டு ஒரு சட்டையை போட்டுக்கிட்டாவது வா.'

சிறிது நேரத்தில், சித்தப்பா, முத்துக்குமாரை அந்த வீடு உள்ள குறுக்குத் தெருவிற்கு கொண்டு வந்தார். இருள், மேகமாய் கவிழ்ந்திருந்தது. விட்டு விட்டு எரிந்த ஒரு தெருவிளக்கு மின்வீச்சுக்களாய் தோற்றங்காட்டின. பேச்சு மூச்சில்லாத மவுனம், அந்த இருளுக்கு அழுத்தம் சேர்த்தது. நடக்க நடக்க முத்துக்குமார் சித்தப்பாவிடம் தானாய், முதல் தகவல் அறிக்கையை வாசிப்பது போல் ஒப்பித்தான்.

"ஆபிசுல என்ன விட மேலானவங்க எத்தனையோ பேரு இருக்காங்க சித்தப்பா. அவள் மேல... அதான் அந்த மாயா மேல... பைத்தியமா இருந்தவங்களும் உண்டு. என்னை விட அழகானவங்க. உயர்ந்த பதவில இருக்கிறவங்க. ஆனா அவள், ஒதுங்கிக் கிடந்த என்னை தேடிப் பிடித்து காதலித்தாள். ஒருநாள் 'நீ யார் கிட்டயும் பல்லைக் காட்டாதனால உன்கிட்ட பல்லைக் காட்டறேன்னு' சிரித்துச் சொன்னாள். ஆபீசுல தாழ்வு மனப்பான்மையில தவித்த எனக்கு, அவள் ஒரு ஆறுதலானாள். முதல்ல, என்ன கடற்கரைக்கு இழுத்துட்டுப் போனது அவள்தான். அப்புறந்தான், நான் அவள சினிமா தியேட்டருக்கு இழுத்துதுட்டுப் போனேன். இப்ப என்னடான்னா, என்னை இழுபறில விட்டுட்டாள் சித்தப்பா."

விக்கியும், திக்கியும், தட்டுத்தடுமாறியும் பள்ளிக்கூட மாணவன்போல ஒப்பித்த முத்துக்குமார், சிறிய நடைபயண நேரத்தில் சரளமாக பேசப்போனபோது, ஏழெட்டு மிருக உருவங்கள் கண்களில் தட்டுப்பட்டன. இருளின் அடர்த்திகளாக காணப்பட்டன. நிழலும் நிசமும் ஒன்றித்த நாய் வடிவங்கள். இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் இருட்டில் வருகிறவர் தெரிந்தவராக இருந்தாலும், 'புரபஷனலாக' குரைக்கும் இந்த நாய்கள், இப்போது 'பிஸியாய்' இயங்கின. இவற்றை உற்றுப்பார்த்த சித்தப்பா, முத்துக்குமார் முகத்தை அந்த, நாய்க்கூட்டத்தின் பக்கமாக திருப்பி வர்ணித்தார்.

'இதுல மொத்தம் எட்டு நாயுங்க இருக்குது. இதுல அதோ ஓடுது பாரு அதுதான் பெண்நாய். மீதி எல்லாம் ஆண்நாயுங்க. நல்லா பாருடா... அந்த பெண் நாய் அந்த ஏழு நாய்களில், சிறுத்தை நிறத்துல இருக்குது பாரு அந்த நாய்... அது நிற்கும்போது மட்டுமே நிக்குது. ஓடும்போது மட்டுமே ஓடுது. ஏன்னா, இது காதலிக்கிற ஒரே ஆண்நாய் அதுதான். ஆனால், எல்லா ஆண் நாய்களும் தங்களைதான், அது காதலிக்கிறதா நினைச்சுட்டு ஓடுது பாரு! எந்தப் பெண்நாயும், காதலிக்கிற நாய் மற்ற நாய்களோட போட்டிப்போட முடியாம பின்தங்கினா, ஒரு கட்டம் வரைக்கும் காதல் நாய்க்கு சலுகைக் கொடுக்கும். பிறகு, கிடைக்கிற நாய்களுல ஒரு நாய தேர்ந்தெடுக்கும். 'இதுதான் மிருக விதி.'

சித்தப்பா, தான் சொன்னதை நிரூபிப்பது போல் கீழே குனிந்து ஒரு மண் கட்டியை எடுத்து நாயக நாய் மீது பட்டும் படாமலும் எறிந்தார். உடனே அந்த நாய், காதலியை துறந்து, குழுவிடமிருந்து விலகி எதிர்ப்பக்கமாய் ஊளையிட்டபடியே ஓடியது. உடனே அந்த பெட்டைநாயும் தன்னைச் சூழ்ந்த இதர நாய்களை குரைத்தும் கடித்தும் அபிமன்யு போல் ஊடுருவியபடியே தனித்தோடிய தனது நாய்க் காதலனை நோக்கி செல்லச் சிணுங்கலாய் சிணுங்கியபடியே ஓடியது.

சித்தப்பாவே, இப்போது ஒரு காதலனாய் மாறிப் பேசினார்.

'எல்லா உயிர்களையும் இரண்டு அடிப்படை அம்சங்களே ஆட்டிப் படைக்குதுடா. ஒன்று, உணவு தேடல்-உண்ணல். இரண்டாவது காதல்-உறவாடல். உணவோ அல்லது அதன் தேடலோ குறிப்பிட்ட நேரத்தில் முடிந்து விடும். ஆனால், இந்த காதல் மட்டும்தான் உடல் முழுவதிலும் உள்ளத்தின் பரப்பிலும் ஊடுருவி நிற்கக் கூடியது.'

'இப்போதாவது என் பிரச்சனைய புரிஞ்சிட்டிங்களே சித்தப்பா.'

'புரிஞ்சிக்கிட்டேன். அதோட உனக்குப் புரியவைக்கிறேன். நீ மட்டுந்தான் காதலில் சிக்கியதாய் நினைக்காதே. காதல்

நாய்க்கும் உண்டு, ஈக்கும் உண்டு, என்பதை சொல்றதுக்குதான் இதைச் சொன்னேன்.'

சித்தப்பா பேச்சின் தாத்பரியம் புரியாமல், முத்துக்குமார், பிடரியில் கைகளை கோர்த்தபோது, சித்தப்பா அவற்றை விலக்கி அவன் கோணல்மாணல்களை நேராக்கி மேற்கொண்டு வழி நடத்தினார்.

சிறிது தூரம் நடந்திருப்பார்கள். திடீரென்று முத்துக்குமார் ஒருகாலை தூக்கி பெருவிரலை பிடித்துக் கொண்டு அங்குமிங்குமாய் ஆடி, எந்த சைக்கிள் அவன் மீது மோதியதோ, அந்த சைக்கிளின் இருக்கையை ஆதாரமாக பிடித்துக் கொண்டு குனிந்து நின்றான். வலியில் பல்லைக் கடித்தான். சித்தப்பா அவனை தன்மீது சாய்த்துக் கொண்டு, கோணல் மாணலாக நின்ற சைக்கிள் பையனை உற்றுப் பார்த்தார். அவன் சைக்கிள் இருக்கை வரை தலையை குனிந்து கொண்டு லேசாய் நிமிர்வதும், மீண்டும் குனிவதுமாக இயங்கினான். அந்த சைக்கிளின் பின்பக்கம் பிளாஸ்டிக் பெட்டி. அதன் பச்சை பரப்பை மறைத்தபடி தலையற்ற கொக்குகள் போல் ஆவின் பால் உறைகள்... அந்த பெட்டி முழுக்கும் தேன் கலக்காத பாலோட்டம். முத்துக்குமார் அந்த பையனை எதிரியாக பார்த்து, அடக்கி வைத்த உணர்வுகளுக்கு வார்த்தைகளால் வடிவம் கொடுத்தான்.

'ஒனக்கு மூள இருக்காடா?' லெப்டல போக வேண்டியவன் ரைட்டுல வந்தா என்னடா அர்த்தம்..? வலிய வந்து மோதுறியே. உனக்கு அறிவிருக்கா?'

'மன்னிச்சிடுங்க அண்ணே. பால் லாரி வர லேட்டாயிட்டுது. முப்பது வீடுகளுக்கு பால் குடுக்கணும். அதனால அவசரத்துல..'

'உன் அவரசத்துக்கு நாங்கதானா கிடைச்சோம்?'

'அப்புறமா திட்டுங்கண்ணே. நீங்க வீட்டுக்கு வரும்போது, அம்மா காபியோட வாசலுக்கு வரவேண்டாமா? உங்க வீட்டுக்கும் நான்தாண்ணே பால் கொடுக்கேன்... போகட்டுமா...'

'நான் மட்டும் உஷாரா இல்லாட்டா, நீயே எனக்கு பால் ஊத்தியிருப்பே'

அந்தச் சிறுவன் மழுப்பலாக சிரித்து மழுங்கலானான். முத்துக்குமார் ஒரு உருமல் உருமி விட்டு, சித்தப்பாவின் கையைப் பிடித்து, அவரை, இவனே வழிநடத்துவது போல், தனது காதல் கதையின் அடுத்த எபிசோடை அவிழ்த்தான்.

'நானும் மாயாவும், உடலளவுல இடைவெளி கொடுத்தாலும், மனதுக்கு இடைவெளி கொடுக்காமால் நெருக்கமா பழகினோம். ஒருநாள், வழக்கம்போல கடற்கரைக்கு ஸ்கூட்டர்ல ஒண்ணாத்தான் போனோம். என் இடுப்பச் சுத்தி கையை வளைத்து வழக்கம்போல பிடித்திருந்தாள். ஆனால், கடற்கரைக்கு போனதும் ஆளே மாறிட்டாள். 'முத்து! நான் உனக்கு ஒரு அதிர்ச்சியான செய்திய சொல்லப்போறேன். நான்தான் உன்னை வலிய காதலிச்சேன். இப்பவும் உயிருக்கு உயிரா நேசிக்கிறேன். இல்லங்கல. ஆனால், என்னை படிக்க வைத்து ஆளாக்குன என் அண்ணன், அவரோட நண்பனை நான் கட்டிக்கணுமுன்னு பாசமா சொல்லிட்டார். என்னால மீற முடியல. பாசமுன்னு சொன்ன உடனே எனக்கு ஐந்து பேர் நினைவுக்கு வருது. அப்பா, அம்மா, அண்ணன், தங்கை, காதலன் நீ... கடைசில நீ வந்தாலும், உன் உறவு கடை நிலை உறவல்ல. ஆனாலும் நாலுநாலுதான்... ஒண்ணு ஒண்ணுதான். நாம் கால் பதித்த இந்த கடற்கரைமண், நம் காதலுக்கு புதைமண் என்பது, இப்பத்தான் புரியுது. என் ஒருத்திக்காக என்னை மீட்க நினைக்கிற குடும்பத்தையும் கீழே பிடித்து இழுத்து இந்த மண்ணுக்குள்ள மூழ்க வைக்க விரும்பலன்'னு.. பொறிஞ்சிட்டாள்.'

'சீரியஸா பேசினாளா... சீரியலா பேசுனாளா...'

'சீரியஸாத்தான் சித்தப்பா. பேசி முடித்ததும் திரும்பி பாராம போயிட்டாள். இப்படியும் ஒரு பெண் இருப்பாளா சித்தப்பா.'

'இருப்பாள்கள், இருப்பான்கள்' என்பது மாதிரி சித்தப்பா அவனை அதிர்ச்சியாக பார்க்காமல், சராசரித் தனமாகவே

பார்த்தார். பிறகு அவன் முதுகை தள்ளித் தள்ளி நடக்க வைத்தார். இருவரும் அந்தத் தெருவின் திருப்பு முனைக்கு வந்தார்கள். அந்த குறுக்குத்தெருவை வழிமறித்த பிரதான தெரு அவர்களுக்கு வலிய வந்ததுபோல் தோன்றியது. பச்சை இரவாய் தோற்றங்காட்டிய வாகை மரம், இருள் குடமாய் கவிழ்ந்திருந்தது. திடீரென்று பத்து பதினைந்து காகங்கள் அதன் உச்சியில் இருந்து மேலே எம்புகின்றன. அதே சமயத்தில் அந்த மரக்கிளைகளின் முச்சந்தியில் இருந்து, கலர் பல்பு கண்களோடு ஒரு வெள்ளைப் பூனை கீழ்நோக்கி இறங்குகிறது. எம்பிப் பறந்த காகங்கள் தாழப் பறந்து, இடுக்கி வைத்த நகக்கால்களை நீட்டி, அந்தப் பூனையின் பிடறியில் லாகவமாய் அடிக்கப் போகின்றன. எதிரே ஒரு அசோக மரம் இந்தக் காட்சியை முக்காடு போட்டு பார்க்கிறது. அந்தப் பூனை அந்த மரத்தூரில் இருந்து ஒரு புதருக்குள் குதிக்கிறது. சித்தப்பா மீண்டும் வருணனையாளனாய் ஆகிறார்.

'பூனைக்கு மணிகட்ட முடியுமோ முடியாதோ. ஆனால் அதுக்காக காத்திருக்காமல் அதை துரத்த முடியுமுன்னு இந்த காகங்கள் காட்டுது பார்.'

முத்துக்குமார் ஒன்றும் புரியாமல் சித்தப்பாவையே பார்க்கிறான். சித்தப்பாவின் ரசனையை மனதிற்குள் சபிக்கிறான். சிறிது நடந்தால், எதிர்ப்பக்கம் ஒரு பங்களா வீட்டு வளாகத்தில் பன்னிரெண்டு வயது சிறுமி ஒருத்தி, கைப்பம்பை பிடித்து வேகவேகமாய் அடிக்கிறாள். அந்தச் சத்தத்திற்கு அவளது மூச்சே பின்னணி இசையாகிறது. அந்த பம்போடு கீழே குனிகிறாள். மேலே எழும்புகிறாள். வீட்டின் வெளி வெளிச்சத்தில் அவள் துருப்பிடித்த முகம் யந்திரமயமாக மேலும் கீழுமாய் ஆடுகிறது. சத்தம் கேட்டு அங்கே பார்த்த முத்துக்குமார், சித்தப்பாவிடம் மீண்டும் புலம்புகிறான்.

'வீட்ல இருக்கும் போதாவது பரவாயில்ல சித்தப்பா. ஆபிசுல போயி அவளப் பார்த்த உடனே ஷாக்காயிடுது. அவளுக்கு ஒரு சின்ன இறக்கமாவுது இருக்கட்டுமே. எப்படி எதுவுமே நடக்காதது மாதிரி எல்லார்கிட்டயும் அரட்டை

அடிக்கிறாள் தெரியுமா? ஆனாலும் காதல் நீங்க சொன்னது மாதிரி வானைவிட பெரியதுதான். அவளை என்னால மறக்க முடியலையே சித்தப்பா.'

'வானம் என்றால் சூன்யம் என்றும் ஒரு அர்த்தம் உண்டு. அப்படி அவள் சூன்யமாக ஆகியிருக்கலாம். அடிமன சோகத்தை வெளிமன ஆரவாரங்களாக காட்டலாம். ஒருவேளை நீ அவளை வெறுக்க வேண்டும் என்பதற்காக அப்படி நடந்து கொள்ளலாம்.'

முத்துக்குமாருக்கு, மாயா மீது லேசாய் கழிவிரக்கம் ஏற்பட்டது. அப்போதுதான் குறுக்குத்தெருவையும், பிரதான தெருவையும் தாண்டி மெயின் ரோட்டுக்கு வந்துவிட்டது முத்துக்குமாருக்கு புரிந்தது. கூடவே, பொழுது புலர்வதற்கு அடையாளமாக அரசு பேருந்துகள் யந்திர சேவல்களாய் கூவுகின்றன. அதன் சக்கரங்கள் இறக்கைகளாய் தரையை அடித்தபடியே பறக்கின்றன. அதிக தூரம் நடந்து விட்டார்கள். அவ்வப்போது வீட்டுக்குப் போகலாம் என்று முரண்டு செய்த முத்துக்குமாரை, சித்தப்பா, உடும்பு பிடியாக பிடித்துக் கொண்டார். பிறகு அவனை நிறுத்தி அங்கே பார்” என்று எதிர் திசையை ஆள்காட்டி விரலால் சுட்டிக் காட்டினார்.

ஆண்களும் பெண்களும் இடையிடையே சிறுவர்களுமாய் விரவிக் கலந்த ஒரு அழுக்குக் கூட்டம் எதிர்ப்படுகிறது. ஒவ்வொருவர் கையிலும் ஒரு இரும்பு கம்பி செங்குத்தாய் நிமிர்ந்து நிற்கிறது. தோளில் மண்வெட்டி கவ்விக் கொண்டிருக்கிறது. பெண்கள் கைகளில் ஒப்புக்கு கூட, ஒரு கண்ணாடி வளையல் இல்லை. செம்மண் துகள்களே குங்குமமாகின்றன. காது, மூக்குத் துவாரங்கள், சதைத் துளைகளாய் தோன்றுகின்றன. எங்கேயோ ஒரு இடத்தில் குழிபறித்து தங்களைத் தாங்களே புதைத்துக் கொள்ளப் போகிற மாதிரியான புழுதிக் கூட்டம். அல்லது புதை குழிகளில் மரித்தெழுந்தது போன்ற செம்மண் துகள்கள் அப்பிய மனித மந்தை, படையெடுப்பு வீச்சில் நடைபோடுகிறது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. ஆனாலும், அந்த மூன்று அடுக்கு வரிசை கலையவில்லை. வேகவேகமாய் நடக்கிறார்கள். சித்தப்பா, அவன் கேளா காதுக்கு சத்தம் போட்டே பேசுகிறார்.

'இவர்கள் சாலைத் தொழிலாளர்கள். கொதிக்கும் தாரில் கோணிப்பை செருப்புகளோடு, எக்கிய வயிறுகளோடு நிற்பவர்கள். இதோ நீயும் நானும் நடக்கோமே... இதே மாதிரி ஒரு தார்ச்சாலையை எங்கேயோ போடுவதற்காக இங்கயே ஆயத்தமாகிறவர்கள். இவர்கள் 'அந்தச் சமயத்தில்' தவிர எந்த சமயத்திலும் தாங்களை ஆண், பெண் என்று அடையாளப் படுத்தாத மானுடக் கூறுகள்.'

'சித்தப்பா! பழையபடியும் கவிஞனாகிட்டீங்க. போலிருக்கே. அவங்க கிடக்காங்க. என் சப்ஜெட்டுக்கு வாங்க சித்தப்பா'

சித்தப்பா, அவனை புருவச் சுழிப்பாய் பார்க்கிறார். ஆனாலும், அவன் தோளில் கைபோட்டு நடக்கிறார். ஒருகிலோ மீட்டர் நடந்து, ஒரு சாலை மேட்டுக்கு வந்து விட்டார்கள். எதிரே இன்னொரு கூட்டம். இதில் பெண்கள் கண்ணாடி வளையல்கள் போட்டிருந்தார்கள். குங்குமம், நெற்றிப் பொட்டுகளை மறைத்திருந்தது. வலது கை விரல்கள் மடங்கி தூக்குப் பைகளை பிடித்திருந்தன. ஒரு சிலரின் தலைகளில் பாண்டு கூடைகள், அந்தக் கால போலீஸ் தொப்பிகள் போல் கவிழ்ந்து கிடந்தன. காய்ந்த தலைகளும் உண்டு. பூக்களை வேய்ந்த தலைகளும் உண்டு. வரிசைக் குலையாமல் நடந்தாலும் இதில் அணிவகுப்பு நடையில்லை. சக்திக்கேற்ற நடை. இதனால் ஜோடிகள் மாறுகின்றன. பேச்சுகள் திசை திரும்புகின்றன. சித்தப்பா அந்தக் கூட்டத்தை இவனுக்கு அடையாளப் படுத்துகிறார்.

'இவர்கள் சாலை தொழிலாளர்களை விட, ஒரே ஒரு படி மேலான கட்டிடத் தொழிலாளர்கள். இவர்களிலும் மனைவிகளை மேஸ்திரிகளுக்கு பறிகொடுத்த 'பெரியாட்கள்' உண்டு. மேனா மினுக்கிகளிடம், கணவன்களை திருடுகொடுத்த சித்தாள் பெண்களும் உண்டு. இந்த காதல் மாறாட்டத்தில் அனாதைகளான சிறுவர் சிறுமிகளும் உண்டு. ஆனாலும் இவர்கள் உள்ளத்தை உழைப்பில் கரைப்பவர்கள். துக்கங்களை, சுண்ணாம்பு கலவைகளாய் ஆக்குகிறவர்கள். சாரப்படிகளில் ஏறி ஏறி, மனப்பாரங்களை இறக்குகிறவர்கள். இவர்களுக்கு சாரங்களில் ஏறுவது நரகமென்றால், சமதளத்திற்கு வருவது சொர்க்கம். உழைப்பையே சொர்க்கமாகவும், நரகமாகவும் ஆக்கிக் கொண்ட கூட்டம்.'

முத்துக்குமாருக்கு நகச்சூடாக இருந்த எரிச்சல் அனலானது. சித்தப்பா, தனது பிரச்சனைக்கு தீர்வு காட்டுவார், என்றால் அவரோ தீர்த்துக் கட்டுவது மாதிரி பேசுகிறாரே. பழையபடியும் அவரை மாயாவிற்குள் கொண்டுவர வேண்டும். எப்படி...

'அதோ பாருங்க சித்தப்பா! உயரமா செஞ்சிவப்பா ஒரு இளம்பெண் போறாள் பாருங்க. ஒரு சித்தாள் சிறுவன் தோளுல கையப் போட்டுட்டு, அவன் காதளவுக்கு குனிந்து கிசுகிசுப்பா பேசறதும், தலையை நிமிர்த்தி மற்றவர்கள பார்க்கிறதுமா நடக்காளே... அதான் சித்தப்பா... சடை போட்ட கொண்டையோட, பிறைநிலா மாதிரி கிளிப்ப மாட்டிக்கிட்டு போறாள் பாருங்க.... அவளுக்கு சல்வார் கம்மீஸ் மாட்டினால், அது அசல் மாயாதான்."

சித்தப்பா அவனை திடுக்கிட்டுப் பார்த்தார். தலையை மேலும், கீழுமாய் ஆட்டிப் பார்த்தார். அவன், தன் பேச்சை விரயமாக்கியதுபோல, அவனை விரயமாக பார்த்தார். பின்னர், அவனை விட்டு சிறிது விலகி தனித்து நடந்தார். வேகவேமாய் நடந்தார். இதனால் அவன்தான், அவர் நடைக்கு ஈடுகொடுக்கும் வகையில் எக்கி எக்கி நடந்தான்.

இருவரும், ஒரு சாலைச் சந்திப்பு வட்டத்தை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு, திரும்பி நடந்தபோது ஒரு மணிநேரம் ஓடி இருக்கும்.

காய்கறிகள் ஆங்காங்கே கடைவிரித்திருந்தன. நடமாடும் பழக்கடைகளான தள்ளுவண்டிகள் நடைபோட்டன. ஒய்யாரக் கொண்டையோடும், ஓய்ந்துபோன தலையோடும் இளம்பெண்களும், கிழவிகளுமாய் குறுக்குநெடுக்குமாக போய்க் கொண்டிருந்தார்கள். வீட்டுக்காரிகளை விமர்சிக்கும் உரையாடல்கள். 'எச்சிச் சோறை சாப்பிடாதடி' என்ற உபசேதங்கள். 'அவள் கிடக்காள் பிஸ்தா' என்ற சவால் மொழிகள். அத்தனைபேரும் வீட்டுவேலை செய்கிறவர்கள். சங்கம் அமைக்காத குறையாக சங்கமித்தவர்கள். இவர்கள் கடந்துபோன பேருந்து நிலையங்களில் எதிர் திசையை நோக்கியபடி காய்கறிகள் வாங்கவும், பூக்கள் வாங்கவும் புறப்பட்ட ஆண்பெண் கூட்டம்... "என்னைப் பார்க்காமல் என் மனசை பார்" என்பதுபோல் பலாத்தோல் பாதி பிளந்து நிற்க அதன்

உள்ளும் வெளியேயும் வெள்ளை கத்தாழைகள் போல் சுளைகள்... இரத்தச் சதைகள் போன்ற தர்கீஸ் பழக் குவியல்கள். அருகிலேயே அரிவாளை சுமக்கும் தேங்காய் குவியல்கள்... 'சூடு வைப்பியா' என்று கிண்டலும், கேலியுமாய் கேட்கும் ஒரு குடும்பத்தை பின்னிருக்கையில் அமர வைத்து ஆட்டோவை முழங்க வைக்கும் டிரைவர்... எங்கு நோக்கினும் இயக்க நிலை....

அத்தனை பேரையும், அத்தனையையும் கடந்து, சித்தப்பாவும், முத்துக்குமாரும் வீடு இருக்கும் குறுக்குத் தெருவிற்கு மீண்டும் வருகிறார்கள். சித்தப்பாவின் புருவங்கள் ஆச்சரியமாய் உயர்ந்து, விழிகளை மேலிழுக்கின்றன. முன்பு பார்த்த அந்த பெட்டைநாய் இப்போது இன்னொரு துடிநாயோடு இணைந்திருக்கிறது. உடலால் பிரிக்க முடியாத இணைப்பு. இந்த நாய் காதலித்த சிறுத்தை நிற நாயோ, வேறொரு பக்கம் ஒரு நாய்க்குட்டியோடு விளையாடி கொண்டிருக்கிறது. நாய்க்குட்டி நான்கு கால்களையும் மேலே தூக்கி கழுத்தை வளைக்கிறது. சிறுத்தைநாய், குட்டியை பொய்கடியாய் கடிக்கிறது.

சித்தப்பா முத்துக்குமாரை பார்க்காமலே சலிப்போடு பேசுகிறார்.

'இந்த நாய்களுக்கு இருக்கிற அணுகுமுறைகூட மனுசனுக்கு இல்ல.'

முத்துக்குமார், சித்தப்பாவை திகைத்துப் பார்க்கிறான். அவர் ஏன் அப்படி தன்னிடம் பாராமுகமாய் ஆனார் என்பதை அறிந்து கொள்ள பார்க்கிறான். இணைந்த அந்த நாய்களையும், இணையாமல் போன நாயக நாயையும் அழுத்தமாய் பார்க்கிறான். ஏதோ ஒன்று தட்டுப்படுகிறது. கூடவே, மாயாவின் நினைப்பும் வந்ததால், அந்த தட்டுப்படல், தட்டுப்பாடாகிறது.

இந்தச் சமயத்தில், இருவரும், வீட்டை நெருங்க போகிறார்கள். அவர்களை வழிமறிப்பது போல் ஒரு பையன் இடைச்செறுகலாய் சைக்கிளோடு வந்து நிற்கிறான். அந்த சைக்கிளின் கேரியரில் அடுக்கடுக்காய் வைக்கப்பட்ட நாளிதழ்களில் ஒன்றையும், முன்னால்

தொங்கிய தூக்குப் பையிலிருந்து ஒரு வார இதழையும் எடுக்கிறான். வழக்கம் போல் நாளுக்குள் வாரத்தைப் புதைத்து காலமாற்றம் செய்யப்போனவன், அவற்றை ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி முத்துக்குமாரிடம் அதை நீட்டுகிறான். வர்ணிப்போடு கொடுக்கிறான்.

'உங்களுக்குத் தான்ணே இந்த பேப்பர். வாங்கிக்கங்க அண்ணே. எனக்கு ஒரு கைவீச்சு மிச்சம்.'

முத்துக்குமார் வாங்காமல் நின்றபோது, சித்தப்பா வாங்கிக் கொள்கிறார். ஒற்றை எலும்பால் ஆனது போன்ற அந்தச் சிறுவன், அவரை நன்றியோடு பார்க்கிறான். சித்தப்பா, அவனிடம் தனது சந்தேகத்தை கேட்கிறார்.

'தம்பி... நீ அப்போ இவன சைக்கிள்ல மோதினியே அவன்தானே.'

'ஆமாம் சார். அப்ப பால் பையன், இப்போ பேப்பர் பையன், இன்னும் இரண்டு மணி நேரத்துல ஸ்கூல் பையன். சாயங்காலமா சின்ன பிள்ளைங்களுக்கு டியூசன் வாத்தியார்'

'அப்போ நீ பள்ளிக்கூடத்துல படிக்கிறியா?'

'ஏன் இப்படி நம்பாதது மாதிரி கேட்கறீங்க. நான் படிக்கக்கூடாதா?'

'அப்படிச் சொல்வேனா? படிக்கிற பையன் இப்படி உடம்ப வருத்தணுமா? அப்பா, அம்மா 'உன்னை தெருவுல விட்டுட்டு என்ன செய்றாங்க?'

'என்னசார் செய்யுறது? அப்பன் குடிகாரன். அம்மா நோயாளி. எங்க அக்காவ கூட்டிக்கிட்டு ஓடிப்போன புறம்போக்கு ஒரு வருசத்துக்கு முன்னாடியே அவள, கை விட்டுட்டான். காதல் கசந்துட்டாம். எப்படியோ எங்க அக்காவ வேற கல்யாணம் செய்றதுக்கு சம்மதிக்க வச்சுட்டேன். அதற்கு கொஞ்சம் பைசா தேவப்படுது.'

'அப்போ அக்கா கல்யாணத்துக்கு பிறகு இப்படி உடம்ப வருத்திக்கிறத நிறுத்திடுவியா'

'எதுக்கு சார் நிறுத்தணும்? மேல மேல போய்கிட்டே இருக்கணும் சார். எங்கேயும் இடறிடப்படாது. உழைக்காத உடம்புல மனசு படியாது. மன்னிச்சிடுங்க சார். உங்ககிட்ட பேசிக்கிட்டே இருக்கலாம் போல தோணுது. ஆனாலும் நேரமில்ல சார். அதோ அந்த மூலை வீட்டுல ஒருத்தர் இருக்கார். இந்த தெருவுக்குகூட ஒரு பைசா பிரயோசனம் இல்லாதவரு. ஆனாலும், பேப்பர் போகாட்டா வாள் வாளுன்னு கத்துவார். அந்த கத்தலக்கூட, நான் வாழு, வாழுன்னு சொல்றதா நினைச்சிக்கிறேன்.'

அந்தப் பையன் சிரித்தபடியே, சைக்கிளை வேகவேகமாய் உருட்டி, பெடலில் கால் மிதியாமல் அதன் இருக்கையில் ஒரே துள்ளலாய் துள்ளி உட்கார்ந்த படியே ஓடுகிறான். சித்தப்பாவின் பிரமிப்பு அடங்கவில்லை. இந்தப் பையன் எப்படி தர்க்கரீதியாக பேசுகிறான். தெளிவான சிந்தனை இருப்பதால் இப்படி இயங்குகிறானா? அல்லது இப்படி இயங்குவதால் தெளிவாக சிந்திருக்கிறானா?

சித்தப்பாவின் மனமேடை பட்டிமண்டபத்தை முத்துக்குமார் கலைத்தான்.

'வழிப்போக்கர்கள பற்றித்தான் நினைக்கிறீங்களே தவிர எனக்கு ஒரு வழி பண்ணலியே சித்தப்பா.'

சித்தப்பா, முத்துக்குமாரை கனிவோடும்,காயோடும் பார்க்கிறார். இறுதியாக சொல்வதுபோல் சொல்கிறார். காய் கனியுமா அல்லது கனி அழுகுமா என்பது புரியாமல், ஏதோ ஒரு வேகத்தோடு மேடைப் பேச்சாளி போல் பேசுகிறார்.

'வழி போக்கர்களை வைத்து உனக்கு வழிகாட்ட நினைத்தேன். நீ புரிஞ்சுக்கல. இப்போ, நாம் சந்தித்த அத்தனை பேரும், நமது சங்க காலத்திலேயே காதல் இலக்கணத்துக்கு தகுதியற்றவர்களாய் கருதப்பட்ட கடைசியர்கள். ஆனால், இந்த கடைசியர்கள்தான் சமூகத்தின் முன்னணி வீரர்கள். இவர்களோடு நீ கரைந்துவிட்டால், கரைய மறுப்பது கரைந்துவிடும். மனம் சூன்யத்தில் நிற்காது. எதையாவது ஒன்றை பற்றிக்கொண்டுதான்

நிற்கும். இந்த கடைசியர்களோடு கலந்து அவர்களிடம் கடமையை வாங்கி உரிமையை கொடுக்க போராடினால் அல்லது குறைந்தபட்சம் இவர்களைப் பற்றி மனதில் நினைத்தால், உன் நினைவை ஆக்கிரமிக்கும் மாயாவை, நீ, நீக்க வேண்டிய அவசியமில்லை. அவளே விலகிக் கொள்வாள்.'

முத்துக்குமார், உடற்பயிற்சியாக நடக்கவில்லை என்றாலும் அந்த நடையே, அந்த உடலுக்குள் நீக்கமற நிறைந்த உள்ளத்தை ஓரளவிற்கு இடிதாங்கியாய் ஆக்கி இருக்க வேண்டும்.

சித்தப்பா பேசும்போது பயபக்தியோடு அதை கேட்டுக் கொண்டிருந்தான். அவர்மேலும் பேசவேண்டும் என்பதுபோல் அவரை அண்ணாந்து பார்த்தான்.

ஆனந்த விகடன் - முத்திரைக் காழ் - 2001

○

# கலவறப் போதை

தமிழக அரசின் இ.ஆ.ப. அதிகாரி உக்கம்சிங், தாடி வைத்த சைக்காட்ரிஸ்ட் டாக்டர் ராம் விவேக், 'பாப் தலை' கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட் எஸ்தர், சமூக இயல் விஞ்ஞானி பாப்பம்மா, பென்சில் மீசை வைத்த "மனித உரிமை" மகேந்திரன் ஆகியோரைக் கொண்ட அந்தக் குழுவை, லோக்கல் இன்ஸ்பெக்டர், தனது லத்திக் கம்பை வரவேற்பு வளையமாக தாழ்த்தி வைத்துக் கொண்டு, அந்த வீட்டுக்குள் வழிநடத்தினார்.

சின்னப் பூட்டு போடப்பட்ட அந்த ஓலை வீட்டின் கதவை, அவர் லத்திக் கம்பில் இரும்பு பூணால், அடித்து நொறுக்கிய போது, கதவு கொக்கியோடு பின்வாங்கியது. அங்கே கிடந்தவனைப் பார்த்து குழு ஆச்சரியப்பட்டதா, அதிர்ச்சி அடைந்ததா என்று ஒரு பட்டி மண்டபமே நடத்தலாம்.

பன்னீர், அந்த வீட்டுக்குள் உலக அதிசயங்களில் எட்டாவதால் ஆனது போல் தரையோடு தரையாய்க் கிடந்தான். அந்த ஒற்றை ஓலைவீட்டின் நடுப்பக்கமாக, ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு படுத்தக் கோலத்தில் கிடப்பதுபோல் கிடந்தான். இரும்புக் காப்புகளுக்குள் திணிக்கப்பட்டு, அவற்றில் சங்கிலியால் கோர்க்கப்பட்ட அவன் இரண்டு கைகளும், இடுப்புக்கு இருபக்கமும் சிறிது இடைவெளி கொடுத்து, குத்தி வைத்த கம்பு முளைகளில் இணைக்கப்பட்டிருந்தன. அந்த முளைகளின் அடிவாரத்தைச் சுற்றியிருந்த குருத்து மண்ணில் எறும்புகள் மொய்த்தன. கால்களும் இதே விகிதாசாரத்தில், இதே வகை இரும்புச் சங்கிலிக் கோர்வையால் பிணைக்கப்பட்டிருந்தன. கை விரல்களிலும், கால் விரல்களிலும், தென்னை ஓலை ஈர்க்குச்சிகள், ஒன்றுமாற்றி ஒன்றாய், டேப் கட்டில் பின்னப்பட்டதுபோல் சொருகப்பட்டிருந்தன. வயிற்றுக்கு மேல் ஒரு ரப்பர் பேண்ட், வளைந்து விலாமுனைகளில் குத்தி வைக்கப்பட்ட ஆணிகளைச்

சுற்றி முடிச்சுகளாயின. எல்லாவற்றிற்கும் மேலாக, அவனது வாய்க்குள் கெட்டியான பஞ்சு சொருகப் பட்டிருந்தது. இதனால், அவனுக்கு உதட்டோரங்களிலும் வெள்ளை நாக்குகள் முளைத்திருப்பது போன்ற கண்காட்சி. போதாக்குறைக்கு, முன் கழுத்தை மறைத்த தாடி. பின் கழுத்தை மூடிய பிடரி.

தொளதொளப்பாய்ப் போன லுங்கியும் சட்டையுமாய் கிடந்த பன்னீரின் பார்வை படும் வகையில், குழுவினர் ஒரு பள்ளத்தை எட்டிப் பார்ப்பதுபோல், கண்களைத் தாழ்த்தினார்கள். அப்போது பன்னீரின் கண்கள், ஒன்றை ஒன்று நெருக்கப்போவதுபோல், மூக்குப் பக்கமாய் சுழன்றன. வயிற்றைச் சுற்றிய ரப்பர் பேண்ட் வளைந்து கொடுத்தது. வாய்க்குள் திணித்த பஞ்சுத் துண்டு, மெல்ல அசைந்தது. மற்றபடி எந்த அசைவும் இல்லை.

ஒரு "நல்ல" கேஸை கண்டுபிடித்த திருப்தியோடும், இதை எப்படி பரபரப்பான செய்தியாக்கலாம் என்ற பப்ளிசிட்டி சிந்தனையோடும், உறுப்பினர்கள் அவனை போட்டி போட்டு பார்த்தபோது, கூட்டம் கூடிவிட்டது. பட்டப்பகல் என்பதால், வேலைக்கு போகமுடியாத பாட்டிகள், தாத்தாக்கள், அவர்களின் பேர பேத்திகள், நோயாளிகள், பெண்டாட்டிகளின் உழைப்பில் வாழும் 'குடும்ப தாதாக்கள்' என்று கலப்படக் கூட்டம்.

சல்வார் காமீஸ் "சமூக இயல்" பாப்பம்மா, கூட்டத்தை ஒரே நோக்காய் பார்த்து, தனது இளவயது துணிச்சலில் ஒரே மூச்சாய் கேட்டாள்.

"என்ன அநியாயம் இது? எந்த சமூகத்துரோகி செய்த வேலை? மயானபுத்திரனுக்கு காவு கொடுக்கிற 'பிக்கை அதான் பன்றியை கூட இப்படி கிடத்த மாட்டாங்களே! சொல்லுங்கய்யா... சொல்லுங்கம்மா... வாயில புண்ணாக்கா வச்சிருக்கிங்க...? ஏன் ஊமையாயிட்டீங்க?"

பாப்பம்மா, தென்பாண்டித்தமிழில் கேட்டபோது, கூட்டத்தினர் வாய்கள் புண்ணானதுபோல், அவற்றை அசைக்காமல் வைத்திருந்தனர். அவள் மட்டும் என்றால், உப்பு வைத்து ஊற வைத்திருப்பார்கள். கூடவே காக்கி யூனிபாரம் நிற்கிறதே...

இந்த மௌனிகளை தன்னால் மட்டுமே பேசவைக்க முடியும் என்ற பெருமிதத்தில் "மனித உரிமை" மகேந்திரன், மனிதாபிமானத்தின் அடிவாரத்திலிருந்து, அதன் உச்சத்தில் ஏறி நின்றுகொண்டு, தான் செய்யாததை பிறரைச் செய்யச் சொன்னார்.

"மொதல்ல அவனை அவிழ்த்து விடுங்கய்யா..."

அப்படியும் கூட்டம் பேசாமல் நின்றபடியே, சந்தை இரைச்சலாய் முணுமுணுத்தபோது, அரசுக் குழுவின் மெய்க்காவலரான இன்ஸ்பெக்டர், கூட்டத்தினரை துப்பாக்கித் தனமாகப் பார்த்தபடியே மிரட்டினார்.

"அவிழ்த்து விடுறிங்களா? இல்ல... உங்களையும் இந்த கொடுமைக்கு உடந்தைன்னு அரெஸ்ட் செய்யணுமா?"

இப்போது கூட்டத்தினர் போட்டி போட்டபடியே, பன்னீரின் கட்டுக்களை அரும்பாடுபட்டு அகற்றினார்கள். ஒருவர், அவனின் வாயிலிருந்த ஸ்பாஞ்சை எடுக்கும் முயற்சியில், கடிபட்டக் கையோடு, அதை எடுத்து தூரே எறிந்தார். இரண்டு சிறுவர்கள், ஈர்க்குச்சிகளை எடுத்து அவற்றை நினைவுச் சின்னம் போல் கையில் வைத்துக்கொண்டார்கள்.

இனிமேல் இழப்பதற்கு எதுவும் இல்லை என்பதுபோல், இடம் பொருள் ஏவல் புரியாமல் கிடந்த பன்னீரை, கூட்ட முகப்பினர் தூக்கி நிறுத்தியபோது, இன்ஸ்பெக்டரும் குழு உறுப்பினர்களோடு பயந்து விலகினார். உடனே ஒரு 'தொள்ளை'க் காது பாட்டி, 'பயப்படாதிக... யாரையும் எதுவும் செய்யமாட்டான். எல்லாத்தையும் தன்மேலேயே செய்துக்குவான். ஏதோ போதாத காலம். நீங்களாவது, இந்த பய மவனுக்கு எதாவது செய்யணும்' என்றபோது -

பன்னீர், வாசலை நோக்கி பொடி நடையாய் நடந்தான். அவனைத் தடுத்தாட் கொள்ளப்போன இன்ஸ்பெக்டரிடம், கள ஆராய்ச்சியில் விருப்பமுள்ள மனநல டாக்டர் ராம் விவேக், 'அவனை, அவன் போக்கிலேயே விடுங்க. நான் பார்த்துக்கிறேன்' என்றார்.

லாடம் அடித்து முடிக்கப்பட்ட காளை மாடு, துவக்கத்தில் அசைந்தாடி, அப்புறம் துள்ளிக் குதிப்பதுபோல், பன்னீர், ஓணான் செடிகளும், அவற்றிற்கு இடையே மஞ்சள் பூ பூத்த பூசணிக் கொடிகளும் சுற்றி வளைத்த தனது வீட்டிற்கு முன்னால் நின்றான். பின்னர் சிறிது தொலைவில் நடந்தான். கதிரடித்து, கதிரடித்து வழுக்கையான ஒரு பொட்டலை, ஆடுதளம் போல் அளப்பரிய ஆனந்தத்தோடு பார்த்தான். பின்னர், இந்த பொட்டல் வட்டத்தின் மையத்தில் நின்றுகொண்டு, கூட்டத்தை பன்னீர் 'சரணமாய்ப்' பார்த்தான். ஒரே ஒரு நிமிடம். மறுநிமிடமோ

பன்னீர், தனது இரண்டு கரங்களாலும் தலையை விடாமலேயே அடித்தான். விடு விடென்று அடித்தான். மத்தளத்தை மாறி மாறித் தாக்கும் கம்புகள்போல், கைகளை ஆக்கிக்கொண்டான். பின்னர் வலி பொறுக்க முடியாமலோ என்னவோ, தலைமுடியை தாறுமாறாய்ப் பிய்த்தான். காதுகளை முத்துச் சிப்பிபோல் மூடிக்கொண்டு, பள்ளிக்கூட ஆசிரியர் மாணவர்களை திருகுவதுபோல் திருகினான். இதற்குப் பிறகு, கைகளை கழுத்தின் இருபக்கமும் கொண்டுவந்து, அதை நெறித்தான். கழுத்தை விடுவித்துவிட்டு, கன்னங்களை துடாலடியாய் அடித்துக்கொண்டான். பின்னர், இரண்டு கரங்களையும் தலைக்குமேல் கொண்டுபோய், தீப்பாய்ச்சி அரிவாட்களைப்போல லேசாய் வளைத்து, விரல்களை ஒருமுனையாக்கி, ஒன்றை ஒன்றை ஆழம் பார்ப்பதுபோல், முன்னாலும் பின்னாலும் ஆட்டிக்கொண்டான். இந்த ஆட்டம் முடிந்த முப்பது வினாடிகளில், இரண்டு கைகளும் ஒன்றுடன் ஒன்று போரிட்டன. ஒன்றை ஒன்று அடித்துக்கொண்டன. வலதுகை, எதிரிக்கையான இடதுகை விரல்களை பின்புறமாய் வளைத்தது. வளைபட்ட இடதுகை விரல்கள், திமிறி வெளிப்பட்டு, வலது கையின் மணிக்கட்டில் ஆழப்பதிந்து, ரத்தக் கசிவை ஏற்படுத்தின. இந்த அடாவடியான அடிதடிக்கு அவன் வாய் தாளலயமாய் இப்படிப் புலம்பியது.

"படுகளத்தில எதுக்குடா ஒப்பாரி...? அத்தை மகன்னாலும், அடுத்த ஊர்க்காரன்தானடா? முகம் பார்த்து பின்வாங்குறதுக்கு

வேற ஆளப்பாருடா. எனக்கு உறவை விட ஊர்தாண்டா முக்கியம் பதினாறு பட்டியிலேயும் எங்க வெட்டாம்பட்டிதாண்டா உசத்தி."

அந்த ஆடுதளத்திற்கு வேலியானது போல், மக்கள் கருவேல மரங்களும் புதர்களும் மண்டியது போல் மண்டி நின்றார்கள். கூட்டத்தில் ஒரு மல்வேட்டிக்கார விவேகி, தன்னைப் பார்த்த குழு உறுப்பினர்களுக்கு, முன்னுரையும் பின்னுரையுமாய் விளக்கமளித்தார்.

"எப்படி இருந்த பயல்... இப்படி ஆயிட்டான். பதிமூணு வயசிலேயே, பொதுக்காரியத்துல இறங்கினவன். அப்போ... எங்க ஊருக்கும் பக்கத்து சட்டாம்பட்டிக்கும் குளத்து தண்ணி தாவா, காவிரி நீர் விவகாரம் மாதிரி ஆயிட்டுது. இன்னும் கூடத் தீரலை... இதோட, குளத்து மீனை பங்கு போடுறதலயும் பிரச்சினை. குளத்துங்கரையில, ரெண்டு ஊர்க்காரங்களும் அரிவாளும் கம்புமாய் சந்திச்சோம். அப்போ, எங்களோட வந்த இந்தப் பன்னீரு, சட்டாம்பட்டியைச் சேர்ந்த அப்பா கூட பிறந்த அத்த மகனோட தலையில கருங்கல்ல தூக்கிப்போட்டான். அந்த அளவுக்கு ஊர் அபிமானி. இப்போ என்னடான்னா... அய்யய்யோ... டேய்... டேய்..."

மல்வேட்டிக்காரர், காதலாகி கண்ணீர் மல்கி, பன்னீரைப் பிடிக்க ஓடியபோது, கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட்டான எஸ்தர், தன்னை பெண்ணென்றும் பாராமல், அவரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். இன்ஸ்பெக்டர், "செத்தா போயிடுவான்...? கொஞ்சம் நேரம் சும்மா நில்லுவே..." என்று சொன்னபோதுதான், எஸ்தர் அவர் மீது போட்ட தனது பிடியை விட்டாள். மீண்டும் எல்லோரையும்போல், அவள் பார்வையும் பன்னீர்மேல் பட்டது.

இப்போது, பன்னீரின் ஆட்டமும் பாட்டமும் சுதி மாறின. அவனது இரண்டு கால்களும் ஒன்றை ஒன்று உதைத்துக் கொண்டன; மிதித்துக்கொண்டன. குத்துச்சண்டை வீரர்கள் போல், ஒன்றை ஒன்று பின்னிக் கொள்வதும், பின்னர் பிரிந்து, மின்னல் வேகத்தில் உதைத்துக் கொள்வதுமாய் சண்டையிட்டன. இத்தகைய கால்போரில், அவன், ஒற்றைக்கால் முக்கோணமாகத் தோன்றினான். இறுதியில் ஒரு காலை, இன்னொரு கால்

'நாக்-அவுட்' செய்யப்போனபோது, வாய் செயல்படத் துவங்கியதால், போரிடும் கால்களுக்கு ஒரு இடைவேளை கிடைத்தது. அவனது வாய், அந்த நேரத்தை தனதாக்கிக் கொண்டு, தனி ஆவர்த்தனமாகியது. எதிரே ஒரு சூன்ய வெளியை ஒரு மனிதனாய் உருவகப்படுத்திக் கொண்டு பேசியது.

"நீ அப்பாவிதான்... நல்லவன்தான்... இல்லங்கல... ஆனாலும், அடுத்த சாதிப் பயலாச்சே. உன்னை வெட்டுனாத்தான், எங்க சாதிக்காரங்கள உங்க சாதிக்காரன் வெட்டுன பத்துபேர் கணக்க சரிசெய்ய முடியுண்டா. அதனால ஒன்ன விடமாட்டேண்டா... விடமாட்டேன். ஒன்ன மட்டுமில்ல, ஒன் சாதியையும் விடப்படாது. சொல்லிட்டார் சொல்லிட்டார். எங்கய்யா சொல்லிட்டார்."

பன்னீர், 'சாதிப்பரணி' பாடிப் பாடி ஆடியபோது, அதன் கோரம் தாங்கமுடியாது, முகம் திரும்பிய குழு உறுப்பினர்களைப் பார்த்தபடியே, ஒரு 'வெங்காய டப்பா' பழைய நாட்டாண்மை பெருமிதமாகப் பேசியது.

"இவன் ரொம்ப மானஸ்தன். அதனாலேயே, ரொம்ப ரொம்ப சாதி அபிமானி. ரெண்டு வருஷத்துக்கு முன்னால, பெருசா சாதிக்கலவரம் வந்தது பாருங்க... அப்போ, அதோ அரண்மனை வீட்டுத் தூக்குத் திண்ணையில நின்னு ஊசாட்டம் பாக்கானே ஈரத்துணி..."

"ஈரத்துணின்னா...?"

"ஈரத்துணியால கழுத்தை அறுக்கிறவன்னு அர்த்தம். அவனோட தூண்டுதலுல, இந்த ஊருக்கு அடைக்கலமாய் தட்டு முட்டுச் சாமான் வாங்க வந்த எதிர்ச்சாதி வாலிபப்பையன் ஒருவனை ஒரே போடாய் போட்டவன் இந்தப் பன்னீர். இதனால, கொலை கேஸுல சிக்கி, கோர்ட்டு வழக்குன்னு அலைஞ்சி, அந்தப் புதுப்பணக்கார ஈரத்துணிக்காரன் கிட்டயே, கொஞ்சம் நஞ்சமிருந்த தன்னோட பங்கு நிலத்தை வித்துட்டு, ஒட்டாண்டியானவன். ஆனாலும், அப்போகூட இவனுக்கு புத்தி பிசகல. மூணு மாசத்துக்கு முன்னால வரைக்கும் எங்களை பைத்தியமாக்கிக்கிட்டு

இருந்தவன்தான். அப்புறம் என்னடான்னா... விநாயகர் சதுர்த்தியில..."

வாயை மறைத்த புதர் மீசையோடு வார்த்தைகளை வடிகட்டிப் பேசுவதுபோல் பேசிய பழைய நாட்டாண்மைக்கு, குழுவினர் குனிந்து காதுகொடுத்தபோது, கூட்டம் 'அய்யய்யோ... அச்சச்சோ...' போட்டபடியே, பன்னீரை நெருங்கிக் கொண்டிருந்தது. அப்போது பன்னீர், தனது கோரைப்பல் வாயால் தோள்களைக் கடித்தான். உதடுகளை உலக்கைபோல் குத்தினான். விரல்களை வாய்க்கு கொண்டுவந்து, கரும்பை கடிப்பதுபோல் கடித்தான். அவனைப் பிடிக்கப்போன ஊர்வாசிகளை, சமூகயியல் பாப்பம்மா, "ஒண்ணும் ஆயிடாது. சும்மா நில்லுங்க..." என்று இரு கரங்களையும் நீட்டித் தடுத்தாள். பழைய நாட்டாண்மையின் வாயருகே காதுகள் படும்படி குதிகாலால் நின்று, 'விநாயகர் சதுர்த்தியில... சொல்லுங்க...' என்று அவள் கிசுகிசுப்பாய் கேட்டபோது, அதைச் சொல்லக்கூடாது என்பதுபோல், ஒரு வேலையில்லா பட்டதாரியும் பட்டைதாரியுமான இளைஞன், விவரக் களத்தை மாற்றினான்.

"இந்த பன்னீரு ஊர்ச்சண்டை, சாதிச்சண்டை இல்லாமல், தெருச்சண்டையிலும் வீராதி வீரர். இவரோட வடக்குத்தெரு கன்னிமாடன் கூட்டத்துக்கும், தெக்குத்தெரு சாயச்சாமி கூட்டத்துக்கும் கல்லெறிச் சண்டை நடந்தப்போ, இவர்தான் நாலுபேரு பல்லை உடைச்சு அதிக 'கோல்' போட்டார். அப்புறம், இவரோட அண்ணன் தம்பிகளுக்கும், இவரோட பெரியப்பா பிள்ளைகளுக்கும் வரப்புத் தகராறு. ரெண்டு பேரை சாய்ச்சார். அப்புறம், இவர் வீட்டுக்குள்ளேயே சண்டை. இவரு பல சண்டையில ஈடுபட்டதால, போலீஸ்காரங்க இவங்க குடும்பம் முழுசையும் பிடித்துட்டுப் போனாங்க. இதனால, அண்ணன் தம்பிகளுக்கு இவர் மேல கோபம். கூடவே குடும்பத்துக்குத் தெரியாம, தன்னோட பங்கு நிலத்தை ஈரத்துணிக்கு வித்துட்டாரு. இதை தெரிஞ்ச அண்ணன் தம்பிங்க, இவரைத் தட்டிக் கேட்டாங்க. தட்டிக் கேட்டவங்களத் தலையில தட்டிட்டு, ஈரத்துணியோட நிலமான இந்த இடத்துல, மண்சுவர் எழுப்பி, மனைவியோட

வந்தாரு. அப்புறம் கர்ப்பிணி மனைவியை, காலை ஒடித்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பினாரு. அந்தம்மா, ஆஸ்பத்திரியில இருந்தே நிரந்தரமா பிறந்த வீட்டுக்கு போயிட்டாள்."

"இப்போ இவனை யார் பார்த்துகிறது...?"

"இத்தனைக்குப் பிறகும் யார் பார்ப்பாங்க? பெற்ற தாய் மட்டுந்தான் பார்க்கமுடியும். அந்தம்மா ஒரு ஐடியல் மதர். விவசாயக்கூலி. காலையில் இவரைக் கட்டிப்போட்டுட்டு, மாலையில வந்து அவிழ்த்து விடுவாள். அம்மாவைப் பார்த்ததும், இவரும் அடங்கிப் போவார். ஓ மை காட். அதோ பாருங்க..."

பட்டதாரி இளைஞன் சுட்டிக்காட்டிய அந்த ஆடுதளத்தில், பன்னீர் 'தில்லானா'வுக்கு வந்து விட்டான். ஒரே சமயத்தில் வாய் 'திட்டுவாங்கம்' வாசிக்க, அவன் கைகள் ஒன்றோடொன்று மோத, விரல்கள் ஒன்றை ஒன்று கிள்ள, பற்கள் ஒன்றை ஒன்று கடிக்க, உதடுகள் ஒன்றை ஒன்று பிதுக்க, கால்கள் ஒன்றை ஒன்று உதைக்க, மோவாய் கழுத்தில் பலவந்தமாய் மோத, நாக்கு, மகிசாசூரவர்த்தினியின் நாக்குபோல் பற்கடிக்கு இடையே வெளிப்பட, கண்களும் இமைகளும் மோதிக்கொள்ள சுழன்றாடினான். அந்த ஆட்டத்தில், இதயம் நுரையீரலோடும், குடல் இரைப்பையோடும், எலும்புகள் நரம்புகளோடும், முதுகுத்தண்டு கழுத்தோடும், சிறுமூளை, பெருமூளையோடும் மோதியிருக்க வேண்டும். ஆனந்தத் தாண்டவம், ஊழிக்கூத்தானது போன்ற சுழற்சி. இதற்கு தாளலயமாய் 'வாங்கடா வாங்க. சண்டைக்கு வாங்க' என்று மாறி மாறி, ராகத்தோடு கத்தினான்.

அந்தக் குழுவின் தலைவரான இ.ஆ.பெ. உக்கம்சிங் குரங்கு கூட்டத்தின் தலைமை குரங்கு தனித்து நிற்பதுபோல் தொடர்ந்து தனித்துவமாய் நின்றபோது -

இப்போது இதர உறுப்பினர்கள், மனிதாபிமான வயப்பட்டு பன்னீரைப் பிடிப்பதற்காக, உடல் குலுங்க ஓடியபோது, பறட்டைத் தலை மூதாட்டி ஒருத்தி, வயிறு எக்க ஓடிவந்தாள். 'ஏய் நொறுங்குவான். நூறு சில்லியா போறவனே... உன்னைத்

தடுக்கறதுக்கு ஒரு நாதிகூட இல்லியா?' என்று வாயிலும் வயிற்றிலும் அடித்தபடியே ஓடிவந்தாள். அவள் தலையில், எண்ணெய்க்குப் பதிலாக எள்ளுகளே வியாபித்திருந்தன. லேசாய் கூன்போட்ட உடம்பு... எலும்புகள் மரச்சட்டங்கள் போல் தோற்றம் காட்டின. தனது தலையில் மாறி மாறி அடித்தபடியே, பன்னீரை அவள் கட்டிப்பிடித்தாள். உடனே பன்னீர் சிறிது நேரம் தாயையும் சேர்த்துப் பிடித்து ஆடினான். அப்புறம், அம்மாவின் தோளில் முகம்போட்டு அவள் உடல் வழியாய் தரையில் சரிந்தான். அந்த மூதாட்டி சாபம் போட்டாள்.

"எந்த நாயி என் மவன் கட்ட அவுத்தது? அவங்க வீட்டுலயும் ஒருத்தர் இவனை மாதிரி ஆகாட்டா, நான் ஒருத்தனுக்கு முந்தானை..."

அரசுக் குழுத் தலைவர் உக்கம்சிங், இந்த மண்வாசனைத் தமிழ் புரியாமல் குழம்பியபோது, 'மனித உரிமை' மகேந்திரன், பன்னீரை உற்றுப் பார்த்தார். பிறகு பன்னீரின் உச்சியையும், அந்த அம்மாவையும் மாறிமாறிப் பார்த்தபடியே, கேள்வி மேல் கேள்வியாய் கேட்டார்.

"பெரியம்மா! ஓங்க மகன் உச்சில வெள்ளையா பள்ளமா மூன்று அங்குல ஆழத்துல, கிண்ணம் மாதிரி பள்ளமாய் இருக்குதே... அது எப்படி வந்தது? ஏன்னா, அது மூளைய பாதிச்சிருக்கும். இல்லியா டாக்டர்...?"

டாக்டர். ராம்விவேக், தனது களப்பணியை 'மனித உரிமை' பறித்துக்கொள்வதாக நினைத்து, முகம் சுழித்தபோது, மகனோடு கீழே சரிந்துகிடந்த அந்த மூதாட்டி, அண்ணாந்து பார்த்து அவர்களுக்கு சேதி சொல்லப் போனாள்.

"அதை ஏன் கேக்கப்பா? போன பிள்ளையார் சதுர்த்தியில..."

அந்த மூதாட்டியை நோக்கி முகம் போட்டு உன்னிப்பாகக் கேட்கப்போன குழுவினரை, ஒரு காரசாரமான குரல் திரும்ப வைத்தது.

"யோவ்... உங்களுக்கு பொம்பளகிட்ட என்னையா பேச்சு? எது கேட்கணுமுன்னாலும் என்கிட்ட கேளுங்க."

ஈரத்துணி, குழுவினரை நெக்கியடித்து நின்றது. பளபளப்பான வயிறு, வெள்ளை சிலுக்கு ஜிப்பாவில் மின்னியது. கண்கள் இடுக்கி இருந்தன. 'சித்தி' தொடரில் உப்புச் சப்பு இல்லாத, அரசாங்க விதிகள் தெரியாத கலெக்டர் அம்மா என்ற கேரக்டர் வருகிறதே, அதன் அப்பா கேரக்டராக நடிப்பவருக்கு கறுப்பு தோல் போர்த்தினால் எப்படியோ அப்படிப்பட்ட தோற்றம்... அதே தோரணை.

கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட் எஸ்தர், ஈரத்துணியை பயபக்தியோடு பார்ப்பதுபோல் பாவலா செய்துகொண்டே, விளக்கமளித்தாள்.

"இவனுக்கு, ஐ அம் ஸாரி... இவருக்கு, உச்சந்தலையில எப்படி... இப்படி ஒரு பள்ளமுன்னு..."

"பள்ளம் கிடக்கட்டும். நீங்கள்லாம் யாரு...?"

"நாங்க அரசாங்கக் குழு. இந்த மாவட்டத்துல, சில தனியார் நிறுவனங்கள், சித்த பிரமை பிடித்தவங்களை சிகிச்சை என்கிற பெயர்ல, சித்திரவதை செய்யுறதா கேள்விப்பட்டு, நிலைமைய நேர்ல கண்டறிய, எங்கள, அரசு, குழுவாய் அனுப்பி இருக்கு. நாங்களும் பல பட்டிகள பார்த்துட்டோம். ஆனா, இந்த வீட்ல இவருக்கு நடந்த கொடுமை மாதிரி வேற எந்த ஊர்லயும் நடக்கல."

"உங்களுக்கு யார் சொன்னது?"

"சட்டாம்பட்டிக்காரங்க."

"அடுத்தசாதி ஊர்ப்பயலுவ அப்படியா சொன்னாங்க? அவங்களுக்கு நாளும் கிழமையும் குறிக்கணும் போலிருக்கு."

"அப்படியெல்லாம் செய்திடாதீங்க... போகட்டும். இவரோட பேக்ரவுண்ட... அதான், பின்னணியை சொல்றீங்களா? நீங்க சொல்றது இந்த ஊரே சொல்றது மாதிரி."

"என்னை என்ன பேக்ராண்டு... இல்ல கேணையன்னு நினைச்சுங்களா? இந்த பெத்தட்டிப் பயலுககிட்டதான்,

விலாவாரியாய் விசாரிச்சிகளே? நீங்க போன பிறகுதான், இவங்களுக்கு இருக்கு சேதி."

'உங்களுக்கு அவங்க ஈடா? போகட்டும். இந்த தலைப்பள்ளம்...?'

"அதுவா...? பிள்ளையார் ஊர்வலம் சம்பந்தப்பட்ட கலவரத்துல கிடைச்சுது."

"பிள்ளையார் ஊர்வலத்துக்கு ஆதரவான கலவரமா? எதிரான கலவரமா?"

"அதுதான் பிள்ளையார் ஊர்வலம் சம்பந்தப்பட்டதுன்னு சொல்லீட்டேனே... சும்மா சும்மா நோண்டுனா எப்படி? பிள்ளையார் கிடக்கட்டும்... பூட்டை உடைச்சுட்டு அந்த வீட்டுக்குள்ள நீங்க எப்படிப் போகலாம்? நீங்க களவாளியா இருக்கமாட்டீங்கன்னு என்ன நிச்சயம்?"

"இதோ இந்த இன்ஸ்பெக்டர்கிட்டேயே கேளுங்க."

"அடடே இன்ஸ்பெக்டரா...? நான் பார்க்கவே இல்லையே..."

"தலைவரே! இந்த கிண்டல்தானே வேண்டாம். அப்புறம், இந்தப் பயலைப்பற்றி ஒரு ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுங்க. நீங்க என்ன சொன்னாலும், நாங்க நம்புறோம்."

"இதோ பாருங்க இன்ஸ்பெக்டர்! ஒங்க முகத்துக்காக இவங்கள விட்டு வைக்கேன். எங்க ஊரைப் பத்தியோ, இல்ல இவனப் பத்தியோ ஏதாவது தாறுமாறா சேதி வந்தா, நீங்கதான் பொறுப்பு. எங்களுக்கு சாதிக் கட்டு இருக்கு. பஞ்சாயத்து இருக்கு. 'விவரமான' ஆட்கள் இருக்கு. எதுன்னாலும் நாங்க பார்த்துக்குவோம். எந்தப் பைத்தியத்தையும் எங்களால வைத்தியம் செய்யமுடியும். இத மீறி நீங்க எதாவது செய்தா அது சாதிக் கலவரமா வெடித்து நீங்கதான் சஸ்பெண்டு ஆவிங்க. சரி இன்ஸ்பெக்டர்! வந்ததுக்கு மிச்சமா அவங்கள வீட்டுக்குச் சாப்பிட கூட்டிவாங்க."

போலீஸ் இன்ஸ்பெக்டர், பெட்டியில் இருந்து வெளிப்பட்ட பாம்புபோல் தொப்பியை கழட்டினார். அவர்கள் வந்துதான்

ஆகவேண்டும் என்ற அனுமானத்துடன் ஈரத்துணி, விருந்தோம்பல் முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக, அருகேயுள்ள தனது வீட்டின் திண்ணைப் படிகளில் ஏறி உள்ளே மறைந்தபோது

அரசுக்குழு உறுப்பினர்கள், இன்ஸ்பெக்டர் இருக்கிற தைரியத்தில் அந்த வீட்டை நோக்கி, தங்களுக்குள் விவாதித்தபடியே நடந்தார்கள். டாக்டர். ராம்விவேக், தன்னைக் கேள்வியாய்ப் பார்த்த 'மனித உரிமை' மகேந்திரனுக்கு விளக்கமளித்தார்.

'இவனை பீடித்திருப்பது ஒரு வித மேனியா. அதாவது அழுங்கு நோய். சாதி, சமயம், ஊரு முதலிய சாக்குப் போக்குகள்ல எல்லாரையும் அடிச்சுப் போட்டிருக்கான். இந்த அடிதடியே, அவன் சிந்தையிலும் செயலிலும் ஊடுருவி, ஒரு அடிக்ஷன்-அதாவது, போதையாகிவிட்டது. சாராயப் போதையைவிட விட பெரிய போதை, இந்த கலவரப்போதை. கூடவே இந்த போதைக்கு சினிமாவுல வருகிற சண்டைக் காட்சிகள் ஒத்தாசை செய்திருக்கும். எல்லோரையும் அடிச்சு முடிச்சுட்டு, இப்போ, இவன், அடிக்கிறதுக்கு ஆளில்லாம, தன்னைத்தானே அடிச்சுக்கிறான். இதுக்கு எம்.டி.வி., அதாவது மேனியாக் டிப்ரஸிசிவ் சைக்கோஸிஸ் என்று பெயர்."

கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட் எஸ்தர், டாக்டர் ராம்விவேக்கை எரிச்சலாக்கினாள்.

"எனக்கென்னமோ டி.எஸ்.எச்., அதாவது வேணுமுன்னே தனக்குத்தானே தீங்கு விளைவிக்கிற மேனியான்னு படுது."

"எந்த மேனியாவாவது இருந்துட்டு போகட்டும். இவனை சிகிச்சை அளித்து நார்மலாக்க முடியுமா?"

"நீ சும்மா இரு எஸ்தர்... நானே சொல்றேன். இவனை மனோவசியத்துல மயக்கி, இவன் அடிமனதுல இருக்கிற ஒவ்வொரு நிகழ்வின் நினைவையும் வாய் வழியாய்ப் பேச வைக்கணும். நடித்துக் காட்டும்படிச் செய்யணும். ஒவ்வொரு நிகழ்வையும்... நிகழ்வு என்ன நிகழ்வு... அமங்கலத்தையும் இவன் சொல்லும்

போது, இவனோட உடம்புல மின்சார குப்பியால சூடு போடணும். இந்த அதிர்ச்சி வைத்தியம் ஒண்ணுதான், இவனைக் குணப்படுத்தும்."

சமூக நலத்துறை உயர் அதிகாரியான உக்கம்சிங், எதற்காக அந்த வீட்டுக்குள் நடத்தப்படுகிறோம் என்பது புரியாமல், முன்நடையாய், பின்நடையாய் இழுபறி நடையாய் அந்தக் குழு உறுப்பினர்களோடு நடந்தார்.

பன்னீரோ, தமிழ்நாட்டு பூகோள வரைபடம் போல், ஒரங்கட்டி நின்றான்.

தினகரன் - பொங்கல் மலர், 2001

O

# பெண் குடி

ஆரல்வாய் மொழியின் சுற்றுப்புறச் சூழலும், அதன் மடியில் கிடந்த அரண்மனை மாதிரியான அந்த வீடும், பார்ப்பவர்களுக்கு பீதியை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

அப்போதைய நாஞ்சில் நாட்டின் வட எல்லையான இந்த ஊரை வளைத்துப் பிடித்திருப்பதுபோல், அதற்கு வடக்குப் பக்கமாய் திரும்பி நிற்பதால் வடக்கு மலை என்று அழைக்கப்படும் மேற்குத் தொடர்ச்சி மலை. ஊரையே வழிமறித்து நிற்கும் இந்த மலைக்கு எதிரே மல்லுக்கு நிற்பது போன்ற பெருங்குன்றான குருசடி மலை. இந்த இரண்டிற்கும் இடையே நூறடி இடைவெளி... கீழே அதல பாதள கணவாய். இதற்கு பாயிட்டு மெத்தையிட்டது போன்ற மணல்தேரி. தென்மேற்கில் பெயருக்கேற்ற தாடகை மலை... தென் கிழக்கில் ஈட்டியும், வாளுமான கொலை வீரர்களைக் கொண்ட சமஸ்தான கோட்டைக் கொத்தளம்...

இந்தப் புறச்சூழலின் அடிவாரத்தில் ஒரு அகச்சூழலாய் கொல்லைப்புறக் குளமும், தோப்பும் துறவுமாய் விளங்கிய அந்த "தறவாடு", நான்கு பக்கமும் நாலு நாலு அடுக்குகளைக் கொண்டது. மேலே மகுடம் சூட்டியது போல் ஒரு மாடியையும் கொண்டது. வீட்டின் முகப்பிற்கு அடுத்த வெளிச் சுவர் ஈட்டி, வேல், துப்பாக்கி போன்ற வேட்டைக் கருவிகளை அப்பி வைத்திருந்தது.

ஆனாலும் -

அந்த பீதிக்கு ஒரு விதி விலக்காய், அந்த வீட்டுப் பெண்கள் தோன்றினார்கள். ஏமான் வீட்டுப் பெண்கள், என்பதால் ஊராருக்கு பயம். அதே சமயம் அழகாய் இருந்ததால், ஒருவித ரசனைச் சுவை. ஏமானின் காவலாளி எவனாவது ஒருவன் மனதைத் தோண்டி அந்த ர்சனையை கண்டுபிடித்து விடுவான் என்ற அச்சத்தில் ஏற்படும் ஒரு பயபக்தி.

இப்படிப் பட்ட அந்த பயபக்திப் பெண்கள், அன்றும் மலையடிவார அம்மன் கோவிலுக்குப் போய்விட்டு, மாலையில் காலக் கட்டாயத்தைக் கருதி, அவரச அவரசமாய் நடந்து, தறவாடு வீட்டின் நடுமுற்றத்தில் வந்த பிறகுதான், சிறிது நிதானித்து நின்றார்கள். வண்ண வண்ண மலர்களால் "நெய்யப்படும்" ஓணக்கம்பளம் நிமிர்ந்து பார்ப்பது போன்ற ஒட்டு மொத்தமான அழகு தோரணை.

மொத்தம் எட்டுப் பெண்கள். முதிய தாயான குஞ்சம்மா, சித்திக்காரிகள் வேக்காளி, குன்னிக்குட்டி. எஞ்சிய ஐவர் உடன்பிறப்புகள் அல்லது ஒன்று விட்ட சகோதரிகள். எழுபது முதல் இருவது வரையான வயதுக்காரிகள். இன்னென்ன வயதுகளில் இப்படி இருந்தோம், இருப்போம் என்று அத்தனைப் பெண்களும் தத்தம் வயதுக்கேற்ப ஏழு பெண்களையும் கண்ணாடியாய் ஆக்கிக் கொள்ளலாம். முன் தலைகளில் வலதுபக்கம் தலைமுடியை பந்து போல் சுருட்டி ஒரங்கட்டி, அதன் அடிவாரத்தில் பூவேலி போடப்பட்ட கொண்டைக்காரிகள். தொள்ளையாகவோ, மொக்கையாகவோ இல்லாமல், காலணா பரிணாமத்திற்கு ஒட்டை போட்ட காதுகளுக்குள் உருளை வடிவமான காதணிகளையும், கழுத்து, கை, மார்பு, கால்களை மறைக்கும் பொன் நகைகளையும் கொண்ட நடமாடும் நகையலங்காரிகள்.

அந்த முற்றத்தில் அரைக்கால் நாழிகை இளைப்பாறி முடித்துவிட்டு, அந்த எட்டு பெண்களில் ஏழு பேர், ஆண்கள் நுழையக் கூடாத மாடியில் உள்ள தங்களது சயன அறையை நோக்கி, கிழக்குப் பக்கமாக உள்ள ஏணிப்படிகளில் ஏறியபோது, கடைக்குட்டியான பாருக்குட்டி, கண்ணுக்கு எதிரே தொலைவில் உள்ள கொல்லைப்புறத்தில் தெரிந்த காரணவான் எனப்படும் மூத்த தாய்மாமனையும், அம்மாயி என்று அழைக்கப்படும் அவன் மனைவியையும், படபடத்து பார்த்தாள். மடித்து வைத்த முழங்கை போன்ற ஏணிப்படிகளின் திருப்புத்தளத்தில், தாய்க்காரி குஞ்சம்மா, அவளை வாய்விட்டு கூப்பிட்டபோது, பாருக்குட்டி கொல்லைப்புறம் தாவிய கண்களை எடுக்காமலே பதிலளித்தாள்.

"இன்றைக்கும் காரணவான் கிட்ட கேட்டுப் பார்க்கேன் அம்மச்சி"

"பக்குவமாய் மோளே... பக்குவமாய்..."

தனித்துவிடப்பட்ட பாருக்குட்டி, கண்காட்டும் வலப்பக்கம் முதலாவது சுற்றில், அந்த வீட்டிலேயே மிகப்பெரிய கூடம் மாதிரியான அறையை வெறித்துப் பார்த்தாள். அவள் நினைவுகள் நிகழ்கால நிகழ்வுகளை துளைபோட்டு, கடந்தகால ஊற்றுக்குள் குளித்துக் கொண்டிருந்தன.

அதே அறையில்தான், ஆறுமாதத்திற்கு முன்பு, ஒரு மங்கள இரவு வேளையில், அரிசி, நெல், தென்னம்பாளை, அம்பு, பித்தளைச் சட்டமிட்ட கண்ணாடி, கொழுந்து விட்டெரியும் கரி நெருப்பு, சின்னதோர் மரப் பெட்டியான செப்பு ஆகிய அஷ்ட மங்கலப் பொருட்களின் இருபக்கமும் அவள் மேற்கு நோக்கியும், மணமகனான சங்குண்ணி கிழக்கு நோக்கியும் ஒருவருக்கொருவர் நேருக்கு நேராய் முதல்தடவையாக பார்த்துக் கொள்கிறார்கள். மணமகன், குத்து விளக்கை ஏற்றிவிட்டு மாப்பிள்ளைத் தோழனிடம் உள்ள பட்டு, பீதாம்பர முண்டுகளையும், துண்டுகளையும் வாங்கி, நாணிக்கோணிய பாருக்குட்டியின் கையில் திணிக்கிறான். உடனே உற்றார், உறவினர் இருவர் மீதும் மங்கள அரிசிகளை தூவி முடிக்க, முண்டு கொடுத்து ஏற்பட்ட சம்பந்தம் நிறைவு பெறுகிறது.

மூன்று நாழிகைக்குள் அந்த சம்பந்த அறையே, சம்போக அறையாக மாற்றப்படுகிறது. அந்நிய ஆண்வாடை அறியாத பாருக்குட்டி, முதலில் முரண்டு பிடிக்கிறாள். சிறிது நேரத்தில், காய்ந்த மாடு கம்மாவிற்கு போன கதையாகிறாள்.

மறுநாள் மாத்தாண்டத்தில் உள்ள மாப்பிள்ளை தறவாட்டில் மறுஇரவு. அது முடிந்ததும், அன்றே பிறந்த வீட்டிற்கு திரும்பிய இவளை, ஒருமாதம் கழித்து "சம்பந்தக்கார" தறவாட்டு "அம்மாயி" மங்கலப் பெண்களோடு வந்து மார்த்தாண்ட தறவாட்டிற்கு அழைத்துப் போகிறாள். ஆர்த்தி வரவேற்போடு, நாழி அரிசி, ஊதுபத்தி, வாழைப்பழ படையலுக்கு முன்னால்

பாருக்குட்டியை ஒரு பாயில் உட்கார வைக்கிறாள். தறவாட்டு பெண்ணொருத்தி, அவளுக்கு படையலில் உள்ள ஒரு வாழைப் பழத்தை எடுத்து வாயில் ஊட்டுகிறாள். இந்த "மதுரம் தீண்டல்" என்ற வைபவம், பாருக்குட்டிக்கு கணவன் வீட்டுக்கு எப்போது வேண்டுமானாலும் சென்று தங்குவதற்கு உரிமை அளிக்கிறது. நிரந்தரமாக தங்கமுடியாதுதான். ஆனால், தற்காலிகங்களே நிரந்தரமாக்கப் பட்டதில், மருமக்கள் தாயப் பெண்கள் அத்தனை பேரையும் போல, அவளுக்கும் கொள்ளை மகிழ்ச்சி.

என்றாலும், சாஸ்திர சம்பிரதாயம் வழங்கிய இந்த அரைகுறை வரத்தை காரணவானான தாய்மாமன் இடைமறித்து கிடப்பில் போட்டார். அவளது உரிமையை செயல்படுத்த வேண்டிய தனது கடமையை ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. பாருக்குட்டியும், தனது கணவன் வீட்டுக்குச் செல்வதற்கு, தனது தாயான குஞ்சம்மாவை அனுப்பி அவரிடம் அனுமதி கேட்டாள். அவர் அசைந்து கொடுக்காதபோது, இவளே ஏதோ ஒரு சாக்கில் அவரிடம் எதிர்பட்டு சாடைமாடையாக கேட்டு அசைக்கப் பார்த்தாள். அவர் பார்த்த பார்வையில், அவள் குடைசாயப் போனாள். எந்தப்.பதிலும் இல்லை. ஒரே ஒரு தடவை தாய்க்காரி வலுக்கட்டாயமாக உண்டா இல்லையா என்று கேட்டபோது, அவர் எனக்கு தெரியும் எப்போன்னு என்று மட்டும் பதில் சொன்னார்.

அந்த எப்போ என்பது "இப்போவாக" இருக்கக்கூடாதா என்று பாருக்குட்டி, ஒவ்வொரு இரவையும் எதிர்பார்ப்பாய் கழித்து பகலில் அவர் பக்கத்தில் போய் நிற்பாள். அவரோ, அவள் அங்கே இல்லாததுபோல் அனுமானிப்பார். போதாக்குறைக்கு, இரவில் வந்து பகலில் திரும்பும் கணவன் சங்குண்ணியை, எள்ளும் கொள்ளுமாய் பார்ப்பார். அவனை காணும் போதெல்லாம் பட்டும் படாமலும் காறித் துப்புவார். அப்போதுதான் சங்குண்ணிக்கும் மோகமான முப்பது நாட்களும், ஆசையான அறுபது நாட்களும் முடிந்துபோன வேளை. இதனாலும், காரணவானின் அவமதிப்பாலும் பாருக்குட்டியிடம் திட்டவட்டமாய் சொல்லிவிட்டான். மேல்முறையீடு இல்லாத தீர்ப்பு.

"நீ என் வீட்டுக்கு வந்துபோயி இரு... நான் இங்கே தாமசிக்க வரமாட்டேன்."

பாருக்குட்டி, நினைவுகளை அசைபோடாமல், அவற்றாலேயே அசைபோடப்பட்டு, கோபமும், தாபமுமாய் குமுறி நின்றாள். மாமன்களுக்கு வாரிசுகளாகி, மூத்தமாமனை காரணவான் என்று பெயரிட்டு, அவனை, குடும்ப சர்வாதிகாரியாக்கி, கணவர்களை வெறும் விருந்தாளியாக்கி அவன் கொடுக்கும் குழந்தைகளை பாதி அனாதைகளாக்கும் மருமக்கள்தாய முறையை தீர்த்து முடிக்காமலே மனதுக்குள் திட்டிக் கொண்டாள். அந்த கோபவேசத்தில், அன்றைக்கு இரண்டில் ஒன்றைப் பார்த்துவிட வேண்டும் என்ற மனத்திடத்தோடு, மூன்று தாழ்வாரங்களையும் தாவித்தாவி, மூன்று வாசல்களையும் தாண்டித் தாண்டி கொல்லைப்புறம் வந்தாள். காரணவான்-அம்மாயி, சில அந்நியர்களோடு இருப்பதை பார்த்துவிட்டு, சிறிது நிதானப்பட்டு கூப்பிடு தொலைவில் நின்று, அங்கே ஏறிட்டுப் பார்த்தாள்.

ஆனாலும், அம்மாயியைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு கோபம். பிறந்த தறவாட்டில் இருக்க வேண்டியவள், இங்கே அம்மானுடன் வந்து நிரந்தரமாய் ஒட்டிக் கொண்டாள். இந்த தறவாட்டுப் பெண்களுக்குரிய அசையா சொத்துக்களை, இவள், தனது பிள்ளைகளுக்கு கடத்தி குடும்ப அரசியல் நடத்துகிறாள். இந்த கள்ளக்கடத்தலை அடிக்கடி தட்டிக்கேட்கும் பாருக்குட்டியை, காரணவானுக்கு காதுகுத்தி கணவனிடம் போகவிடாமல் தடுக்கிறாள். நாலுந்தெரிந்த சங்குண்ணி, அங்கே வந்தால், குட்டு அம்பலமாகிவிடும் என்று அவனையும் இழிவுசெய்யும்படி கணவனை ஏவி விட்டிருக்கிறாள்.

தறவாட்டு குடும்ப அரசியலில், தான் ஒரு பகடைக்காயாய் மாறிப்போன வெறுமையில், பாருக்குட்டி குவியலாய்க் கிடந்த அந்த மனிதர்களைப் பார்த்தாள். காரணவான், தனது கொழுத்த உடம்பை கடைந்தெடுத்த தேக்கிலான சாய்வு நாற்காலியில் போட்டு அதற்கு பாடைபோல் அமைந்த துணிச்சாய்வில் தன்னைத் தானே தாலாட்டிக் கொள்கிறார். நெத்தலிக்கருவாடு அம்மாயி, அவர் பின்பக்கமாய் நின்று அந்நியர்களுக்கு தெரியாதபடி அவரது

பிடரியை கோதிவிடுகிறாள். காரணவானுக்கு அருகே சரிநிகர் சரமானமாக, அதே சமயம் ஒரு முக்காலியில் ஒரு மினுக்கான மனிதர் உட்கார்ந்திருக்கிறார். கடுக்கன், நேரியல், இரட்டைமடிப்பு வேட்டி வகையறாக்களைக் கொண்டவர். காரணவானின் காலடிப் பக்கம் ஒரு பலாப்பலகையில் ஓலைக்கரணம்... மடித்துப் போட்ட கால்களை சதைப்பலகையாக்கி, இடது கை, பனையோலை சுவடியை பிடித்திருக்க, மாட்டுக் கொம்பு பிடிகொண்ட எழுத்தாணியால், வாய்க்குள் வார்த்தைகளை பிரசவித்தபடியே எழுதுகிறார். பார்ப்பதற்கு எழுத்தாணி நகர்வதுபோல் தோன்றினாலும், ஓலைதான் நகர்கிறது. அருகே இரண்டு 'சுமார்' மனிதர்கள். சிறிது தொலைவில் கைகட்டி, வாய்புதைத்து நிற்கும் காவலாளிகளும், ஏவலாளிகளும். அவர்கள் இளக்காரத் தோற்றமாய் நின்றாலும், சில கைகள் வேல்கம்புகளை பிடித்திருந்தன. சில ஈட்டிகளை பற்றியிருந்தன. இந்த ஆயுதங்கள் அந்த இளக்காரத்தையே கம்பீரப்படுத்தின.

இதற்குள் ஓலைக்கர்ணம், தான் எழுதி முடித்த ஓலைச்சுவடி அடுக்கின் முனையில் மேலும் கீழுமாய் இரு துவாரங்களைப் போட்டு, அவற்றுக்குள் செப்புக் காசுகள் கட்டப்பட்ட கயிறுகளை விட்டு, பின்பக்கமாய் இழுத்து கட்டிமுடித்துவிட்டு, காரணவானையும், அந்த மினுக்கு மனிதரையும் மாறிமாறி பார்த்தபடியே, ஓலையை வாசித்தார். அந்த வாசிப்பு வரிகளுக்கு காற்புள்ளி, அரைபுள்ளிபோல் இருவரையும் அவ்வப்போது மாறிமாறி பார்த்துக் கொண்டே வாசித்தார்.

"நாஞ்சில் நாட்டு தாமரைக்குளம் கணக்கு ஆறுமுகப் பெருமாள் உள்ளிட்டாருக்கு, ஆரைவாய் மொழியில் பார்வதிக்காரர் நந்தீஸ்வரன், பறையடிமை விலையோலை எழுதிக் கொடுத்த கரணமாவது-"

"நாங்கள் குருபரமுடை யோராக ஆண்டு அனுபவித்து வருகிற ஆரைவாய் மொழி ஸ்ரீபால பொய்கை புறஞ்சேரியில் கிடக்கும் தீண்டாதாரில் பறை இசக்கிமாடத்தியை, சனம் நாலும் விலை கொள்வாருளதோ, கொள்வாருளதோ என்று நாங்கள் முற்கூற, விலை கொள்வோம் என்று இவர்பிற்கூறி எம்மிலிசைந்து,

எதிர் மொழி மொழிந்து, மறுமொழி கேட்டு உறுமொழி பேசி தம்மில் பொருத்தி ஆரைவாய்மொழி மன்றருகில் நிறுத்தி நால்வர்கூடி நடுவர் மூலமாக விலை நிச்சயித்த அன்றாடகம் வழங்கும் நெல்மேனி கலியுக ராமன் பணம் நாற்பது... இப்பணம் நாற்பதுக்கும் விலையாவணக்களத்தை காட்டி பெற்று கை செலவாக கொண்டு விலையற விற்று பொருளறப்பற்றி விற்று விலைப்பிரமாணம் செய்து கொடுத்தோம். இது விலையோலை ஆவதாகவும், இதுவல்லது வேறு விலையாவன பொருளாவன சிலாவன, பொருள் மாண்டறுதிபொருள் செலவு ஒலை கரணமும் காட்டவும் கடவதன்றியென ஒரு காலாவது இருகாலாவது முக்காலாவது, ஒலைக்குற்றம், எழுத்துக்குற்றம் சொல் குற்றம், பொருள் குற்றம் வெட்டுச்செருக்கு, வரிமாறாட்டம், வரி நுழைந்தெழுதல் வாசகப்பிழை, மறு எக்குற்றமும் குற்றமின்றி வியாபித்து விலைப் பிரமாணம் செய்து கொடுத்தோம். பார்வதிக்காரர் நந்தீஸ்வரன் உள்ளிட்டார். இதற்கு சாட்சி இராமலிங்க நல்ல சிவன் (ஒப்பு) தாணுவன் பிச்சையாண்டி (ஒப்பு) இப்படி இவர்கள் சொல்ல இந்த பறையடிமை ஒலைக்கரணம் நடுவெழுதின ஆரைவாய்மொழி தேசம் ஊர்கணக்கு வன்னியப்பெருமாள் நந்தீஸ்வரன் (ஒப்பு)"

அந்த ஒலைவாசிப்பு கிளப்பிய ஒலிஅலைகள், அதிர்ச்சி அலைகளாகி, பாருக்குட்டியின் காதுகளில் மோதின. ஒவ்வொரு வரியும், வார்த்தை, வார்த்தையாய் குத்தியது. அந்த ஒலைக்கட்டில் உள்ளடங்கிய அத்தனை உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் ஒற்றை ஆயுத எழுத்தாகி, அவளை கூறுபோட்டது. விலைபோன இசக்கி புரசமாடத்தியை அவள் அறிவாள். அந்த தறவாடு கோலோச்சும் அடிமைகளில் மின்னும் கருப்பி. வீட்டில் கொல்லைப்புற முனையில் படிக்கட்டுகள் கீழ்நோக்கி இட்டுச் செல்லும் தறவாட்டு குளத்தை அடுத்துள்ள முக்கனி மரங்களோடு, பனையும், தென்னையும் இடையிடையே கொன்றையும், தேக்கும் ஊடுபயிராக காணமும் விளையும் தோப்புக்காட்டின் மறுமுனையில் மூன்றடி உயர, இரண்டரையடி அகல குடிசைகள் ஒன்றில் வசிப்பவள். பாருக்குட்டியை, அந்தத் தோப்பில் பார்க்கும்போதெல்லாம், வீட்டுக்காரனான புலைமாடனை

அதட்டி, உருட்டி, அந்தப் பக்கமாய் கொண்டுவந்து, ஒரு தென்னை மரத்தில் தாவவிடுகிறவள். இரண்டு இளம் தேங்காய்கள் உதிர்ந்ததும், அவற்றை அரிவாளால் கும்பங்களாய் செதுக்கி, அவற்றின் முனைகளை உடைத்து சிறிது தொலைவில் உள்ள கமலைக்கல்லில் வைத்துவிட்டு, ஒரு தென்னை மரத்திற்கு பின்னால் மறைந்தபடியே கூவுகிறவள். "தேங்காமோ... தேங்காமோ"

இப்படிப்பட்ட இசக்கி மாடத்தி, இப்போது விலைபோகிறாள். ஒருவேளை அவள் தன்மீது கொண்ட தனியன்பே அவளை கணவனிடம் இருந்தும், குழந்தைகளிடம் இருந்தும் நிரந்தரமாய் பிரித்து, கண்காணா இடத்திற்கு தீவாந்தரமாய் போகவேண்டிய கட்டாய அபாயத்தை கொடுத்திருக்கலாம். அம்மாயி என்பவளின் குடும்ப சதுரங்கத்தில் இந்த அப்பாவியும் ஒரு பகடைக்காயாகி விட்டாள்.

பாருக்குட்டி, அடங்காச் சினத்திற்கு ஆட்பட்டாள். அப்படி ஆட்பட ஆட்பட அவளை பெரும்பாலும் இன்பமயமாயும், இடையிடைய துன்பமயமாயும் ஆட்டிவைத்த சங்குண்ணி காணாமல் போய்விட்டான். காரணவான், தறவாடு, அம்மாயி, அம்மா, உற்றார், உறவினர் அத்தனைபேரும், அத்தனையும் காணாமல் போனார்க்ள். போயின. அவளுக்கு, தான் என்பதும் நினைவற்றுப் போனது. அவள் உடல், பொருள், ஆவி அனைத்திலும் இசக்கி மாடத்தி ஒருத்தியே வியாபித்து நின்றாள்.

பாருக்குட்டி, அந்தக் கும்பல் பக்கம் சென்றாள். மூத்த தாய்மாமனான காரணவானுக்கு மரியாதை தெரிவிக்கும் சம்பிரதாய உணர்வில்லாமல், மார்பு துணியை விலக்கிக் கொள்ளாமலே, அவரை நேருக்கு நேராய் பார்க்கப் போனாள். அவர் போட்ட எதிர் பார்வையில் அப்படி பார்க்க முடியாமல், அம்மாயியைப் பார்த்து கேட்டாள்.

'அம்மாயி! நம்மோட அடிமையை அந்நியருக்கு விற்கிற அளவுக்கு நாம செல்வத்தில குறைஞ்சு போகல, அதோட ஒரு பெண்ண அதிலயும் ஒரு இளம் பெண்ண அவள் குடும்பத்தில்

இருந்து பிய்த்து எறிவது மகாபாவம். இந்த பாவத்தை இப்போ நாம நிறுத்தா விட்டால், "நாமே அடுத்த ஜென்மத்துல அடிமையா பிறப்போம்".

பாருக்குட்டி, என்ன பேசுகிறோம் என்று தெரியாமல், எப்படியோ பேசி, காரணவான் முகத்தை கூம்ப வைத்து விட்டாள். அம்மாயிகாரியின் உதடுகளை துடிக்கச் செய்துவிட்டாள். காரணவான் அவளிடம் பேசுவதை தனது தகுதிக்கு கீழான காரியமாக நினைத்து 'சொல்லிக்கொடு... கிள்ளிவிடு... இல்லாட்டி தள்ளிவிடு' என்ற பழமொழியான சாஸ்திர வார்த்தைகளை வாயிலிருந்து கீழே உதிர்த்துப் போட்டார். பிறகு, அவள் முன்னால் தனது அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில் மினுக்கு மனிதரைப் பார்த்து 'அங்கே போய், இசக்கி மாடத்திய இழுத்துட்டுப் போகலாம்' என்று சொல்லிவிட்டு வீட்டிற்குள் மாயாவிபோல் மறைந்து போனார். அம்மாயியும் பாருக்குட்டியை கண்களால் எரித்து அவளைக் கடித்துத் தின்பதுபோல் நாக்கை நீட்டி, கணவர் பின்னால் ஓடினாள்.

ஆண்டையான ஆறுமுகப்பெருமாள், ஒலைக்கர்ணம், ஊர்க்கர்ணம், ஆகியோர் ஏவலாளிகளோடு கொல்லைப் பக்கமாய் போனார்கள். முன்னவர் மூவரும் தோப்புக்குள் நின்றபோது, ஏவலாளிகள் சேறும் சகதியுமான அந்த குடிசை மண்டிக்குள் மூன்றாவது குடிசை முன்னால் போய் நின்றார்கள்.

ஒரு முண்டாணி நாழிகைகளுக்குள், அந்தக் குடிசையே அங்குமிங்குமாய் ஆடியது. அதன் உச்சி குலுங்கியது. இந்த குலுக்கலுக்கு, ஏற்பட்ட கூக்குரல், தொலைவில் உள்ள பாருக்குட்டியை உறைய வைக்கிறது. சிறிது நேரத்தில் இசக்கி மாடத்தி, உச்சிமுடி இழுக்கப்பட்டு குடிசைக்கு வெளியே கொண்டுவரப் படுகிறாள். பிள்ளை குட்டிகள், ஏவலாளிகளின் கால்களை கட்டிக் கொள்கின்றன. கணவன் புலைமாடன், அவர்கள் முன்னால் படுத்து பாம்புபோல் தலைநிமிர்த்தி கையெடுத்து கும்பிடுகிறான். அவர்களோ, இசக்கி மாடத்தியின் கால்கள், அவன் தலையில் மோதும்படி, அவளை இழுக்கிறார்கள். இழுத்து இழுத்து அடிக்கிறார்கள். வழிமறிக்கும் பிள்ளைகளை

கணுக்கள் புடைத்த மூங்கில் தடிகளால் குத்துகிறார்கள். அக்கம்பக்கத்துக்கு குடிசைக்கார அடிமைகள், இத்தகைய அமங்கலத்திற்கு பழக்கப்பட்டுப் போனதால் வாயடைத்து, காதைடைத்து நிற்கிறார்கள். பூமத்தியரேகை போல் கற்பிதமான ஒரு அடிமைச்சங்கிலியை அவர்களால் உடைக்க முடியாமல் உழல்கிறார்கள்.

இந்த அவலத்தையும், ஓலத்தையும் காணச் சகிக்காததுபோல், நெற்றி திருநீர் மேல் வைக்கப்பட்ட மஞ்சள் குங்குமமாய் ஒளிர்ந்த அந்திமச் சூரியன், தாடகமலைக்குள் ஜீவ சமாதியாகிறது. பாருக்குட்டி, தறவாட்டின் தென்மேற்கு மூலையில் புதர்மண்டிய நாகராஜா சிலைகளை கொண்ட தனிக்கோவிலான சித்திரக்கூடத்திற்கு முன்னால் ஓடிப்போய் விழுந்து விழுந்து கும்பிடுகிறாள். மறுபடியும் எழுந்து நின்ற இடத்திற்கு தாவுகிறாள். தோப்புப்பக்கம் வேகவேகமாய் நடக்கிறாள். நடந்தவேகத்திலேயே திரும்புகிறாள். தறவாட்டிற்குள் முயலாய் ஓடி, ஆமையாய் திரும்புகிறாள்.

அதற்குள், இசக்கிமாடத்தி இழுத்து வரப்படுகிறாள். அவள் முடியே மூக்காணங்கயிறாகி ஒருவனின் கைப்பிடிக்குள் அடங்குகிறது. வைரப்பட்ட நிலக்கரித் துண்டம் ஒன்று கைகால் முளைத்து பெண்ணுரு பெற்றது போன்ற அவள் உடம்பின் ஒவ்வொரு அங்கங்களையும் ஒவ்வொருத்தன் பிடித்துக் கொள்கிறான். முரண்டு பிடிப்பவளை ஒருவன் மூங்கில்தடியால் மாறிமாறி அடிக்கிறான். இன்னொருத்தன், சாட்டைக்கம்பால் முன்னாலும், பின்னாலும் இடிக்கிறான். ஆறுமுகப் பெருமாள் அதை அங்கீகரிப்பதுபோல், மேலும் கீழுமாய் தலையாட்டுகிறார். இசக்கி மாடத்தியோ ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு துள்ளலாய் குதிக்கிறாள். ஒவ்வொரு புலம்பலாய் வெளிப்படுத்துக்கிறாள்.

இறுதியில், புதிய ஏமான் எதிர்பார்த்ததுபோல, அடிபட்ட மாடாய் படிகிறாள். அவளை நோக்கி அலறியடித்து ஓடிவரும் புலைமாடனையும், நாலைந்து சிறுவர் சிறுமிகளையும் நோக்கி, இருவர் ஈட்டிகளோடு ஓடுகிறார்கள். அவர்கள், ஈட்டியைப் பார்த்து

பின்வாங்குவதும், ஈட்டிக்காரர்கள் பின்வாங்கும்போது முன்வாங்குவதுமாய் அலைமோதுகிறார்கள். தொலைதூர குடிசைப் பகுதியில் இவர்களின் நெருக்கமான உறவினர்கள் குய்யோ, முறையோ என்று கூக்குரலிடுகிறார்கள். மாரடிக்கிறார்கள். கீழே குனிந்து மண்ணள்ளி வாயில் போட்டுக் கொள்கிறார்கள்.

ஆறுமுகப்பெருமாள் தலைமையிலான அந்தக் கும்பல், இசக்கி மாடத்தியோடு, பாருக்குட்டியை கடக்கப்போனது. உடனே அடிமைக்காரி, அவளைப் பார்த்து தனது கைகளை தலைக்குமேல் தூக்குகிறாள். அவள் காலில் விழுவதற்காக முன்பக்கமாக சாய்கிறாள். அதற்குள் முன்பக்கமாய் நின்ற ஒரு ஏவலாளி, தனது ஒரு கால்களை குறுக்காய் நீட்டி, அவள் சரிந்து விடாமல் முட்டுக் கொடுக்கிறான். பின்பக்கமாய், நின்றவன் அவளின் கைகளை முதுகின் இருபக்கமும் வளைத்து பிடித்து வைத்துக் கொள்கிறான்.

பாருக்குட்டி, அந்தக் கும்பலை வழிமறிப்பதுபோல் குறுக்கே நின்று ஆறுமுகப் பெருமாளிடம் கெஞ்சுகிறாள்.

“நான் உங்களுக்கு எவ்வளவு பணம் வேண்டுமனாலும் கொடுக்கேன். இவளை என்கிட்ட விட்டுடுங்க. என் சம்பந்தக்கார தறவாட்டுல இருந்து எனக்கு நாலு, எட்டுன்னு பனிரெண்டு ரூபா வந்திருக்கு. முழுசையும் கொடுத்துடறேன்.”

மாடத்தியை வாங்கிய ஆறுமுகப் பெருமாள் கணக்குப் போட்டுப் பார்த்தார். அவள் ஒரு எருதின் விலைபெறுவாள். அதாவது பதினெட்டு ரூபாய் பெருவாள். அதோடு இவளிடமே விற்பது பார்வதிக்காரரை அவமானப்படுத்தும் காரியமாக கருதப்படும். மண்ணிற்காகவும், மரத்திற்காகவும் மனத்தாங்கல் வரலாம். கேவலம் ஒரு அடிமைக்காக வரலாமா...

ஆறுமுகப் பெருமாள், பேச்சை மாற்றினார்.

‘பணம் கிடக்கட்டும். இவளும் இருக்கட்டும். மொதல்ல பெரிய மனிதரப் பார்த்தா, மார்புத் துணியை எடுக்கணும் என்கிற மரியாதையை தெரிஞ்சுக்கம்மா.”

"நல்லா கேளுங்க அய்யா! நீங்க சமசாதியா இருந்தாலும் எங்க சாதியில்லை. அதனால நீங்க எனக்கு பெரியவர் இல்ல. அதோட ஒரு மனித ஜீவன ஆடுமாடு மாதிரி விலைக்கு வாங்குற எவரும் பெரியவரும் இல்ல. இதனால நான் மார்பு துணிய எடுக்க வேண்டிய அவசியமும் இல்ல. "

"தப்பா பேசிட்டேன் தாயி... பொறுத்துக்கோ. நல்லா இரு."

ஆறுமுகப் பெருமாள் நக்கலாகப் பேசிவிட்டு, தனது கோபத்தை இசக்கி மாடத்தி மீது ஒரு உதையாக காட்டினார். இரும்பாணி அடிவாரம் கொண்ட செருப்புதை... செத்துப் போனவளாய் நின்ற அந்த பெண்ணடிமை, அப்போது உயிர்த்தெழுந்து கத்தியது. அவர் மீண்டும் காலை தூக்கியபோது மாடத்தியே அவர்களுக்கு முன்னால் ஓடினாள். இழுத்து வரப்பட்டவள் அவர்களை இழுத்துப் போவதுபோல், பின்னால் திரும்பி திரும்பி அவர்களை வரவேற்பதுபோல் நின்று நின்று கால்களை முன்னே முன்னே இயக்கிக் கொண்டிருந்தாள்.

தறவாட்டு முகப்பிலிருந்து ஆண்டைக்கூட்டமும், அடிமைப் பெண்ணும் மறைந்து விட்டார்கள். எல்லாம் ஆடி அடங்கிய வேளை.

பாருக்குட்டி, தன்னைதானே நொந்து கொண்டாள். அந்த மனிதரிடம் அப்படி பேசியிருக்கக்கூடாது என்பதுபோல் நாக்கை கடித்துக் கொண்டாள். வீரியமாகப் பேசி காரியத்தை கெடுத்து விட்டோமே என்று மனதுக்குள் அரற்றினாள். இந்த குற்றவுணர்வு தாக்கத்தில், இருட்டிற்குள் சுயமாய் நடக்காமல் அனிச்சையாய் நடந்து கொண்டிருந்தாள். கொடுங்கோலின் ஆதிக்கமாய் தோன்றிய வீட்டிற்குள்ளே போக முடியாமலும், வெளியே நிற்க முடியாமலும் அந்த கொல்லைப் புறத்தையே சுற்றிச் சுற்றி வந்தாள். அடிமைகள் வியாபாரத்தை அவள் அறிவாள். அவர்களை மாறுகால் மாறுகை வாங்குவதற்கு ஏமான்களுக்கு உரிமை இருப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால் அந்த தறவாட்டில் இப்படிப்பட்ட ஒரு அடிமை வியாபாரம் நடப்பது,

அதுவே முதல் தடவை. கண்முன்னால் நடக்கும் கொடூரத்தை அவளால் காணச் சகிக்கவில்லை.

பாருக்குட்டி ஆவேசியாகி, சித்திரக் கூடப் பக்கமாய் ஓடி நிற்கிறாள். உள்ளே ஊடுருவி அங்குள்ள நாகச்சிலைகளை தூக்கி குளத்தில் போட நினைக்கிறாள். அப்போது

கட்டுக்கடங்காத காது தாங்காத பிளிறல். "ஏய்... ஏய்..." என்ற எமக்கத்தல். பூமியை, மலை இடிப்பதுப் போன்ற சத்தம். நிமிர்ந்து திரும்பிய பாருக்குட்டியை ஒரு இரும்புக்கரம், கழுத்தோடு சேர்த்து தனது கக்கத்திற்குள் வைத்துக் கொண்டு, அவளுக்கும் சேர்த்து கத்துகிறது. அந்த தறவாட்டையே குலுக்கும்படியான பூகம்பக் கத்தல். அந்தக் கத்தல் புறப்பட்ட தொண்டை எரிமலையாகிறது. நாக்கு எரிஈட்டியாகிறது. பிடி இறுகிக் கொண்டே போகிறது.

அந்த அதிரடி குரல்கேட்டு தறவாட்டில் உள்ள அத்தனைபேரும் அலறியடித்து ஓடி வருகிறார்கள். "விருந்தாளி சம்பந்தக்கார" கணவர்களோடு தனித்தனி அறைகளில் உறவாடிக் கொண்டிருந்த சகோதரிகள், அரைகுறை உடம்பை பொருட்படுத்தாது அங்கே குவிகிறார்கள். காரணவானும், அம்மாயியும் பனைமட்டையில் ஒடுங்கிக் கட்டப்பட்ட பனையோலையில் நெருப்பேற்றிய 'சூட்டுத்தியோடு' வெளிப்படுகிறார்கள். பாருக்குட்டியின் அம்மாவான குஞ்சம்மா மகளை அந்த 'பிடிக் கோலத்தில்' பார்த்தவுடனேயே, கீழே விழுகிறாள். இருக்காளோ செத்தாளோ... அவள் மகள்களும் சகோதரிகளும், பாருக்குட்டிக்கு அழுவதா, அவளுக்கு அழுவதா என்று புரியாமல் மாறிமாறி இருவரையும் பார்த்துப் பார்த்து திரும்பி திரும்பி அழுகிறார்கள். ஆசையைப் போல் துக்கத்திற்கும் வெட்கமில்லை... அந்தப் பெண்கள் வெட்கம் விட்டு, உடலெல்லாம் வீபரித வெளிப்பாடுகளாக மாரடிக்கிறார்கள். விசித்திர உயிரினங்கள்போல் விநோதமாக குரலிடுகிறார்கள்.

இதற்குள், அக்கம் பக்கத்து தறவாட்டுக்காரர்கள் தீப்பந்தங்களோடு கூடுகிறார்கள். குருசடி மலைக்குன்றில் குண்டடிப் பட்டு மரித்த தேவசகாயம் பிள்ளையின் நினைவால் உள்ள சிலுவை

மேட்டிற்கு அருகே மண்ணெண்ணய் விளக்குகளோடு வில் வண்டியில் தனித்து ஏறப்போன ஆறுமுகப் பெருமாள், அதே ஆள் பலத்துடனும், அடிமை இசக்கி மாடத்தியுடனும் அங்கே ஓடிவந்து விட்டார்.

இசக்கிமாடத்தியின் கணவன் புலைமாடனுக்கு ஆவேசம் அடங்க வில்லையானாலும், குறைந்தது, அவனைத் தொடக்கூடாது என்பதற்காகவும், தொடப்பயந்தும், பாருக்குட்டியை மீட்காமலும் என்னச் செய்வது என்று புரியாமலும் கண்களை வெறுமனே திறந்து வைத்துக் கொண்டிருந்த கூட்டத்தின் மத்தியில் அவன் பாருக்குட்டியை விடுவித்தான். வாய்மொழியும், உடல் மொழியும் அற்றுப்போய் எலும்பு மரங்களைக் கொண்ட மனிதக் குன்றாய் சுயமிழந்து நின்றான்.

அம்மாயி, தறவாட்டுப் பெண்களின் ஓலக் குரல்களையும் மீறி, பாருக்குட்டியைப் பார்த்து போலி வருத்தத்தோடு அழுகை அழுகையாய் கேவிக்கேவி பேசுகிறாள்.

"இது புலப்பேடி மாதமுன்னு உனக்குத் தெரியாதா? இந்தக் காலத்து ராத்திரியில, ஆண்துணை இல்லாம வீட்டுக்கு வெளியே வரும் நம்ம சாதிப்பெண்ண தீண்டப்படாத சாதிக்காரன் அவள்மேல் ஒரு கல்லை வீட்டெறிஞ்சாலும் போதும், இல்லன்னா 'கண்டேன் அம்மையை' என்று கத்தினாலும் போதும். அவனுக்கு அவள் அடிமையாகணும் என்கிற சாஸ்திரம் உனக்கு தெரியாதா? கடைசில நம்ம வீட்டு அடிமைக்கே அடிமையாயிட்டியே. இனிமே இந்த வீட்ல நீ இருக்க முடியாதே... எந்த நேரத்துல நாமெல்லாம் அடிமையா பொறப்போமுன்னு சாபமிட்டியோ அது உனக்கே பலிச்சுட்டதே.... குருவாயூரப்பா.... குமாரபுரம் முருகப்பா... தாணுமாலையன் சாமியே... நாங்க என்ன செய்வோம்... ஏது செய்வோம்."

இதற்குள், ஆறுமுகப் பெருமாள், ஒரு நமுட்டுச் சிரிப்போடு வயிற்றோடு சேர்த்து இடுப்பில் ஒட்டிக்கிடந்த மடிச்சீலைக்குள் கைவிட்டு, சில சக்கரங்களை வெளிப்படுத்தி புலைமாடனின்

முகத்திற்கு எதிராய் ஆட்டினார். அவனும் பழக்கத் தோசத்தில் கீழாய் விழுந்த சக்கரங்களை இரண்டு உள்ளங்கைகளை குவித்தபடி தாங்கிக் கொண்டான்.

குடும்ப சர்வாதிகாரியான காரணவான் பார்வதிக்கார நந்தீஸ்வரனுக்கு, அப்போது "தானும் ஆடியது, சதையும் ஆடியது" பாருக்குட்டி, அவர் தோளில் தூக்கி இடுப்பில் ஏந்தி வளர்த்த குழந்தை. காலப்போக்கில் சொந்தக் குழந்தைகள் தோன்றத் தோன்ற, இவளும் குமரியாய் ஆக ஆக, பங்காளி வாரிசாய் மறுதோற்றம் காட்டினாள். அவரை பட்டும் படாமலும் தட்டிக் கேட்கும் எதிராளியாய் ஆனாள். அவர், ஒரு தடவை தனது சாதியின் அருமை பெருமைகளை சொல்லிக் கொண்டிருந்தபோது, எந்த சாதியிலும் பெண் என்பவள் கீழ்சாதிதான் என்று இவள் போகிற போக்கில் சொல்வதுபோல் சொல்லி அவரை சிறுமைப்படுத்தி இருக்கிறாள். அத்தனைக்கும் வட்டியும் முதலுமாக அவளை ஆக்கிக் கொண்டுதான் இருந்தார். ஆனாலும், அந்த வேளையில், பாருக்குட்டியை மீண்டும் குழந்தையாக்கிப் பார்த்தார். அந்த கற்பிதத்தில் கண்ணீர் மல்க கூட்டத்தினரைப் பொதுப்படையாகப் பார்த்து கெஞ்சினார்.

"இவன்... என்னோட அடிமை. அதனால இவனுக்கு அடிமையான பாருக்குட்டியும் எனக்கு அடிமை. தோப்புக்குள்ள ஒரு குடிசை போட்டு, இவளுக்கு கொடுத்துடறேன். இவ அங்கேயே இருந்துட்டுப் போகட்டும்."

ஆறுமுகப்பெருமாள், தனது கணக்கு புத்தியை காட்டிப் பேசினார்.

"இதோ நிக்கானே இவன் யாரோ எவனோ... அறியேன். ஆனாலும் பாருக்குட்டி இவனுக்கு அடிமை என்கிறது மட்டும் தெரியும்.... அந்த அடிமைய, அவன் கிட்ட இருந்து, நான் விலைக்கு வாங்கிட்டேன். இப்போ இவள் எனக்கு அடிமை."

"அதையும் பார்த்துடலாம்... என் பாருக்குட்டிய எங்கயும் விடமாட்டேன்."

காரணவான், அந்தஸ்து மாயையிலிருந்து விடுபட்டு, ஒரு சாதாரண மனிதனாய் வேட்டியை தார்பாய்த்தபோது, பிற தறவாட்டுக்காரர்கள் அவரை பிடித்துக் கொண்டு, உருட்டி மிரட்டி யதார்த்தத்தைச் சுட்டிக் காட்டினார்கள்.

"நீங்க சொல்வது நிசமாவே இருக்கட்டும். ஆனாலும் தீண்டத்தகாதவன் தீண்டுன பெண்ணை, ஒன்று வீட்டை விட்டுத் துரத்தணும். இல்லன்னா கண்டந்துண்டமா வெட்டிப் போடணும். இதுதான் நம்ம சாதி சாஸ்திர சம்பிரதாயம். அப்படிச் செய்யாது போனால், ராஜ தண்டனைக்கு ஆளாக வேண்டியது வரும். சித்திரை திருநாள் மகாராஜா, இங்கே வந்து கோட்டையில் முகமாமிட போகிறாராம். உங்களுக்கு உடந்தைன்னு நாங்களும் ராஜ கோபத்திற்கு உள்ளாக வேண்டியது வரும். எப்படியோ நம்ம அந்தஸ்துள்ள சாதிக்காரர்கிட்டதான் அவள் அடிமைப் பட்டிருக்காள். இப்படி நினைச்சு மனச தேத்திக்குவோம். இல்லாட்டி நம்மள கழுவுலகூட மகாராஜா ஏத்தலாம்."

காரணவான் வாயடைத்துப் போனார். இதற்குள் தனித்துவிடப்பட்ட இகச்சி மாடத்தி, புலமாடன் மீது பாய்ந்தாள். அவன் தலையை முடியோடு சேர்த்து பிடித்து உலுக்கினாள். அவன் முகத்தில் காறிகாறித் துப்பினாள். மலையாளமும் தமிழும் கலப்பு மொழியாகாமல் முற்றிலும் மாறான கூட்டாகி அழுகிப்போன ஒரு புதுமொழியில் அவள் ஏதேதோ பேசினாள். அதன் சாரம் இப்படிதான் இருக்க வேண்டும்.

"என்னை மாதிரி அம்மையை ஆக்கிட்டியே. நமக்காக இரக்கப்படுற தாயாச்சே. நான் இப்ப எப்படி துடிக்கேனா அப்படித்தானே அம்மா துடிப்பாள். நீ உருப்படிவியா. புலப்படுவியா."

புலைமாடனுக்கு, தான் செய்த காரியத்தின் தாத்பரியம் அப்போதுதான் புரிந்திருக்க வேண்டும். கையிலிருந்த சக்கரங்களை வீசியடித்தான். ஆறுமுகப்பெருமாளோ சட்டம் பேசினார்.

"நீ சக்கரத்த வீசினாலும் சரி, விழுங்கினாலும் சரி. உன் அடிமையை நான் வாங்குனது வாங்குனதுதான். இந்த சவுத்து மூளி மாடத்திய ஒரு போடு போடுங்கடா."

இசக்கி மாடத்தி, அடி, உதை வாங்கிக் கொண்டிருந்தபோது, புலைமாடன், ஒரு மதயானையைபோல் ஆறுமுகப் பெருமாளை நோக்கி, தலையை அங்குமிங்குமாய் ஆட்டி நடந்தான். அவர் பயந்துபோய் பின்வாங்கினார். கூட்டம் லேசாய் சிதறியது. அப்போது அச்சத்தால் நடுங்கிய ஒரு ஏவலாளியின் கையில் ஆடிய மூங்கில்தடி, புலைமாடனின் கண்முன்னால் அங்குமிங்குமாய் ஆடியது. காலங்காலமாக அடி உதை பட்ட அவனுக்கு, அதுவே அங்குசமாகியது. உடனே லேசாய் எரியப் போன ஐம்பொறிகளும் அணைந்து போயின. திடீரென்று நெடுஞ்சாண் கிடையாய் தரையில் விழுந்து அங்குமிங்குமாய் தவழ்ந்து ஒவ்வொருவர் காலையும் தொட முயற்சித்தான். அவனால் தீட்டு ஏற்படும் என்று ஒவ்வொருவரும் விலகி விலகி போனார்கள். அதற்குள் ஆறுமுகப் பெருமானின் காவலாளிகளில் இரண்டு மூன்றுபேர், அவனை பன்றியை இழுப்பதுபோல் தரையோடு தரையாக இழுத்து, கொல்லைப் பக்கமாக கொண்டுபோய், கை, கால்களை கயிற்றால் கட்டி அந்த கயிறை தறவாட்டு மரம் ஒன்றில் கட்டி விட்டு திரும்பினார்கள்.

பாருக்குட்டி, ஆறுமுகப் பெருமாளுக்கே அடிமை என்பது கூட்டத்தின் மவுன சம்மதத்தின் மூலம் நிச்சயமாகிவிட்டது. தறவாட்டு காரணவான்களும் அவர்களது கையாட்களும், காலாட்களும் கண்முன்னால் நடக்கப் போகிற அந்த விபரீதத் தொடரை பார்க்க விரும்பாதவர்கள்போல், தத்தம் வீடுகளுக்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். தற்காலிகமாய் செத்துப்போன பாருக்குட்டியின் சித்திகளும், தமக்கைளும் இன்னும் மயக்கம் தெரியாத குஞ்சம்மாவை தூக்கிக் கொண்டு வீட்டிற்குள் ஓடினார்கள். காரணவான் நந்தீஸ்வரன் கண்ணீரும் கம்பலையுமாய் வீட்டுக்குள் பாய்ந்தார். அம்மாயி மட்டும் அங்கேயே நின்றாள்.

பாருக்குட்டியின் முகம் வெறும் சதை பந்தாகிறது. காதில் குலுங்கிய உருளை வடிவிலான தக்கா, கரங்களை மறைத்த வளையல்கள், கை நிறைந்த மோதிரங்கள், மார்பில் கவசமான மின்னுமானி, முல்லைமொட்டு, முத்துமாலை, அவல் மாலை ஆகிய தங்க நகைகளையும், காலில் கிடந்த தண்டை கொலுசு வெள்ளி நகைகளையும் ஒவ்வொன்றாக எடுத்தாள். அதை வாங்கப் போன அம்மாயியை தீண்டத்தகாதவளாக நினைத்ததுபோல் அவற்றை தரையில் வீசி எறிந்தாள்.

ஆறுமுகப் பெருமாளுக்கு அடங்காச் சினம். அந்த அடிமை தனக்கு சேரவேண்டிய நகைகளை தறவாட்டுக்கு கொடுத்து விட்டாளே என்கிற தாங்க முடியாத கோபம். அந்தக் கோபத்தை செயலில் காட்டினார்.

பாருக்குட்டியின் மார்பு துணியை எடுத்து மாடத்தியின் இடது கையையும், இவளின் வலது கையையும் சேர்த்து கட்டிவிட்டு 'சவுத்து மூளிகளை இழுங்கடா' என்று ஆணையிட்டார்.

அவருடைய அவசரம் அவருக்கு. ஆரல்வாய் மொழியில் இருந்து இருபது மைல் தொலைவிலுள்ள மனித அடிமை வியாபரச் சந்தையான இரணியலுக்கு அவள்களை, அப்போது இழுத்துப் போனால் தான், மறுநாள் காலையில் விலைப் பொருளாய் நிறுத்த முடியும்.

கருப்பும், சிவப்புமான இசக்கி மாடத்தியும், பாருக்குட்டியும் அந்த இரவில் ஒரே நிறமாய், இருள் நிறமாய் ஏமான்களின் இழுத்த இழுப்பிற்கு ஈடுகொடுக்க முடியாமல் அல்லாடி, தள்ளாடி நடந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த அந்தப்புர சயனஅறைக்குள் "எந்த குடியிலும் பெண் என்கிறவள் கீழ்குடிதான் சொல்வியே... சொல்வியே" என்று ஒற்றைக் குரலில் ஒப்பாரி வார்த்தைகள் வீட்டை ஊடுருவி விம்மி புடைத்து வெளிப்படுகின்றன. இதையடுத்து, எஞ்சிய பெண்களின் ஓலப் புலம்பல்கள் அந்த ஒப்பாரிக்கு தாரை, தப்பட்டங்கள்

ஆகின்றன. கொள்ளை புற மரத்தில் கட்டப்பட்டு கிடக்கும் புலை மாடனின் அவள ஒலி ஊமை குழலாய் ஓங்கி ஒலிக்கிறது.

தறவாட்டு மரத்தில் கட்டப்பட்ட புலைமாடன், வார்த்தைகளை வெளிப்படுத்தாமல், இழவு மேளத்தட்டலுக்கு ஊமைக்குழலாய் இரைகிறான். கரைகிறான்.

அருகேயுள்ள வடக்குமலையின் உச்சியில் ஊற்றெடுத்த காற்று, கீழேயுள்ள கணவாய் மண்ணை அள்ளி அள்ளி வீசியடிக்கிறது.

O

# மாடசாமியின் ஊர்வலம்

குதிரைப் பந்தயம் நடக்கலாம் என்று உயர்நீதி மன்றம் அளித்தத் தீர்ப்பை, எல்லா பத்திரிகைகளும், இரண்டாவது மூன்றாவது பக்கங்களில், நிதானத்துடன் பிரசுரித்திருந்தன. ஆனால் மாடசாமியின் கண்ணில்பட்ட பத்திரிகை 'மக்கள் பத்திரிகை', ஆகையால் 'குதிரைப் பந்தயம் நடக்கும்' என்று கொட்டை எழுத்தில் பிரசுரித்திருந்தது.

மாடசாமி செய்த ஒரே பாவம் அந்தக் காலத்து திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 'எழுத்துக் கூட்டி' வாசிக்குமளவுக்குப் படித்திருந்ததுதான்.

சாயாக் கடையில் தன்னிடம் ஒன்றுமில்லை என்று காட்டுவது போல், ரிக்ஷாக்காரர் இரண்டு கைகளையும் அகலமாக விரித்து வைத்துக் கொண்டு, அதற்குள் அந்த பத்திரிகையை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். குதிரைப் பந்தயச் செய்தியை, அன்று நடந்த மிகப் பெரிய உலகச் செய்தியாக நினைத்து அவர் படித்தபோது, மாடசாமியும் பத்திரிகைக்குள் தலையை நீட்டி விட்டு, பிறகு "நம்மிடம் கழுதைகூட இல்லையே. குதிரை ஓடினால் என்ன... சாடினால் என்ன" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டே, வெளியே பாரத்தோடு இருந்த சைக்கிளை எடுத்துக் கொண்டு பறந்தான்.

சிலநாட்கள் சென்றிருக்கும்.

தமிழக மக்களின் கலாச்சாரத்தையும், தனித் தன்மையையும் காட்டுவதாகக் கூறப்படும் அந்த பத்திரிகை, மாடசாமியை விடுவதாக இல்லை.

மாடசாமி, வாடிக்கைக் கடை ஒன்றின் முன்னால், சைக்கிளை நிறுத்திவிட்டு. 'கேரியரில்' கட்டியிருந்த மரப்பெட்டியைத் திறந்து பத்து பாக்கெட் கடலை மிட்டாய்களை கடைக்காரரிடம் நீட்டினார்.

அவர், நீட்டியதைக் கவனிக்காமலே, கடைக்காரர் மக்கள் பத்திரிகையை நீட்டி முழுக்கிப் படித்துக் கொண்டிருந்தார் மாடசாமி "அண்ணாச்சி பத்து பாக்கெட் போதுமா" என்று கேட்டார்.

பதிலில்லை.

*"உங்களைத்தான் அண்ணாச்சி... எத்தனை பாக்கெட் வேணும்"*

கடைக்காரர், இந்த லோகத்தில் இல்லை. பொறுமை இழந்த மாடசாமி, கடைக்காரரின் தொடையைத் தட்டிக் கொண்டே "சொல்லுங்க அண்ணாச்சி நேரமாவுது" என்று உரக்கக் கூவியதால், அவருக்கு வாய் வலித்ததுதான் மிச்சம், அந்த ஆசாமி, வாயில் உமிழ்நீர் அருவியாய்க் கொட்ட, பத்திரிகையில் இருந்து வைத்த கண் வாங்கவில்லை. "அப்படி என்ன அதிசயமாய் எழுதியிருக்கும்" என்று ஒரு "அட்வஞ்சர்" மனோபாவத்தில், மாடசாமி தலையை நீட்டினார்.

மாடசாமியின் வாழ்க்கையிலேயே ஒரு மடத்தனமான அல்லது மகத்தான திருப்புமுனை, அப்படி தலையைத் திருப்புகையில் ஏற்பட்டது, மாடசாமிக்கே தெரியாது.

"நாளைக்கு குதிரைப் பந்தயம் துவங்குகிறது."

இப்படிப் போட்டவுடனே, அது மக்கள் பத்திரிகைக்குரிய இலக்கணமாகி விடுமா? ஆகாது; ஆகையால், ஒரு குதிரையின் படமும், அதில் ஜாக்கி சவாரி செய்யும் நளினமும், அதே பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தது. மாடசாமி, கடலைப் பாக்கெட்டை மறந்தார்; சைக்கிளை மறந்தார். ஏன்? கடைக்காரர் பத்திரிகை படிக்கிறார் என்பதையே மறந்து, பத்திரிகைக்குள் தலையை அதிகமாக நீட்டிக் கொண்டே முண்டியடித்தார். படித்துக் கொண்டிருக்கும் தன் கண்களுக்கு எதிரே பூதாகரமான பொருள் ஒன்று தலைவிரித்துத் தாண்டவமாடுவதை காணச் சகிக்காத கடைக்காரர், எரிச்சலோடு, "அறிவு கெட்ட மடையன்... இப்படியாத் தலையை நீட்டுறது... ஓசியில படிக்கிறதுக்கும் ஒரு மட்டுமரியாத வேண்டாமா" என்று சொல்லிக் கொண்டே

கண்களை எடுத்தவர் “அடடே மாடசாமியா... நான் வேற யாரோன்னு நினைச்சேன்... நான் செத்த நேரத்துல படிச்சுட்டுத் தாரேன்... அப்புறமா நீ படி” என்று இழுத்துக் கூறிவிட்டு, பத்திரிகையை இரண்டாக மடித்து, மாடசாமி படிக்க முடியாது என்று நிச்சயப்படுத்திக் கொண்டு, அவர்பாட்டுக்குப் படித்துக் கொண்டிருந்தார். இது, மாடசாமியின் ஆர்வத்தை, ஜாக்கி, குதிரையை வேகப்படுத்துவது போல், வேகப்படுத்தியது.

கடைக்காரர் படித்துக் கொண்டே இருந்தார். மாடசாமி, நினைத்திருந்தால் பத்து பாக்கெட் கடலை மிட்டாயையும், வேறு கடையில் போட்டுவிட்டு, சைக்கிள் கம்பியை நீட்டியிருக்கலாம். அவருக்கு அதில் மனமில்லை. எப்படியாவது கடைக்காரர் சுவாரஸ்யமாகப் படிக்கும் அந்த உலகச் செய்தியை படித்துவிட்டே நகர்வது என்று வீ ரசபதம் வேண்டி நின்றவர் போல், வேறெதையும் கொள்ளாமல் நின்றார்.

கடைக்காரர், குதிரைச் செய்தியைப் படித்து, கவர்ச்சி நடிகையின் கட்டழகைப் பருகி, சினிமா உலகில் வட்டமடித்து அரசியல் தலைவர்களின் ஆசாபாசங்களை ரசித்து “நான் ஏன் திருமணம் செய்யவில்லை?” என்ற ஒரு நடிகையின் ஆராய்ச்சிக் கட்டுரையை அலசி, கடைசியில் “நடிகர் நாயகனுக்கு காலில் முள் குத்திவிட்டது... படப்பிடிப்பில் பரபரப்பு” என்ற செய்தியை அனுதாபத்துடன், அச்சச்சோ போட்டுக் கொண்டே வாசித்தார். அன்றுகாலை, தன் மகனை, கெட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டிக் கொண்டே மயக்கம் வருமளவிற்கு அடித்து ரத்தத்தை வெளிப்படுத்திய வீ ர வரலாற்றை அடியோடு மறந்து, நடிகர் காலி ல் முள்பட்ட சங்கதியை கண்ணீரும் கம்பலையும் வருமளவிற்குப் படித்தார், பிறகு பிராணச் சிநேகிதனை பிரிய மனமில்லாமல் பிரிவதுபோல், பத்திரிகையை, மாடசாமியிடம் நீட்டினார்.

மாடசாமி, குதிரைச் செய்தியைப் படித்தார். அதிகமாகப் புரியவில்லை. இதரச் செய்திகளையும் பத்தே நிமிடத்தில் படித்து விட்டார். “நீங்க... ஒரு மணி நேரமா படிச்சிங்க... என்னால் அஞ்சி நிமிஷத்துக்குமேல் படிக்க முடியல’ என்று அவர்

சொன்னபோது, கடைக்காரர், அவரது அறியாமையை, தன் குவாலிபிகேஷனாக நினைத்தவர்போல், பெருமிதத்துடன் சிரித்துக் கொண்டார். 'நமக்கு விபரம் தெரியலியே' என்ற மனோ பாவத்தைக் காட்டும் தாழ்வு மனப்பான்மையுடனும், விபரம் தெரியத் துடிப்பவர்' என்ற உணர்வை பிரதிபலிக்கும் குரு பக்தியுடனும், மாடசாமி, அவரை நோக்கினார்.

கடைக்காரர், அவருக்கு 'ஞான ஸ்நானம்' கொடுக்கத் தீர்மானித்தவர்போல் "பேப்பர் படிக்கிறதுக்கு விவரம் தெரியணும்பா... உதாரணமா... நடிகை நந்தகுமாரி ஏன் கல்யாணம் பண்ணிக்கலன்னு எழுதி இருக்கு... பாரு... அதில் ஒரு மர்மம் இருக்கு" என்றார்.

"அதுல... அப்படி என்ன மர்மம் இருக்கு அண்ணாச்சி"

"அது பெரிய கதை... இந்த நந்தகுமாரியும், நடிகர் நாயகமும் ஏடாகூடமாய் நடந்துக்கிறதாயும். ரகசியமாய் கல்யாணம் பண்ணிக்கிட்டதாயும் கிண்கிணிப் பத்திரிகையுல கிசுகிசுப் பகுதியில் போட்டிருந்தாங்க... அதை, இவள், இதுல மறுத்து எழுதியிருக்காள்... எதுக்கும் நாளைக்கு ஆந்தையின் கேள்வி பதிலப் படிச்சா மர்மம் தெரியும்."

"குதிரை ஓடுதுன்னு போட்டிருக்கே... அப்படின்னா... என்ன அண்ணாச்சி...?

"நல்ல ஆளுப்பா... நீ... குதிரை பந்தயத்தைப் பத்தி உனக்கு தெரியாதா... நீ போனதே இல்லியா"

"நீங்க சொல்றது புரியல"

"புரியுறதுக்கு மூளை வேணும்பா... எவ்வளவு நாளைக்கு பட்டிக்காட்டானாய் இருக்கப்போற...? மெட்ராஸுக்கு வந்து ஒரு வருஷமாயிட்டு என்கிறே... இன்னும் குதிரைப் பந்தயத்தைப் பத்தி தெரியாதுங்றீயே..."

"நான் மூடன்தான்... ஒத்துக்கிறேன்... அதுக்காக... நீங்க இந்த விஷயத்த மூடி மறைக்கப் படாது..."

"கிண்டி இருக்குல்லா... அதுல பெரிய மைதானம் இருக்கு... அங்க, பலநாட்டு குதிரைங்க வரும்... அதுல கில்லாடி ஆளுங்க ஜாக்கியா இருப்பாங்க... குதிரைங்கள ஓட்டப் பந்தயமா ஓட்டுவாங்க... எந்த குதிரை முதல்ல வருதுன்னு நாம பணம் கட்டணும். பத்து கட்டுன்னா நூறு... நூறு கட்டுன்னா பத்தாயிரம்"

"பத்தாயிரம் கட்டுனா... நூறும் வருமுல்லா"

"அதுலதான் அறிவு வேல செய்யணும்... இதப்பாரு... இந்த ரேஸ் டிப்ஸ்ஸ படிச்சு... இதுப்படி பணம் கட்டுனா... குறைஞ்சது... இரண்டு மடங்கு வருமானம் இருக்கும்... வாரீயா... வார ஞாயிற்றுக்கிழமை போவோம்...."

"நமக்கெதுக்கு வம்பு"

"பைத்தியக்கார ஆளுய்யா.. நீ, ராப்பகலா சைக்கிள் மிதிச்சி என்னத்தக் கண்டே? ஒரே வாரத்துல லட்சம் சம்பாதிக்கலாம். ஒரு பெரிய கடலமிட்டாய் பாக்டெரியேகூட வைக்கலாம்... என்ன சொல்ற..?" வாரியா

"நாளைக்குச் சொல்றேன்"

"இப்ப ரெண்டுல... ஒண்ணச் சொல்லிடு. இல்லன்னா... வேறே ஆள கூட்டிக் கிட்டு போவேன். ரெண்டுபேர்ல ஒருவனுக்காவது அதிர்ஷ்டம் இருந்து... அந்த அதிர்ஷ்டத்தில் அடிக்கும்..."

"பணம் போயிட்டுதுன்னா"

"அது எப்படிய்யா போவும்... இந்த பத்திரிகையில கொடுக்கிற டிப்ஸ்படி கட்டிப்பாரு... இது... ஏழை ஜனங்களோட பத்திரிகை ஏழைங்களுக்கு நஷ்டம் வரும் படியா... எழுதுவாங்களா...? நேத்தைய பேப்பர் இது... நல்லாபாரு... ரிக்ஷாக்காரருக்கும் முடிதிருத்துபவருக்கும் ஜாக்பாட் விழுந்திருக்கு... தினமுத்தி பத்திரிகை கொடுத்த டிப்ஸ்படி ஆடுனவர்கள்... "ஐந்து லட்சம் அபேஷ்."

"அடடா... அதிர்ஷ்டமுன்னா... இதுல்லா அதிர்ஷ்டம்."

"அதிர்ஷ்டமில்லையா... இந்த பத்திரிகையோட அறிவு வேல செய்திருக்கு. சரி, வரியா ஞாயித்துக்கிழம."

"சரி... அண்ணாச்சி... வர்ற ஞாயித்துக்கிழம, என் மவனையும், மவளையும் உயிர் காலேஜ்க்கு (மிருக காட்சிச் சாலை) கூட்டிக்கிட்டுப் போறதா இருந்தேன். முதல்ல பிழைக்கிற வழிய பாப்போம். கிண்டிக்குப் போவோம். எனக்கும் இப்போதான் அறிவு வந்துருக்கு. விசேஷம் இல்லாட்டா, இந்த பேப்பர்ல இவ்வளவு தூரம் எழுதமாட்டாங்க."

"எப்படியோ பிழைக்கத் தெரிஞ்சாச் சரி. ரேஸ் டிப்ஸ் மட்டும் படிக்க மறந்துடாதே. இது விசேஷமான பத்திரிகை. இல்லாமலா லட்சக்கணக்குல விக்கும்? தினமும் இத வாங்கிப்படி. உலக விஷயம் அத்தனையும் தெரிஞ்சிக்கலாம்."

"சரி அண்ணாச்சி. ஞாயித்துக்கிழமை, நான் லேட்டாய் வந்தாலும் என்னை மறக்காம கூட்டிக்கிட்டுப் போகணும்"

"பணத்தோட வா. அப்புறம் இருபது பாக்கெட் மிட்டாய்க்கு உன் கணக்கு நோட்டுல பற்று எழுதிக்கோ. ஞாயித்துக்கிழம, கிண்டிக்கு நானே ஒனக்கும் சேர்த்து டிக்கட் எடுத்துடுறேன்."

"எப்படி வேணுமுன்னாலும் வச்சுக்கலாம். இந்த பேப்பர நான் கொண்டு போகட்டுமா?"

"நான் பத்து எழுதிக்கிறேன். கொண்டு போ. பேப்பர நல்லாபடி, அப்புறம் தெரியும் விஷயம். நாளைக்கு டீ குடிக்கிறதுக்கு முன்னாடி, நீயே இத வாங்குவே. பீடியை புடிச்சிட்டு நிறுத்திடலாம். பட்ட சாராயத்த குடிச்சிட்டு நிறுத்திடலாம். ஆனால் இத மட்டும் படிச்சிட்டு நிறுத்த முடியாது. ஏழைங்களுக்கு குதிரைப் பந்தயத்தில் ஜெயிக்கிறதுக்கு வழிகாட்டுற மக்களோட பத்திரிகையாக்கும் இது"

மாடசாமிக்கு மேற்கொண்டு சைக்கிளை மிதிக்கவோ, கடலைமிட்டாய்களை விற்கவோ மனமில்லை. நேராக கம்பெனிக்குப் போய் "உடம்பு சரியில்ல. சைக்கிள் ஓட்ட முடியலுன்னு" ஒரு போடு போட்டுவிட்டு, சைக்கிளையும், சரக்கையும் ஒப்படைத்துவிட்டு, வீட்டுக்கு வந்தார். வழக்கத்துக்கு விரோதமாக, தந்தை வீட்டுக்கு வந்ததை கண்ட மகன் துரைராஜ்

மூக்கில் விரலை வைத்தான். மகள் சீனியம்மை, விரலில் மூக்கை வைத்தாள்.

மாடசாமிக்கு 45 வயதிருக்கும். கிராமத்தில் "மூணு மரக்கால் விதப்பாட்டை" வைத்து எப்படி எல்லாமோ சமாளித்துப் பார்த்தவர். மானம் பாத்த பூமி, இவரை மானத்தோடு வாழவிடவில்லை. மனைவிக்கு டி.பி... இவர் வயலுக்கருகே பரந்த பெரும் பரப்பைக் கொண்ட ஒரு பண்ணையார்... தனது வாக்கு சாதுரியதாலும், சில்லரை வீச்சாலும், கைவசப் படுத்திவிட்டார்."

கம்மாவுக்கு ராக்காவலு போவதற்காக, பண்ணையார் ஆட்டுக்கறி கொடுப்பதாக மாடசாமி நினைத்தால், பண்ணையாரோ தன் மலைப்பாம்பு வயலுக்குள், அவனின் குட்டிப் பாம்பு நிலத்தை விழுங்கத் திட்டம் போட்டிருந்தார். இறுதியில் மனைவி இறக்க, அவளின் ஈமச்சடங்கிற்காக, நிலத்தையும், பண்ணையாரிடம் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, வயது வந்த மகள் சீனியம்மையையும், மகன் துரைராசுவையும் கூட்டிக் கொண்டு, சென்னையில் வண்ணாரப்பேட்டையில் குடியேறினார்.

தலைநகருக்கு வந்த நான்கைந்து நாட்களில் கடலை மிட்டாய்க் கம்பெனி ஒன்றில், தெரிந்த ஒருவரின் சிபாரிசின் பேரில் முன்பணம் கட்டாமலே சரக்கெடுத்தார். கம்பெனியே அவருக்கு ஒரு சைக்கிளைக் கொடுத்து, அதற்கு ஒரு வாடகையும் வசூலித்தது. எப்படியோ மாடசாமி, ராப்பகலாக அலைந்து தினமும் பத்து, பன்னிரெண்டு ரூபாய்வரை சம்பாதித்தார். ஊரில் ஒன்பவதாவது வகுப்பு படித்த மகனை, பத்தாவதில் சேர்த்தார். கையில் இருநூறுரூபாய் வரை நடமாடியது. இந்த ரூபாயை ஆயிரமாக்கி சொந்தமாக கடலைக் கம்பெனி வைத்து, மகளை 'நல்ல இடத்தில்" தள்ளிவிடலாம். மகனை ஆபீசராக்கி விடலாம் என்று அவர் நினைத்துக் கொண்டிருந்த சமயத்தில்தான், அவருக்கு அந்த மக்கள் பத்திரிகையின் பரிச்சயம் ஏற்பட்டது.

மாடசாமி, இப்போது படிப்பாளியாகி விட்டார். மக்கள் பத்திரிகை கொடுத்த டிப்ஸ்படி, கடைக்காரருடன் சேர்ந்து பத்து

ரூபாய் கட்டினார். அவர் கெட்டகாலம், அன்று அவனுக்கு நூறு ரூபாய் கிடைத்தது. அடுத்த வாராம் கோவிந்தா. மறுவாராம் 50 ரூபாய்.

மாடசாமி ஒரு லட்சியவாதி. எடுத்த காரியத்தை கண்ணுங் கருத்துமாக முடிப்பவர். ஆகையால் கிண்டியில் லட்சம் ரூபாயாவது (குறைந்தபட்சம்) சம்பாதித்து, ஒரு சினிமாப்படம் எடுப்பது என்று தீர்மானித்தார். மக்கள் பத்திரிகையின் சினிமாச் சங்கதிகளைப் படித்தபிறகு, தானே அதில் கதாநாயகனாக நடிக்கலாம் என்றும் யோசிக்கத் துவங்கினார்.

அப்பாவின் நடமாட்டத்தில், பெரிய மாறுதல் ஏற்பட்டிருப்பதை, மகள் சீனியம்மை முதலில் அவ்வளவாகக் கவனிக்கவுமில்லை. கண்டு கொள்ளவும் இல்லை. தந்தை வாங்கிப் போட்ட மக்கள் பத்திரிகையை, அவள் விழுந்து விழுந்து படித்தாள். பக்கத்து வீட்டுப் பெண்களோடு (இப்போதைக்கு) அவள் பார்த்த சினிமாக்களையும், வாரப் பத்திரிகைகளையும், ருசிகரமான காதல் கதைகளையும், "எட்டாப்பு தமிழ்" அறிவின் உதவியோடு படித்துக் கொண்டும், "பெரிது... பெரிது காதல் பெரிது... அதனினும் பெரிது ஓடிப்போவது" என்ற ஜனரஞ்சகக் கவிஞரின் சினிமாப் பாட்டையும் முணுமுணுத்துக் கொண்டு, அவள் கனவுலகில் சஞ்சரித்தாள்.

மாடசாமியின் மகன் பத்தாவது வகுப்பு துரைராசுக்கு, அப்பா வாங்கி வந்த அந்த பத்திரிகை ஒரு அரும்பெரும் பொக்கிஷமாகத் தெரிந்தது. இதுவரைக்கும் அவன் முட்டாள். இனிமேல் அப்படி இல்லை. இதுவரை, பள்ளிக்கூடத்துப் பையன்கள் பேசிய "பாபி", "கோபி" முதலிய வார்த்தைகளுக்கு அர்த்தம் புரியாமல், தனிமைப்பட்டு நின்றான். 'காதலே வா' ரீலிஸ்... "கவர்ச்சியே காதல் ரீலிஸ்" என்று சகமாணவர்கள் பேசும்போது, அவர்களின் 'ஜெனரல் நாலட்ஜை' கண்டு வியந்து நின்றான். வாத்தியாரிடம் மாணவர்கள் "ஸார்... நாயகம் நடித்த லேட்டஸ்ட் படத்தைப் பாத்தீங்களா" என்று கேட்பதும், அதற்கு வாத்தியார் "நீங்க பாத்துட்டு வாங்கடா... நல்லா இருந்தா, நான் போறேன்" என்று பதில் சொல்வதும், அவனுக்கு திகைப்பைக்

கொடுத்து, ஒருவித தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தியது. அவன் இன்னும், பட்டிக்காட்டான் மாதிரி, அக்பரையும், சிவாஜியையும் நினைச்சுக்கிட்டு இருக்கானே! ஒரு மாணவன் கூட அவனிடம் பேசமாட்டாங்கானே! வாத்தியார் கூட அவனை பொருட்படுத்துவதில்லையே'

இந்தச் சமயத்தில்தான், அந்த மக்கள் பத்திரிகையின் தொடர்பு, தந்தையின் மூலம் அவனுக்குக் கிடைத்தது. அவன் நடிகை நந்தகுமாரி நடித்த திரைப்படங்களை பார்த்திருக்கிறான். அவள், அந்த பத்திரிகையில் கொடுத்த பேட்டியைப் பத்துதடவை படித்தான். அவள், அவனுக்காகப் பிறந்திருப்பதுபோல் ஒரு எண்ணம். ஏன் கூடாது? அவன் அக்காள் சீனியம்மைகூட, அன்றைக்கு இந்தியாவிலேயே அதிகமாக விற்கும் அந்த வாரப் பத்திரிகையைப் படித்துக் காட்டினாளே- அதுல வந்த ஒரு கதையில... ஒரு பணக்காரப் பொண்ணு, ஒரு ஏழையின் கட்டழகுல... எப்படி மயங்குறாள்! நந்தகுமாரியோட சூட்டிங்ல... அன்னிக்கு, அவன், நந்தகுமாரியை பார்த்தபோது, அவள் அவனைப் பார்த்து சிரிக்கலியா?... நானும்... சினிமா நடிகர் மாதரி தானே இருக்கேன்... என்னை காதலிச்சுதான் அப்படி சிரித்திருக்கா... அவள் வீட்டுக்கு ஒரு நாளைக்குப் போகணும்.

இப்போது துரைராசுக்கு, அதிகமாக புத்தி வந்துவிட்டது. நூலகங்களுக்குப் போய், வாரப் பத்திரிகைகளையும் சினிமாப் பத்திரிகைகளையும் கரைத்துக் குடித்தான். எந்தப் போர் எந்த ஆண்டு நடந்தது என்ற சரித்திரம் அவனுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் எந்த நடிகை, எந்த நடிகரிடம் நெருக்கம் என்பது அவனுக்கு அத்துபடி. சோடியம் குளோரைடும், கால்சியம் நைட்ரேட்டும் சேர்ந்தால் என்ன கிடைக்கும் என்ற ரசாயன விதி தெரியாவிட்டால் என்ன... எந்தெந்த நடிகை, எந்தெந்த நடிகனோடு சேர்ந்தால், படம் எப்படியெப்படி ஓடும் என்பது தெரிந்தால் போதாதா... மீன் சுவாசிக்கும் முறை, தவளையின் "டைஜஸ்டிவ் சிஸ்டம்" கரப்பான் பூச்சியின் 'ரி புரடக்டிவ் முறை"

அவனுக்குத் தெரியாதுதான். ஆனால், பிரபல வாரப் பத்திரிகைகளைப் படித்து, எந்த நடிகை எப்படி மெலிந்தாள் எவள் சமீபத்தில் தடித்தாள் என்பது மட்டுமில்லாமல், ஒரு சினிமா பத்திரிகையைப் படித்தன் மூலம், அவனுக்கு ஒரு நடிகையின் அங்கங்கள் அனைத்தையுமே நேரில் பார்த்ததுபோல் தோன்றியது.

இப்போது துரைராசுக்கு, தாழ்வு மனப்பான்மை போய்விட்டது. மாணவர்கள் மத்தியில், அவன் ஒரு 'குருப்' லீடர். புடில்யன், ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் எழுதிய சரித்திரக் கதையில் "அவள் தோளில் இருந்த அவன் குறும்புக்கை, அதற்குக் கீழே சென்று விளையாடியது" என்ற வர்ணனையை, குறைந்தது இருபது தடவை படித்திருப்பான். நடிகை நந்தகுமாரியின் தோளில் அவன் கை இருப்பது போலவும், பிறகு எழுத்தாளர் புடில்யன் சொன்னபடி, நடப்பது போலவும். இருபத்தைந்து தடவை நினைத்திருப்பான்.

சீனியம்மையும், சளைக்காமல் பத்திரிகைகளில் வரும் ஒரு கவர்ச்சிகரமான சினிமாப் பதிலை ரசித்துப் படிப்பாள்; அவளுக்கு, தான், நடிகை நந்தகுமாரி என்ற நினைப்பு. அக்காளுக்கும், தம்பிக்கும் உரையாடல் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கும்.

"நடிகை நந்தகுமாரி ஜம்முன்னு இருக்கா பாரேன்"

"நடிகர் வெண்சாமரனும் ஜம்முன்னு இருக்கார்... அவனைக் கட்டிடுறவள் கொடுத்து வைச்சவள்"

துரதிருஷ்டம் என்னவென்றால் நடிகர், நடிகைகள் கொடுத்து வைத்ததுமாதிரி, சீனியம்மைக்கும், துரைராசுக்கும் ஒரு காலம் வரும் என்று அவர்களே நினைத்துக் கொண்டதுதான்.

மாடசாமியும், இப்போது 'பிஸ்ஸி' அந்த மக்கள் பத்திரிகையில் வெளியாகும் 'டிப்ஸ்படி' ஆடத் துவங்கினார். கடைக்காரரர் உதவியில்லாமல், சுயேச்சையாக குதிரையை நடத்தும் அளவிற்கு முன்னேறி விட்டார். இதனால், வயது வந்த மகளை அவரால் சரிவர கவனிக்க முடியவில்லை. இதற்காக சீனியம்மையும்

கவலைப்படவில்லை. சொல்லப் போனால், சந்தோஷப் பட்டாள். அவளைக் கவனிக்க ஆளில்லாமலும் இல்லை. எதிர் வீட்டு இளைஞன் ஒருவன் வாரப்பத்திரிகைகளையும், சினிமாப் பத்திரிகைகளையும் அவளுக்குத் தாராளமாகக் கொடுத்தான். அவளும், சிலசமயம் வலியப் போய் அவனிடம் பத்திரிகை வாங்குவாள். கவர்ச்சிக் கன்னிகளைத் தாங்கிய வாரப் பத்திரிகைகள், அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை, என்றாலும், உள்ளே அரை குறை ஆடையில் இருந்த பெண்களை அணைத்துக் கொண்டிருக்கும் ஆண்களின் படங்களைப் பார்த்து, அவள் 'மெய்' மறந்தாள்.

சீனியம்மையும் முன்னேறிவிட்டாள். விஷயங்களை விவாதிக்கும் அளவிற்கு முன்னேறி விட்டாள்.

ஒரு செடி மறைவில், ஸ்கர்ட் அணிந்த ஒரு பெண்ணை ஒரு வாலிபன் அணைத்துக் கொண்டே சில்மிஷம் செய்யும் படத்தைக் காட்டி, அவள் எதிர்வீட்டு வாலிபனிடம் விவாதிக்கும் அளவிற்கு, தனது பொது அறிவை வளர்த்துக் கொண்டாள். குமாரி எச்.எல்.கீதா, 'அவங்க பார்க்கில் நடந்துக்கிற விதத்தை நல்லா வர்ணிச்சிருக்கிறாள்' என்று அவளும், புடில்யன் "அவள் முழங்காலில் இருந்து அவன் கை" என்ற இடம் பிரமாதம்' என்று அந்த அண்ணலும் உரையாடிக் கொள்வார்கள்.

ஒவ்வொரு நாளும் ஒரு வாரப்பத்திரிகை! விதவிதமான கவர்ச்சிக் கதைகள்! சமுதாயத்தில் அந்தஸ்துள்ள எழுத்தாளர்கள் படைக்கும் புரட்சிகரமான காதல் கதைகள் ஆஹா... காதலுக்கு எத்தனை சக்தி! எழுத்தாளர் சாந்தா கிருபாகரன், சின்னச்சிறிசுகள் கொட்டமடிக்கிறதை எப்படி வர்ணிக்கிறாள்!

மாடசாமியும் முன்னேறிக் கொண்டே இருந்தார். இப்போதெல்லாம், தொழில் விஷயமாக அடிக்கடி 'கேம்ப்' போய்விடுவார். பெங்களூருக்கும், ஹைதராபாத்துக்கும், குதிரைகள் அவரை இழுத்தன.

என்றாலும், துரை ராசுக்கு வாழ்க்கை கசக்கத் துவங்கியது போல் தெரிந்தது. அவன் அப்பா வீட்டைச் சரியாக கவனிக்காததாலும், முன்போல் காசு கொடுக்காததாலும், ஒரு சினிமாவை ஒரு தடவைக்கு மேல் அவனால் பார்க்க முடியவில்லை. இதனால், ஆசிரியர்களின் 'ஜெனரல் நாலேஜ்' கேள்விகளுக்கு அவனால் முன்மாதிரி பதிலளிக்க முடியவில்லை. அப்பாவிடம் "பூட்சுக்கு" கேட்டால், அவர், எவனோ கழட்டிப் போட்ட, பழைய பூட்ஸை கொண்டுவந்து கொடுத்தார். துரைராசுக்கு அழுகை வந்தது, போதாக்குறைக்கு, நடிகை நந்தகுமாரி... அவனின் கனவுக் கன்னி ஒரு சேட்டை, கல்யாணம் பண்ணிக் கொண்டாளாம்...

துரைராசின் மீது இன்னொரு அடி விழுந்தது. ஒருநாள் மாடசாமியிடம்: 'பரீட்சைக்கு பீஸ் கட்டணும்" என்று கேட்டான். (அன்று ஒரு புதுப்படம் ரிலீஸ்: அருமையான 'பாபி' பாணிக்கதை) கிண்டியில் காசை விட்டுவிட்டு, நொண்டிக் குதிரை மாதிரி வீட்டுக்கு வந்து சேர்ந்த மாடசாமிக்கு, இந்தக் கேள்வியை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பரீட்சைக்கு பீஸ் கட்டணுமாமே! 'என்ன அக்கிரமம்! அந்த பணத்தில் ஒரு குதிரையை வைத்தால் ஜாக்பாட்டே விழலாம்! இவன் எதுக்குப் படிக்கணும்? வேலைக்குப் போனால் என்ன? வேலைக்குப் போயி ஒரு நூறு கொண்டு வந்தா, ஹைதராபாத்திலாவது ஜெயிக்கலாம்.

மாடசாமி உள்ளே நினைத்ததை வெளியே கத்தினார்.

"நீ படிச்சி கிழிச்சது போதும். நொண்டிக் குதிரை எப்படி ஓட முடியாதோ... அப்படி ஏழைங்க படிக்க முடியாது... பேசாம ஒரு வேலையைப் பாரு"

துரைராசு அழுதே விட்டான். "ஏல ஒன்பது மணிகூட ஆகல... அதுகுள்ள தூக்கம் வருதா... பத்து மணிவரைக்கும் படிக்கலன்னா முதுகுத் தோலை உரிச்சிடுவேன்" என்று சொன்ன அந்த அப்பவா, இந்த அப்பா?

துரைராசு, "காதல் கசக்குமா" என்ற சினிமாப் படத்தில கதாநாயகன் கஷ்டம் தாங்காமல் அழுவதை நினைத்துக் கொண்டான். நந்தகுமாரி, கதாநாயகனுக்கு அனுதாபப்பட்டது மாதிரி, அவளின் சாயல் கொண்ட பக்கத்து வீட்டுப்பெண், தனக்கு அனுதாபப்படுவாள் என்று கற்பனை செய்து கொண்டான். அவள் கண்ணில் விழும்படியாக நின்று கொண்டு, முகத்தை ஒரு மாதிரியாய் வைத்துக் கொண்டான். இதற்காக, அப்பா தன்னை இன்னும் அதிகமாகக் கொடுமைப்படுத்தினால் கூட தேவலை என்று நினைத்தான். ஆனால் பக்கத்து வீட்டுப் பெண், இவனைப் பார்த்ததாகக் காட்டிக் கொள்ளவில்லை. "பார்த்தும் பார்க்காத பாவனையே காதல்" என்று பத்மா கிருபாகரன் ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் எழுதியதை நெஞ்சில் நிறுத்திக் கொண்டான்.

என்ன அநியாயம்! அந்தப் பெண் தமிழ்நாட்டிலேயே அதிகமாகவிற்கும் அந்த பத்திரிகையில் எதையோ ஒன்றைக் காட்டி, இன்னொரு வாலிபனிடம் சிரித்துக் கொண்டும், உரசிக் கொண்டும் நின்றாள். துரைராசுக்கு வாழ்க்கை கசந்தது. பகலன் எழுதிய "இளமை அல்லது காதல்" என்ற காதல் கதையில், தோல்வியில், கதாநாயகன் தற்கொலை செய்யும் காட்சியையும், "இந்த உலகில் அணைக்கட்டுகள் நிலையல்ல; ஐந்தாண்டு திட்டங்கள் நிலையல்ல; நாட்டுப் பற்று நிலையல்ல; சந்திர மண்டலம் போவதுகூட நிலையல்ல; ஆனால் காதல் ஒன்றுதான் நிலையானது; சாகாத காதலுக்காகச் சாகிறேன்" என்ற புனித வர்ணனையை நினைத்துக் கொண்டான். வீட்டுக்குள் இருந்த நார்க்கட்டிலில் போய் தொப்பென்று குப்புற விழுந்தான்.

அந்தச் சமயத்தில், அவன் அக்காள் வந்து "இதோ இந்த கதையை படி... பிரமாதம்..." என்று சொல்லி, ஒரு வாரப் பத்திரிகையை நீட்டிவிட்டுப் போனாள். (அப்போதுதான், அவன் வெளியேவந்து, அவள் எதிர்வீட்டுப் பையனிடம் "இலக்கியச் சர்ச்சையில் ஈடுபடும்போது, குறுக்கிடாமல் இருப்பான்)

காலம் ஒரு கட்டத்திற்கு வந்தது.

மாடசாமி, மகளின் புடவைகளை அடகுவைத்து, கிண்டிக்குப் போகத் துவங்கினார். கடலைக் கம்பெனி, அவரை நீக்கிவிட்டது மட்டுமல்லாமல், அவர் ஆயிரத்து முந்நூறு பாக்கெட்டுகளுக்கு கணக்கு கொடுக்க வேண்டுமென்றும், சைக்கிளக் காணோம் என்றும், போலீஸுக்குப் போகப்போவதாகவும் மிரட்டியது.

துரைராசின், கண்கள் உள்நோக்கிப் போயின. கழுத்தெலும்புகள் துருத்தின. நெஞ்செலும்பு முன்னே வந்தது. கண்களுக்கு கீழே, கருமையான வட்டங்கள் விழுந்தன. அவனால் எழும்பக்கூட முடியவில்லை 'மனோ சபலத்தை' தத்துவம் என்று சொல்லி எழுதும் ஒப்பாரிக் கவிஞர்களின் பாடல்கள் அவனுக்குப் பிடித்தன.

அவனுக்கு மட்டுமல்ல... அவன் அக்காள் சீனியம்மைக்கும் தலை சுற்றியது. அதோடு வாந்தியும் வந்தது. (எதிர் வீட்டான், இருப்பிடத்தை சொல்லாமல், கொள்ளாமல் மாற்றிக் கொண்டான்) அவள், இப்போது காதல் தோல்வி கதைகளை அழுதுகொண்டே படிக்கிறாள்.

மாடசாமிக்கு, கிண்டிக்குப்போக, பஸ்ஸுக்குக்கூட காசில்லை. ஒருநாள், முதன்முறையாக, வீட்டில் இருபத்து நாலு மணிநேரம் உட்கார்ந்தார். அப்போது, வீட்டுக்காரர் வந்து சாமான்களை வெளியே தூக்கிப் போட்டார். வாடகைப் பாக்கி பத்துமாதத்தை தாண்டி விட்டதாம். சாமான்களைப் பொறுக்கிக் கொண்டு, அந்த குடும்பம் தெருவழியாக நடந்தபோது, கடலை மிட்டாய் கம்பெனிக்காரர், அவற்றைப் பறித்துக் கொண்டு போய்விட்டார்.

வயிற்றில் ஒரு பிள்ளையை வைத்துக் கொண்டிருந்த சீனியம்மையை, ஒரு கையிலும், நடக்க முடியாமல் நடக்கும் துரைராசுவை ஒரு கையிலும் பிடித்துக் கொண்டு, மாடசாமி, சென்னை நகரின் பிரதான வீதி ஒன்றில் ஊர்வலம் போகிறார். அந்த வீதியின் இருமருங்கிலும் உள்ள கடைகளில், அந்த குடும்பத்தை இந்த நிலைக்கு கொண்டு வந்த அந்த மக்கள் பத்திரிகையும், பிரபல

வாரப் பத்திரிகைகளும், ஆட்களை விழுங்கிவிட்டு அமைதியாகக் காட்சியளிக்கும் புதைமண்ணைப் போல, பல எலும்புக் கூடுகளை உள்ளடக்கிய அருமையான சமாதிகளைப்போல, அழகாகத்தொங்கிக் கொண்டிருக்கின்றன.

இன்னொரு பக்கம், கிண்டிரேஸ் கர்த்தர்கள் 'காக்டெயில் பார்ட்டியில்' களிக்கிறார்கள்.

- தாமரை - பிப்ரவரி 1976

O

# முதுகில் பாயாத அம்புகள்

ராசகுமாரி, அந்தப் பெயருக்கு எதிர்ப்பதமாய் அல்லாடினாள். சண்டைக் கோழிகளான மாமியாருக்கும், அவள் எதிரிக்கும் இடையே உள்ள இடைவெளியில் நின்றபடி இரண்டு கைகளையும் விரித்துப் போட்டு, அவர்களின் மோவாய்களைத் தொட்டாள். பிறகு, தலைக்கு மேல் கரம் தூக்கி அதைக் கும்பிடாக வைத்துக் கொண்டு கரகம் ஆடுபவள்போல், அங்குமிங்குமாய் சுழன்றாள். ஆனால், அவள்களோ, இவளை ஒரு பக்கமாக ஒதுக்கிவிட்டு, முன்னாலும் பின்னாலுமாய் நகர்ந்தார்கள்.

இன்றைக்கு எப்படியும் தன்னுடைய சங்கதியும் வெளி வந்துவிடப் போகிறது என்று பயப்பட்டவள் போல், ராசகுமாரி இரண்டு கைகளையும் தலையில் வைத்துக் கொண்டு அங்குலம் அங்குலமாய் சரிந்து அப்படியே 'குத்த வைத்தாள்'. இதைப் பற்றி கவலைப் படாமல், மாமியார் சீனியம்மாவும், 'கீழவீட்டு' சக்கரையம்மாவும் ஒருத்திக்கு ஒருத்தி சளைக்காமல் வசவுக்கணைகளை சரம் சரமாகவும், சரச சரசமாகவும் விட்டுக் கொண்டிருந்தார்கள்.

"நீ சொன்னாலும் சொல்லாட்டாலும்... நாங்க கவரிமான் வமுசந்தாண்டி. ஒரு முடி போனாலும் உயிர விடுற கொலம்தாண்டி..."

"தன்னை மெச்சிக்கிட்டாம் தவிட்டுக் கொழுக்கட்ட.... ஊரை மெச்சிக்கிட்டாம் ஊசக் கொழுக்கட்ட.... கவரிமானாம் கவரிமான்... தூ... கழுதைக்குப் பேரு முத்துமாலையாம்... அப்படிப்பார்த்தா ஒன் தலையில ஒரு முடிகூட இருக்கப்படாது...."

"எங்க, விரல மடக்கி சொல்லுழா பாக்கலாம்..."

"விரலு போதாதுழா... கோயக்கண்ணி... ஒவ்வொரு முடியா மடக்கிச் சொன்னாலும் ஒன் சங்கதிவள முடிக்க முடியாது...."

ஒருத்தி பேசும்போது, இன்னொருத்தி இடைமறிக்காமல், அதே சமயம், அந்த ஏச்சுக்களைக் காதுகளில் உள்வாங்கிக் கொள்வது போல், நிற்பாள். பின்னர் உடனடியாக எதிர் ஏச்சு விடப்படும். சடுகுடு ஆடுவதுபோல், இருவரும் திட்டிக் கொண்டார்கள். சீனியம்மா, வைது கொண்டே முன்னோக்கி நடக்கும்போது, சக்கரையம்மா அதைக் காதில் வாங்கிக் கொண்டே பின்னோக்கி நடப்பாள். பிறகு சீனியம்மா, மூச்சு விட்டுக் கொண்டு பின்னோக்கி நடக்கும்போது, சக்கரையம்மா முன்னோக்கிப் போவாள். இருவரின் இருபது விரல்களும், முளைக்கம்பி மாதிரி வீறிட்டுத் துடித்தன.

அதே சமயம், இருவரும் ஒரு குறிப்பிட்ட இடைவெளியைத் தாண்டிப் போவதில்லை. இருவரையும் ஒப்புக்குப் பிடித்த உறவுக்காரப் பெண்கள், அடுத்த தரப்பைப் பார்த்துக் கண்களைச் சிமிட்டினார்கள். இவள்கள் மட்டும், அவள்களைப் பிடித்து இழுத்தால், சண்டை எப்போதோ ஓய்ந்திருக்கும். ஆனால், ஒவ்வொருத்தியின் பின்னாலும், இவள்கள் நின்று கொண்டு ஒவ்வொரு கோழியும் நகரும்போது தங்களையும் ரசனையோடு நகர்த்திக் கொண்டார்கள். இந்த ஒத்தாசைப் பெண்களை ஒட்டி, அவள்களின் பிள்ளை குட்டிகள்... கல்லையும், கட்டியையும், வைத்துக் கொண்டு தயாராய் நின்ற எலிவால் பின்னல் சிறுமிகள்... எக்கிய வயிற்றுப் பயல்கள்.

தொலைநோக்காய்ப் பார்ப்பவர்களுக்கு, அந்த இருவருமே அசப்பில் ஆண்களைப் போலவே தோன்றுவார்கள். சீனியம்மாவின் கழுத்தைச் சுற்றி பாம்புபோல் சுருண்டு கிடந்த சேலையின் சிவப்புக்கரை, அசல் ஆம்புளைத் துண்டு போலவே தெரிந்தது. சக்கரையம்மாவின் மாராப்புக் கீழே விழ, அவளோ பனியன் போட்டிருப்பது போல் எதுவும் இல்லாமல் தோற்றம் கொடுத்தாள். ஆனாலும், அவர்களுக்குள் இந்த ஆம்புளைத் தனமும், உறவு முறையும் தவிர்த்து ஏகப்பட்ட வித்தியாசங்கள்.

சீனியம்மா உயரமானவள்: ஒல்லியானவள்: கண்களை ஓரங்கட்டிப் பார்க்கும் 'கோயக்கண்ணி' கழுத்து மட்டும் ஒரு முழம்

இருக்கும். ஐம்பது வயதுக்கு மேலான அவளை இரண்டாக மடித்துத் தலையை மட்டும் தட்டிப் போட்டு விட்டால் எப்படிப்பட்ட உருவம் கிடைக்குமோ, அப்படிப்பட்ட உருவம்தான் சக்கரையம்மா. நாற்பது வயதுக்குக் கீழானவள்: குள்ளம், தடி... கழுகு மூக்கு... வாயில் மட்டும் இல்லாமல் கண்களிலும் ஒரு கள்ளச்சிரிப்பு. பெருத்தவயிறு, வயதால் ஏற்பட்ட கோளாறாகத்தான் இருக்கவேண்டும். காரணம், கணவன் பத்து வருஷத்துக்கு முன்பே பரலோகம் போய்விட்டான்.

ஒவ்வொருத்தியும், ஏச்சுக்கு பதில் ஏச்சாய் விடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்படி ஏச்சு வராமல் போகும்போது, சம்பந்தப்பட்டவள் கோபத்தில் கீழே குனிந்து மண்ணை எடுத்துத் தூள் பரப்பப் போவாள். உடனே ஒத்தாசைக்கு நிற்பவர்களில் ஒருத்தி பிடித்துக் கொள்வாள்.

ஆயிற்று... அரைமணி நேரம் ஆயிற்று... இருவருக்கும் தொண்டைத் தண்ணீர் இன்னும் வற்றிப் போகவில்லை. அதே சமயம் விக்கலும், திக்கலும் வந்தது உண்மைதான். சீனியம்மாவுக்கு முழங்காலுக்குக் கீழே சேலை இல்லை. சக்கரையம்மாவுக்கு, இடுப்புக்கு மேலே புடைவை இல்லை. ஒருத்திக்கு 'வைக்கப்படப்பு' பின்னணி. இன்னொருத்திக்கு எருக்குழி பின்புலம். சோர்ந்து போகும் சமயங்களில் ஒருத்தி வைக்கப்படப்பில் சாய்ந்து கொள்வாள். இன்னொருத்தி எருக்குழி மேட்டில் ஏறிப்போய் நிற்பாள். அடித்துப் போட்ட காட்டெருமை மேல் புலி நிற்பது மாதிரி!

என்ன சண்டை என்பது அந்த இரண்டு பேருக்குமே, இப்போது மறந்து விட்டது. அப்படியே சொல்வதாக இருந்தாலும், யோசித்துப் பார்த்துத்தான் சொல்லவேண்டும். அந்தக் காரணமும் சண்டைக்கு ஒரு சாக்கே தவிர, சரக்கு அல்ல. சீனியம்மாவின் பப்பாளிச் செடியின் ஒரு கொப்பு, சக்கரையம்மாவின் 'செருவையைக்' கடந்து போய்விட்டது. உடனே, சக்கரை, அந்தக் கொப்பை ஒடித்துப் போட்டு விட்டாள். "என் வீட்டுச் செடியின் கொப்பை எப்படிழா ஒடிக்கலாம்" என்பது சீனியம்மாவின் கேள்வி. "உன் வீட்டுச்செடி என் வீட்டு சன்னலை எப்படி உற்றுப் பார்க்கலாம்" என்பது சக்கரையம்மாவின் பதில்.

அந்தச் செடி மட்டும் மரமாகி அந்தக் கொப்பு ஒரு கிளையாகி, ஒரு பழம் தொங்கியிருந்தால், சக்கரையம்மா ஓசைப்படாமல் அதைப் பறித்து விட்டு அந்தக்கிளையை அடுத்த பிரசவத்திற்காக விட்டு வைத்திருப்பாள். ஆனாலும், அதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமலே, செடியாகி மரமாய்ப் போனால் சீனியம்மா, அப்படிப்பட்ட கிளையை வெட்டியிருப்பாள். ஆகையால் விவகாரம் அதுவல்ல: கட்டு மஸ்தான உடல்காரியும், விதவையுமான சக்கரையம்மாவின் 'இஸ்கு தொஸ்குகளில்' சீனியம்மாவுக்கு ஒரு மயக்கம். படிதாண்டாமல் போய் விட்டோமே என்று 'பின்யோசனை' செய்யும் பத்தினியான சீனியம்மாவுக்கு, தனது புதுமருமகள் வந்ததும், சக்கரைக்கு, தான் வேப்பங்காயாப் போய்விட்ட வருத்தம். "அத்த, அத்த'' என்று வார்த்தைக்கு வார்த்தை வலியப் பேசும் எரப்பாளிபயமவள், தனக்கு வந்த புதுமருமவள் ராசகுமாரியோடு கிசுகிசுப்பது அவளுக்குப் பிடிக்கவில்லை. ஒரே ஊரில் பிறந்தவர்கள் என்பதற்காக ஒரேயடியாய்க் குழைகிறாளே என்ற குமைச்சல். சக்கரையம்மாவுக்கும், பாடாவதிகிழவிக்குப் பதிலாக தனது மனோரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு பருவப்பெண் கிடைத்தாளே என்கிற மகிழ்ச்சி. இந்த, ராசகுமாரியின் புருஷன் செல்லப்பாண்டியோடு, தான் ஒரு சமயத்தில் சூதுவாதில்லாமல் பேசியதை, அந்தக் கிழவி சூதாக எடுத்துக் கொண்டு, மகனைத் திட்டியதிலிருந்தே இவளுக்கு ஒரு மனத்தாங்கல். அதுதான் இன்று தெருச்சண்டையாகிவிட்டது. பப்பாளிக்கொப்பை ஒடிச்ச சக்கரையம்மாவை, சீனியம்மா கைதட்டிக் கூப்பிட்டு, "என் வீட்ல எதையும் யாரையும் விட்டு வைக்க மாட்டே போலுக்கே" என்றாள். உடனே இவள், "ஒன்வீடு பெரிய அரண்மனை... உன் மவன் பெரிய மன்மதன்... என்னால விட்டு வைக்க முடியல" என்றாள்.

ஆக மொத்தத்தில் பப்பாளிக் கொப்பு பகைக்கொப்பாகி விட்டது. வீட்டுக்குள் துவங்கிய சண்டையை, இருவரும் தூக்கிப் பிடித்துக் கொண்டு தெருவுக்கு வந்தார்கள். அவர்கள் போட்ட கூச்சலில், தொழுவத்து மாடுகள் முளைக்கம்புகளில் கட்டப்பட்ட முளைக் கயிறுகளைச் சுண்டி இழுத்தன. பெட்டைக்கோழியை வலம் வந்த ஒரு சேவல், ஆபத்தை அறிந்து எல்லா மனிதச்

சேவல்களையும் போல அந்த கோழியை அம்போ என்று விட்டுவிட்டு ஓடிவிட்டது. மறுபக்கம் நின்ற நாய்க்கு பயந்து சுவர்ப்பக்கம் குதித்த பூனை, அந்த நாயே தேவலை என்பது போல் அந்த நாய் பக்கமே குதித்தது... பீடியும் தட்டுமாகப் போன கலர்ச்சேலைக்காரிகள் அங்கே நின்று வேடிக்கை பார்க்காமல், லேசாய்த் திரும்பி மட்டும் பார்த்துக் கொண்டு நடையைத் தொடர்ந்தார்கள். 'இவள்களோட சண்டைக்கு ஒரு மரியாதை கொடுக்கப்படாது' என்பது அவர்களோட எண்ணம். இன்னும் சில தும்பைப்பூ வேட்டிக்காரர்கள்... மடிப்புக் கலையாத சட்டைக்காரர்கள், அங்கே அப்படி ஒரு சண்டை நடக்காததுபோல் வேகவேகமாய் நடந்தார்கள். ஊர் விவகாரிகள் இவர்கள்... பொம்புளையையோ... பொம்பளைச் சண்டையையோ நான்குபேர் முன்னிலையில் பார்க்க விரும்பாதவர்கள். ஆனாலும், பனையேறி லிங்கசாமியும் 'கட்டில் கட்டி' மாடக்கண்ணுவும் "நாங்க ஆம்பளைங்க நிக்கத நினைச்சுப் பேசுங்களா" என்று ஒவ்வொரு 'ஏ' வார்த்தைக்கும் ஒரு சென்ஸார், குரலைக் கொடுத்தார்கள். ஆனால் அவர்கள் சென்ஸாரும் சினிமா சென்ஸார் போல் எடுபடவில்லை. ஆகையால் திரைப்பட சென்ஸாரைப் போல அவர்கள் கண்களுக்கும் இமைகள் திரையாயின; காதுகள் மட்டும் கூர்மையாயின.

சக்கரையம்மாவும், சீனியம்மாவும் இப்போது விவகாரத்தை தர்க்கரீதியாக அலசப்போவது போல, நிதானமாகப் பேசினார்கள்.

"ஏடி சக்கரை... நீ எத்தனை குடியக் கெடுத்திருக்கே... அதாவது ஒனக்கு ஞாபகம் இருக்கா மூதேவி..."

"சொல்லுடி பாக்கலாம் கிழட்டு முண்டை."

"கட்டுன புருஷனுக்குத் துணி வெச்சுக் கும்பிடும்போதே அதுக்காக வந்திருந்த அக்கா புருஷனோட கதவச் சாத்துனவா நீ... அதனாலய ஒன் அக்கா ஒன் வீட்டு வாசற்படி இன்னும் ஏறல.. பருத்தி வியாபாரி ஆவுடைக்கண்ணன, வீட்டுக்குள்ளய வெச்சு நூலா பிரிச்சு சேதாரம் பண்ணுனே... வெளியூர் ஓயர்மென் பெண்டாட்டியக் கூட்டிட்டு ஊருக்கு வரப் போனவனைக்

கண்ணடிச்சு கைக்குள்ள போட்ட... கடைசியில அவன் பொண்டாட்டி 'கன்னி கழியாமலே' பொறந்த வீட்ல இருக்க வேண்டியதாப் போச்சு... ஊரு ஒலகத்துல ஒவ்வொருத்திவ இடக்கு மடக்கா ஒருத்தன வச்சிருப்பாள்: ஒனக்கு என்னடான்னா கண்ணுல படுறவன் எல்லாம் வைப்பாளன். தொட்டா பொறுக்காம படுக்கிற தட்டுக்கெட்ட முண்ட... நீயா எனக்கு சோடி..."

"ஆமாடி... நான் அப்படித்தான்... புருஷன் செத்ததால அப்படி ஆயிட்டேன்னே வச்சுக்குவோம்.. ஆனா நீ... உன்னைப் பத்தி ஊருக்குத் தெரியாதுங்கிறதால நீ பத்தினின்னு அர்த்தமா.."

"எங்க... விரல மடக்கிச் சொல்லுடீ... என்னப் பத்தியோ, இந்த இவளைப் பத்தியோ... சபைல சொல்லுடி சண்டாளி... கழுதையும் கவரிமானும் ஒண்ணாகுமா''. ஆலம்பழமும், அண்டங்காக்காயும் சரியாகுமாடி... சொல்லுடி பார்க்கலாம்..."

சீனியம்மா, தன் பேச்சுக்கு 'ஆக்ஷன்' வேறு கொடுத்தாள். கீழே கதிகலங்கி உட்கார்ந்திருந்த மருமகள் ராசகுமாரியைத் தூக்கிப் பிடித்து, சக்கரையம்மாவின் முன்னால் நிறுத்தி, "சொல்லுடி" என்றாள். ராசகுமாரி, கண்களை மூடிக்கொண்டாள். காதுகளை மூடநினைத்துக் கண்களிலிருந்து கைகளை அகற்றியபோது, மாமியார் அவற்றைப் பிடித்துக் கொண்டாள். சக்கரையம்மா, எந்த நிமிடத்திலும் அவள் 'சங்கதியை' வாயிலிருந்து ஒலிபரப்பப் போகிறாள் என்று பயந்தாள்! அங்குமிங்குமாய்த் தலையாட்டினாள். மாமியாரின் எதிரியிடம் கும்பிடுவது போல் கைகளைக் கொண்டு போனாள். ஆனால் சக்கரையம்மா, அவளைப் பார்க்கவில்லை. வயிறு மேடானதால், மார்பகம் மலையாக, உடம்பின் மேல் பக்கமும், கால் பக்கமும் பாதாளம் போல் தோன்ற, அசல் வாத்து மாதிரி அங்குமிங்குமய் பார்த்த ராசகுமாரியை அவள் கண்டுக்கவே இல்லை.

சீனி, சக்கரையை அதட்டியது.

"ஏமுளா வாயை மூடிட்டே... என்னப் பத்தியோ, இவளப் பத்தியோ சொல்லு பார்க்கலாம்..."

"ஏ கெழட்டு முண்டே... நான் சொல்லிட்டேன்னா, நீ தூக்கு போட்டு சாக வேண்டியிருக்கும்... என் வாயை கிளறாதே..."

ராசகுமாரி, முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். நாகரீகமான குடும்பத்திலிருந்து வந்த அவள், இப்படிப்பட்ட ஒரு தெருச்சண்டைக் குடும்பத்தில் மாட்டிக் கொண்டதற்காக அழுவதாக, மற்றவர்கள் நினைத்தார்கள். சீனியம்மா அதட்டினாள்.

"வாய்க்குள்ள கொழுக்கட்டையா வெச்சிருக்கே... சொல்லேமுளா..."

"சொல்லாமலா இருப்பேன்... நீ எங்க மாமனார வச்சுக்கிட்டு இருந்தது ஊருக்குத் தெரியாம இருக்கலாம்.. ஆனா, எனக்குத் தெரியும்டி... என் வீட்டுக்கார மவராசன் சாகிறதுக்கு முன்ன என்கிட்ட சொன்னார்டி... அவரு, அப்பாகிட்ட கடைசிவரைக்கும் பேசாம இருந்ததுக்கு நீதான்டி காரணமாம்... ஆம்பளைதான் பொம்புள வீட்டுக்கு வருவான்.. நீ என்னடான்னா, எங்க வீட்டுக்குள்ளயே வந்து, அதோ அன்னா தெரியுதே கட்டிலு.... அதுலயே என் மாமனாரோட பொராண்டிருக்கே... எம் புருஷன் சொல்லிட்டுத்தான்டி செத்தாரு...."

ராசகுமாரிக்கு தனக்கும் ஒரு துணை கிடைத்த திருப்தி. ஆனால் சீனியம்மாவோ வெலவெலத்தாள். கூட்டம் முழுவதும் அவளையே கண்களால் கொத்தியது. சிலர் சக்கரையம்மாவின் வாசல்பக்கம் போய் அந்தக் கட்டிலையே ரசனையோடு பார்த்தார்கள். சண்டையில் சுவை குறைந்து வெளியேறப் போனவர்கள் கூட, கால்களைத் தேய்த்துக் கொண்டே அங்கேயே நின்றார்கள். நிலைகுலைந்து போன சீனியம்மாவைப் பார்த்து சக்கரையம்மா ஒரு தகவலையும் சொன்னாள்.

"என் மாமனாரோட வப்பாட்டியே... ஏண்டி பேச மாட்டேங்கே... ஒன் மகனோட மூக்கும், முழியும் என் மாமனார் மாதிரியே இருக்கத மறைக்க முடியுமாடி..."

சினியம்மாவுக்குப் பேச்சு வரவில்லை. மூணு வருஷத்துக்கு முந்தி செத்துப்போன இந்த சக்கரையம்மாவின் மாமனார்

அய்யாத்துரை, அசல் ஒட்டகச்சிவிங்கி. சொந்தப் பொண்டாட்டியே 'மாப்பிள்ளை பிடிக்கலை' என்று முதலிரவுக்குப் போக பல இரவுகள் யோசித்தாளாம். அப்படிப்பட்ட 'தெம்மாடிகிட்ட' சேத்துப் பேசுறாளே... கையும் களவுமாப் பிடித்தது மாதிரி சனங்க பாக்குதே.. பத்தினியும், பத்தரை மாத்துப் பத்தினியுமான தன்னை ஒரு பலபட்டறைப் பய பொண்டாட்டி இப்படிப் பேசிப்பிட்டாளே...

சீனியம்மா, பேச்சு வராமலே உடம்பைக் குலுக்கினாள். முந்தானையை எடுத்துப் பந்து போல் சுருட்டி, வாய்க்குள் திணித்தாள். அப்படியும், அழுகையை அடக்க முடியவில்லை. அக்கம் பக்கம் பார்த்து அமங்கலமாய் விம்மியவள், அப்புறம் மனம்விட்டு முகம் விட்டு அழுதாள். மாறி மாறித் தலையில் அடித்துக் கொண்டாள். பிடிக்க வந்த மருமகளை தலையிலேயே, தன் தலையை முட்டவிட்டாள். அவள் தோளிலேயே தலையை மடக்கிப் போட்டு அவள் முதுகை நனைத்தாள். "ஐயையோ... இப்படிக் கேட்டு... இன்னும் நான் உயிரோடு இருக்கேனே..." என்று மருமகளின் முதுகிலிருந்து தலையைத் தூக்கி, அங்குமிங்குமாய்க் கண்களை சுழற்றினாள். கூட்டம் வாயடைத்து நின்றது. ஒத்தாசைப் பெண்கள் சிறிது விலகிப்போய் நின்றார்கள். சக்கரையம்மா எதிரியை மானபங்கப் படுத்திய பெருமிதத்தோடு கைகளுக்கு சொடக்குப் போட்டாள். அப்போது -

மாட்டுவண்டிச் சத்தம் கேட்டது. மணியோசைச்சத்தம்: 'இம்பா, இம்பா' என்ற மணிச்சத்தம். கட்டை வண்டியின் சக்கரங்கள் கரடு முரடான தரையிலும், கற்களிலும் மோதி ஏற்பட்ட தபேலா சத்தம். அந்த சத்தங்கள் பெரிதாகிப் பெரிதாகி, அவற்றை உற்பத்தி செய்த அந்த வண்டி, தெருவின் திருப்பத்திலிருந்து சண்டைக்களம் நோக்கி நெருங்கியது. ஒரு கையில் மாடுகளின் மூக்கணாங்கயிறுகளைக் கையில் பிடித்துக் கொண்டு, மறுகையில் சாட்டைக் கம்பை வைத்துக் கொண்டு வண்டியோட்டி வந்த செல்லப்பாண்டி, அம்மாவைப் பார்த்ததும் அப்படியே கீழே துள்ளினான். மிரண்ட மாடுகளையும், குடைசாயப் போன வண்டியையும், 'கட்டில்கட்டி' மாடக்கண்ணு சரிப்படுத்தினார்.

சீனியம்மா, மகளை அப்படியே கட்டிப்பிடித்துக் கொண்டாள். பிறகு சிறிது விலகி நின்று வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். செல்லப்பாண்டி, புதுப் பொண்டாட்டியைக் கோபமாகப் பார்த்தான். அவள் பயந்துபோய், தான் சண்டைக்கு ஒரு காரணம் இல்லை என்பதை சொல்லாமல் சொல்லப் போவது போல், மாமியாரை அணைக்கப் போனாள். உடனே அவள், "சண்டையில் ஒரு ஒத்தாசை செய்யாம இப்ப மட்டும் புருஷன் மெச்சுறதுக்கு வாரியாக்கும்" என்று சொல்லிவிட்டு, அவளிடமிருந்து ஒரு திமிரு திமிறி, சாட்டைக் கம்பு போலவே வாட்டசாட்டமாய் இருந்த மகளைப் பார்த்தாள். விரிந்த தலையோடு நீர்படிந்த முகத்தோடு ஒப்பாரியிட்டாள்.

"இந்த சண்டாளி என்ன கேக்கக்கூடாத கேள்வியா கேட்டுட்டா. என் வாயால எப்படிடா சொல்றது...? இன்னும் ஒரு தடவை சொல்லுழா... எங்கழா நகரப் பார்க்கே... நின்ன இடத்துலயே நில்லு. அய்யோ... என்ன மாதிரி கேட்டுட்டா... அதைத் திருப்பிச் சொன்னா அதே மூச்சுல என் உசுரு போயிடுமே... என் பேரனைப் பார்த்துட்டு நான் சாகாண்டாமா..."

செல்லப்பாண்டி, சக்கரையம்மாவைப் பார்த்தான். அவளோ, மேற்கொண்டு நகராமல் உதட்டைக் கடித்தபடி வீறாப்பாய் நின்றாள். "அண்ணி அண்ணி" என்று அடிக்கடி கூப்பிட்ட அவளை, அந்த கணத்திலேயே ஒரு பகையாளியாய்ப பார்க்க அவனால் இயலவில்லை. அந்தச் சிரிப்பையும், "மச்சி மச்சி" என்ற அவளின் பேச்சையும் அவனால் திடுதிப்பென்று உதற முடியவில்லை. ஆனாலும், நெஞ்சில் ஒலித்த சக்கரை அண்ணியின் வார்த்தைகளை, அம்மாவின் வார்த்தைகள் அழித்துக் கொண்டிருந்தன. அவன், அக்கம்பக்கம் பார்த்தபோது, 'கட்டில் கட்டி' பட்டும் படாமல் சொன்னார்.

"பொம்பளயுவ பேச்சைப் பெரிசா எடுக்கப்படாதுடா.. அப்படி ஒண்ணும் பெரிசாவும் நடக்கல... ஒங்கம்மா சக்கரையோட சங்கதியைத் துண்டு துண்டா வெட்டிப் போட்டாள். உடனே, அந்தப் பன்னாடைப் பய மவள், ஒங்கம்மா அவளோட மாமனாரை

வெச்சிருந்ததா ஒரு வார்த்தை பேசிப்புட்டாள்... அம்புட்டுத்தான் விஷயம்... விட்டுத் தள்ளு கழுதைய..."

"ஏ கட்டில்கட்டி... அந்த மூளி அலங்காரி, மூதேவி சண்டாளி ஒனக்குக் கட்டில் கட்டுறதுக்கு கூப்பிட்டான்னு ஒரஞ்சாஞ்சா பேசுறே... ஏண்டா... என் மவனே, ஒன் மூக்கும் முழியும் அந்த வீட்டு 'காலமாடன்' மூக்கும் முழியும் மாதிரி இருக்குன்னு அந்த மூளி சொல்லுறாடா... நான் இனிமேல் இருக்கணுமாடா... அய்யோ அய்யய்யோ..."

செல்லப்பாண்டி, சக்கரையம்மாவை ஒரு சக்கையைப் போல் பார்த்தான். அத்தனை உறவும் உறவாடலும் இப்போது பகையாய் பகையாடலாய் மாறின. கீழே கிடந்த சாட்டைக்கம்பை எடுத்துக் கொண்டு, அவளை நோக்கிப் பாய்ந்தான். அவளோ, நகத்தைக் கடித்துக் கொண்டு "அடிடா பார்க்கலாம்" என்பது போல் நின்றாள். இதற்குள், இரண்டு ஆண்கள் அவனைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களையும தூக்கிக் கொண்டு, அவன் 'சக்கரையைப் பார்த்து ஓடினான். 'தெம்மாடி'யான காலமாடனுக்கு, தான் பிறந்து, சண்டியரான அப்பாவுக்குப் பிறக்காமல் போயிருப்போமோ என்ற சந்தேகம் அதுவே ஒரு ஆவேசம். அவள் மட்டும் அகப்பட்டிருந்தால், அந்த சாட்டைக் கம்பே ஒரு வேல் கம்பாகியிருக்கும். அதற்குள் பலர் வந்து, அவனைக் குண்டுக்கட்டாய்த் தூக்கினார்கள். இதனால் வேட்டி அவிழ்ந்து டவுசரோடு நின்ற அவன் வாயையே சாட்டையாக்கினான்.

"கட்டுனவன் செத்ததும் கண்டவன் கூடெல்லாம் படுத்துப் படுத்து, அவங்கள சாகாமல் சாகடிச்ச செறுக்கி... நீயா எங்கம்மாவைப் பார்த்து இப்படிக் கேட்டே?"

"நான்தாண்டா கேட்டேன் எரப்பாளிப் பய மவனே... இதோட போயிடு... இல்லாட்டா இன்னொரு விஷயமும் அம்பலமாயிடும்... அப்புறம் நீ ஊர்ல் இப்படி நெஞ்ச நிமுத்திக்கிட்டு லாந்துறது மாதிரி லாந்த முடியாது... என் வாயக் கிளறாதுடா..."

செல்லப்பாண்டி, தன்னைப் பிடித்தவர்கிளிடமிருந்து திமிறிக் கொண்டிருந்தபோது, ராசகுமாரி பல்லைக் கடித்து

அழுகையை அடக்கினாள். காதுகள் இரச்சல் குழிகளாயின. சவுக்கு மரம் மாதிரி அவை ஆடுவது மாதிரி அனுமானம். தலை தறுதலையாய்க் கனத்தது போன்ற பாரம். தரை நொறுங்கி, கால்கள் பாதாளப் புதைமண்ணுக்குள் சிக்கிக் கொண்டதைப் போன்ற வாதை... மூச்சு விட முடியாத மூர்ச்சை. அங்கயே செத்து ஆகாய வெளியில் மேலும் கீழுமாய்ப் படுத்திருப்பது போன்ற பிரமை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, 'டவுனிலிருந்து' ஊருக்கு டெக் கொண்டு வந்து சினிமா காட்டிய 'பேதில போவான்' ஆறுமுகம், இவளைப் பார்த்துசிரிக்க, இவள் அவனைப் பார்த்து சிரிக்க, அவர்களுக்குக் நேரம் காலம் இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. இருவருக்குமிடையே இருந்த 'ஏடாகூடம்' ஊருக்கும் தெரிந்துவிட்டது. அடுத்த சாதிக்காரனான அவனை குடும்பத்தினர் (மரத்தில்) கட்டி வைக்கப் போனபோது, அந்தப் பயல், தனது பைக்குள் இருந்த கடிதங்களைப் பிறந்த வீட்டுக்கு வந்திருந்த... ஏற்கெனவே பரிச்சயப்பட்ட சக்கரையம்மாவிடம் நீட்டினான். இவளும், இந்த ராசகுமாரியின் குடும்பத்திற்கு புத்திமதி சொல்லி விஷயத்தை விட வைத்தாள். அதோடு, காதும் காதும் வைத்தது போல், இந்த ராசகுமாரிக்குத் தனது அனுபவத்தின் அடிப்படையில், தானே ஒரு நாட்டு வைத்தியராகி, பிள்ளை கழிச்சாள்: இது நிசம், இந்த நிசம் வெளிப்பட்டால், அவள் வாழ்க்கை பொய்யாய் பழங்கந்தலாய் போய்விடுமே...

ராசகுமாரி, இறுதியில் தலைக்கு மேல் தண்ணீர் போன விரக்தியில் உடம்பின் ஒரு அணுவைக்கூட அசைக்காமல் அப்படியே நின்றாள். செல்லப்பாண்டியோ, சிக்கெனப் பிடித்த மனிதக் கும்பலி லிருந்து விடுபட, ஒரு போராட்டம் செய்து கொண்டிருந்தான். அம்மாக்காரிதான், எதிரியை உசுப்பி விட்டாள்.

“ஏழா சக்கரை... நீ ஒரு அப்பனுக்குப் பொறந்தவன்னா... எதையோ சொல்லுதேன்னு சொன்னியே... அதை இப்பவே ருசிப்பிக்கணும்...”

"ருசிப்பிக்கத்தாண்டி போறேன்... நீங்க கன்னின்னு கோழி அடிச்சு சேலை வச்சிக் கும்பிடுறியளே.. உன் பெரிய மகள் நாகம்மா... அவள் ஆடு மேய்ச்சபோது, மாடு மேய்ச்ச மயில்சாமியோடு ஒரு 'இது' வச்சிருந்தாளாம்: என் புருஷன் சொல்லிட்டுத்தான் செத்தாரு..."

"ஏழா... உன் வாயில் புத்து வரும்... அவள் சாகும்போது அவளுக்கு வயசு எட்டுழா நாயே..."

"எட்டு வயசுல காதல் வரக்கூடாதா..."

"அது ஒன் புத்தி... என் புள்ளையச் சொன்னவள் நாக்கு அவிஞ்சி போயிடும்..."

செல்லப்பாண்டி, தூக்கிப் பிடித்த கூட்டத்திலிருந்து விடுபட்டு மீண்டும் சக்கரையைப் பார்த்து ஓடப் போனான். சாட்டைக் கம்பை எடுப்பதற்காக அவன் அங்கும் இங்குமாய்த தலையைத் திருப்பியபோது, பலர் அவனை அமுக்கிப் பிடித்தார்கள். அம்மாக்காரி சீனியம்மாவே இப்போது புத்திமதி சொன்னாள்.

"எட்டு வயசுப் பச்ச மண்ணுக்கே குத்தம், குற சொல்லுற பைத்தியக்காரிக்கிட்ட என்னடா பேச்சு...? சந்திரனைப் பார்த்து நாய் கொலைச்சா கொலைக்கட்டும்... வாடா உள்ள..."

"ஆமாம்பா... ஆமாம்.. இன்னும் கொஞ்ச நேரத்துல மூணு மாசக் குழந்தை சிரிக்கதக்கூட இவ வேற விதமாக அர்த்தப்படுத்துவா.. உள்ள போடா..."

செல்லப்பாண்டியை நான்கைந்து பேர் தள்ளிக் கொண்டு போய் வீட்டுக்குள் விட்டார்கள். அதே சமயம், அவர்கள் அவன் 'மூக்கையும் முழியையும்' ஆராய்ச்சி மாணவர்போல் ஆய்வு செய்தார்கள். அம்மாக்காரியும் தனது கற்பு, செத்துப்போன தன் மகள் மூலம் உயிர்ப்பிக்கப்பட்டதை நினைத்து பெருமையில்லை என்றாலும், சிறுமைப்படாமல் உள்ளே போனாள். உச்சக் கட்டத்தை எதிர்பார்த்த கூட்டம், உடைந்து போனது.

செல்லப்பாண்டியின் மனைவி ராசகுமாரிதான், நடந்ததை நம்ப முடியாமல் நகத்தைக் கடித்தாள். இன்னும் வீட்டுக்குள் போக வேண்டும் என்ற சுரணையில்லாமல், சண்டைக் களத்திலேயே நின்றாள். வாசல் படியில் தலைசாய்த்து, எங்கேயோ தொலைநோக்காய்ப் பார்த்த சக்கரையம்மாவை ஓரங்கட்டிப் பார்த்தாள். அந்த சக்கரை அத்தை அசல் மகாராணி மாதிரி, ராசகுமாரியை பார்க்காமலேயே, தன்பாட்டுக்குப் பன்மையில் பேசினாள்:

"நாங்கல்லாம் பட்டுப்போன வாழைய வெட்டுவோம்: குலைபோட்டு முடிஞ்ச வாழைமரத்தை சாய்ப்போம்... ஆனால், துளிர்த்து வார வாழக்குருத்த வெட்ட மாட்டோம்... அது குலைபோட்டுப் பார்க்க ஆசைப்படுவோமே தவிர, கொலை செய்யமாட்டோம்: இப்ப மட்டுமில்லை: எப்பவுமே.."

- புதியபார்வை (பொங்கல், சிறுகதை மலர் - ஜனவரி 1993)

O

# ஏகலைவன் வெளியீடுகள்

## சிறுகதைத் தொகுப்புகள்

1. ஒரு மாமரமும்,
   மரங்கொத்திப் பறவைகளும்..... ரூ. 40.00
2. கோரைப் புற்கள் ரூ. 35.00
3. ஈச்சம்பாய் ரூ. 35.00
4. ஆகாயமும் பூமியுமாய்..... ரூ. 40.00
5. சிக்கிமுக்கிக் கற்கள் ரூ. 35.00
6. சமுத்திரக் கதைகள் ரூ. 60.00

## நாவல்கள்

1. மூட்டம் ரூ. 30.00
2. பாலைப்புறா ரூ. 75.00
3. நிழல் முகங்கள்
   (இரண்டாவது பதிப்பு) ரூ. 60.00
4. **A Dove in Desert**
   (பாலைப் புறாவின் ஆங்கில
   வடிவம்) ரூ. 100.00

## கட்டுரைத் தொகுப்புகள்

1. எனது கதைகளின் கதைகள் ரூ. 45.00
2. சமுத்திரம் கட்டுரைகள் ரூ. 45.00
3. சு. சமுத்திரத்தின்
   சிறுகதை இயக்கம் ரூ. 35.00
   (முனைவர் நளினிதேவி)

<u>நூல்கள் கிடைக்கும் இதரப் பதிப்பகங்கள்</u>

மணிவாசகர் பதிப்பகம்,
8/7, சிங்கர் தெரு
பாரிமுனை, சென்னை - 600 108

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
பார்க் டவுன், சென்னை - 600 003



# பன்முகக் க/வி/தை

திருவாங்கூர் சமஸ்தானத்து முகவரியில்லாக் குக்கிராமக் குடிசைமண்டி ஒன்றில் தொடங்கி, முகவரி தேவையில்லாத நம் பக்கத்துத் தெருவரை பதின்மூன்று கதைகள் – அலைகளை வீசும் இலக்கியப் படைப்பாக மலர்ந்துள்ளது சமுத்திரக் கதைகள் எனும் தொகுப்பு.

சமுத்திரத்தின் பல முகங்கள் இந்தத் தொகுப்பில் வெளிப்படுகின்றன – அமைதி விரும்பும் கோபக்காரர், பெண்ணியவாதத்தை முன்வைக்கும் ஆண், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டங்களை அனுபவபூர்வமாக அலசும் சமூக அறிவியல் விஞ்ஞானி, புதிய தலைமுறையின் குறைநிறைகளைப் புரிந்துகொண்டுள்ள உளவியல் அறிஞர், கல்மிஷமில்லாத மனசுக்காரர், கிண்டல்காரரும்கூட – இப்படிப் பன்முகங்கள் இருப்பதாலேயே இவரின் கதைகளும் பன்முக வாசிப்புக்கும் விவாதத்துக்கும் இடமளிக்கின்றன.

*பேராசிரியர் ச. ராஜநாயகம்*
*லொயோலா கல்லூரி, சென்னை.*